# " என் பாட்டில் நான் "



'கோப்பாய் சிவம்'

கவிதைகள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் பாட்டில் நான்

கோப்பாய் சிவம்

கவிதைகளும் பாடல்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Title | : *En Pattil Naan* |
| Subject | : Poems & Lyrics |
| Language | : Tamil |
| Author | : P. Sivanandasarma B.A. (Hons) (Kopay Sivam) |
| Address | : 'SRINAGRAM', ALAVODAI VEETHY, Inuvil West, Chunnakam, Sri Lanka. T.P. 021 224 1504 |
| e-mail | kopaysivam@gmail.com |


| | |
|---|---|
| Rights | : To The Author |


| | |
|---|---|
| Type Setting & Designing | : Sri Vidya Computer Press, Inuvil |
| Printers | : Gajananth Printers, Manipay Road, Inuvil. |
| Publishers | : Sarvananthamaya Peetam |
| Date ot Publication | : 12 - 09- 2016. |
| ISBN | : 978-955-4078-01-7 |
| Price | : Rs. 500 /= |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிதைகளின் நாயகிக்கு..................**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை
மறுமலர்ச்சிப் பண்டிதர்
ச. பஞ்சாட்சரசர்மாவின்
நூற்றாண்டு ஜயந்தியில்.....
(1916 - 2016)

---

தனயன்,
எழுத்தாளர் கோப்பாய் சிவத்தின்
இலக்கிய உலகில்
ஐம்பதாவது ஆண்டை நோக்கி........
(1967 - 2017)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

**பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா**

கோப்பாய் சிவம் அவர்களின் என்பாட்டில் நான் என்னும் கவிதைத் தொகுதியைப் பார்த்தேன். அத்தொகுதி யைக் கவிதைத் தொகுதி என்று குறிப்பிடாமல் ‘என்பாட்டில்’ எனச்சிலேடையாகக் கூறிக்கவிதைகளும், பாடல்களும் என மகுடம் சூட்டி இருக்கிறார். கவிதை வேறு, பாடல்வேறு, செய்யுள் வேறு என்று சொல்லுவார்கள். அதை விமர்சகர்களிடம் விட்டுவிடுவோம்.

தமிழ்க்கவிதைக்கு நீண்ட நெடிய வரலாறு உண்டு. கவிதை பிறந்த நாளில் இருந்து இன்றுவரை செழிப்பாகவே பயணிக்கிறது. கவிதை நடந்துவந்த பாதையிலே “தம்புகழ் நிறீஇய” அருமைகள் பல அதற்குக் கைகொடுத்து வாழ்த்தி வணங்கி வரவேற்றுள்ளனர். அவர்கள் காலம் கடந்தும் நின்று நிலைக்கும் பேறுபெற்றுள்ளனர்.

தமிழ்க்கவிதை வரலாற்றை ஆய்வு செய்வோர் பாரதிக்குமுன், பாரதிக்குப்பின் எனப் பகுப்பது இன்று வழக்கா றாகிவிட்டது. தனக்கு முந்திய தமிழ்க்கவிதைப் பாதையின் மைல்கல்லாக விளங்கும் பாரதி, இனிக் கவிதை இந்தப் பாதையிலேதான் பயணிக்க வேண்டும் என்று வழிகாட்டி, கைகாட்டியாகவும் விளங்குகிறான். “சுவை புதிது, பொருள் புதிது, வளம்புதிது, சொல்புதிது” எனத்தொடங்கும் தொடரிலேதான் ‘நவகவிதை’ என்ற பதப்பிரயோகத்தை அவன் கையாளுகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பாய் சிவத்தின் கவிதைகளும், பாடல்களும் எனும் இத்தொகுப்பினைத் தமிழ்க்கவிதைப் பின்னணியிலே நோக்குவது பொருத்தமானது. "உள்ளத்து உள்ளது கவிதை" எனக்கூறிய பாரதி "பாட்டினைப்போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையெடா என்றும் கூறத் தவறவில்லை. கவிதையின் வாழ்வுக்கு ஓசை உதவுமெனக் கருதிய பாரதி "ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமடா" என்று கூறியதையும் நினைவு கூருவது நலம் எனக்கருதுகிறேன். 'பா' என்பது 'பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை' என உரையாசிரியர்களும் கூறுவர்.

சமூகம்சார் கவிதைகள் எனத்தொடங்கி வாழ்த்துப் பாடல்கள் எனமுடியும் ஏழு பகுப்புக்களைக் கொண்ட இத் தொகுதியினூடு கவிதையின் நயத்தையும் கவிஞனின் ஆத்மாவையும் ஒருங்கே தரிசிக்க முடிகின்றது.

ஈழத்துத் தமிழ்க்கவிதை இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களில் இருந்து மெல்ல எளிமைப் பண்புடன் மேற்கிளம்பத் தொடங்குகின்றது. இப்பண்பு இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியின் பின்னர் வீச்சுடன் மேற்கிளம்பியது. இக்காலக் கவிதைகளும், செய்யுள்களும், பாடல்களும் சமூகத்தை நோக்கி ஓடிய அதேவேளை சமயத்தையும் நோக்கி நகர்ந்தது. கோப்பாய் சிவத்தின் தொகுப்பிலே இந்த இரண்டு தன்மைகளையும் தரிசிக்க முடிகின்றது.

முதலாவது பகுதி நானிலமும் நானும் என அமைகின்றது. கவிதைக்கு ஓசை இன்றியமையாதது என்பர். ஓசை விகற்பங்கள் உணர்வுக்குத் தீனிபோட வல்லவை. ஈழத்திலே அறுபதுகள், எழுபதுகளிலே வந்த பெரும்பாலான கவிதைகளிலே ஓசை வேறுபாடுகள் பொருத்தமுற அமைந்திருந்ததைக் கண்டுகொள்ளலாம். கோப்பாய் சிவத்தின் கவிதைகளிலும் இப்பண்பு சுவறிக்காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக, பண்பாட்டு, அரசியல் அமிசங்களை எளிமையாகவும் அழகாகவும் கவித்துவத்துடன் கோப்பாய் சிவம் பல இடங்களிலே சுட்டிச் செல்லுகின்றார். உதாரணமாக

"அரசியல் வாதிகள் அனுகூலத் தினுக் குரைக்கும்
அரை அவியல் இனப்பகைமைக் கதைகளினை இனி மறப்போம்"

எனத்தொடங்கும் பாடலைச் சுட்டிக் காட்டலாம். இப்பாடல் 1990ஆம் ஆண்டு எழுதப்பட்டுள்ளது. அக்கால அரசியற் சூழ்நிலையிலே இத்தகைய கருத்தினைச் சொல்வதற்கு ஒருவகைத் "துணிவு" வேண்டும். கோப்பாய் சிவத்தின் துணிவு இக்கவிதைத் தொகுப்பின் பல இடங்களிலே பளிச்சிடுகின்றது.

உலகில் காதலைப் பாடாத கவிஞர்களே இல்லை எனலாம். காதல் வந்ததும் கவிதை வரும். கவிதை வந்ததும் காதல் வருவதும் உண்டு. கோப்பாய் சிவமும் இதற்கு விதி விலக்கு அல்ல. இவரது காதல் பாடல்களின் சிறப்புக்கு வகை மாதிரியாகப் பின்வரும் பாடலைச் சுட்டிக்காட்டலாம்.

"மான் ஓடி நடமாடும் மயில் வந்து ஆடும்
மாதே நீ என்னோடு நடைபோடும் போது
மீன் வந்து மிரண்டோடும் கிளிவந்து பேசும்
இனியாள் நீ என்னோடு கதை பேசும்போது"

இவ்வாறு தொடங்கும் பாடல் கவிஞனின் மென்மையான காதல் உணர்வுகளுக்குச் சாட்சியாகின்றது.

மழலைகளும் நானும் என்னும் பகுதி இக்கவிதைத் தொகுப்பிலே மிகவும் முக்கியமான பகுதி என்று நான் கருதுகிறேன். குழந்தைப்பாடல் மரபு ஈழத்திலே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. தமிழ்நாட்டில் குழந்தைப்பாடற் தொகுதிகள் வெளிவருவதற்கு முன்னரே ஈழத்தின் குழந்தைப் பாடல்கள் "பிள்ளைப் பாடல்" என்ற தொகுப்பாக வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. கல்விமான்கள், கணக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யர்கள் ஈழத்திலே குழந்தைப்பாடல் வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்துள்ளனர். குழந்தைகளின் உளவியல், மொழி வளம் முதலியவற்றை மனங்கொண்டு இவர் குழந்தைப் பாடல்களைப் பாடியுள்ளார். வானையும், நிலவையும், மலரையும், மணத்தையும், வண்ணத்தையும், வண்ணாத்துப்பூச்சியையும் பாடிய மரபினைத் தொடர்ந்த போதிலும் வானொலியையும், மணிக்கூட்டையும் பற்றியும் பாடியுள்ளார். இது அவரது உலகியல் அனுபவத்தைப் புலப்படுத்துகின்றது எனலாம்.

காலமாற்றத்தையும் கைவிடாது செல்ல வேண்டும் என்ற கருத்து நிலையுடையவராகக் கோப்பாய் சிவம் காணப்படுகிறார் என்பதற்குப் புதுக்கவிதையும் நானும் என்னும் பகுப்புச் சான்றாகிறது. கவிதையைப் புதுக்கவிதை பழங் கவிதை (மரபுக்கவிதை) என்று பகுப்பதில் எனக்கு உடன் பாடில்லை. கவிதை என்பது ஒன்றுதான். அது பல்வேறு யாப்பு வடிவங்களில் வருவதுபோல இப்போது புதிய வடிவில் வருகிறது. அவ்வளவு தான். புதுக்கவிதைகள் முப்பதுக்கும் மேற்பட்ட பக்கங்களில் இடம்பெற்றுள்ளன. அவற்றை அச்சுவடிவிலே தருவது (அமைப்பு) அழகாக இருக்கிறது. எள்ளல் உணர்வுடன் சமூகத்திற்குச் செய்தி சொல்லும் பாங்கினை இவரது புதுக்கவிதைகளிலே காணமுடிகிறது. உதாரணமாக ஒழுக்கம் என்னும் கவிதையைக் காட்டலாம்.

இசையும் நானும், இறையும் நானும், நிறுவனங்களும் நானும், வாழ்த்துப்பாடல்கள் எனப் பரந்துசெல்லும் பகுப்புக்கள் ஏதோ ஒரு வகையிலே கவிஞரின் உணர்வு நிலையினையும் உலகத் தொடர்பினையும் பிணைத்து நிற்கின்றன.

ஈழத்து இசைப்பாடல்கள் பற்றி ஆய்வு செய்பவர்கள் வீரமணி ஐயாவுடன் கோப்பாய் சிவத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். அதே போலக் கணபதி ஐயருடன் தொடங்கும் ஈழத்து ஊஞ்சற்பாடல் மரபிலே கோப்பாய் சிவமும் இடம் பெறுகிறார் என்பது வரலாற்றிலே இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு தலைப்புக்களில் வெவ்வேறு காலப் பகுதிகளிலே எழுதிய கவிதைகளை ஒன்று திரட்டி நூலாகத் தருவதனூடு ஈழத்துத் தமிழ்க் கவிதைப் பாரம்பரியத்தின் நோக்கத்தையும் போக்கையும் உணரவைக்கின்றார்.

கோப்பாய் சிவம் சிறந்த கல்விப்பாரம்பரியம் மிக்க குடும்பப் பின்னணியிலே வந்தவர். இவரது தந்தையார் பண்டிதர் பஞ்சாட்சர்மா முற்போக்குச் சிந்தனையுடன் தமிழ்ப்புலமைப் பாரம்பரியத்தினுள் நின்றவர். ஈழத்துப் பண்டிதப் பாரம்பரியம் பற்றி நாம் ஏலவே எழுதிய கட்டுரையிலே இவரைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறோம்.

பண்டிதர் பஞ்சாட்சரசர்மாவின் மகனான கோப்பாய் சிவம் பல்பரிமாண ஆளுமை மிக்கவர். கவிதை, கட்டுரை, சிறுகதை, ஆய்வு என அவை விரியும். ஈழத்துத் தமிழ்க் கவிதை மரபின் ஒரு தளத்தினைப் பதிவுசெய்யும் இத் தொகுப்புக் காலத்தின் தேவையாகும்.

போர் அனர்த்தங்கள், இடப்பெயர்வுகள், இன்னல்கள் இவற்றுக்கு மத்தியிலேயும் இவற்றைப் பாதுகாத்துத் தந்தமை பாராட்டிற்குரியது. பலரின் கையெழுத்துப் பிரதிகள் யுத்தகாலத்தில் அழிந்துபோனதை நாம் நன்கு அறிவோம். இவ்வளவையாவது இவர் பாதுகாத்து நூலாகத் தந்தமையைப் பாராட்டுகிறோம்.

கோப்பாய் சிவத்தின் கவிதைகளும், பாடல்களும் என்னும் தொகுப்பு அறிஞர்களாலும், ஆய்வாளர்களாலும் அங்கீகரிக்கப்படும் என்பது எமது நம்பிக்கையாகும். அவரது பணி இன்னும் இன்னும் தொடர வாழ்த்துவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நானும் என் கவிதைகளும்............

1967இல் பதின்மூன்று வயதில் கவிதையுலகில் புகுந்த எனக்கு முன்னோடிகளாக இருந்தவர்கள் வி. கந்த வனம், காரை செ. சுந்தரம்பிள்ளை, மதுரகவி நாகராஜன், மஹாகவி, எம். ஏ. நுஃமான், சோ. ப., சில்லையூர் செல்வராஜன், இ. முருகையன், புதுவை இரத்தினதுரை ..... என அடுக்கிக்கொண்டு போகலாம். இவர்களது கவிதைகளில் திளைத்த காலம் பொற்காலம். கவியரங்கு களில் முதல் வரிசையில் இருந்து கேட்டதும், இவர்களில் சிலரோடு கவியரங்குகளில் கவிதை வாசித்ததும், பின்னர் பல கவியரங்குகளை எண்பதுகளில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை போன்ற இடங்களில் தலைமை வகித்து நடத்தியதும் பசுமையான நினைவுகள். ஆனால் அந்தக் கவிதைகள் எதுவும் இன்று இல்லை. வானொலி மெல்லிசைப் பாடல்களுக்கு எழுதி அனுப்பி இசையோடு பாடப்பட்ட ஐம்பதுக்கு மேற்பட்ட பாடல்களில் இன்று மீந்திருப்பது மிகச்சிலவே!

பக்திப் பாடல்கள், காதற் கவிதைகள், இசைப் பாடல்கள், புதுக்கவிதைகள், பொதுவானவை எனத் தனித்தனிக் கொப்பிகளில் எழுதி வைத்து நூலாக வெளியிட முடியாத ஆதங்கத்தை அந்தக் கொப்பிகளை மீண்டும் மீண்டும் பார்த்தே திருப்தி அடைந்த இளமைக் காலம் துயரமானதன்று. அதிலும்கூட ஒரு சுகம் இருந்தது. ஆனால் இன்று அந்தக் கொப்பிகள் ஒன்றுகூட மீதமில்லை.

வடமொழியில் எழுந்த 'பிருகத்கதா' என்ற நூலின் ஆசிரியர் குணாட்டியரின் அற்புதமான வரலாற்றைப் படித்து வியந்து அக்கதையைக் 'குணாட்டியம்' என்ற பெயரில் குறுங்காவியமாக எழுதிவைத்து அடிக்கடி சத்தம் போட்டு படித்தும் பாடியும் மகிழ்ந்த இளமைக்காலம் நினைவில் உண்டு. இன்று அந்தக் குறுங்காவியம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்தின் கொடுமையால் அவை அழிந்தபோது "இக்காலத்திற்கு வேண்டியவை மட்டும் மிகுதியாக உள்ளன. ஏனையவை அழிக்கப்பட்டன" என அசரீரி வாக்கு ஒன்றும் எனக்குக் கேட்கவில்லை. ஆனால் வானிலிருந்து மழைகளின் இடியோசை இன்னும் காதுகளில் ஒலிக்கிறது.

இலக்கிய உலகிலிருந்து சிறிது விலகி, ஆன்மீக உலகில் நிலைகொண்டிருக்கும் என்னையும் என் கவிதை களையும் இன்றைய இளம் கவிஞர்களுக்கும், இரசிகர் களுக்கும் அறிமுகம் செய்வதும், இலக்கிய ஆய்வாளர்களின் பார்வையில் இடம்பிடிப்பதும், எஞ்சியிருக்கும் இவற்றை யாவது ஆவணப்படுத்திவைப்பது எனது கடமை என்ற எண்ணமும் இக்கவிதைத்தொகுதி உருவாகக் காரணமாயின.

எனது கவியாக்கங்கள் என்ற வகையில் கவித்துவம், கற்பனை என்பவற்றை மதிப்பிட உதவுதற்காகவும், ஆவணப்படுத்தலுக்காகவும் பல ஊஞ்சற் பாடல்களையும், சில வாழ்த்துப் பாடல்களையும் சேர்த்திருக்கிறேன்.

இந்நூற் தொகுப்பிற்கு ஊக்கம் தந்து வேண்டிய ஆலோசனைகளையும் தந்த பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர், **கவிஞர் திரு செல்லத்துரை சுதர்சன்** அவர்களுக்கும், அரியதொரு அணிந்துரை தந்த **பேராசிரியர் சி. சிவலிங்கராஜா** அவர்களுக்கும், இந்நூலின் வாசகர்களுக்கும் எனது அன்பான நன்றிகள்.

நூலை அழகுறப் பதித்த அச்சகத்தினர், அட்டையை வடிவமைத்த தம்பி புரந்தரன், வழமைபோல எனது எழுத்து முயற்சிகளிற்கு உந்துசக்தியாக விளங்கும் என் குடும்பத்தினர் - மனைவி, மகன், மகள் அனைவருக்கும் என் அன்புகள்.

**- கோப்பாய் சிவம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைத் துளிகள்.......


1. நானிலமும் நானும் 01

சமூகம்சார் கவிதைகள்

2. அவளும் நானும் 35

காதற் கவிதைகள்

3. மழலைகளும் நானும் 51

குழந்தைப் பாடல்கள்

4. புதுக்கவியும் நானும் 73

புதுக்கவிதைகள்

5. அரங்கமும் நானும் 107

கவிதை நாடகம்

6. இசையும் நானும் 117

இசைப் பாடல்கள்

7. இறையும் நானும் 163

ஊஞ்சற் பாடல்கள்

8. நிறுவனங்களும் நானும் 251

நிறுவனங்களின் பாடல்கள்

9. சுற்றமும் நானும் 269

வாழத்துப் பாடல்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

# நானிலமும் நானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. அடிக்கல்! 03
2. பெருமை செய்க! 03
3. ஈழவள நாடு 04
4. இசை பாடும் 05
5. புதிய உதயம் 06
6. பிரிவு 07
7. விடியல் 08
8. இணையுண்டோ? 09
9. அந்த நாள் என்று வருமோ? 10
10. பண்பின் துயரம் 11
11. இவர்கள் ஏன் வீண் பொழுது போக்குகிறார் 12
12. எவர் வருவார்? 13
13. வாழ்க்கை 14
14. அது ஏன்? 15
15. ஏன் இந்த ஓட்டம் 16
16. மலர்ச்சி 17
17. வித்தகச் சிற்பிகள் 18
18. நாம் வாழ்கின்றோம் 20
19. அருமை அறிவாரோ? 22
20. வாடி கலைவாணி என்றேன் 23
21. பொழுதினை வீணடித்தேன் 25
22. நவீன சுயம்வரம் 26
23. பொங்கிவரும் புத்தாண்டில்..... 30
24. பிரிந்த சொற்கள் 34



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்கல்

இன்று நான் செய்பவை
மிகமிகச் சிறியவை
என்று நான் அறிகுவேன்,
ஆயினும் -
நன்று நான் நாளைய
வாழ்வினில் செய்பவைக்கு
இன்றைய செயல்களே
அடிக்கல்!!

## பெருமை செய்க!

*பிறர் உன்னைப் புரிந்துகொண்டு*
*பெருமைகள் தராதுவிட்டால்*
*உறங்குதல் வேண்டாம் உந்தன்*
*உள்ளத்தினை உறுதியாக்கு!*
*பிறர்தமை நீ புரிந்து*
*பெருமைகள் செய்து வாழு!*
*அறம்அது என்றேநல்ல*
*அறிஞரும் கூறினார்கள்!!*
*- 'ஈழநாடு' 17.06.1984*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கன்னிக் கவிதை

### ஈழவளநாடு

எமதினிய தாய் நாடு ஈழ வள நாடு
எங்குமிசை பரப்பி நிற்கும் ஈழவளநாடு
அமைதியுடன் அழகுடைய ஈழ வள நாடு
அன்னியர் புகழ்ந்து போற்றும் ஈழ வள நாடு

மலை வளமும் மழை வளமும் மாண்புடனே பெற்று
மனங்கவரும் அழகுடைய ஈழ வள நாடு
அலைபாயும் ஆறுகளை அளவுடனே பெற்று
அழகுக்கு இலக்கணமாய் அமைந்திருக்கும் நாடு

சிங்களத் தீவு என்று பாரதியினாலே
சிறப்பாகக் கூறப்பட்ட ஈழ வள நாடு
மங்காப்பு கழினை இவ்வுலகினிலே பெற்று
மக்களிடை மாமணியாய் விளங்கிடும் நம் நாடு.

*ஜோதி 25.09.1967*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசை பாடும்

துன்பத்தின் நிழல்கண்டு வருந்தாதே மனமே
தூசென அது நீங்கும் பொறு நாளை வருமே
இன்பத்தின் ஒளிபின்னால் வருகின்ற போதே
துன்பத்தின் நிழல்முன்னால் வரும் என்று நம்பு.

பூபாளம் ஒலிக்கின்ற நாள்வந்து சேரும்
புலர்காலை இசையோடு நலம்வந்து சேரும்
நாவாரப் பலர் உன்னை நயந்தேத்தும் காலம்
நாடிஉன் இடம்தேடி நயமாகச் சேரும்

வீணையில் இசைமீட்ட விரல்வந்து சேரும்
வேய்ங்குழல் இசையோடு ஸ்வரம்வந்து சேரும்
மோனையின் அழகோடு சீர்வந்து சேரும்
முத்தமிழ்க் கவியாகி இசையோடு பாடும்!

- *'தினபதி' 01.08.1978*
*தினகரன் 05.10.1986*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய உதயம்

புலர்கின்ற காலையில் எழுகின்ற கதிரோனின்
பொன்னான புதிய ஒளியில்
மலர்கின்ற மனமென்னும் மலர்கண்டு துயரங்கள்
மறைந்தோடிப் போக நினைக்கும்

குளிர்கின்ற பனிநீரில் துளிநின்று பூங்கொடியின்
துளிர்மீது மின்னும் அழகில்
அழுகின்ற மனம்சற்று அவையாவும் பழங்கனவு
என எண்ணிப் பூத்து மகிழும்

வருகின்ற உதயத்தை வரவேற்கும் பணியேற்று
பறவையினம் இசைக்கும் கீதம்
தருகின்ற புதியஒரு துணிவான மலர்வோடு
தாவிக் குதிக்கும் இதயம்.

- 'சுடர்' ஆவணி 1975



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிவு

கோகிலம் பாடுது குளிர் காலையில் - அந்தக்
குரலுக்கு ஏன்சோகம் துணை இல்லையோ?
ஏகலும் துளிக்குது பனிநீர்த்துளி - அந்த
மேகத்துக் கேன்கண்ணீர் துணை இல்லையோ?

மேகத்தில் விழி நீரைத் துடைக்கின்றதே - அந்த
விரிகதிர் பகலோனின் மனையாள் எங்கே?
மோகத்தில் முகம்சோர்ந்த இளம்தென்றலும் - மிக
மெதுவாக வேவீசும் துயர் என்னவோ?

மல்லிகை மலர்வீழ்ந்து புரள்கின்றதேன்? - அந்த
மங்கையின் துணைவேறோர் இடம் போனதோ?
இல்லையென் றால்அங்கு இவையாவுமே - எந்தன்
பிரிவென்ற துயர்கண்டே அழுகின்றதோ?

- 'ஈழநாடு' 25.03.1984



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடியல்

*விடியலின் கதவினை உஷையவள் வானத்தில் திறக்கிறாள்*
*விண்ணதன் தலைவனாம் பரிதியின் பாதையை வகுக்கிறாள்*
*"விடிந்தது விடிந்தது" என எழும் பறவைகள் பாடின*
*வேதங்கள் ஓதிட யாகங்கள் தீயினில் சிறந்தன*

*ஆலய மணிகளில் "ஓம்" எனும் நாதங்கள் முழங்கின*
*ஆலைகள் சங்கொலி "ஆம்" என ஆர்ப்பரித் தெழுந்தன*
*காலையின் பாடத்தைக் கனிமொழிச் சிறுவர்கள் தொடங்கினர்*
*கடிதென இருள்திரை நீங்கிய தொளி எங்கும் பரந்தது*

*பள்ளி எழுந்தனர் பாரில் உள்ளோர் எனப் பார்த்தனள்*
*பட்டென உஷையவள் வெண்திரையால் முகம் மூடினாள்*
*துள்ளி எழுந்த இவ் வுலகத்தை இருள்கொண்டு மூடவே*
*வேளைவ ரட்டும்என் றேஅங்கு "ராத்திரி" பார்க்கிறான்.*

*- 'வீரகேசரி 24.07.1983*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணையுண்டோ?

ஊடலின்பின் வருகின்ற கூடலிலோர் இன்பமுண்டு
உறைத்தபின்னர் உண்கின்ற இனிப்பினிலோர் சுவையுண்டு
தேடலின்பின் கிடைக்கின்ற தேட்டத்தில் நிறைவுண்டு
தெளித்தபனித் துளியின்பின் வெய்யிலிலோர் அழகுண்டு

வாடியபின் துளிர்க்கின்ற வசந்தத்தில் அழகுண்டு
வறுமையின்பின் வருகின்ற செல்வத்தில் நிறைவுண்டு
ஆடியபின் பெறுகின்ற அமைதியிலோர் சுகமுண்டு
அகங்காரம் கொண்டபின்னர் பணிவதிலோர் பண்புண்டு!

கண்கலங்கித் துளித்தபின்னர் சிரிப்பதிலோர் இனிமையுண்டு
கடுமொழிகள் மொழிந்தபின்னே கனிவதிலோர் நிறைவுண்டு
மண்ணுலகில் துயரங்களை அனுபவித்து முடிந்தபின்னர்
மனதடையும் சுகத்திற்கு இவ்வுலகில் இணையுண்டோ?

*தினபதி 22.09.1978*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்த நாள் என்று வருமோ?

களவுபொய் கொலைகள் சூது
கனவென மறைந்து போக
அளவுடன் பொருளைப் பெற்று
அனைவரும் ஒன்று சேர்ந்து
வளமுடன் எங்கள் நாட்டை
விரைவினில் ஆக்கிவைத்து
இளமைபோல் என்றும் வாழும்
அந்தநாள் வருவ தென்றோ?

சாதிகள் சமய மென்ற
சங்கடப் பிரிவு நீங்க
ஆதிநாள் குற்றம் தன்னை
அன்றுடன் விட்டோ மென்று
மேதினி முற்று முள்ள
ஏழைசெல் வந்தர் யாரும்
தீதிலா தொன்றாய்க் கூடித்
திகழ்ந்திடும் நாளும் என்றோ?

எளிமையாய் வாழ்ந் திருந்து
ஏழமை தவிர்த்து வைத்து
பழியினுக் கஞ்சி யிந்தப்
பாரினிற் பாவ மின்றிப்
பொழுதினை இன்ப மாகப்
போற்றிடும் வகையில் போக்கி
களிப்புடன் வாழு கின்ற
அந்தநாள் காண்ப தெப்போ?

- 'வெற்றிமணி' 15.03.1970



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்பின் துயரம்

அழகுக் கிளிதான் கூண்டில் கிடந்தே
அநுதினமும் துயர் அடைகிறது
அண்டங் காக்கை அதற்கெது துயரம்
ஆகாயத்தில் பறக்கிறது!
பழகச்சிறந்த பண்புள்ள பசுதான்
பட்டியில் கிடந்தே உழல்கிறது.
பார்ப்போர் வெறுக்கும் பன்றிதன் பாட்டில்
பாரில் உலவித் திரிகிறது.

மனமாய்ப் பிறர்க்கே மங்கலம் அருளும்
மஞ்சள் தான்தினம் தேய்கிறது
மண்ணில் கிடக்கும் புல்லின் கிழங்கு
மகிழ்வுடன் தனக்குள் சுகிக்கிறது
உணவாய் உதவும் சுவைமிகு கனிகள்
ஒவ்வொரு நாளும் மடிகிறது
உதவிகள் புரியா நச்சுக்கனிகள்
உச்சிமரத்தில் களிக்கிறது

மணக்கும் ரோஜா மங்கையர் தலையில்
மனத்துய ரோடே வாடுகுது
மணம்குணம் கிடையாப் புல்லின் மலர்கள்
மாலையின் வரையில் சிரிக்கிறது
இணக்கம் அறிந்தே இசையுடன் வாழும்
இன்குணம் கொண்டோர் வாடுகிறார்
இங்கிதம் தெரியா இழிகுணத் தோர்கள்
ஏனோ சுகமாய் வாழுகிறார்!

- 'ஈழநாடு' 26.08.1984



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவர்கள் ஏன் வீண் பொழுது போக்குகிறார்?

பனைமரத்தின் கீழிருந்து பால் குடித்தேன்
பார்த்தவர்கள் முகம் சுளித்தார், குடியன் என்றார்
எனை மறந்தென் பாடலினை இசைத்து நின்றேன்
'இவனுக்கு விசர்' என்றே இயம்பி நின்றார்.

நான் வணங்கும் தேவியவள் பாதமீதில்
நாள் பொழுதாய் நான்பொழுது போக்கிநின்றேன்
ஏன் இவனுக் கொருதொழிலும் இலையோ இங்கு
வெறும்பொழுது போக்குகிறான் என்றுரைத்தார்

அளவுடனே செலவிட்டேன், எளிமையாக
வாழுவதே நலம் என்ற காரணத்தால்
இளகாத நெஞ்சன் என்றார், கஞ்சன் என்றார்
'ஈச்சப்பி' என்றெல்லாம் ஏசிநின்றார்

இல்லையென வந்தவர்க்குப் பொருளை வாரி
இல்லையெனா தென்கரத்தால் கொடுத்து வந்தேன்
பொல்லாத கள்வனிவன் இவனுக்கிந்தப்
பொருள்எல்லாம் வந்தவிதம் எவ்வாறென்றார்.

நான் கஞ்சன், நான் கள்ளன் ஆனால் என்ன?
நான் குடியன், நான் விசரன் ஆனால் என்ன?
ஏன்இவர்கள் வேறுதொழில் இன்றி என்னை
விமர்சித்து வீண்பொழுது போக்குகின்றார்?

இவர்களுக்கோர் தீங்குதனை நான்செய் தேனோ?
என்பாட்டில் நான் வாழ்ந்தோர் நாளிற் சாவேன்
எவர்மீதும் குறையேதும் காணாவிட்டால்
'செமியாத' உலகம் இது அந்தோ பாவம்!!

- *'ஈழநாடு' 29.04.1984*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எவர் வருவார்?

*என்னிடம் கேள்விகள் கேட்பார் - நல்ல*
*இசைவுடன் விடைகளும் பெறுவார்*
*என்னித யந்தனில் எழுகின்ற கேள்விக்கு*
*எவர் பதில் கூறுவர் தாயே?*

*என்னிடம் பாடல்கள் கேட்பார் - அந்த*
*இன்னிசை யால் நலம் பெறுவார்*
*என்னித யந்தனில் எழுகின்ற தாபத்தை*
*எவர் அணைப் பார்களோ தாயே?*

*என்னிடம் துன்பங்கள் புகல்வார் - எந்தன்*
*இன்மொழி கேட்டவர் மகிழ்வார்*
*என்னித யந்தனில் எழுகின்ற துன்பத்தை*
*எவர்வந்து நீக்குவர் தாயே?*

*என்னிடம் உதவிகள் பெறுவார் - பின்னர்*
*என்னையே 'சீ'யென எறிவார்*
*என்னித யந்தனில் எழுகின்ற தேவைக்கு*
*எவர் வந்துங்(கு) உதவுவர் தாயே?*

*- 'ஈழநாடு 25.06.1976*
*- 'தினகரன்' 05.10.1986*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை

இன்பங்கள் தானே இதயத்தின் வாசல்
இளமைக்குக் கூறும் வரவேற்புப் பாடல்
துன்பங்கள் ஏனோ திரைமூட வேண்டும்?
துயரங்கள் தானோ தரைமீது கோலம்!

வாழ்வென்ற மேடை அதன்மீதில் ஆட்டம்
வருவோர்கள் எல்லாம் நடிகர்கள் தானோ?
சூழ்கின்ற துன்ப இருள்மீது தானோ
சுவையான கூத்தும் ஆரம்பமாகும்?

இரவென்ப தெல்லாம் துயரங்கள் மாய்ந்தே
இனிவான காட்சி கனவாகக் காண!
இரவென்பதேகிப் பகல் வந்தபோது
எழுகின்ற துன்பம் வரும்தானோ மீண்டும்?!

*தினபதி 24.04.1978*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அது ஏன்?

வான் பார்த்து மலர்கின்ற மலர் யாவும் நிலம் நோக்கி
மறுநாளில் குவிகின்றதென்ன? - அவைகள்
மணம் வாடி உதிர்கின்ற தென்ன?

தேன் ஊறும் சதைகொண்டு தெவிட்டாது சுவைதந்த
தீங்கனிகள் அழுகுவதும் என்ன? - அவைகள்
சிலநாளில் நாறுவதும் என்ன?

வான்மீதில் ஒளிவீசி வருகின்ற முழுமதியும்
மறுநாளில் தேய்கின்ற தென்ன? - அதுவும்
மங்கிமறைந் தாகுவதும் என்ன?

தான்கொண்ட கிளையால் இத்தரைமீது நிழல்செய்த
தருவீழ்ந்து போகின்ற தென்ன? - அதுவும்
தன்நிலைமை மாறுவதும் என்ன?

பேர்கொண்டு புவிமீதில் பெருவாழ்வு வாழ்வோர்கள்
பிறகோர்நாள் பிணமாவதென்ன? - உலகில்
பேர்கூட மறைகின்ற தென்ன?

யார் இந்த மாற்றங்கள் தனைக்கண்டு புவிவாழ்வின்
நிலையாமைதனை எண்ணு கின்றார் - உலக
நிலை தன்னைத் தாம் எண்ணுகின்றார்?

- 'ஈழநாடு' 04.06.1978



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏன் இந்த ஓட்டம்?

காலை விழிப்பினில் கண்கள் திறந்தால்
காண்பவை யாவும் அவசர ஓட்டம்
சோலை மலர்களின் மீதமர் தேனீ
கோடி மலர்களின் மீதினில் நாட்டம்

வேலை என்னதான் செய்வதற்காகவோ
மேலே ஓடிப்பறக்குது காகம்
சாலை மீதினில் வாக னங்களும்
சாரி சாரியாய் மனிதரும் ஓட்டம்

காலை வேளையில் கிழக்கினில் உதித்த
கதிரவன் தினம் மேற்கினுக் கோட்டம்
மூலை மூலையாய்ச் சுருண்டு படுத்திடும்
நாயும் இடைக்கிடை நாலுகால் ஓட்டம்

ஓடும் மனிதரின் கண்களும் ஓட்டம்
உள்ளமும் எங்கோ தொலைவினுக் கோட்டம்
ஓடி முடிந்தொரு நாளில் படுத்தால்
உடலை விடுத்துயிர் ஓடுமே ஓட்டம்!

- 'ஈழநாடு 19.11.1978



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்ச்சி

*வித்து முளைத்தெழுந் தேகிளை விட்டொரு*
*வேளையி லேதுளிர் மத்தியிலே*
*புத்துணர் வோடொரு மொட்டும் அரும்பி*
*முகிழ்த்து விரிந்து மலர்கிறது*

*கண்கள் கலந்து பின் வார்த்தை கலந்தொரு*
*காரியம் ஆகி முடிந்த பின்னே*
*மண்ணில் குழந்தை ஜனிக்கிறது பெண்மை*
*மங்கல மாகி மலர்கிறது*

*சிந்தனை வந்துபின் சொற்கள் கலந்தொரு*
*சீரிய காவியம் ஆகி வந்து*
*நொந்து வருந்திடு நெஞ்சில் பிறந்ததும்*
*நோக்கங்கள் பொங்கி மலர்கிறது*

*- சுடர் ஆடி 1976*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் தினக் விதை

## வித்தகச் சிற்பிகள்

ஆசி கூறிடும் உரிமை உடையோர்
அடுத்த தலைமுறை ஆக்கிடும் பெரியோர்
ஆசிரி யர்எனப் பெயர்தமக் குரியோர்
அவர்கள் இன்றைய தினத்துக் குரியோர்
பேசும் தொழிலே பெரிதும் உடையோர்
பெருமை கல்வியால் பெற்ற அறிவோர்
தேசு மிக்கவர் குருஎனப் படுவோர்
தினம் அவர் பாதம் பணிதல்நம் கடனே!

தங்கள் தகைமையைத் தாம் தினம் கூட்டித்
தவறு போக்கித் தமைப்பிறர் நோக்க
எங்கும் என்றும் எதிலும் வளர்ந்திடும்
எத்தனை புதிய விடயங்கள் ஆயினும்
அங்கு நோக்கி அவைகள் கிரகித்து
ஆழ மாகத் தாம் தினம் கற்று
தங்கள் மாணவர் கற்கப் புதுமைகள்
தாம்தெளி வாக்கி வழங்கிடும் தன்மையர்

காலம் காலமாய்க் கல்வியில் நிலைபெறும்
கனத்த நிலையியற் கட்டளைப் பதிவுகள்
கால மாற்றத்தில் தோன்றும் புதுமைகள்
கண்டு பழைமையும் புதுமையும் சேர்த்துடன்
கோல மாகப் புனைந்து எளிமையாய்
கூடும் மாணவச் செல்வங்கள் மூளையில்
மேலும் அழகுற விளக்கிப் பதிக்கின்ற
வித்தகச் சிற்பிகள் ஆசிரி யர்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னச் சின்ன மலர்களாய் வந்திடும்
சீர்மி குந்தநல் மாணவ முத்துக்கள்
கன்னங் குழியச் சிரித்துக் கதைத்திடும்
காட்சியில் தங்கள் துன்பங்கள் போக்குவார்
மென்மையாய் அந்தப் பூக்களின் வாசனை
மேம்ப டுத்தி மலர்த்தி அனுப்புவார்
அன்னை தந்தையர் வாழ்த்தும் மகிழ்ச்சியில்
ஆயி ரம் சுவர்க் கங்களைக் காண்பரே

ஏணி யாய்நின்று எத்தனை மாணவர்
ஏறி மேற்சென்று எங்கும் பரந்துமே
மாணி யாய்ப் பட்ட விருது பலபெற்று
மண்ணில் மாண்புறு பேர்புகழ் தாம்பெற்று
வாணிபம், கலை, வங்கி, மருத்துவம்,
வளரும் பொறியியல், பொருளியல், புவியியல்,
பேணும் நம்வர லாற்றுடன் மொழிபல
பெற்றுப் பணிசெய்யக் கால்இவர் அல்லவோ?

அன்பு டன்ரோஜாப் பூக்கொண்டு தந்திடும்
அகவை ஆறு நிறைந்த குழந்தையர்
துன்பம் போக்கிச் சுவைக்கதை நல்கிடும்
தூய ஏழெட்டு வயதுடை மாணவர்
இன்பக் கதைபேசி இதயம் கவர்ந்திடும்
பத்துப் பன்னிரண் டேவய தானவர்
என்றிங்கு யாவரும் என்றும் வணங்கிடும்
தெய்வங்கள் ஆசிரி யப்பெரு மக்களே

ஆசிரி யர்தினம் தன்னில் அவர்புகழ்
அன்புடன்கவி தன்னில் உரைத்திட்டேன்
வீசு நற்புகழ் ஓங்கி வளர்ந்திட
வேண்டும் என்று வாழ்த்தி அமர்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கற் கவிதை - 2012

## நாம் வாழ்கின்றோம்

வாழ்வின் சுகங்கள் யாவும் இழந்தோம்
மனதினில் துன்பம் நாம் சுமந்தோம்
ஏழ்மைத் துயரில் ஏங்கித் தவித்தோம்
என்றாலும் நாம் வாழ்கின்றோம்

**தையின் வரவால்** தாழ்வுகள் நீங்கி
தரணியில் புதிதாய் நாம் பிறப்போம்
பொய்ம்மை அகற்றிப் பூக்கும் புதுயுகப்
**பொங்கல் பொங்கி மகிழ்ந்திடுவோம்**

நம்பிக் கை நம் உள்ளம் நிறைய
நலமாய் உண்டே அதை மறவோம்
நம்பிக் கைத்தொழில் நல்லுழ வோடு
நாடித் தொழில்பல நாம்செய் வோம்

கல்விப் பயிரை என்றும் வளர்ப்போம்
கருந்தனம் நமக்கு அறிவே யாம்
சொல்லும் பொருளும் எண்ணும் எழுத்தும்
துறைபல வாகத் தினம்பயில் வோம்

அறிவியல், கணினி, மருத்துவம், பல்மொழி,
ஆன்மீ கத்துடன் நாம் கற்போம்
பொறியியல் நுண்தொழில் கமத்தொழில் யாவும்
போற்றி வளர்த்தே நாம் மகிழ்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழப்பின் துயரை எம்மவர் மனத்தில்
இல்லையென் றாக்கி இசைவுட னே
உழைப்பின் சுடரால் ஒளிநலம் சேர்த்து
உயர்கலை நலங்கள் ஊக்குவிப்போம்

கூத்தும் இசையும் சொற்கலை மேன்மை
உயர்நா டகமும் இலக்கியமும்
கூத்தன் அருளால் நிறைவாய் ஆக்கி
கொஞ்சும் தமிழில் குலவிடுவோம்

ஆடல் பாடல் அருந்தொழில் பேணல்
அன்புடன் மாந்தர் நலமுற வாழ்தல்
தேடல் நிறைவில் சேர்ந்தே மகிழ்தல்
இவையே வாழ்வின் இனிதாம் சுகங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருமை அறிவாரோ

நேற்றைக்கு நான்கடைக்குச் சென்றிருந்தேன்
நிறையப்பேர் வந்திருந்தார் பொருள்கள் வாங்க
ஆற்றாதோர் மூலையிலே காத்திருந்தேன்
அந்நேரம் நான்கண்ட காட்சி, அந்தோ!!

பொருள்நிறுக்கும் பொடியனவன் பக்கத்தேயோர்
புத்தகத்தை நான்கண்டேன், அல்ல, அல்ல,
உருச்சிதைந்தே முன்னழிந்து பாதித்தாள்கள்
உள்ளஅதைப் புத்தகமென்று ரைக்கலாமோ?

அப்பொடியன் அதிலிருந்தோர் தாள்கிழித்தே
அவனுடலின் வியர்வையினைத் துடைத்தான் இன்னோர்
சுப்பனொரு தாளெடுத்துச் சுருட்டி நீட்டிச்
சுருட்டுதனைப் பற்றவைக்க நெருப்பில் வைத்தான்

என்னிதயம் துடிதுடிக்க அதனைப் பார்த்தல்
இயலாதோர் தூண்பற்றி நின்றேன், ஆங்கே
இன்னொருதாள் கிழித்தெடுத்தே இனிப்புச்சுற்றி
நின்றவொரு பையனிடம் கொடுத்தல் கண்டேன்

அச்சிறுவன் இனிப்பை உடன்வாயில் போட்டான்
அலட்சியமாய்த் தாளதனைக் கசக்கிப் போட்டான்
'நச்'செனவென் காலடியில் வீழ்ந்தபோது
நானெடுத்துத் தாள்விரித்துப் பார்த்தேன், வீழ்ந்தேன்

நான்நிறையக் கஷ்டங்கள் பட்டே எந்தன்
நற்கவிதை பலதொகுத்து அச்சில் போட்ட
தேன்கவிதைத் தொகுதியதன் கதியைக் கண்டேன்
தெருநாய் சிவ லிங்கத்தை என்னசெய்யும்?

- 'ஈழநாடு' 16.11.1986



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடிகலை வாணி என்றேன் வந்ததொரு காற்செருப்பு!

பள்ளியிலே நான்படித்த காலத் தோர்நாள்
பகற்கனவு கண்டதனால் நான் அடைந்த
அல்லலினை உங்களுக்குக் கூறவேண்டும்
அதற்காகக் கவியொன்றை எழுதுகின்றேன்.

புரட்டாதி மாதமது ஆதலாலே
பொழுதெல்லாம் சரசுவதி பூசைக்காலம்
கரைச்சலில்லைப் படிப்புமில்லைப் பத்து நாளும்
காலைமுதல் மாலைவரை பூசைதானே.

அன்றொருநாள் பூசையினை முடித்தபின்னர்
அவல் கடலை வயிறார உண்டுவிட்டே
பின்னர் எங்கள் வகுப்பறைக்கு நாங்கள் சென்றே
பெருமகிழ்வாய் இடங்களிலே அமர்ந்து கொண்டோம்.

ஆசிரியர் வரவில்லை அதனால் நானோ
அவல் கடலை உண்டகளை உடலை வாட்ட
ஆசனத்தின் மீதமர்ந்த வாறே மேசை
அதன் மீது தலைசாய்த்துத் தூங்கலானேன்.

தேடி நிதம் கலைவாணி பாடல் பாடித்
திரிந்ததனால் கனவினிலும் வாணி வந்தாள்
வாடிகலை வாணி! என்றேன், கனவும் நீங்க
வந்ததொரு காற்செருப்பு என்னை நோக்கி.

முகத்தினிலே காற்செருப்பு மோதி வீழ
முகம் நிமிர்த்திப் பார்த்தனன்நான் திகைப்பினோடு
வகுப்பினிலே படிக்கின்ற எங்கள் தோழி
வடிவழகி கலைவாணி அருகே நின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*என் வகுப்பில் கலைவாணி என்றொருத்தி*
*இருப்பதனை நான் மறந்து கனவில் வந்த*
*என்னருமைக் கலைவாணி தனை அழைத்தே*
*இன்னலிலே நான்மாட்டிக் கொண்டேன் அந்தோ!*

*என்ன மிஸ்டர் மறுசெருப்பும் தரவா? என்றே*
*என்னை அவள் கோபமுடன் கேட்டுநின்றாள்*
*இன்னொருகால் பகற்கனவு காணேன் என்ற*
*எண்ணமுடன் தலைகுனிந்து நானும் நின்றேன்.*

*- 'அருவி' 1984*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொழுதினை வீணடித்தேன்!

அன்னையின் வயிற்றில் ஐயிரு திங்கள் குடியிருந்தும்
அவளுடல் வருத்திஇவ் அவனியில் பிறந்தும் பின் பற்பலநாள்
அன்புடன் அவள்தரும் பால்குடித் தழுதுகை காலசைத்து
அந்தநாள் அறிவிலா வேளையில் பொழுதினை வீணடித்தேன்.

அவள்மடி மீதினில் அழுதுநான் அமர்ந்தஅந் நாள் அகன்று
அவனியின் மடியினில் தவழ்ந்திடும் வேளையும் வந்தபோது
தவழ்தலால் அவனியை அளந்திடும் வேலையைச் செய்தும் எந்தன்
தங்கமாம் பொழுதினை வீணடித் தேன்அறி யாப்பருவம்.

தவழ்ந்தபின் எழுந்துநான் தளிர்நடை பயின்றபோ தங்கும் இங்கும்
தாவிடும் கண்களில் கண்டிடும் காட்சியை ரசிக்க எண்ணி
கவலைகள் இன்றிஇப் புவியினில் பல இடம் தேடி ஓடிக்
காலத்தை ஓட்டினேன் வீண்பொழு தாகநற் சிந்தை இன்றி

பள்ளியில் பணிவுடன் பாடங்கள் கற்றிடும் பாலனாய் நான்
பாங்குடன் சென்றிடும் வேளைஎன் நண்பர்கள் பலரைச் சேர்ந்தே
துள்ளிடும் கன்றுபோல் நேரமெல் லாம்விளை யாட்டை எண்ணித்
தூயஎன் பொழுதினை வீணடித் தேன்எனை யார்தடுத்தார்?

பாலனாய்த் துள்ளிய பின்னர்நான் வாலிப வயதினை எட்டிமிக்க
பகட்டுடன் என்னையே எழிலுற அலங்கரித் திளநகை சிந்துகின்ற
வாலையர்பின்ஒரு வெட்கமும் இன்றியே சுற்றினேன் நாளும் போதும்
மருந்தெனும்பொழுதினைவீணடித்தேன்மிகமடத்தனம்இஃது அன்றோ

வாலிப மிடுக்குகள் வயதுமே போவதால் விரைவிலே ஓடிப்போக
வயோதிபம் வந்துஎன் அருகிலே நிற்குது வந்தபின் அந்தவேளை
மேலும்நான்என்னதான்செய்குவன்மிகமிகவருத்தமும்நோயும்தானே
படுக்கையில்பொழுதினைவீணடிப்பேன்இதைமாற்றிடயாரும் இல்லை

- 'அருவி' 1985



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவீன சுயம் வரம்

நாக ரிகத்தில் மிக்க நலந் திகழ் நாடு, செல்வ
மோகமும் புதுமை யோடு பூத்திடும் நாடு, யந்த்ர
வேகமும் வேண்டு வோரை விரட்டிடும் தன்மையோடு
சோகமே இல்லை என்று செப்பிடும் இனிய நாடு.

மாடங்கள், கோபுரங்கள், மாளிகை, தியேட்டர் ஓட்டல்
நாடகம் நடனம் பாட்டு நடத்திடும் மண்டபங்கள்
வேடங்கள் போட்ட போலி மாந்தர்கள் பெருமை யோடு
நாடெங்கும் நிறைந்து தோன்றி நல்லெழில் காட்டும் நாடு.

வீடெலாம் லைட்டுத் தொங்கும் வீதியில் கார்கள் தங்கும்
ஏடெலாம் நங்கை மார்கள் எழிலுடற் படங்கள் தோன்றும்
நாடெலாம் செருப்பு சேலை நகைக்கடை நிறைந்து தோன்றும்
காடெல்லாம் மரங்கள் நீங்கிக் கட்டிடம் வளர்ந்து தோன்றும்

இந்தநல் லினிய நாட்டில் இணையிலாச் செல்வத்தோடும்
இந்திரன் போன்று மிக்க இசையொடும் வாழ்ந்து வந்த
சுந்தர லிங்க மென்று சொல்லு மோர் நாமமுற்ற
அந்த நற்பெரியர் தம்மின் அருங்கதை கூறுவாமே.

அல்லியென் றொருபெண் இந்த அன்பருக்குண்டு, நல்ல
மல்லிகைப் பூவை யொத்த மங்கையின் பற்கள் மிக்க
வெள்ளைதான் ஆயின் எல்லாம் பொய்ப் பல்லாம் தெரிந்து
கொள்வீர்
மெல்லியள் கூந்தல் யாவும் முடிமயிர்க் கூந்தலாகும்.

மினியுடை உடுத்த நங்கை மின்னிடும் உடலைக் கொண்டாள்
பனியென வியர்வை முத்துப் படிந்து நல் அழகு கூட்டும்
இனிய புன்னகை முகத்தள் இளைஞரைக் கவருகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்துவம் மிக்க தான கவர்ச்சியும் கொண்ட நங்கை.

இருபது வயது வந்த இளையவள் இவட்கு நல்ல
பருவமும் வந்த தென்று பக்குவம் உணர்ந்து தந்தை
பொருந்திட மணமும் செய்து பொலிவுற வைக்க எண்ணிக்
கருத்தினை அவட்கு மிக்க கனிவுடன் கூறி வைத்தார்.

மிரண்டு முன்நோக்கு கின்ற மயல்விழி நிலத்தை நோக்கச்
சிரம் தனைத் தாழ்த்தி நின்று சிந்தனை செய்த பின்பு
இரண்டொரு நாட்கள் செல்ல என் கருத் தியம்பு கின்றேன்
பொறுத்திடும் என்று மெல்லப் புகன்றனள் பின்னர் சென்றாள்.

நகர்ந்திரு நாட்கள் செல்ல நங்கையும் அவர் முன் வந்து
புகன்றனள் எந்தனுக்குப் பொருந்திடும் கணவன் தன்னை
தகவுடன் தேடுதற்குத் தக்கவோர் வழியைச் சொல்வேன்
நிகழ்த்திட வேண்டும் அஃதை நீங்கள் என்றியம்பி நின்றாள்.

"எப்படி?" என்று தந்தை இளையவள் இவளை நோக்கிச்
செப்பிட "அந்நாள் மன்னர் சிறந்ததம் கன்னியர்க்குத்
தப்பிதம் இன்றிச் செய்த சுயம்வரம் போல ஒன்றை
இப்ப நாம் செய்தால் என்ன? எதிர்புகள் உண்டோ?" என்றாள்.

நன்று நன்றென்றுகூறி நன் மகிழ் வுற்றார் அந்த
"மன்ன"ரும் உடனே ஓடி மகிழ்வுடன் இந்தச் சேதி
மின்னென "ரேடியோவில்" வியன் நிலம் முழுதும் சூழ்ந்து
சென்றிடச் செய்தார், தாளில் செய்திகள் ஆக்கிவைத்தார்.

வந்ததே அந்த நாளும் வாலிபர் வந்து சேர்ந்தார்
விந்தையின் மிக்க இந்த வியப்புறு காட்சி தன்னை
வந்துநின் றாரின் மாந்தர் மகிழ்வுடன் பார்த்து நின்றார்
"முந்திய காலம் மீண்டும் முளைத்ததோ?" என வியந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடிப்புகள் நீக்கிடாத மினுக்கிய உடைகளோடும்
துடித்திடு மனத்தினோடும் துறுதுறு விழியினோடும்
அடிக்கடி திருப்பி நோக்கும் அழகுறு "வாட்"சினோடும்
வடிவுறும் வாலிபர்கள் வரிசையில் வீற்றிருந்தார்.

குறித்த அந்நேரம் வந்தே "குதித்திட" மங்கை வீட்டின்
அறையினை விட்டு "ஹோலை" அணுகினள் அரங்கில் வந்து
நிறைந்த அவ்விளைஞர் கூட்டநடுவிலே தோன்ற, தோழி
முறையிலே அவர்கள் தம்மை அறிமுகம் செய்து வைத்தாள்.

சரசரத் தொலிக்கும் பட்டுச் சேலையை அணியவில்லை
கரத்தினில் மலரின் மாலை காணவும் இல்லை நங்கை
பரபரப்புற்று நாணிப் பதைக்கவும் இல்லை, மூடி
முகத்தினைத் திரையினாலே மறைக்கவும் இல்லைஜூ இல்லை

மினியுடை உடுத்து வந்தாள் மிகமிகக் கவர்ச்சியோடு
கனியிதழ் தன்னில் "லிப்ஸ்டிக்" கைவிரல் தன்னில் கியூட்டெக்ஸ்
இனி இவள் எந்தனுக்கே எனும் ஒரு நினைப்பில் அந்த
வனிதையை நோக்கி நின்றார் வாலிபர் ஆவலோடும்.

நடந்தனள் அரங்கில் நங்கை நாதனைத் தேடி அங்கு
கடந்தனள் பலரைக் கன்னி, கவன்றனர் அவர்கள், மீதி
இடந்தனில் இருந்தவர்கள் இன்பமுற் றிருந்தார், மெல்ல
நடந்தனள் நடந்தே ஈற்றில் நாதனைத் தேர்ந்து நின்றாள்

கன்னமே தெரிந்திடாது கறுத்த நற் கன்ன மீசை
சின்ன ஓர் நறுக்கு மீசை சிரசினில் பற்றையாகத்
தன்னிலே வளர்ந்து நிற்கும் தறுதலை மயிர்கள், மேலை
நன்னியே பிடித்திறுக்கும் நாகரிகத்தில் ஆடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரத்தினில் "சீக்கோ" அன்பன்கண்களில் "சன்கிளாசு"
விரல்களில் சிகரெட்நன்கு "விர்"ரெனப் புகைத்து நிற்க.
அரசியற் தேர்தல் தன்னில்அதிகவாக்கெடுத்து வென்ற
அரசியல் வாதி போல ஆண்மையோடவனும் நின்றான்.

இணைந்ததே ஜோடி, இன்பம் இணைந்ததே இருவரோடும்
கலைந்ததே இளைஞர் கூட்டம் கவலையும் பொறாமையோடும்
முனைந்தது முடிந்ததென்று மகிழ்ந்தனர் தந்தையாரும்
நினைந்தது நடந்ததென்று நினைவினில் மகிழ்ந்தாள் கன்னி.

காவிய முடிவில் நானோர் கதையினைக் கூறுகின்றேன்
மேவி அவ் அந்தரங்க முடிவினையார்க்கும் கூறித்
தேவை இல் லாமல் என்னைத் தவித்திட வைத்திடாதீர்
காவிய நாயகர்கள் காத்த அந் தரங்க மாகும்.

நங்கையும் நாகரீக நவயுக இளைஞன் தானும்
தங்களுள் காதல் செய்தே தவித்தனர் மணமும் செய்ய
அங்கதைப் பெற்றோர் முன்பே அறைந்திடத் துணிவிலாது
தங்கினர் தயங்கி ஏங்கித் தவித்தனர் அந்த வேளை.

தந்தை வந் தவட்குச் சேதி தந்ததும் அவள் திகைத்து
வந்தனள் இவனை நாடி வார்த்தைகள் புகன்று நின்றாள்
தந்திரமாய் அவர்கள் திட்டமும் தீட்டினார்கள்
அந்தநற் திட்ட மேஇச் சுயம்வர மாகும் கேண்மீர்

காதலும் கனிந்த தின்ப காவியம் கனிந்த தெந்த
மோதலும் முழக்கமின்றி முடிந்தது புதுமையாக
ஆதியின் வழக்கமின்று அருமையாய் மீண்டதிந்த
மேதினி மீதில் அன்னார் மேவியபுகழும் வாழ்க!

- 'வீரகேசரி' 06.05.1984



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கிவரும் புத்தாண்டில்
# பூத்துவரும் புத்துணர்வு!

## 'வீரகேசரி' 1990 புத்தாண்டுப் போட்டியில்
## முதற்பரிசு ரூ 5,000/= பெற்றது.

காப்பு

சாந்தி நிலைக்கத் தமிழ்க் கவிதை பாடுதற்கு
நீந்தி தமிழ்க் கடலுள் மூழ்குகிறேன் - ஏந்தி
என்னைக் கரை சேர்ப்பாய் இனியகவி முத்துடனே
வினை களையும் நாயகனே கா.

கவி

இலங்கை மணிநாட்டின் எல்லையிலோ கடலலைகள்
எந்நாளும் ஓயாமல் இரவுபகல் ஆர்ப்பரிக்கும்
நலங்கொள் திருத்தேசக் கரைகளினை அவை அரித்து
நாட்டைக் கடலினுள் அமுக்கிவிட நாள் பார்க்கும்
சிலம்பணிந்த கடற் பெண்ணாள் சிங்கார ஒலியெழுப்பிச்
சிரித்தெம்மை அரவணைக்கும் காட்சியிது எனநினைத்தால்
தலைமுழுகிப் போய்விடுவோம் தலைநிமிர வழியில்லை
தடுத்தெமது கரை பார்த்து தாயகத்தைக் காத்திடுவோம்

கீழைக் கரையினிலே இஸ்மாயில் காக்காவும்
இனிய வடக்கினிலே இந்திரலிங் கத்தாரும்
வாழும் தென்கரையில் அப்புஹாமி ஐயாவும்
வளர் மேற்கில் மூவருமே கைகோர்த்து நின்றிருந்தால்
பாழும் கடலலைகள் பார்த்ததுமே ஓட்டமிடும்
பக்குவமாய் நம் கரைகள் பழுதின்றி நிமிர்ந்திருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழும் அலைக்கரங்கள் சூறையிடும் நோக்கின்றிச்
சொந்தமுடன் நமதடியில் கடல்வளங்கள் கொண்டுதரும்

தென்னகத்து சிங்களர்கள் வடக்கினையே பார்த்திருக்கத்
தேன்தமிழர் வடக்கிருந்து தென்னகத்தைப் பார்த்திருக்க
அன்புமதச் சோனகர்கள் அவர்பாட்டில் சோர்ந்திருக்க
அவ்வாறே மேற்கினிலே மூவினமும் தளர்ந்திருந்தால்
உன்னிவரும் ஊன்கழுகு உள்நுழையக் காவலென்ன?
ஊர்மேய்ந்து நம்நாட்டின் உன்னதங்கள் தாம் தேயும்
இன்னமும் இச் சோதனைகள் எங்களுக்கு வேண்டுவதோ
எத்திசையும் காவலிட எம்கரங்கள் இணையட்டும்

ஏந்திய எம் கைகளிலே ஆயுதங்கள் இனிவேண்டாம்
எம்மவரை எம்மவராய் அணைத்திடவே கரம் எடுப்போம்
நீந்தி ஒரு கடல் தாண்டி நெடும்பயணம் போய் ஒருவர்
நீட்டுகிற பிச்சையினை நாடி எங்கள் கரம் விரித்தே
ஏந்தும் ஒரு நிலை வேண்டாம் எம் துயர்கள் நாம் தீர்ப்போம்
எங்களினை நாம் காக்கும் உரம்பெறுவோம் திறம் பெறுவோம்
சேர்ந்திருப்போம் தாம்தாமே தத்தமது நலன்காப்போம்
தேவையெனில் தேடிவரும் வெளிப்பகைக்கு போர் தொடுப்போம்

மலையகத்துத் தேயிலைக்கு திருமலையில் சீனியிட்டு
மன்னாரில் மீனெடுத்து மட்டுநகர் தேன் சுவைப்போம்
யாழகத்து மாம்பழமும் தென்னகத்தின் பலாச்சுளையும்
யாழ்தொடுத்த பாட்டெனவே நாடுமுற்றும் தேன்பிலிற்றும்
விலை மிகுந்த முத்தெடுத்து மேற்கினிலே பாட்டிசைப்போம்
வெளிநாட்டு வணிகர்களை திருமலைக்கு நாம் அழைப்போம்
கலைபழுத்த மலையடுத்துதுறைமுகத்தில் அவர் நடக்கக்
கவின் நிறைந்த நம்நாட்டின் கவிபொருத்திக் காட்டிடுவோம்

நேற்றொருநாள் நாமமைத்தோம் நேயமுடன்தோட்டமொன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தியமும் நாமிருந்து திசைக்கொருவர் காவல் செய்தோம்
நாற்றுநட்டோம் பசளையிட்டோம் களையெடுத்தோம் நீரிறைத்தோம்
நாளும் பயிர் தாம் வளர பார்த்து மனம் நாம் மகிழ்ந்தோம்
ஏற்றமிகும் நெல்விளைச்சல் இன்றுவர நாம்பிரிந்தே
எங்கள் வயல் எங்கள் பயிர் எங்கள் பொலி என வெகுண்டால்
கூற்றுவனாய் வேற்றொருவன் சேற்றுவயல் கால்பதித்தே
கொண்டு செல்வான் நம்விளைச்சல் நாசம் என்றே நாம் விழிப்போம்

அரசியல்வா திகள்தமது அநுகூலத் தினுக்குரைக்கும்
அரை அவியல் இனப்பகைமைக் கதைகளினை இனி மறப்போம்
தரமான அரசியலைத் தகவோடு அநுசரிப்போம்
தமிழரொடு சிங்களரும் சோனகரும் தத்தமது
உரிமைகளை உள்ளபடி அநுபவிக்க வகை சமைப்போம்
உயர் மதமாம் கிறிஸ்தவமும் இந்துவுடன் இஸ்லாமும்
பெருமை மிகு பௌத்தமுமே சரிசமமாய்த் திகழ்ந்தினிய
பெருவாழ்வு நலம் திகழப் பெருமையுடன் நாம் வாழ்வோம்

கட்டிவைத்த விறகெடுத்து முறித்துவிடென் றுரை பகன்ற
தந்தையின் சொல் மைந்தர்களும் கேட்டவுடன் அவ்விறகுக்
கட்டெடுத்துத் தாம் முறிக்கச் செய்முயற்சி தோற்றுவிடக்
கட்டறுத்துத் தனித்தனியாய் அவ்விறகை ஆக்கிய பின்
''பட்டுப்பட்டென்'' றவ்விறகுத் துண்டுகளம் மைந்தர்களால்
பாதிபாதி யாய்முறிந்து பாரினிலே வீழ்ந்த கதை
நேற்றறிந்தோம் கற்றபடி நாம் நடக்க வேண்டுமன்றோ
கட்டுவிறகாய் நாமும் கைகோர்த்து நின்றிடுவோம்

தமிழனுக்குத் தனியாயோர் காவலென்றும் தேவையில்லை
தரணியிலே அவனை வெல்ல எதிரிகளே தேவையில்லை
தமிழனுக்குள் தனித்தனியாய் அணிபிரிந்தே அவனழிவான்
தரணியிலே இப்படியோர் கதை நெடுக நிலைத்திருக்கு
தமிழரைப் போல் சிங்களரும் இன்றிதையே கூறுகிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலம் அவர் நிலையும் இவ்வாறே ஆகிறது
இமைவிழியைக் காப்பதுபோல் எங்கள் மதம் மொழி நாடு
எம்மினங்கள் எல்லாமே நாங்களினிக் காத்திருப்போம்

பொங்கிவரும் புத்தாண்டுப் புதுவரவின் மெருகோடு
பூத்துவரும் புத்துணர்வு பூக்களது புதுமணத்தில்
தங்கநிலா தாரகைகள் நடுவினிலே பவனிவரும்
பான்மையிலே நம்நாடு நாநிலத்தில் புகழ்பெறட்டும்
மங்காத நினைவுகளாய் நாம் அடைந்த அநுபவங்கள்
மனத்தடத்தில் தளம்பதிக்கப் புதுவாழ்க்கை நாம் அமைப்போம்
இங்கெமது புதுவருடம் இத்தரையில் பிறக்கையிலே
இவ்வுலகில் நாமெல்லாம் புதுப் பிறவி எடுக்கின்றோம்.

- வீரகேசரி 06.05.1990



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிந்த சொற்கள்

பிரிந்த உதடுகள்
மொழிந்த சொல்லுகள்
பிறகு எம்மிடம்
திரும்பி வந்திடா!
பிரிந்த சொற்கள் நம்
சுதந்திரத்தினைப்
பிரித்தெடுத்திடும்
வலிமை கொண்டவை !

- புதுவை 1973



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2

# அவளும் நானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. ராகமாலிகை 37
26. நான் அணைக்கும் பைரவி 43
27. வந்து கவி தந்திடுக 44
28. ராகவேதனை 45
29. சோக மேகங்கள் 45
30. ஏன் கலக்கம்? 46
31. நான் இளைத்தல் போதாதா? 47
33. இதயத்தில் உன் விழிகள் 48
33. தீக்ஷை 49
34. தினம் நீளும் இன்பம் 50



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராக மாலிகை

வாழ்க்கை என்பதோர் ராக மாலிகை
வருவதோ அதில் எத்தனை ராகங்கள்
சூழ்ந்து வந்திடும் துயர மேகங்கள்
துரத்தி ஓட்டிடும்இனிய ராகங்கள்

இன்ப இசையினில் ஏற்படும் தாகங்கள்
இனிமையாய் அதைத் தீர்த்திடும் ராகங்கள்
அன்பு தன்னை உருக்கியே மோகங்கள்
ஏற்படுத்திப் பின் இதம் தரும் ராகங்கள்

**பூபாளம்** குரல் கொடுக்கும் புதியதொரு உதயத்தில்
புதுவாழ்வு பெறுவதற்குப் பூமியிலே நான் வந்தேன்
ஆராரோ என்றென்னை அமுதக் குரல்தனிலே
**நீலாம் பரி**பாடி நிம்மதியாய்த் தூங்க வைத்தாள்

தத்தித் தளர் நடையில் தில்லானா நான்போட்டுத்
தகத்திமித்தோம் தாளமிட்டுப் பதம்தூக்கி அடிபெயர்த்து
முத்தங்கள்சிந்தி முகமலர்ந்து நான் சிரித்தால்
பரதத்தின் சதங்கைகளாய் அன்னையவள் காதில்விழும்

"அம்மா" எனும் சொல்லே பல்லவியாய்த் தினம்பாடி
அநுபல் லவியாக அப்பாவை நான் அறிந்தேன்
இம்மா நிலத்தினிலே என் வாழ்க்கை தனைக்கடந்த
அன்னை பராசக்தி சரணங்கள் துணைகொண்டேன்

வாழ்க்கை ஸ்வரங்களினை வடிவாகத் தொகுத்து வைத்தேன்
வருங்காலம் தனைநோக்கி ஆலாபனை எடுத்தேன்
தாழ்வில்லை எனக்கென்று தரணியெலாம் பேர் முழக்கிப்
பஞ்சமத்தின் உச்சியிலே வந்து குரல்கொடுக்கின்றேன்

எந்தனுக்கோ நெடுநாளாய் ஆசை ஒன்று
இயலிசையில் நான்திழைக்க வேண்டும் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தமிகு பாக்களினைச் சமைப்பதன்றிச்
சங்கீதம் பாடுவதற் கறியமாட்டேன்

**உதய(ம்)ரவி சந்திரிகா** மாலை என்று
சுழன்றுவரும் உலகினிலே நானும் நின்று
இதயத்தில் இசைபாடி வந்தேன், எந்தன்
இதயத்தில் இசைபாட ஒருத்தி வந்தாள்

வீணையதன் கமகம்போல் பேச்சிருக்கும்
விழியசைவு கார்வைகொடுத் தருகில் நிற்கும்
தேனைநிகர் கானங்கள் இசைக்கும் அந்தத்
தேவதை என் வாழ்க்கையிலே இனிமை சேர்த்தாள்

இசையினிலே ஒரு காதல் அது எடுப்பு
இன்றதனால் அவளோடு ஒரு தொடுப்பு
நிசமாக வரும் ஓர்நாள் அதன் முடிப்பு
**கல்யாண வசந்தங்கள்** வரும் அவ் வேளை

அன்றொருநாள் அடியேன் என் துயிலை நீக்கி
அருகினிலே படுக்கைதனைச் **சுருட்டி** வைத்துச்
சென்றுகடன் முடித்ததன்பின் **"காபி"** போட்டுச்
சென்றனன்ஓர் சோலையிற்குப் பொழுது போக்க

கொஞ்சுமொழிக் கிளிபேசும் சோலை தன்னில்
**கோகிலத்தின் தொனி**கேட்கும் வண்டு மண்ணில்
**"செஞ்சுருட்டி"** விளையாடும் உருண்டை தன்னைச்
சிறியவர்கள் தாமெடுத்து மகிழ்ந்து பார்ப்பர்

எங்களது **கம்பீர நாட்டை** மேலும்
எழில் கொஞ்சும் நாடாக்கும் சோலை ஓர்பால்
அங்கமெலாம் **தேவமனோ கர**மாய் வீசும்
அருள்**சிந்து பைரவி**யாள் கோயில் உண்டு

பாரும் அதன் அருகினிலே பார்ப்போர் மெச்சும்
**சாரங்க**ன் கோயிலுண்டு அருளோ அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சாருமதி**ல் ஒருபங்கு அணித்தாய் நிற்கும்
**சாவேரி** பாலகன்கோ யிலுக்கும் உண்டு

மந்தாரம் போட்டிருந்த வேளை, மெல்ல
**மலையமா ருதம்**வீசி மனத்தை ஆட்ட
வந்தென்றன் காதினிலே **வசந்தா** ராக
இசைவந்து மோதியது சுற்றும் பார்த்தேன்

அருகில் ஒரு வானொலியில் இருந்தே அந்த
அமுத இசை பொழிகின்ற தென அறிந்தேன்
கருத்துடனே இருந்தந்த இசையைக் கேட்டேன்
கடைசியிலே பாடியவள் பெயரும் கேட்டேன்

என்னிதயத் **தர்பாரி**ல் இருந்தே ஆட்சி
இயற்றி வரும் **நாயகி**யாள் குரலே என்று
சொன்னவுடன் **சரஸ்வதி**யின் அருளைப் பெற்று
அன்னவளின் கலைத்திறமை வாழ்த்தி நின்றேன்

நான்எழுந்து பெருமகிழ்வாய் வீடுநோக்கி
நடைபயின்றேன் தங்கை விரைந்**தோடி** வந்தாள்
“**காணடா**இதை” என்றுகடித மொன்றைக்
கரத்தினிலே அவள்தந்தாள் நான் படித்தேன்

நான் எனக்**கே தார**மென நினைத்தி ருக்கும்
நங்கையவள் சங்கீதம் அரங்கில் ஏற்றம்
காணவர வேண்டுமென அழைப்புச் சொல்லும்
கடிதம் அது! நான் மிகவும் மகிழ்வு கொண்டேன்

மாலைமைமல் **பூரணசந் திரிகா** வானில்
வடிவாக நிலவெறித்து நிற்க, ஊரில்
சோலையதன் **மத்தியமா(ய்) வதி**யும் அந்த
மண்டபத்தை நோக்கிநடை பயின்றேன் மெல்ல

**சாரங்கன், ஜகன்மோகன்** இருவர் எந்தன்
நண்பர்கள் இவர்களுடன் உள்ளே சென்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரசைந்து வருதல்போல் தேவி வந்தாள்
தீங்குரலில் பாப்பொழியும் செல்வி வந்தாள்

மஞ்சளிலே பட்டுடுத்தி மனத்தை ஈர்க்கும்
**நீலமணி** அணியொன்று மார்பில் ஆட
**ரஞ்சனி**யும், **கல்யாணி**, பவானி, **கௌரி**
**மனோகரி**யும் தோழிகளாய்ச் சூழ வந்தாள்

சுகநலன்கள் முதலான பலவும் பேசிச்
சுழன்று பல இடம்சென்ற எமது பேச்சு
தகைமையுடன் இசைபற்றி வந்து நிற்க
சங்கீதச் சுவை அங்கே சொட்டலாச்சு

என்தோழர் இருவர்க்கும் இசையில் நல்ல
ஏற்றமிகு புலமையுண்டு ஆனால் அங்கு
என்பாடு சங்கீதம் என்றால் (இ)றாத்தல்
என்னவிலை எனக் கேட்கும் நிலைமையன்றோ?

மணிக்கணக்காய் அவர் இசையைப் பற்றிப் பேச
மனத்தினில் நான் பொறுமையின்றித் தவித்த பின்னர்
எனக்கும்சங் கீதமென்றால் தெரியுமென்று
எடுத்தியம்ப நினைத்தொரு வினாத் தொடுத்தேன்

காலைக்கு **பூபாளம்** உச்சி வேளைக்
கானத்திற் குகந்ததுநற் **சாரங்கா**வும்
மாலைக்கு **வசந்தா**வும் உரியதென்று
வாசித்த செய்தியினை உரைத்த பின்னர்

"பத்மரா கம்"மற்றும் புஷ்பராகம்"
இவையிரண்டும் எவ்வேளை பாடுதற்கு
மெத்தனவாம்? எனக் கேட்டே அவர்கள் பேச்சில்
மெல்லென நான் புகுந்து கொண்டேன் பெருமையோடு

"கொல்"என்ற சிரிப்போடே அவர்கள் என்னைக்
கொல்கின்ற ஏளனத்தை விழியில் கொட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லனைத்தும் காட்டிமிக நகைத்தார், நானோ
பாவி எதும் புரியாது திகைத்து நின்றேன்

**அடா!நா**னோர் பிழைவிடுத்தேன் என்று மட்டும்
அப்போதென் உள்ளத்தில் புரிந்து போச்சு
அடாதேதும் சொன்னேனோ என்று கேட்டு
அசடுவழிந் தவர்களை நான் பார்த்து நின்றேன்.

சாரங்கன் கண்களிலே வழிந்த நீரைத்
தன்கரத்தால் துடைத்தவண்ணம் சிரிப்பை மாற்றி
"நீரங்கே சொன்னவைகள் ராகம் அல்ல
ரத்தினங்கள் பலவற்றுள் இரண்டேயாகும்."

"பத்மரா கம் புஷ்ப ராகம் என்று
பக்குவமாய் நீர்சொன்ன ராகம் ரண்டும்
சத்தியமாய்த் சங்கீத ராகம் அல்ல
தரணியிலே ரத்தினங்கள் அறிக என்றான்

சங்கீத சாஸ்திரத்தில் எனக்கும் கொஞ்சம்
தெரியுமெனக் காட்டுவதற் காகநானும்
எங்கிருந்தோ கேள்வியொன்றை எடுத்துவீசி
எனதறிவை விளம்பரமாய் ஆக்கிக் கொண்டேன்

வெட்கமுடன் எனதன்புக் காதலாளை
மெல்லென நான் கடைக்கண்ணால் சற்றே பார்த்தேன்
சட்டெனத் தன் விழிகளினைத் கோபத்தோடு
தாழ்த்தியவள் வேறு புறம் திரும்பி நின்றாள்

"என்னவர்!" என்றென்னை அவள் தோழியர்க்கு
எப்படித்தான் அறிமுகம் செய் வாள், இதன்மேல்
என்னுடைய விழிகள் அவள் முகத்தை நோக்க
இயலாது கூச்சமுடன் தாழலாச்சு

இதன்பின்னர் ஒரு வகையாய் நிகழ்ச்சிதானும்
இனிமையுடன் ஆரம்பம் ஆச்சு, நானோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயத்தில் **முகாரி**யினை இசைத்தோர் மூலை
இடம்தேடி ஆங்கமர்ந்து கொண்டேன் மெல்ல

**மோகன**கா னம்எழுந்து சபையில் எங்கும்
முழுமையுடன் பரவியது எந்தன் உள்ளம்
சோகமுடன் இருந்ததனால் அதை ரசிக்கும்
சுகமிருக்க வில்லைஉடன் எழுந்து கொண்டேன்.

இசைபொழியும் தேவதையாம் அவளின் வாழ்வில்
இணைவதெனில் இனிமேல்நான் எவ்வாறேனும்
இசைபயின்று கீதமிசைத் தவளைக் காண்பேன்.
இல்லையெனில் அவள் முகத்தில் விழிக்கமாட்டேன்

இந்தவிதம் ஓர்சபதம் நான் எடுத்தேன்
**ஆரபி** மானம் கொள்வீர் எந்தன் மீது
எந்தனது சபதத்தை நிறைவு செய்தே
என்னவளைக் கரம்பற்ற உதவுவீரோ?

- *'வீரகேசரி' 06.10.1985*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் அணைக்கும் பைரவி

**ஆனந்த பைரவி** நான் அணைத்திடும் **பைரவி**யாள்
**அம்சத்வனி** அமைந்த அழகிய **ரூபவதி**
கானமிசைத் **தோடி**வரும் **நாயகி**யாள் அந்தக்
கலையழகி எனக்**கே தாரம்** என் **வசந்தா**னே.

**நீலமணி** அணிந்த நித்ய**கல் யாணி** அவள்
**நாட்டை** மகிழவைக்கும் **ஜோதிஸ்வ ரூபிணி**
காலமெ லாம்இதயத் **தர்பாரி**ல் தானமர்ந்தே
**கல்யாண வசந்த**ங்கள் பாடி வரும் **ரஞ்சனி**யாள்

**பானுமதி** மாறிவரும் பாருலகம் போற்றிவர
**மலயமா ருதம்**போல மங்கலகீ தம் தருவாள்
**தேனுக**ந்தே தெவிட்டிவிடத் தீங்குரலில் தேவதையாள்
**மனோலயம்** மிருகீதம் பாடு**மனோ ரஞ்சனி**யாள்

**பூரணசந் திரிகா**போல் புன்னகைக்கும் சுந்தரியாள்
**பூபாளம்** தினம்பாடும் அவள்**கௌரி மனோகரி**யாள்
**ஆரபி**மா னம் வேண்டும் நானவளை மணம் கொள்ள
**நாராயணி** அருள்வாள் நல்லதுணை தருவாள்.

- ஈழநாடு *01.08.1985*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வந்து கவி தந்திடுக

சுந்தரத்தின் வடிவெடுத்துச் சுடர்ஒளிச் செம் முகம் எடுத்து
மந்திரத்தின் மனம் எடுத்து மலர்க்கவிதை உடல் எடுத்து
செந்துரத்தின் நிறம் எடுத்து செந்தமிழின் மொழி எடுத்து
நந்து தரும் கழுத்(து) எடுத்து நளினமிகும் விழி எடுத்து
இந்துநுதல் பிறை எடுத்து ஏழிசையின் தொழில் எடுத்து
பந்தினத்தின் நயம் எடுத்துப் பனித்துளியின் இதம் எடுத்து
முந்து கனி இதழ் எடுத்து முழுநிலவின் ஒளி எடுத்து
சந்தனத்தின் மணம் எடுத்து சதிர் மயிலின் குழல் எடுத்து
அந்தரத்தில் கனி எடுத்து அதைத் தொடுத்தோர் கொடி எடுத்து
வெந்தணலின் கற்பெடுத்து விளங்கும் அன்ன நடை எடுத்து
சந்தமிகும் கவி எடுக்கும் கவிக்குயில் என் மனம் எடுத்து
சொந்தம் எனும் சுகம் எடுத்துத் தேடிவந்த பேரழகே
வந்து கவி தந்திடுக வளர் இசையைப் பொழிந்திடுக.

- *'ஈழநாடு' 10.09.1978*

## ராக வேதனை

ராக்குயில் கூவும் வேளைகள் தோறும்
ராக வேதனா மஞ்சரிகள்
ஏக்க மாகிய எண்ண ஊஞ்சலில்
ஏழு ஸ்வரங்களும் பாடுது.

வெண்ம ணற்றிரை மீது சந்த்ரிகை
வீசும் பாற்கதிர் கோலங்கள் - அவை
என்மனத்தெழும் ஸ்வப்ன வீணையின்
ஏழு தந்திகள் மீட்டுது

மான சதசினில் மதுர தரங்கிணி
மன்மதன் துணையினை நாடுது
கான சந்த்ரிகா காதல் நிலவினை
தரிசன வேளைக்குத் தருகுது.

## சோக மேகங்கள்

ராக தேவதையின் லலித கானங்கள்
ரஞ்சன கமகங்கள் மீட்டுது
சோக மேகங்கள் சுந்தரத் தென்றலில்
குளிர்மழை யாகவே பொழியுது

நித்ய சுகங்களின் நினைவில் பூத்திடும்
நிர்மல மானச சௌந்தர்யம்
சத்ய லோகத்தில் சதுர்வித வேதங்கள்
சாந்தி சாந்தி என்றே பாடுது

..........................................................
..................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏன் கலக்கம்?

*விடியலில் மறுபடி அந்திவந்தாற்போல்*
*விழிகளில் ஏனடி ஆங்கொரு கலக்கம்*
*கொடிமலர் கூம்பிய காட்சியைப் போல் உன்*
*குவிமுகம் தனிலொரு சோர்வதும் ஏனோ?*

*நாடிய புதுமழை நதியினைப் போலே*
*நடையினில் ஏனடி ஆங்கொரு தயக்கம்*
*கூடிய நாயகன் குளிர்முகம் காணல்*
*போலொரு நடுக்கம் பொலிவதும் ஏனோ?*

*வார்த்தைகள் தேடித் தவித்திடும் கவிஞன்*
*வதனத்தைப் போல் ஒரு சிந்தனை ஏனோ?*
*சேர்ந்திடும் நாளும் தொலைவினில் இல்லை*
*தேன் சொட்ட நீஒரு புன்னகை சிந்து*

*'தினகரன்' 26.07.1981*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் இளைத்தல் போதாதோ?

அழகு சுமந்து சுமந் திளைத்ததுவே உன்மேனி
அன்பு சுமந்து சுமந்திளைத்ததுவே உன் இதயம்
பழகு தமிழ் சுமந்தே பார்சுமந்த என் இதயம்
பாவரசி உன்நினைவைச் சுமந்திளைத்தல் போதாதோ?

காதல் சுமந்து சுமந் திளைத்ததுவே உன் கண்கள்
கருணை சுமந்து சுமந்திளைத்ததுவே உன்மொழிகள்
ஓதும் கவி சுமந்தே ஒளிசுமந்த என்கண்கள்
உன்னைத் தினம்தினமும் கண்டிளைத்தல் போதாதோ?

ஸ்வரங்கள் சுமந்துசுமந் திளைத்ததுவே உன்குரலும்
தூய்மை சுமந்துசுமந் திளைத்ததுவே உன்பெண்மை
அரங்கு பல சுமந்தே அதிசயித்த என் கால்கள்
அன்பே உனைநாடி நடந்திளைத்தல் போதாதோ?

- 'தினகரன் 30.10.1983



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதயத்தில் உன் விழிகள்

என் இதயம் ஒரு கவிதை
உன் விழிகள் அதன் இனிமை
என்றென்றும் கவி பாடுவோம்
என் இதயம் ஒரு கோவில்
உன் உருவம் அதில் தெய்வம்
ஒளித் தீபம் தினம் ஏற்றுவோம்
என் இதயம் ஒரு ராகம்
உன்விழிகள் அதன் ஸ்வரங்கள்
என்றென்றும் இசை பாடுவோம்
என் இதயம் ஒரு வீணை
உன் விழிகள் அதில் விரல்கள்
என்றென்றும் இசை மீட்டுவோம்
என் இதயம் ஒரு கொடியாய்
உன் வழிப்பூ அதில் மலரும்
என்றென்றும் மலர் சூடுவோம்
என் இதயம் நறும் சோலை
உன் விழியின் கனி தூங்கும்
என்றென்றும் சுவை பார்க்கலாம்.

- 'ஈழநாடு 08.07.1979



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீக்ஷை

மதுர பாவத்தில் மங்கலக் கவிதைகள்
மானஸ லஹரியில் ஜனித்தன
இதுவென் ஹ்ருதயத்தின் இனிய பிரதியே
என்றவள் குரலிலே கனிந்தன

நயன பாஷைகள் நாயகி யாளிடம்
நளின மாகவே சுவைத்தன
மயனும் தோற்கவே மந்த்ர விமானங்கள்
காதல் மாளிகை அமைத்தன.

நயன தீக்ஷைகள் ஸ்பர்ஸ தீக்ஷையால்
நந்தவ னங்களில் நடந்தது
அயன்கை வேலையோ? அற்புத மாயையோ?
ஆனந்த மழலையும் தவழ்ந்தது

- 'ஈழநாடு *07.10.1984*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினம் நீளும் இன்பம்

மான் ஓடி நடமாடும் மயில் வந்து ஆடும்
மாதே நீ என்னோடு நடை போடும் போது
மீன்வந்து மிரண்டோடும் கிளிவந்து பேசும்
இனியாள் நீ என்னோடு கதைபேசும்போது

மாஞ்சோலைக் குயில் யாவும் அநுராகம் பாடும்
மங்கைஉன் இசைநாதம் நான் கேட்கும்போது
தேன்சாறு பொழிமுல்லை தினம் வாசம் வீசும்
தேவீஉன் இதழ்இன்ப நகைசிந்தும் போது

வான்தாவும் கடல்மீது மணி முத்தம் நீந்தும்
வனிதை உன் மனம் என்றன் மனம்நாடும் போது
பூந்தாழை புகழ்பாடும் புதுவாசம் வீசும்
புவிமீதில் எனைநீவந் திணைகின்ற போது.

அன்போடு அறம்வாழும் நாம் வாழும்போது
அறிவோடு எழில்கூடும் நாம் கூடும்போது
பண்போடு பயன்சேரும் நாம் சேரும்போது
பார்மீதில் பல இன்பம் தினம் நீளும் நீளும்!

*-'தினகரன்' 16.08.1981*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

# மழலைகளும் நானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழந்தைப் பாடல்கள்

35. சிந்திய மலர்கள் 53
36. பள்ளித் தலமனைத்தும் 54
37. எங்கள் பிள்ளையார் 56
38. யேசுவைப் போற்றுவோம் 57
39. பூனைக்குட்டியார் 58
40. பந்துவிளையாட்டு 58
41. வண்ணப்பட்டம் 59
42. அழகானபூ 59
43. எங்கள் குடும்பம் 60
44. எமது கடமை 61
45. எங்கள் பூந்தோட்டம் 62
46. சுவர்மணிக்கூடு 62
47. ரோஜாப்பூ 63
48. கூடி விளையாடுவோம் 63
49. வானொலிப்பெட்டி 64
50. நாங்கள் செய்வோம் 65
51. விதவிதமாய் வண்ணங்கள் 66
52. பட்டம் 66
53. பெரியோர் வாழ்விலே 67
54. ஒரு கடிதம் 68
55. உழவுத் தொழில் 69
56. அணில்குஞ்சுத் தம்பி 70
57. நிலவு 70
58. நமது தோழர்கள் 71
59. திருக்குறள் 71
60. அக்கா - தம்பி 72



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்திய மலர்கள்

கூடையிலிருந்து சிந்திய மலர்கள்
குளிர்நில வெறித்த ஒளியின் துளிகள்
ஓடையில் ஒலிக்கும் குளிர்நீர்த் துளிகள்
உன்னதமான குழந்தை மலர்கள்

கூட்டினில் அடைக்காச் சுதந்திரக் குருவி
குற்றங்கள் தெரியாக் கோயிலின் சிலைகள்
கேட்டினை அறியாக் காவியத் தலைவர்
கீதங்கள் பாடும் தீஞ்சுவைச் சிறுவர்

நாட்டினை நடத்தும் நாளைய தலைவர்
நம்துயர் தீர்க்கும் நாநிலத் தெய்வம்
பாட்டினில் ஒலிக்கும் பண்முறை ஸ்வரங்கள்
பத்திரமாகக் காத்திடுவோமே!

- வீரகேசரி 09.10.1983

*இப்பகுதியிலிடம்பெறும் குழந்தைப் பாடல்களில் இரண்டொரு பாடல்களைத் தவிர ஏனையவை யாவும் குழந்தைப்பாடல் நூல்களாக, 'ரோஜாப்பூ', 'பூந்தோட்டம்' ஆகிய பெயர்களில் வெளிவந்தவை. இவை யாழ். இலக்கிய வட்டத்தின் பாராட்டுப் பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பள்ளித்தலம் அனைத்தும்..............

அள்ளக் குறையாத அறிவுச் சுரங்கங்கள்
கள்ளம் தனைப்போக்கும் கருணைத் திருக்கோவில்
உள்ளம் தனைவளர்க்கும் உயர்ந்த குருகுலங்கள்
பள்ளித் தலம்என்றால் பாரோர் மறுப்பாரோ?

சின்ன மலர்க்குழந்தை சிங்காரப் பாட்டிசைத்து
மின்னும் விழிகளிலே ஆர்வம் சுடர்பரப்ப
அன்னம் எனநடந்து "ஆ"னாப் படிப்பதற்கு
செல்கின்ற காட்சியிலே தெய்வம் குடிகொள்ளும்

கல்விப் பயிர் வளரும் கடமை உணர்வு மிகும்
சொல்விப் பனம்பெருகும் சோர்வு அகன்றோடும்
மெல்லப் பயிர்வளர்ந்து மேன்மைப் பயன் தருதல்
என்ன வளர்ந்துபல ஏற்றங்கள் தந்து நிற்கும்

கண்ணியத்தைக் கற்றிடலாம் கட்டுப்பாடுற்றிடலாம்
எண்ணும் எழுத்தும்கற் றேற்றம் அடைந்திடலாம்
மண்ணுலகில் யாவருமே போற்றிமதித்திருக்க
விண்ணளவு புகழ்பெறலாம் பள்ளிப் படிப்பதனால்

நண்பர்கள் கூட்டத்தில் நல்லுணர்வு பெற்றிடலாம்
அண்டி அவர்களுடன் கூடிக் களித்திடலாம்
எண்ணத்தில் நம்பிக்கை வித்துக்களை ஊன்றிடலாம்
என்றதனால் கல்லூரி எங்களுக்குக் கலைக்கோவில்

உடலை வளர்ப்பதற்கு விளையாட்டும் ஆடுகிறோம்
இடையில் மனம் மகிழ நாட்டியமும் ஆடுகிறோம்
திடமாய் உளம் சிறக்கப் பாட்டுக்களும் பாடுகிறோம்
கடல்போல் பரந்த எங்கள் கல்லூரி கோவில் அன்றோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடலும் பாடமாகும் அரங்கியல் பாடமாகும்
பாடலும் பாடமாகும் பயிற்சியும் பாடமாகும்
தேடலும் பாடமாகும் சிறந்த ஓர் வாழ்க்கைதன்னை
நாடலும் பாடமாகும் யாவையும் படிக்கின்றோம் நாம்

உளவளம் பெருக நல்ல உபதேசம் கிடைக்கும் இங்கு
இளமையில் கல்வி என்றும் சிலையிலே எழுத்தாய் மாறும்
எளிமையும் அழகும் நல்ல இனிமையும் கொண்ட வாழ்வை
நளினமாய்ப் பெறுவோம் எங்கள் பள்ளியில் நாங்கள் இன்று.

அன்னையாய் அன்புதந்து அழகினை ஊட்டும், நல்ல
தந்தையாய்ப் பண்புதந்து செழிப்பினை நல்கும், மிக்க
ஆசானாய் அறிவுதந்து ஆற்றலைப் பெருக்கும், உண்மை
மனிதராய் எம்மை ஆக்கி உலகின்முன் ஏற்றிவைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் பிள்ளையார்.

எலியின் மீது வீற்றிருக்கும்
எங்கள் பிள்ளையார்
என்றும் நாங்கள் வணங்குகின்ற
நல்ல பிள்ளையார்

தும்பிக்கையும் பெரிய காதும்
பானை வயிறுமே
எலியின் மீது தாங்குகின்ற
புதுமை பாருங்கள்

மோதகங்கள் பட்சணங்கள்
செய்து வைப்பமே
பூசைபண்ணி நாங்கள் உண்டு
புளுகம் கொள்வமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யேசுவைப் போற்றுவோம்

அன்பைப் பற்றிப் பேசவந்த
யேசுநாதர் வாழ்கிறார்
அனுதினமும் எங்கள் நெஞ்சில்
ஆசையோடு வாழ்கிறார்
துன்பம் செய்த கொடியவர்க்கும்
தூய உள்ளம் கொண்டவர்
உண்மையான நேசத்தோடு
அன்பு செய்து காட்டினார்

எம்மைப் போல பிறரை நாமும்
நேசம் செய்ய வேண்டுமே
என்று நல்ல பண்பு தந்த
எங்கள் யேசு பாலகன்
உண்மை வாழ்க்கை வாழவென்று
புதிய சமயம் தந்தவர்
உலகம் யாவும் போற்றுகின்ற
யேசுவை நாம் போற்றுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூனைக்குட்டியார்

மியாவ் மியாவ் பாடுகின்ற
பூனைக்குட்டியார்
மீசை ஆட்டிப் பாடுகின்ற
பூனைக்குட்டியார்

வாலை ஆட்டிக் காலில் முட்டும்
பூனைக்குட்டியார்
வந்து பாயும் எலியைப் பிடிக்கும்
பூனைக்குட்டியார்

பாலை வைத்தால் கண்ணை மூடிப்
பருகும் பூனையார்
காலை ஆட்டத் துள்ளிப் பாயும்
பூனைக்குட்டியார்

## பந்து விளையாட்டு

பந்தடிப்போம் பந்தடிப்போம்
பாலர்கள் நாமே - வண்ணப்
பந்துவிளை யாடிடுவோம்
வாருங்கள் நீரே

தாரணிநீ பந்தை எறி
றஞ்சி ஏந்தவே - வீணா
விழுந்த பந்தை ஓடி எடு
பிரணவ னோடே

சோபனாவும் வாசுகியும்
ஓடி வாருங்கோ - முரளி
எறியும் பந்தை ஏந்துவதார்
கையை நீட்டுங்கோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வண்ணப் பட்டம்

வண்ண வண்ணப் பட்டம் அக்கா
    கட்டித் தருகிறாள்
கண்ணன் அண்ணா அதனை வாங்கிக்
    காற்றில் ஏற்றுறான்

எட்டு மூலை கொக்கன் பாம்பு
    எத்தனை விதமாம்
எட்டி மேகம் தன்னை முட்டும்
    சின்னப் பட்டமாம்

வாலை ஆட்டி வானில் ஏறும்
    நாங்கள் ஆடுவோம்
மாலை வேளை மங்கும் போது
    வீட்டுக் கோடுவோம்

## அழகான பூ

அக்கா வளர்த்த பூஞ்செடியில்
    அழகாய் ஒரு பூ பூத்திருக்கு
அகிலாத் தங்கை ஆசையுடன்
    அதனைப் பார்க்கும் அழகைப் பார்

சின்னச் சின்ன மொட்டுகளாம்
    சிவப்பாய் நடுவில் ஒரு பூவாம்
இன்னும் நிறையப் பூப் பூக்கும்
    இனிமேல் தினமும் பார்த்திடலாம்

பட்டு மெத்தை போலிருக்கும்
    வாசம் மூக்கில் மிக வீசும்
கிட்டப் போனால் அக்காவின்
    கோபம் கண்டு பயமாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் குடும்பம்

எங்களது குடும்பம் ஒரு
இனிய குடும்பம்
தங்கமான குடும்பம் அது
நல்ல குடும்பம்

அப்பா தினமும் வேலை செய்து
உழைத்து வருகிறார்
அம்மா எம்மை அன்புடனே
வளர்த்து வருகிறாள்

அப்பா இரவில் பாடங்களைச்
சொல்லித் தருகிறார்
ஆசையுடன் யாவற்றையும்
வாங்கித் தருகிறார்

அம்மா தினமும் உணவுகளை
ஆக்கித் தருகிறாள்
ஆசையுடன் பாட்டுப் பாடச்
சொல்லித் தருகிறாள்

அண்ணா என்னைப் பல இடமும்
அழைத்துச் செல்லுவார்
அக்கா என்னை அலங்கரித்து
ஆனந்தம் கொள்வாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது கடமைகள்

விடியற் காலை வேளையில்
படுக்கை விட்டு எழும்புவோம்
பல்லைத் தீட்டிக் குளித்தபின்
பாடம் படிக்கத் தொடங்குவோம்

காலை உணவு முடிந்ததும்
பாடசாலை செல்லுவோம்
பாடத்தோடு பண்புகள்
பலவும் படித்து மகிழுவோம்

இரவு வேளை வந்ததும்
காலைக் கையைக் கழுவுவோம்
சாமிப் படம் அருகிலே
பாட்டுப் பாடி வணங்குவோம்

பாடங்களைப் படித்த பின்
உணவு உண்ணச் செல்லுவோம்
பாட்டி கதை சொல்லவே
நாங்கள் தூங்கப் போவமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் பூந்தோட்டம்

எங்கள் அக்கா தமிழரசி
அமைத்தாள் நல்ல பூந்தோட்டம்
எங்கும் பூக்கள் தினம் பூக்கும்
இன்பம் பொங்கும் பூந்தோட்டம்

மல்லிகை முல்லை செவ்வந்தி
மஞ்சள் வண்ண அரளிப்பூ
வெள்ளை ரோஜா வெட்சியுடன்
விதவிதமாகப் பூப்பூக்கும்

கனகாம்பரமும் மணிவாழை
காசித்தும்பை மந்தாரை
தினமும் நித்திய கல்யாணி
பூக்கும் நல்ல பூந்தோட்டம்.

## சுவர் மணிக்கூடு

வட்டமான முகத்தில் நேரம்
காட்டும் மணியண்ணா
கிட்டவந்து தொட்டுப் பார்த்தால்
என்ன சொல்லுவீர்

சுழலும் கைகள் மூன்றிருக்கு
உமக்குத் தந்ததார்?
சுவரிலேறித் தொங்கிக் கொண்டு
மணியைக் காட்டுறீர்

டிக்டிக் டிக்டிக் டிக்டிக் டிக்டிக்
சப்தம் செய்கிறீர்
மணியடித்து நேரம் தன்னை
எமக்குச் சொல்கிறீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரோஜாப்பூ

நான் ஒரு ரோஜாச் செடி வளர்த்தேன்
நன்றாய்த் தினமும் கவனித்தேன்
நாளும் பொழுதும் நீரூற்றிப்
பசளை இட்டு நான் வளர்த்தேன்

வளர்ந்த ரோஜாச் செடியினிலே
வடிவாய் மொட்டும் வரக் கண்டேன்
அழகாய்ப் பூக்கும் அதுவென்று
ஆவல் கொண்டே காத்திருந்தேன்

காலை எழுந்து பார்த்ததுமே
கண்டேன் புதிய ரோஜாப்பூ
மாலை வரையும் மணம் வீசும்
மனத்தைக் கவரும் ரோஜாப்பூ

## கூடி விளையாடுவோம்

பூனை வந்து மியாவ் என்று
ராகம் போட்டுப் பாடுது
தேனிலையான் ஓடி வந்து
கூடிப் பாடிப் பறக்குது

நாயார் வந்து வள் வள் என்று
தாளம் போட்டுப் பாடுது
அணிலும் உச்சி மரத்தின் மீது
வாலை ஆட்டிக் கத்துது

நல்லதென்று பச்சைக் கிளி
நாவசைத்துப் பேசுது
செல்லமாக நாம் இவற்றைக்
கூடி விளையாடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானொலிப் பெட்டி

ஆளில்லாமல் பாடுகின்ற
ஆதிசயத்தைப் பார் தம்பி
அழகுமிக்க பெட்டியொன்று
கதைகள் சொல்லும் கேள் தம்பி

வேளை தோறும் செய்திகளை
விதவிதமாய்த் தருகுதே
வேண்டுமென்றால் பலகுரலில்
நாடகமும் நடிக்குதே

அங்கு வானவெளியில் அனுப்பும்
ஒலியை இங்கு பெட்டியில்
அருமையாக இழுத்தெடுத்து
எமக்குக் கேட்கச் செய்வதால்

தங்கமான இதனை நாங்கள்
வானொலி என்று அழைக்கிறோம்
தவறில்லாமல் வேலை செய்ய
மின்சாரத்தைக் கொடுக்கிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாங்கள் செய்வோம்

காலை விடிகையில் நாம் எழு வோம் - நல்ல
காரியம் பற்பல செய்திடுவோம்
மாலையி லே விளை யாடிடுவோம் - நல்ல
பாடல் பலப்பல பாடிடுவோம்

பாடசா லை தினம் சென்றிடு வோம் - பல
பாடம் விருப்புடன் கற்றிடுவோம்
ஓடி அம்மாவுடன் வேலை செய்வோம் - அவள்
சொற்படி நாளும் நடந்திடுவோம்

தப்பாமல் சாமியைக் கும்பிடுவோம் - தினம்
யாவருக் கும் தர்மம் செய்திடுவோம்
அப்பாவைப் போல வளர்ந்திடுவோம் - அவர்
ஆசையைப் போல நடந்திடுவோம்

அன்புடன் நண்பர்கள் சேர்ந்திடுவோம் - பல
நல்ல கதைசொல்லி நாம் மகிழ்வோம்
என்றும் உண்மை பேசி வாழ்ந்திடுவோம் - செயல்
வீரர்க ளாக உயர்ந்திடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதவிதமாய் வண்ணங்கள்

வானம் நீல வண்ணமாம்
வாழைப்பழம் மஞ்சளாம்
பாடும் கிளி பச்சையாம்
பாலின் நிறம் வெள்ளையாம்

கறுப்பு வண்ணம் காக்கையாம்
கடலும் நீல வண்ணமாம்
நெருப்பு வண்ணம் சிவப்பாம்
நெடிய வீதி கருமையாம்

வண்ண வண்ண மலர்களில்
விதவிதமாய் நிறங்களாம்
கண்ணைக் கவரும் வண்ணங்கள்
கண்டு கண்டு மகிழுவோம்

## பட்டம்

பட்டம் காற்றில் ஏற்றுவோம்
பாலர்கள் நாமே - நம்
இட்டம் போல ஆடுவோம்
சிறுவர்கள் நாமே

காற்று வீசும் வேளைக்கு
காத்திருப்போமே - விண்
பூட்டி வைத்த பட்டமதன்
ஓசை கேட்பமே

இன்று பட்டம் ஏற்றுவோம்
இனிது கற்றபின் -மிக
நன்று கலா சாலையில்
பட்டம் வாங்குவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியோர் வாழ்விலே

காந்திமகான் உண்மைபேசி
வாழ்ந்து காட்டினார்
கடவுளையே மறந்திடாமல்
என்றும் வணங்கினார்

பாரதியார் தமிழ் மொழியை
என்றும் போற்றினார்
பாடல்களைப் பலவிதமாய்ப்
பாடியும் தந்தார்

விவேகானந்தர் வீரத்தோடு
வாழ்ந்திடச் சொன்னார்
சோர்வில்லாமல் உழைத்து யார்க்கும்
உதவிடச் சொன்னார்

நாட்டைக் காத்த நல்லவர்கள்
இவர்களைப் போலே
நாமும் கல்வி கற்றுவீர
மைந்தர்களாவோம்

பாட்டும் பாடி வேலை செய்து
கடவுளைப் போற்றிப்
பாரில் யாரும் போற்ற வாழும்
மன்னர்கள் ஆவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு கடிதம்

அப்பாவுக்கு ஒரு கடிதம்
ஆசைக் குழந்தை எழுதுகிறேன்
அப்பா நீங்கள் சுகந்தானே
அன்பாய் இறைவன் அருள் புரிவார்

இங்கே நாங்கள் எல்லோரும்
இனிதே சுகமாய் இருக்கின்றோம்
உங்கள் நினைவே எந்நாளும்
உடனே கடிதம் எழுதுங்கள்

நன்றாய்ப் பாடம் படிக்கின்றேன்
நானே பாட்டும் பாடுகின்றேன்
சின்னப்பாப்பா அருகினிலே
சிரித்துக் கதைத்து மகிழ்கின்றேன்.

அம்மாவுக்கு உதவுகிறேன்
அவள் சொல் கேட்டு நடக்கின்றேன்
சும்மா பொழுதைப் போக்காமல்
சுறுசுறுப்பாக இருக்கின்றேன்

இங்கே அப்பா வரும்போது
இன்னும் பெரிதாய் வளர்ந்திடுவேன்
உங்கள் வரவை எந்நாளும்
உவகையோடு பார்த்திருப்பேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உழவுத்தொழில்

காலையிலே சூரியன்
   காட்சி தரும் வேளையில்
வேலையிலே கவனமாய்
   விரையும் உழவர் காணுவீர்

காளை மாடும் கூடவே
   வயல்களுக்குச் செல்லுமே
காலை மாலை முழுவதும்
   களத்தில் உழவு செய்யுமே

நெற் பயிரை விதைக்கின்றார்
   நித்தம் வேலை செய்கிறார்
பற்றி னோடு எங்களின்
   பசிக்கு உணவு தருகிறார்

தோட்டம் நோக்கிச் செல்கிறார்
   காய்கறிகள் நடுகிறார்
வீட்டில் நாங்கள் சாப்பிட
   விதவிதமாய்த் தருகிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணில் குஞ்சுத் தம்பி

அணில் குஞ்சுத் தம்பியார்
ஆகாயத்தில் பாய்கிறார்
அம்பிப் பயல் பார்க்கவே
அடுத்தடுத்துக் கத்துறார்

வாலை வாலை ஆட்டுறார்
மாமரத்தில் பாய்கிறார்
கையைப் போலக் காலினால்
கனியைத் தூக்கித் தின்னுறார்

வாயை வைத்துக் கடிக்கிறார்
மரத்தின் கீழே போடுறார்
நாயைக்கண்டு பயத்திலே
உச்சிக் கொப்பில் தாவுறார்

## நிலவு

வட்ட மான நிலவு வானில்
எட்டிப் பார்க்குது
கிட்ட நின்று தொட்டுப் பார்க்க
இட்ட மாகுதே

வான வெளியில் வண்ண நிலா
நீந்தி வருகுது
ஆனந்த மாய்ப் பாட்டுப் பாடி
நாங்கள் ஆடுவோம்

வெள்ளை மணல் மீதில் நிலா
வீசி நிற்குது
துள்ளி விளை யாடும் போது
சுகம் இருக்குது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நமது தோழர்கள்

பாலை நாங்கள் குடிக்கத் தருமே
பசுவும் நம் தோழி
காலை வேளை கூவி எழுப்பும்
சேவல் நம் தோழன்

ஆட்டைப் பார் அது பாலைத்தருமே
அதுவும் நம் தோழி
வீட்டைத் தினமும் காவல் காக்கும்
நாயும் நம் தோழன்

உணவைத் திருடும் எலியை விரட்டும்
பூனை நம் தோழன்
உணவுக்காக வயலை உழுமே
எருதும் நம் தோழன்

## திருக்குறள்

உலகமெல்லாம் போற்றுகின்ற
உத்தமராம் வள்ளுவர்
பலவிதமாய் நமக்கு நல்ல
நீதிகளைச் சொல்கிறார்

திருக்குறளை எங்களுக்குச்
சிறப்பினோடு தந்தவர்
அருமையான கருத்துக்கள் நாம்
அதிலே கற்றுக் கொள்கிறோம்

சின்னஞ்சிறிய பாடல்களில்
பென்னம் பெரிய கருத்துக்கள்
இன்னும் இன்னும் படிக்கத் தூண்டும்
இனிமையான முத்துக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்கா ~ தம்பி

அக்கா: தம்பீ தம்பீ இங்கே வா!
தாவி ஓடி இங்கே வா!

தம்பி: அக்கா அக்கா ஏனக்கா?
ஏனோ என்னை அழைக்கின்றாய்?

அக்கா: மாமா வந்தார் இப்போது
தந்தார் நல்ல புத்தகமும்
வா வா நாங்கள் இருவருமாய்
படிப்போம் புதிய புத்தகமாம்

தம்பி: அக்கா இந்தப் புத்தகத்தில்
இருப்பது என்ன? அதை நீ சொல்
கதையும் உண்டா? படம் உண்டா?
பாட்டும் உண்டா? பார்ப்போம் தா!

அக்கா: பாட்டும் கதையும் இருக்கிறது!
படமும் பல பல இருக்கிறது!
நொடியும் விடையும் இருக்கிறது!
சேர்ந்தே படிப்போம் ஓடி வா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

# புதுக்கவியும் நானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுக்கவிதைகள்

61. வடிவங்கள் 76

62. காணாமல் போனவர்கள் 77

63. நேற்றைய எனது தேசம் 79

64. நாய்கள் 82

65. ஓசையின் நடுவே 84

66. பொன்னலரிப் பூச்சொரிந்த புழுதித்தெரு 85

67. தலைவிதி 87

68. பயணம் 88

69. ஜனனம் 88

70. ஏகாந்தம் 89

71. பிரபல்யம் 90

72. அரசினரைப் பின்பற்றி 91

73. கனவு 91

74. பேசிய வார்த்தைகள் 92

75. காதல் 92

76. எங்கள் அரசு 93

77. வீழ்ச்சி 94

78. போதனை 94

79. தர்மம் 95



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

80. சுயநலம் 95
81. பீடிகை 96
82. நாகரிகம் 96
83. திறமை 97
84. தெய்வமே 97
85. தொல்லை 98
86. பிரதட்சணம் 98
87. இடமில்லை 99
88. நியதி 99
89. அழிவும் பிறப்பும் 100
90. தூக்கம் 100
91. ஒழுக்கம் 101
92. தியாகம் 101
93. கவிதை 102
94. வேளை 102
95. பிரிவு 103
96. தனிமை 105
97. பிரசவ மரணம் 106
98. பழையன கழிதல் 106



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடிவங்கள்

கழிகின்ற காலத்தைக்
கணியாது இதயத்தில்
பிழிகின்ற கனிச் சாற்றில்
புரண்டுருளும் வேளையிலே
பொழிகின்ற வடிவங்கள்
மலர்கவிதைக் குவியல்கள்!

*இங்குள்ள புதுக்கவிதைகளில் காலத்தால் பிந்திய சிலவற்றைத் தவிர ஏனையவை யாவும் சகோதரி சௌமினியுடன் இணைந்து வெளியிட்ட 'கனவுப் பூக்கள்' தொகுதியில் இடம்பெற்றவை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமல் போனவர்கள்!

"காணவில்லை" என்று
விளம்பரங்கள் செய்யாமல்
"கண்டீரா?" என்று
காண்பவரைக் கேளாமல்
காணாமல் போனவர்கள்
கனபேரை நான் அறிவேன்
வீதியிலே செல்கையிலே
வீட்டருகில் நிற்கையிலே
பாதி உணவதனைப்
பாத்திரத்தில் உண்கையிலே
காலைக்கடன் கழிக்கும்
கணப்பொழுதில்; வாழ்கின்ற
ஓலைக் குடிசையிலே
ஒண்டி உறங்குகையில்
காணாமல் போணவர்கள்
கனபேரை நான் அறிவேன்
கல்லூரி சென்று
களைப்போடு மீள்கையிலும்
கடைக்குப்போய்ப் பாண் வாங்கி
வருகின்ற வேளையிலும்
நீலக் கடல்மீது
மீன்தேடிப் போகையிலும்
வாலைக் குமரியுடன்
கண்ணயரும் வேளையிலும்
காணாமல் போணவர்கள்
கனபேரை நான் அறிவேன்
மின்னி முழங்காமல்
விளம்பரங்கள் இல்லாமல்
உன்னி நினைத்திருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்தேடிப் போகாமல்
கன்னிப்போர் நாடிக்
கடல் கடந்து போகாமல்
இன்னும் இருப்பவரின்
இழப்பொலிகள் கேளாமல்
காணாமல் போனவர்கள்
கனபேரை நான் அறிவேன்
காணாமல் போன
கனபேரின் சரித்திரங்கள்
வாணாளில் வீணே
படிப்பதற்கோ? அன்றன்று!
காணாமல் போன
கனபேரின் சரித்திரத்தைக்
கண்டறிந்தப் பாவியரைக்
காணாமல் போக்கிடுவோம்

- ஈழநாடு 28.09.1986



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்றைய எனது தேசம்

நீண்டநாள் கழித்து
என்,
சொந்தமண் நாடி
வந்துகொண்டிருக்கிறேன்.

எனது மண்ணின்
தலைநகர எல்லை
தெரிகிறது.

அந்திக் கருக்கல்
அண்மிவரும் நேரம் -

பாதை வெறிச்சோடிப்
பாலைவனத் தோற்றம்

பூட்டிய கதவுகளின்மேல்
புன்னகை மறந்த
கடைப்பெயர் முகங்கள்!

வீதியில் நகரும்
ஓரிரு மனிதர்!

வாகனச்சத்தம் கேட்டதும்
யன்னல்
துவாரங்களிலிருந்து
அவசரமாக
உள்ளே இழுக்கப்படும்
வெளிறிய முகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்பிரமணிய பூங்கா
வாடி நின்று
வெறுமை சுமக்கும் -

விளையாட்டு மைதானத்தில்
காகங்கள் மட்டும்
அங்குமிங்கும் நின்று
தத்தி விளையாடும்.

பாரதியின் பாடல்அடி
மனத்தினுள் நெருடும் -
- எந்தையும் தாயும்
மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே
கலையரங்க மண்பத்தில்
தூசி படிந்து............
முற்றவெளி மைதானம்
புதர் மண்டி--...............

இதயங்கள்,
முகங்களிலும் கூட.........

வைத்திய சாலையின்முன்
'கருத்தடைக்குக்
காசு தரும்'
விளம்பரத்தின் அருகில்
தலைகுனிந்த
காந்தி மகான்

அதற்கும் அப்பால்
தலையிழந்த வள்ளுவர்
மார்பிழந்த ஔவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயம்படிந்த முகங்களுடன்
பதுங்குகின்ற மனிதர்

எனது பயணம் தொடர
வாகனம் இன்றி
வீட்டை நோக்கி
நடந்தன கால்கள்

என் மண்ணில்
மிகவும் பதிந்து
நடந்தன கால்கள்!!

- மல்லிகை ஆகஸ்ட், செப்டம்பர் 1985



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாய்கள்

நாயொன்று செத்து
நாறிக் கிடக்கிறது
நாலுபேர் செல்கின்ற
தெருவோர வெளியினிலே
நாயொன்று செத்து
நாறிக் கிடக்கிறது!

தெருவோடு செல்கின்ற
சீருடைச் சிறுமியர்
சிறுவர்கள் எல்லாம்
சீசீயென்று மூக்கைச்
சிறு கைகள் கொண்டு
மூடி நடக்கின்றார்.........

மினியோட்டப் போட்டி
நடக்கின்ற வேளை
மிதிபட்டு வீசித்
தெருவோரம் வீழ்ந்து
துடிதுடித் தலறியே
உயிர்விட்ட பின்னர்
நாலு நாளாக
நாறிக் கிடக்கிறது.

நாலுயார் தொலைவில்
காவலர் கந்தோர்
நாள்தோறும் தெருவில்
படைகளின் பவனி
நாலெட்டில் பார்த்தால்
நீதவான் மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்புறமும் உண்டு.
கடை, சந்தை,
ஹோட்டேல்!

நாயொன்று செத்து
நாலு நாளாக
நாறிக் கிடக்கிறது!

- *'மல்லிகை' ஆகஸ்ட் 1984*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓசையின் நடுவே

இயங்கும் இயந்திரம்
இரையும் ஓசை
எந்தன் அருகில்
கேட்கிறது........
ஆனால் நானோ இதயக் குமுறலுடன்
எழுதிக் கொண்டே இருக்கிறேன்

ஓடும் கார்கள்
உருளும் வண்டிகள்
பாடும் ரேடியோ
பலபல ஓசைகள்.....
ஆனால் நானோ இதயக் குமுறலுடன்
எழுதிக் கொண்டே இருக்கிறேன்

வேறொரு புறத்தில்
குழந்தைகள் கூச்சல்
குஷியுடன்
இளைஞரின் கொட்டம்....
ஆனால் நானோ இதயக் குமுறலுடன்
எழுதிக் கொண்டே இருக்கிறேன்

எந்தன் கண்கள்
செவிகள், மூக்கு,
வாய், கை, கால்கள்
எல்லாம் ஏதோ
இயங்கிட முயலும் -

ஆனால் நானோ இதயக் குமுறலுடன்
எழுதிக் கொண்டே இருக்கிறேன்.

- *'புதுயுகம்' 25.05.1973*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்னலரிப் பூச்சொரிந்த புழுதித் தெரு

பொன்னலரிப் பூக்கள்
பூமியெங்கும் சொரிந்திருக்கும்
புழுதித் தெருவழியே
போய்க் கொண்டிருக்கின்றேன்.

பொன்னின் நிறமெடுத்துப்
பெருமரத்தின் உச்சியிலே
பூத்திருந்த பொன்னலரி
புழுதி மணல் வழியே
பூமியெங்கும் சொரிந்திருக்கும்.

மின்னல் தெறிக்கின்ற
வானப் பெருவெளியில்
ஜனனம் எடுக்கின்ற
மழைநீர்த் துளி விரைந்து
புழுதி மணற்தரையில்
பூவாளி நீர் தெளித்து
மண் மணக்கும் வேளையில் அவ்
வாசனையை நான் நுகர்ந்து
புழுதித் தெருவழியே
போய்க் கொண்டிருக்கின்றேன்.

மஞ்சட் குருத்திடையே
மாம்பூக்கள் பூத்திருக்கும்
மாமரத்தின் கொப்பினிலே
குருவிச்சை படர்ந்திருக்கும்
பாதை மருங்கினிலே
படர்ந்துள்ள மலர்க்கொடிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்பற்கள் காட்டி
நகை செய்யும்.

செம்மண் புழுதியினால்
சிவந்திருக்கும் மேனியுடன்
தமக்காக இல்லாது
வேறொருவர் நிலத்தினிலே
தாமுழைத்த துயரமுடன்
ஏருழவர் விரைந்திடுவர்.

வண்டிச்சுமை அழுத்த
வாயில் நுரைதிரள
முதுகில் பிரம்படியும்
மூக்கில் பிடிகயிறும்
வருத்தம் கொடுப்பதனால்
எருதுகளும் தாம் விரையும்.

செக்கச் சிவந்திருக்கும்
செம்மண் தரை கழுவி
ரத்தம் என வடிந்து
'ராப்பகலாய்' நீர்விரைந்த
வாய்க்கால் வழியாக
வரப்பினிலே கால் பதித்துப்
புழுதித் தெருவழியே
போய்க்கொண் டிருக்கின்றேன்.

ஓங்கி உயர்ந்திருக்கும்
மாளிகையின் மாடங்களில்
தேங்கி யிருக்கின்ற
செல்வத்தில் மிக மகிழும்
செல்வச் செருக்குடையோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம் தெரியும் வேளையிலே
மாளிகையின் கூரையினைத்
தாண்டி மிகவிரைந்து
வானில் நகர்ந்து வரும்
வண்ண நிலவினொளி
என்னில் படர்ந் தெனக்கோர்
எழுச்சியினை ஊட்டிவிட,

மெல்லப் புழுதிமணம்
மூக்கில் புகுந்துவரப்
பொன்னலரிப் பூக்கள்
பூமியெங்கும் சொரிந்திருக்கும்
அந்தப் -
புழுதித் தெருவழியே
போய்க்கொண் டிருக்கின்றேன்!

## தலை (வர்) விதி

"எங்கள் தலைவிதியை
நாமே நிர்ணயிப்போம்
இறைவன் எங்கள்
எதிர்காலத்தை
நிர்ணயிக்க முடியாது"
என்று முழங்கிய
புரட்சித் தலைவர்
போகும் வழியில்
கோயில் உண்டியலில்
சில்லறை போட்டுச்
சென்றதும் ஏனோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயணம்

நான்
அதலபாதாளத்திலிருந்து
மேலே வந்துகொண்டிருக்கின்றேன்.
மேலேயிருந்து
உறுமும் சிங்கத்தின் ஓசையும்
உரோஞ்சும் கத்திகளின் ஒலியும்
கேட்டுக்கொண் டிருக்கின்றன.
துப்பாக்கிகளின் கூர் முனைகள்
என்னை நோக்கி நீளுவதும்
எனக்குத் தெரிகிறது.
ஆனாலும், நான்
மேலே மேலே வந்துகொண்டிருக்கின்றேன்
ஒருநாள் உச்சியை அடைந்துவிடுவேன்.

## ஜனனம்

ஜலதரங்கக் கிண்ணங்களிலே
பன்னீர்விட்டு இசைக்கின்ற
போது
எழுகின்ற இன்னிசை
சாக்கடை நீரை வார்த்தாலும்
ஒலித்தே தீரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏகாந்தம்

எங்கே திரும்பிடினும்
மனிதப் பெருவெள்ளம்
என்றாலும் நான் எந்தன்
ஏகாந்தப் பெருவெளியில்
நிற்கின்றேன்!

இயந்திரங்கள் இயங்குவதும்
இதயங்கள் துடிப்பதுவும்
என்னருகே மிக அருகே
எனக்குத் தெரிகிறது.
என்றாலும் நான் எந்தன்
ஏகாந்தப் பெருவெளியில்
நிற்கின்றேன்!

எந்தன் உளம் படைக்கும்
இன்கவிதைப் பண்அதனை
நானே முணுமுணுத்தல்
நன்றாக நானுணர்வேன்
என்றாலும் நான் எந்தன்
ஏகாந்தப் ஏகாந்தப் பெருவெளியில்
நிற்கின்றேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரபல்யம்

நாங்கள்
இருட்டில் இருக்கின்றோம்
பிரகாசமான ஒளிவெள்ளம்
உங்களைச் சூழ்ந்துகொண்டிருப்பது
எங்களுக்குத் தெரிகிறது.
வெளிச்சத்திலிருக்கும்
உங்கள் கண்கள்
இருட்டிலிருக்கும்
எங்கள் வாழ்க்கையின்
மேடுபள்ளங்களைக்
காணமுடியாது,
ஆனால் -
இருட்டிலிருக்கும் நாங்கள்
உங்கள் வாழ்க்கையின்
உள்ளே நிகழ்கின்ற
ஒவ்வொரு நிகழ்ச்சியையும்
அவதானிக்க
உங்களைச் சூழ்ந்து
வெளிச்சம் போடும்
ஒளியின் வெள்ளம்
உதவுகிறது !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசினரைப் பின்பற்றி.

“ஏனடா பரீட்சையில்
இத்தனை குறைவெ”ன
வினவிய தந்தைக்குத்
தனயன் கூறினான்
“எனக்கு மட்டுமல்ல
வகுப்பிலே எல்லா
மாணவர் களுக்கும்
குறைந்த ‘றிசல்ற்’ தான்”

## கனவு

தனிமையில் உறங்கும்
வேளை
தவித்திடும் உள்ளம் ஓயக்
கனிந்திடும் கனவில் காணும்
காட்சிகள் அவை, ஓ! இன்பம்!
கண்களே! இமைகள் நீக்கிக்
கனவினைக் கலைத்திடாதீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேசிய வார்த்தைகள்

வில்லிலிருந்து
'விர்' என எழுந்த
அம்பு
பறவையை நோக்கிப்
பாய்ந்து செல்கையில்
"பாவம், பறவை!"
என்று நினைத்தால்
அம்பு திரும்பி
வந்து விடுமோ ?

## காதல்

நான் பறிக்க விரும்பிய
ரோஜா மலரைச் சுற்றி
கூரிய முட்கள்
வேலியிட்டிருக்கின்றன.
ஆனாலும் -
நான் அந்த மலரைப்
பறிக்க வேண்டும் -
மணக்கவும் வேண்டும் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அரசு

என்னிடம் உள்ளது
இரண்டே சட்டைகள்
இரண்டும பழையவை
பலநாள் போட்டுப்
பார்த்துக் கழித்தவை.
இன்று –
அவற்றில் ஒன்றை
அணிந்ததனாலே
அனைவரும் என்னைக்
கேலி செய்தனர்.
நாளை –
மற்றைய சட்டையை
மாற்றிப் பார்ப்போம்
அதுவும் பழைய
கந்தலே எனினும்
என்ன செய்வது ?
உள்ளது இரண்டே
சட்டைகள் தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீழ்ச்சி

ஆண்டவனின் திருமுடியில்
அலங்காரமாய் வீற்றிருந்த
அழகிய அந்த மலர்
மறுநாள் -
ஆலய வீதியைக்
கூட்டித் துடைத்த
வேலைக்காரியின்
காள்களுக் கடியில்
நசுங்கிக் கிடந்தது.

## போதனை

வெண் சுருட்டை
வாயில் வைத்து
நெருப்பை மூட்ட
விளக்கை நோக்கிக்
கடதாசி யொன்றைச்
சுருட்டி நீட்டினேன்.
நீட்டிய தாளில்
'புகைத்தல் தீது'
என்ற எழுத்துக்கள்
கருகி மறைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தர்மம்

தினசரித் தாள்களை
விற்றுக் கொண்டிருந்த
குருட்டு வியாபாரியிடம்
பணத்தைக் கொடுத்துப்
பத்திரிகை வாங்கிய
அந்தப் பெரியவர்
“மிச்சக்காசு
வேண்டாம் நீயே
வச்சிரு” என்று
சொன்னதைக் கேட்டு
சுற்றிலும் நின்றவர்
வியப்புடன் பார்த்தார்.
செல்லாக் காசைக்
செலுத்திய மகிழ்வில்
சென்றுகொண் டிருந்தார்
அந்தப் பெரியவர்!!

## சுயநலம்

மூக்கினுள் நெளிந்த
புழுக்களை அகற்றக்
காக்கையின் உதவியை
நாடிய மாடு
உணவினை உண்ணும்
வேளையில் வந்த
காக்கையை முட்டித்
துரத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பீடிகை

"உங்கள் சஞ்சிகையின்
இலக்கிய சேவை
அளப்பரியது.
உங்கள் சஞ்சிகையின்
ஆயிரக்கணக்கான
வாசகர்களுள்
அடியேனும் ஒருவன்.
உங்கள் சஞ்சிகை
உலகம் உள்ளளவும்
வாழட்டும்"
என்று தொடங்கிய
கவிஞரின் கடிதம்
"எனது கவிதையைப்
பிரசுரம் செய்க"
என்று முடிந்தது.

## நாகரிகம்

பன்னிரண்டை விட்டு
புறப்பட மணிக்கம்பி
ஒன்று - இரண்டு
மூன்று – நான்கு
என்று நகர்ந்து
எத்தனையோ
இடங்கண்டு
பன்னிரண்டில் மீண்டும்
வந்து நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திறமை

வெற்றியை நோக்கி
நான் விரைவாக
நடந்துகொண்டிருந்தேன்.
பாதையின் குறுக்கே
பென்னம் பெரிய
பாறையைக் கண்டு
பயணம் நிறுத்திப்
பாதியில் மீண்டேன்
ஆனால், அந்தத்
திறமை சாலியோ
அதே பாதையில்
சென்ற பொழுது
குறுக்கே கிடந்த
அதே பாறையைக்
கொத்திக் குடைந்து
படிகளை அமைத்துச்
சுலபமாகப்
பாதங்கள் வைத்து
ஏறி நடந்தான்.

## தெய்வமே !

ஓ! தெய்வமே !
உலகத்தின் ஊழல்கள்
கொடுமைகளைக் காண்பதற்கு
சகிக்காமல்
நீ கண்களை
மூடிவிட்டாய்.
என்போன்ற ஏழைகள்....!
பாவம், என்செய்ய?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொல்லை

"எலித்தொல்லை மிகவும் மோசம்
ஏதேனும் செய்யுங்கள்"
என்றாள் என் மனைவி.
பெட்டைப்பூனை
ஒன்றைக் கொணர்ந்தேன் .
அது
குட்டி போட்டுப்
பல்கிப் பெருகிக்
முடும்பம் வளர்த்தது.
"பூனைத்தொல்லை மிகவும் மோசம்
ஏதேனும் செய்யுங்கள்"
என்கிறாள் என் மனைவி...!
... ... .... ?

## பிரதட்சணம்

கோவில் வீதியினை
மூன்று முறை
சுற்றிவிட்டேன்.
ஆனாலும் -
இன்னும் மூன்றுமுறை
சுற்றவேண்டும்.
அந்த –
அழகிய பெண்
இப்போதுதானே
வீதிசுற்ற
ஆரம்பிக்கின்றாள் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடமில்லை

நான் எழுதிய
நாலுவரிக் கவிதையைப்
பிரசுரம் செய்ய
இடமில்லையென்று
சொன்ன அந்தப்
பத்திரிகை ஆசிரியர்
எம்.பீ. ஒருத்தர்
விடுத்த அறிக்கையை
- நாலுபக்க அறிக்கையை –
அவசரமாகப்
பிரசுரம் செய்தார்.

## நியதி

உதிர்ந்து சருகாகி
மண்ணில் கிடக்கின்ற
வாடிய மலர்கள்,
புதிய மலர்களின்
எழில்மிகு
கோலங்களின்
வாழ்வுத் தடங்களை
நெஞ்சில் பதிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழிவும் பிறப்பும்

சுவரில் தொங்கிய
நாட்காட்டியொன்றில்
நாட்கள் நகர்ந்திடத்
திகதிகள் கிழிந்தன.
தேய்ந்து தேய்ந்து
அழிந்து ஒழிந்து
போய் முடிந்தன
அனைத்தும்.
அடுத்த நாளில் -
அந்தச் சுவரில் ஓர்
புதுக் கலண்டர்
தொங்கியது.

## தூக்கம்

உறங்கும் போதில்
உறைந்து கிடக்கும்
துன்பச் சுமைகள்
துயரம் யாவும்
தூக்கம் கலைந்தால்
மீண்டும் எழுமே!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒழுக்கம்

ஒரு சமூகப் பிரமுகருக்கு
விழா எடுத்துக் கொண்டாடிய
கூட்டத்தில்
ஓர் அன்பர் பேசுகிறார்.
"எங்கள் தலைவர்
ஏழை எளியவர்களுக்கு
அள்ளி வழங்கும்
உத்தமர்" என்று.
உடலால் பிழைக்கும்
'உத்தமி' ஒருத்தி
கூட்டத்தில் நின்று
குசுகுசுக்கின்றாள்
"எனக்கும் நன்றாய்
அள்ளித் தருபவர்"

## தியாகம்

தாமரை மலர்ந்து
வானத்தை நோக்கித்
தன் எழிற் கோலம்
அர்ப்பணிக் கிறது.
புற்களும் செடிகளும்
மௌனமாக
பூமாதேவிக்குத்
தம்மையே
அர்ப்பணிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதை

நாளும் பொழுதும்
கடலலைகள்
கரையினிலே
ஏதோ கவிதைகளை
எழுதி ..... எழுதி .....
மறுபடியும் மறுபடியும்
அழித்துக் கொண்டே
இருக்கின்றன.

## வேளை

ஓ! என் அன்பே!
நீ வருகின்ற வேளைகள்
நினைவில் வரும்போது
இன்பமூட்டுகின்றன.
என்றாலும் -
நீ வருகின்ற
அந்த
வேளைகளை அடுத்தே
நீ போகின்ற
வேளைகளும் வரும் என்ற
நினைவுகள் -
நெஞ்சத் தடத்தில்
துன்பத்தை
ஏற்படுத்துகின்றனவே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிவு

அந்த ஒரு நீண்ட காலை வேளையில் -
- அது மிகவும் நீண்டதாகத்தான்
எங்களுக்குத் தோன்றியது —

நாங்கள் இருவரும்
சந்தித்துக் கொண்டோம்.
அந்த இனிய தோழரை
நான் சந்தித்ததால் தான்
அந்தக் காலை வேளை
அப்படி நீண்டதோ ?

- அவரும் அப்படித்தான் கருதியிருப்பார் -

என்னை அவர் சந்தித்த
அந்த இனிய காலை
மௌனமான இளவெயிலை எறிந்து ...
மரஞ்செடி கொடிகளை
இளந்தென்றல் தழுவ ....
மென்மையான புற்றரையின் மீது
வெண்பனித் துளிகள்
மிளிர்ந்து தோன்ற
புன்னகை சிந்தியது.
இன்று —
மிகமிக நீண்ட
- அன்றிலும் பார்க்க அதிகம் நீண்ட —
(அப்படியாக எமக்குத் தெரிந்த) —

இன்றைய காலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் மீண்டும்
சந்தித்தபோது
இனிமை இருக்கவில்லை.

- இன்பம் இருந்தும்
இல்லையென்பது போல்
எங்கள் மனத்தில்
தோன்றியிருக்கலாம் -

மிகமிக நீண்ட
இன்றைய காலையில்
வானம் வெளுத்து
வரண்டு கிடந்தது.
புற்றரை யெல்லாம்
கருகிக் கிடந்தது.

- நண்பரின் கண்கள்
கலங்கியிருப்பது
எந்தன் கண்களில்
மிகவும் தெரிந்தது –

நாங்கள் இன்று
பிரிவதற்காக
மீண்டும் இணைந்தோம்.
நீண்ட காலையில்
இணைந்த இருவரும்
இன்றைய இந்த
மிகமிக நீண்ட
இருண்ட காலையில்
பிரிந்து சென்றோம் !!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனிமை

எங்கோ தொலைவினிலே
இதயத்தைத் தொட்டிழுக்கும்
ஏகாந்தக் குயிலோசை
என் காதில் விழுகிறது.
இங்கே என் மனதினிலே
எழுகின்ற தாபத்தின்
இன்னோர் பிரதி அது
என்றெனக்குத் தோன்றுவதேன்?
தனிமை இதயத்தின்
தாபத்தை வெளிக்கொணரத்
தவிக்கின்ற குயிலோசை –
துடிக்கின்ற மனவோலம்
கனிகின்ற என்னிதயத்
தனிமையதன் கவலைகளை
வெளிக்கொணரத் துடிக்கின்ற
கவிதைச் சிதறல்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரசவ மரணம்

இதயத்தின் மூலைகளில்
இருண்டுள்ள பகுதிகளில்
புதையுண்ட நினைவுகளைப்
பிறப்பிக்க நினைக்கின்ற
பிரசவத்தின் வேதனையில்
பெரும்பாலும் மரணங்கள் !

## பழையன கழிதல்

நேற்று மலர்ந்து
நிறைவளித்த நன்மலர்கள்
இன்று நிலத்தில்
விழுந்து மடிவதும்
இன்று மலர்ந்த
இனிய மலர்,
நாளை வாடி உதிர்வதும்
இந்த உலகில்
நிகழ்கின்ற ஒரு
வழக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# அரங்கமும் நானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிதை நாடகம்**

# விருந்தினர் வருகிறார்

நாடகமாந்தர்:

கந்தையா - குடும்பத்தலைவன்
கமலா - குடும்பத்தலைவி
சீராளன் - மகன்
வள்ளி - மகள்

களம் - கந்தையா இல்லம்

காட்சி: 1

கந்தையா: (வந்துகொண்டே)
இஞ்சேர் ! என் சினேகிதர்கள் இருவர் எம் வீட்டிற்குப்
பெண்சாதி பிள்ளைகளும் கூடவரப் போகினமாம்
வாறகிழமை மட்டில் வருகினமாம்; வரவேற்பு
வடிவாகச் செய்திடணும் என்ன? இதைக் கேட்டியே நீ.

கமலம்; வாறவையள் வரட்டும் வடிவாக வரவேற்பு
மீறாமல் செய்திடுவம். மிளகாய் பருப்பு மில்லை,
கூப்பன் அரிசிவைத்து கூட்டுக் கறியோடு
சாப்பிடட்டும் உறைப்பின்றி சரியாகச் சமைத்து வைப்போம்
தேத்தண்ணி கிடையாது, சீனி இல்லை என்ன செய்ய?
நேற்றைக்குச் சொன்னேனே............



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையா: ..........பொறு, நிறுத்து, உன்னுடைய
இல்லைப் புராணத்தை என்னட்டை அவுக்காதை
மெல்லப் பேசுவதற் கென்ன? தெருவெல்லாம்
உன்னுடைய சத்தத்தில் உதறுகுது நானென்ன
செவிடே?

கமலம்: .........பெரியதிறம், சொல்லிறதை வாங்கியரத்
தெரியாது பிறகென்ன பெரியகதை? நிறுத்துங்கோ.

சீராளன்: (வந்துகொண்டே)
மூன்றாவ துலகப்போர் மூண்டதுவோ? இவ்விடத்தில்
ஆண்டவனே! எந்தனைநீ காப்பாற்று இப்பெனக்கு
தேத்தண்ணி ஒருபேணி தாஅம்மா மறுபேச்சு
தேத்தண்ணி குடிச்சிட்டுப் பேசிடலாம் தா.

கமலம்: ........................................................................................மடையா
சீனியில்லை சீனிக்குக் காசில்லை காசுக்கு
நானென்ன உழைக்கிறனே நான்வாங்க? அதுபோக,
இப்பெங்கை ஆயித்தம் இண்டைக்கு லீவெல்லே?

சீராளன்: பள்ளிக்கு லீவெண்டால் தியேட்டரிலும் லீவுண்டோ
வள்ளிக்குக்கூட இது தெரியும் இண்டைக்குக்
கள்ளத் தனமாகப் படம் பார்க்கப் போகின்றாள்
மெள்ளக் கதைவிட்டுப் பாரன் இது தெரியும்

வள்ளி: (வந்துகொண்டே)
அம்மா இது கொடுமை அநியாயம் சீராளன்
சும்மா புளுகுகிறான் நம்பாதை நான் கள்ளம்
செய்யேன் ஒரு பொழுதும்......................

சீராளன்: .............................. நிறுத்தடி நீ நேற்றைக்கு
வாணியுடன் இரகசியம் பேசி வகுத்தாயே
பேணிவைத்த திட்டங்கள் பகிரங்கம் ஆனவுடன்
போடுகிறாய் ஏன் கூச்சல் போவோம் நாம் இருவருமே
வாடி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளி: மிக நன்று அப்ப நான் வெளிக்கிடட்டே.

கந்தையா: சீ கழுதை மூதேசி செய்யிறதைப் பாருங்கோ,
நானொருத்தன் அப்பனென இருக்கிறனெண் டொருசொல்லு
ஏனெண்டும் கேட்காமல் வெளிக்கிடவோ போறீங்கள்.

வள்ளி: அப்பா! பிளீஸ்' எங்கள் திட்டத்தைக் குலைக்காது
இப்போது நாம் போக விடை தாங்கோ என்னப்பா!
கந்தையா: முடியாது! இண்டைக்கு வேலை பல இங்கிருக்கு
விடியக்கு முன்னாலை வெளிக்கிட்டால் என்ன செய்ய?
சீராளன்: நானென்ன இங்கிருந்து வெட்டி விழுத்திறதே?
ஏனிப்ப புதிதாக என்ன பெரும் வேலை?

கந்தையா: என்னுடைய ஒரு நண்பர் இலக்கியத்தில் பெரும் அறிஞர்
கன்னலிலே கவிபாடும் கவிஞரவர் பத்திரிகை
ஒன்றினை நடத்துகிற ஆசிரியர்

வள்ளி: ...........................................................................காணும் அவர்க்கு
என்ன இப்ப வந்ததெனச் சொல்லுங்கோ கெதியாக

கந்தையா: அவ்வறிஞர் இவ்விடத்திற்(கு) அன்போடு வருகைதர
என்றெண்ணிக் கடுதாசி எழுதியுளர் ஆதலினால்

சீராளன்: அவர்க்காக நாமென்ன.............

வள்ளி: ...........................................................அமுது வடித்திடணும்?

கந்தையா: பொறுங்கோவன் கதை சொல்ல விடமாட்டீர் போலிருக்கு
கறுமங்கள். (தலையினிலே அடிக்கின்றார்)

வள்ளி: சரியப்பா நாமமர்ந்தோம் பிரசங்கம் தொடரட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீராளன்: கரிசனையாய் நாம்கேட்டுக் காலத்தைப் போக்குகின்றோம்.
(முன்னால் நிலத்தினிலே முகத்திற்குக் கைகொடுத்து
அன்னார் அமர்கின்றார், அம்மாவும் உடகார,)

கந்தையா: அந்தப் பெருங் கவிஞர் அடியேமைத் தேடிவரும்
அந்தத் தினத்திலே 'அகம்' (வீடு) மிகவும் அழகாக
அந்தக் கவிஞரது அகம் (உள்ளம்) போல நன்றாக
அலங்காரம் செய்து மிக எழிலோடு காட்சிதர...........

சீராளன்: கனவுகளும் கண்டு மிகக் கற்பனையில் அலங்கரித்து..............

கமலம்: கெட்டுக் கிடக்கின்ற குடிசைக்கு அலங்காரம்.............

வள்ளி: குஞ்சம்தனை விளக்கு மாற்றுக்குக் கட்டுதல்போல்

கந்தையா: சிச்சீ! நிறுத்துங்கள் புலம்பாதீர் செயல்தனிலே
இறங்குங்கள் முயன்றால் நாம் குடிசையதை மாளிகையாய்.......

சீராளன்: நாய்வாலை நிமிர்த்திடுதல் நடந்திடவே முடியாது
வீண்வேலை அதைவிட்டு வேறை கதை பேசுங்கோ!

கந்தையா: அங்காலை முன்வீட்டில் ஐம்பது நான் கடன் எடுத்தன்
உங்கை உந்த முன்வேலி ஒருக்கா அடைக்கோணும்

கமலம்: ஏனிப்ப அதுக்கென்ன அவசரமே? கிடக்கட்டும்
நானிப்ப சேலை ஒண்டு எடுக்கோணும்

சீராளன்: ............ நல்ல கதை.
'லோங்ஸ்' ஒண்டு நான் தைக்க.........

வள்ளி: ...........வேண்டாம் அதை நிறுத்து
'பிளவ்ஸ்' ஒண்டு நான் தைக்க..........

கந்தையா: ஓகோ! நிறுத்துங்கள்,
கிடுகுக்கு அட்வான்ஸ் பதினைந்தும் கூலிக்கு
கொடுத்தாச்சு பதினைந்து; மீதம் இருபதுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலைப் பருப்போடு மிளகாய் சரக்கெல்லாம்
கடைக்குப்போய் நான் வாங்கி வந்த பிறகுங்களுக்கு
வேண்டியதைச் சொல்லுங்கோ வடிவாகக் கேக்கிறன் நான்.

கமலம்: ஓமோம், அதிருக்க உவர் எப்ப வாறாராம்?

கந்தையா: ஆமாம் அதைச் சொல்ல அடியேன் மறந்திட்டேன்
வாற புதன் காலை மணி பத்தடிக்க வாசலிலே
வாறனென எழுதியுளார் வந்திடுவார் சரியாக.

சீராளன்: அப்பாடி! வாறபுதன் வாறவரை வரவேற்க
அப்பா ஏன் இப்பொழுதே ததிங்கிணத்தோம் போடுகிறார்?

கந்தையா: சீ! வாயை மூடு! மரியாதை இல்லாமல்
நீ வாயைக் காட்டாதை எதுவரினும் வருமுன்னர்
காவாத வர்களது கதையினை நீ அறியாயோ.

வள்ளி: என்னத்தை இப்போது நாம் காக்கக் போகின்றோம்
சொன்னால் தான் செய்திடலாம் வெறும் பேச்சு ஏனிப்ப?
கந்தையா: விறாந்தையிலே கொடிகட்டி உடுப்புகளைப் போடுகின்ற
பழக்கத்தை விட்டந்தப் பழங்கந்தல் துணியெல்லாம்
களைந்துள்ளே போட்டிட்டு கொடிதன்னை அறுத்தெறிந்து

கமலம்: அதுசரிதான்; ஆனாலும் அதிலுள்ள உடுப்பெல்லாம்
அறைநாடிப் போயிட்டால் அறைக்குள்ளே இடமெங்கே

வள்ளி: ஒவ்வொருவர் கழுத்தினிலும் ஒன்றிரண்டு துணிமணியைப்
பவ்வியமாய்க் கட்டிக் கொண்டிருப்போம்?

சீராளன்: அதுவேண்டாம்
அப்பாவின் அறைக்குள்ளே அடுக்காகக் குவிந்துள்ள
பத்திரிகை புத்தகங்கள் பரணினிலே போட்டிட்டு.........

கந்தையா: டேய் மடையா! புத்தகத்தின் பெறுமதியைத் தெரியாத
நீ அதையேன் கதைக்கின்றாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளி: சரி அப்பா நான் கதைப்பம்
உங்களது புத்தகங்கள் பாகம் பிரித்ததனில்
உங்களுக்கு வேண்டியதைப் பிரித்தெடுத்து மற்றவற்றை
கழித்ததனை விற்றிட்டால் கனகாசு வருமல்லோ?

சீராளன்: அதிலை எனக்கொரு 'லோங்ஸ்' அடிச்சிடலாம்..........

கந்தையா: ...........அலம்பாதீர
காரியத்தைக் கவனித்து வீட்டினையே ஒழுங்காகச்
சீருடனே செய்யுங்கள்...........
(சொல்வதினைப் பாதியிலே நிறுத்திவிட்டுச் சுற்று முற்றும்
நல்லாகப்பார்க்கின்றார், நகைப்போடு பின் சொல்வார்)

கந்தையா: சீராளா! நீ உந்தப் பாய்களெல்லாம் எடுத்துள்ளே
ஓரசவு கட்டி அதில் ஒழுங்காக வைத்திடடா.

வள்ளி: ஏன் அந்தப் பாய்களையே அவர் வந்து பார்த்திடுவார்?
வீண் வேலை..........

கந்தையா: ........சரிபோதும்; நான் சொன்னால் நீ செய்யன்
மறுபேச்சு ஏனிப்ப? சரியோ? இனி அந்த
மேசையிலே குப்பைகளாய் ஆங்காங்கே பல இடத்தில்
வீசியிருக் கின்றபல புத்தகங்கள், அதை அடுக்கு.

(சீராளன் போகின்றான், சீராகப் புத்தகங்கள்
நேராகத் தானடுக்கி நிமிர்கின்ற வேளையிலே
ஆரோ ஓர் நண்பரவர் ஆங்குவர அப்பாவும்
போனாரே, பெருமகிழ்வாய் நழுவுகிறான் சீராளன்.)

## காட்சி; 2

(புதன்கிழமை அதிகாலை புதுக்களையோ டெல்லோரும்
இலங்குகிறார் சிலமணிகள் சென்றவுடன் வரவிருக்கும்
விருந்தினரை எதிர்பார்த்து வீற்றிருக்கும் கந்தையா
பரபரப்பாய்ச் சமையல் செய்யும் கமலமும் தன் பாட்டினிலே
விறுவிறுப்பாய் 'நாவ'லொன்று வாசிக்கும் சீராளன்
புறுபுறுக்கக் காத்திருக்கும் வள்ளி - இவர்களுடன்
மேடை இலங்கிடவும் திரையும் அகல்கிறது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையா: நாலுபேர் பார்க்க நல்லாய் இருக்கிறது
வேலி அடைச்சாச்சு, விறாந்தையிலே கிடந்திட்ட
துணிமணிக ளெல்லாம் தூக்கி எறிஞ்சாச்சு
பணியக் கிடந்த அந்தப் பாய்களெல்லாம் பரண்மீது
போட்டாச்சு மேசையிலே புத்தகங்கள் வடிவாக
'நீற்றாக'த்தான் அடுக்கி இருக்கிறது இனியென்ன?

சீராளன்: இனியென்ன 'அவர்' வந்து இது எல்லாம் சரிதானா?
எனவடிவாய் 'செக்'பண்ணி 'சேட்டிவிக்கற்' தருவாரோ?

கந்தையா: எழும்பு! கதையை விடு உங்காலை இருக்கின்ற
பழம்பெட்டி உடைசல்கள் இரும்புச் சாமான்கள்
கழிவுப் பொருட்குவியல் கண்முன்னால்
ஏன்கிடப்பான்?
வீட்டிற்குப் பிறத்தாலை கொண்டவற்றைப் போட்டுவிடு

சீராளன்: இவரொருத்தர் வருகின்றார் இது பெரியதோர் கரைச்சல்.
அவரென்ன அரசாளும் மன்னர் பெருமானோ?

வள்ளி: இல்லையெனில் சினிமாவில் இணையற்ற புகழ் பெற்ற
நல்லவொரு நடிகருமோ? சிச்சீ! ஒரு அறிஞர்

கந்தையா: அறிவின் பெரும் திறனை அறியாத முட்டாள்கள்
புறுபுறுத்து என்ன பயன்? புலம்பாதீர்.
கமலம்: (கரண்டியுடன் கையசையக் கமலம் புறப்பட்டு
வருகின்றாள்)
நேரம் எதுவென்று பார்க்காது உம்பாட்டில்
நீரேன் கதைக்கின்றீர் பத்தடிக்க ஒருநிமிடம்
பாரும் இருக்கிறது. பெரியவரைக் காணோமே?

கந்தையா: பொறு கமலம் பார் இன்னும் சில நிமிடம்
போவதற்குள் வருவார்.

வள்ளி: வராவிட்டால் என்ன செய்ய?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீராளன்: பழையபடி

பாய்கள் துணிமணிகள் விறாந்தைக்குப் பாய்ந்துவர
பழம்பெட்டி சாமான்கள் பழையபடி இங்குவர...........

கந்தையா: ஏன் அவ்வாறெண்ணுகிறாய்? இக்கணமே அவர் வருவார்.

சீராளன்: நான் இப்போ சாப்பிடவும் போகின்றேன் பசிக்கிறது.

கந்தையா: பொறு! இங்கே விருந்தினரும் வரப்போகிறார் நீ என்ன
வருபவரை விட்டிட்டு வடிவாகச் சாப்பிடவோ?.........

(வாசல்தனை நோக்கி வழிமேலே விழிவைத்து
மேசை அருகினிலே கந்தையா வீற்றிருக்க
நேரம் நிமிடங்கள் ஆகிக் கடிதகல
பத்தரையும் ஆயிற்று பறக்கின்றான் சீராளன்)

சீராளன்: அம்மா! இனி என்னால் அரைக்கணமும் தாங்கேலா(து)
சும்மா அவர்க்காகச் சாப்பாட்டை விட்டிடவோ?

வள்ளி: எனக்கும் பசி வயிற்றைக் கிள்ளுகுது சாப்பிடட்டே.

கமலம்: வாருங்கோ! அவரெங்கே வரப்போகிறார் இனி இங்கை?
பாருங்கோ நேரத்தைப் பத்தரைக்கு மேலாச்சு.
(இவ்வேளை வாசலிலே வருகிறது 'தந்தி' ஒன்று)

கந்தையா: தந்தி வருகிறது வாங்கிப்படி தம்பி.
எந்த இடத்திலிருந்து வருகிறது பார் முதலில்.

சீராளன்: (வாசித்துவிட்டு)
அந்தப் பெருங் கவிஞர் அடித்துள்ளார் தந்தியினை
மன்னிப்புக் கேட்டுள்ளார் வரமுடியா மல் போச்சாம்
இண்டைக்கு விட்டாலும் இனி ஒரு நாள் கட்டாயம்
வந்திடுவேன் என்றெழுதி வடிவாக அடிச்சிருக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளி: சிச்சீ மினைக்கெட்டு வீடெல்லாம் தலைகீழாய்
வச்சோமே அப்பெரியார் வரவில்லை வீண்வேலை.

சீராளன்: இப்பென்ன அதனாலே இன்று பெரும் சாப்பாடு
அப்பாவின் பெயர்சொல்லி அழகாக விருந்துண்போம்,

கமலம்: அப்பப்பா! அவரொருத்தர் வாறாரென் றதற்காக
எப்போதே தொடக்கம் எத்தனையோ ஆட்டங்கள்.
செய்யாத செலவுகளும் செய்திந்த வீட்டினையும்
ஐயோ! தலைகீழாய் ஆக்கி அதன்பிறகு
இப்போது பார்த்தால், அவர் வரவும் இல்லை இனி,

சீராளன்: என்ன அதற்கிப்போ! வாருங்கள் சாப்பிடலாம்.
(தொங்கும் முகத்தோடு கந்தையா நடக்கின்றார்
பொங்கும் மகிழ்வோடு சீராளன் போகின்றான்
தங்கும் நகைசெய்து கேலியோடு வள்ளிவர
அங்கே அடுக்களைக்கு அனைவருமே ஏகுகிறார்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

# இசையும் நானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசைப்பாடல்கள்

### அம்பிகை பாடல்கள்

99. நாள்முழுதும் என்னுடன் நீ 120
100. பஞ்சதசாக்ஷரி 121
101. பக்தஜனப் பிரியை 122
102. நவரஸ நாயகி 123

### புத்தூர் புவனேஸ்வரி அம்மன் பாடல்கள்

103. அம்மா புவனேஸ்வரி 124
104. திருவுளம் இரங்காயோ? 125
105. இன்னமும் சோதனை தானா? 126
106. ஸ்ரீநகர நாயகி 127

**(சங்கீதவித்துவான் எஸ். பத்மலிங்கம் அவர்களால் பாடி வெளியிடப்பட்ட இறுவட்டில் இடம்பெற்றவை.)**

### ஆவரங்கால் இராமலிங்கர் பாடல்கள்

107. அற்புதம் காணவாராய் 129
108. முச்சிறப்பாய் மிளிரும் ஆவரங்கால் 129
109. திருவருட் திறம் 130
110. சுடலையில் ஆடியவர் 131
111. சிவப்பொலிவாய் வீற்றிருப்பார் 131
112. ஆனி உத்தரம் 132
113. ஆவரங்காலின் அற்புதம் 132
114. பர்வத வர்த்தனியைப் பாங்கினிலே உடையாய் 133

**(மேற்படி ஆலய பூங்காவனத் திருவிழாவில் இசைக்கலைஞர் சீர்காழி சிவசிதம்பரம் அவர்கள் மேடையில் பாடியவை)**

### காரைநகர் வாரிவளவு கற்பகவிநாயகர் பாடல்கள்

115. அற்புதம் நடந்தேறலாம் 134
116. குலம் காக்கும் கணபதி 135



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*117.* ஞானம் வழங்கும் யானைமுகவன் 136
*118.* அதிசயப் பொருள் 137
*119.* எங்கும் இசை கூடும் 138
*120.* வாரிவளவின் புகழ் பாடும் 139

**நோர்வே - ஒஸ்லோ முருகன் பாடல்கள்**

*121.* தாயகத்தை நீ காப்பாய் 140
*122.* கொக்கறுகோ என்று ....... 141
*123.* குறிஞ்சி நலக் குமரன் 142
*124.* காவலுக்கு நின்றாய் 143

**நல்லைக்கந்தன் பாடல்கள்**

*125.* மும்மையும் சாந்தி 144
*126.* தொல்லைகள் போக்கிட .... 145
*127.* பெருவாழ்வின் நிதியே 146

*128.* **மலேஷியா ஜோகூர்பாரு ராஜமாரி கீர்த்தனம் 147**

**பொங்கல் பாடல்கள்**

*129.* வழிபிறக்கக் காணலாம் 149
*130.* வழிநடத்தி வாழ்ந்து பார் 150

**இணுவில் கந்தன் பாடல்கள்**

*131.* இணுவில் கந்தன் திருப்பள்ளி எழுச்சி 151
*132.* இணுவில் கந்தன் அர்த்தஜாமத் திருவூஞ்சல் 152
*133.* இணுவில் கந்தன் லாலி 153

**இணுவில் கந்தன் கந்தசட்டிப் பாடல்கள்**

*134.* கருணை பொங்கும் பெருநாள் 154
*135.* இன்னல்கள் நீக்கிடுவாய் 156
*136.* ஆனந்தம் நல்குவாய் 157

**137. இணுவில் கந்தன் காவடிச் சிந்து**

**புதிய கல்யாணப் பாடல்கள் சில........**

138 - 142 மாலை மாற்றினாள்.......பொன்னூஞ்சல் ஆடீர் 160



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பிகை பாடல்கள்

### 1. நாள்முழுதும் என்னுடன் நீ...

ராகம் - சண்முகப்பிரியா

**பல்லவி**

காலைப் புலர்பொழுதில் கண்விழித்தால் உன்றன்
கமலமுகம் தோன்றிக் கருணை பொழியுதம்மா
காலைப் புலர்பொழுதில்.......

**அனுபல்லவி**

காலைக்கடன்முடித்தால் கைபிடித்தே அழைத்துக்
கடமைசெயும் தலத்தில் நடைபயில்வாய்
காலைப் புலர்பொழுதில்.......

**சரணங்கள்**

மாலைப்பொழுது வந்தால் மனைவி மக்கள் இடையே
மறைந்திருந்தே நீயும் கதைபகர்வாய்
சோலை கடல் மலைகள் ஆறு குளம் வானம்
அனைத்திலும் எனைத் தொடர்ந்தே நீ வருவாய்
காலைப் புலர்பொழுதில்.....

அன்னை என நினைத்தே அனுதினம் உனைப் பணிந்தேன்
ஆதரவோ டெனக்கு அருளினை நீ தருவாய்
பொன்னும் பொருளும் இங்கே பெரிதென நான் நினையேன்
பூமியில் புனிதன் எனப் புடமிட்டு நீ வளர்ப்பாய்
காலைப் புலர்பொழுதில்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. பஞ்சதசாக்ஷரி

*ராகம்: கர்நாடக தேவகாந்தாரி*

### பல்லவி

*பஞ்சதசாக்ஷரி பார்வதி தேவி ஸ்ரீ*
*பர்வத ராஜ குமாரி பவானி*

*பஞ்சத......*

### அனுபல்லவி

*சஞ்சல மோசனி சகுண மனோன்மணி*
*ரஞ்சனி ராகஸ்வ ரூபிணி பாஹி மாம்*

*பஞ்சத......*

### சரணங்கள்

***கா**திவித்யேஸ்வரி **ஏ**க மகேஸ்வரி*
***ஈ**திபாதா விநாசினி **லா**கினி*
***ஹ்ரீங்**காரிணீ தேவீ **ஹ**ரிசோதரீ உமா*
***ஸ**கல லோகேஸ்வரி **க**மலமனோஹரி*

*பஞ்சத......*

***ஹ**ர்ஷிணி **லா**வண்ய சாலினி **ஹ்ரீம்** நம*
***ஸ**ர்வ விமோஹினி **க**ருணாக ரேஸ்வரி*
***ல**ம்போத ரேஸ்வர பூஜித சுந்தரி*
***ஹ்ரீம்**மதி சிவநுத பஞ்சத சாக்ஷரி*

*பஞ்சத......*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. பக்த ஜனப் பிரியை

*ராகம்: பிலஹரி*

### *பல்லவி*

*சுந்தரி தந்திர மந்திர யந்திர சூக்கும ரூபிணியே - என்றும்*
*எந்தன் மனத்தினி லேவிளை யாடிடும் இன்னமுதே லலிதே*

*சுந்தரி தந்திர......*

### *அனுபல்லவி*

*சந்திரமண்டல மத்தியிலேயுறை சாந்தினியே உமையே - எழில்*
*சிந்திடும் சிந்துர திலகமுகம் தினம் காத்திடுமே எமையே*

*சுந்தரி தந்திர......*

### *சரணம்*

*பந்தித பாப விநாசினி பைரவி பக்தஜன பிரியே*
*செந்தமிழால்கவி செய்யும் சிவம்பணிந் தேத்தும் கவிப் பிரியே*
*இந்திர னாதியர் ஏத்தி வணங்கிடும் எங்கள் குகப் பிரியே*
*வந்து நிதம் அருள் தந்திடு தேவி என் வாழ்க்கையெல் லாம் நீயே*

*சுந்தரி தந்திர......*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. நவரஸ நாயகி

பல்லவி

**சாந்தம்** முகம் தவழும் **கருணை** விழி தவழும்
ஏந்தும் கரத்த வரின் **சோகம்** விழுந்தொழியும் (சாந்தம்)

அனுபல்லவி

சார்ந்து தொழும் அடியார் வாழ்வில் **இன்பம்** தவழும்
ஆர்க்கும் துயர்ப் **பயங்**கள் அற்று விழும் தினமும் (சாந்தம்)

சரணம்

**கோபம்** கொண்டே அரக்கர் கொடுமைகள் கொன்றொழித்த
**வீரம்** மிகுந்த அந்தத் தேவி மஹாத்மியத்தை
நேரமெல் லாம் உரைத்தால் நேர்ந்திடும் **அற்புதங்கள்**
நவிலத் திறமை ஏது **நகை** முகம் பார்த்திருப்போம். (சாந்தம்)

- தினகரன் 05.10.1981



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தூர் புவனேஸ்வரி அம்மன் பாடல்கள்
## 1. அம்மா புவனேஸ்வரி

ராகம் - நாதநாமக்கிரியை

### பல்லவி

அம்மா புவனேஸ்வரீ - உன்
அருந்துணை தாராய் இனி அம்மா புவனேஸ்வரீ

### அனுபல்லவி

அம்மா அம்மா என்றே அழைத்துக் களைத்த என்னை
அருட்கரம் கொண்டணைத்தே ஆறுதல் தந்திடுவாய்
அம்மா புவனேஸ்வரீ

### சரணங்கள்

உலகியல் நாடகத்தில் நடித்திட அனுப்பி வைத்தாய்
பலவித பாத்திரங்கள் பக்கலிலே அமைத்தாய்
நலமுடன் தீமைகளும் கலந்தென்றன் கதைசமைத்தாய்
பலம்கொண்ட மட்டும் நானும் நடித்துக் களைத்துவிட்டேன்
அம்மா புவனேஸ்வரீ

விதவித வேடமிட்டுக் காயம் களைத்ததம்மா
புதுப்புதுக் கதைபேசி வாக்கும் இளைத்ததம்மா
எதை இனி நினைப்பதென்றே மனமும் சலித்ததம்மா
இதுபோதும் இனிக்கரணம் மூன்றும் உனக்கேயம்மா
அம்மா புவனேஸ்வரீ

புவனம் முழுதும் உன்றன் பூமுகப் பொலிவு கண்டேன்
புவனம் முழுதும் உனக் குள்ளே எனவும் கண்டேன்
புவனம் முழுதும் அந்தப் புனித உணர்வைத் தாராய்
புவனேஸ்வரி எனக்கு ஆறுதல் அதுவே பாராய்
அம்மா புவனேஸ்வரீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(சங்கீதவித்துவான் எஸ். பத்மலிங்கம் அவர்களால் பாடி வெளியிடப்பட்ட இறுவட்டில் இடம்பெற்றவை.)*

## 2. திருவுளம் இரங்காயோ?

ராகம்: நவரஸ கன்னட

**பல்லவி**

ஸ்ரீலலிதே என்னை நினையாயோ - உந்தன்
சேயல்லவோ அடியேன் எனக்கருளைத் தர

ஸ்ரீலலிதே என்னை........

**அனுபல்லவி**

ஆலம துண்டவனின் நஞ்சமுதாக்கிய நீ
மாலும் எனக்கருள்தல் ஆகாதா?......... தேவீ...

ஸ்ரீலலிதே என்னை........

**சரணம்**

உனதடிகள் நினைந்தே அம்மா அம்மா என்றே
உருகுவது தெரியாதோ?
எனது துயர் போக்கி இருவினைகள் நீக்கத்
திருவுளம் இரங்காதோ? .... தேவீ...

ஸ்ரீலலிதே என்னை..........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. இன்னமும் சோதனை தானா?

ராகம்: தோடி

### பல்லவி

இன்னமும் சோதனை தானா - தேவீ
எந்தனின் கண்ணீர் உனக்கென்ன தேனா?
இன்னமும்........

### அனுபல்லவி

உன்னை வணங்குபவர் வாழ்வில் உயர்வர் என்றே
உரைக்கும் உரைகள் எல்லாம் பொய்யுரை தானா?
இன்னமும்.......

### சரணங்கள்

கன்னலிலே குழைத்துக் கவியமுது படைத்தேன்
காலமெல் லாம் உனது கழலிணைகள் தொழுதேன்
சின்ன வயதுமுதல் சிந்தையில் உனைப் பதித்தேன்
சிறியேனுக் கருள்புரிய இன்னமும் ஏன் தயக்கம்?
இன்னமும்.....

துன்பப் பெருஞ் சுமைகள் தாங்கும் வலிமை இல்லேன்
தூயஉன் புகழ்க்கவியே சாற்றும் தொழில் உடையேன்
அன்பில் பழுத்த அரும் அமுதக் கனியே என்னை
ஆற்றுப் படுத்தி வைக்க இன்னமும் ஏன் தயக்கம்?
இன்னமும்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. ஸ்ரீநகர நாயகி

ராகமாலிகை

நாட்டை

### பல்லவி

ஸ்ரீநகரம் தேடித் தரிசிக்க நான் வருவேன்
தேவியுன் திருவுருவம் சேவித்துமே மகிழ்வேன்
ஸ்ரீநகரம் தேடி.........

### அனுபல்லவி

அங்குச பாசமும் அழகு மலர்க் கணையும்
தங்குகரம் மீதில் தனுக்கரும்பும் காண
ஸ்ரீநகரம் தேடி.........

### சரணங்கள்

அடாணா

கோட்டைகள் இருபத்து ஐந்தினையும் தாண்டி
பாட்டுக்கள் பாடியுன்னைப் பணிந்திட நான் வருவேன்
ஹரிசந்தனம், கதம்பம், பாரிஜாதம், கல்பம்,
அரியமந் தாரம் என்னும் தருக்களின் வனம் கடந்தே
ஸ்ரீநகரம் தேடி.........

கானடா

எட்டுலோகக் கோட்டை அனைத்தையும் கடந்திடுவேன்
கிட்டவந்தே உனது திருவடியில் வீழ்வேன்
ரத்தினக் கோட்டைகளை ரசித்துக் கடந்திடுவேன்
பக்தியுடன் உன்னைப் பாடிக்கொண்டே வருவேன்
ஸ்ரீநகரம் தேடி.........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காபி**

வந்த களை நீங்கக் கதம்பவனத் தமர்ந்தே
சிந்தா மணியகத்தைச் சிந்தைகுளிரக் காண்பேன்
எந்தைசதா சிவனும் நீயும் அமர்ந்திருக்கும்
மந்திர சக்கரத்தை மனம் குளிரக் காண்பேன்
ஸ்ரீநகரம் தேடி.........

**பாகேஸ்ரீ**

வட்டக் கலைகளுடன் வாசலும் பூபுரங்கள்
எட்டிரு தளக் கமலம் அட்டதள பதுமம்
இட்டமுடன் எழுந்த நாற்பத்து முககோணங்கள்
எட்டிக் கடந்தெனது இன்னமுதைக் காண்பேன்
ஸ்ரீநகரம் தேடி.........

**சுருட்டி**

பஞ்சப்ரம் மாசனத்தில் பரமசிவன் மடியில்
பஞச மலர்க் கணையும் பாசம் அங்குசத்தோடும்
கொஞ்சும் அருள்விழியால் குழந்தை எனை அழைப்பாய்
தஞ்சம் என உனது தாள்களில் நான் பணிவேன்
ஸ்ரீநகரம் தேடி.........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவரங்கால் பர்வதவர்த்தனி சமேத இராமலிங்க நடராஜர் பேரில் இசைப் பாடல்கள்

### 1. அற்புதம் காணவாராய்

ஆவரங்கால் கொய்வளையில் ஆதிசிவன் வீற்றிருக்கும்
ஆற்புதம் காணவாராய் - சகியே (ஆவரங்)

தேவர் தொழும் பதியில் தெய்வீக ஆலயத்தில்
திருவருள் பெறவே வாராய் (ஆவரங்)

ராமலிங்கர் எனுமோர் இனியபெயர் தாங்கி
இசைவுடன் பர்வதவர்த் தனியுடன் சேர்ந்திருந்து
சேமம் எமக்கருளும் திருவடியைத் தொழவே
சேரும் அன்பால் குழைந்தே தேடி நீ வா சகியே (ஆவரங்)

### 2. முச்சிறப்பாய் மிளிரும் ஆவரங்கால்

இராமநநாத உடையார் காசிக்குச் சென்று பெற்ற
சிவலிங்கம் வதியுமிடம் ஆவரங்கால் (இராம)

இராமலிங்கர் எனவே இராமேஸ்வரப் பெயரை
ஏற்றிருக்கும் இடம் நம் ஆவரங்கால் (இராம)

தென்முனை ராமேஸ்வரமும் வடக்கில்நற் காசியுமே
சேர்ந்த புதுமையுடன் சிதம்பரத்தின்
மன்னவர் நடராஜர் பெயரும் இணைந்ததனால்
நடராஜ ராமலிங்கர் ஆகிவிட்டார் (இராம)

சுற்றிலும் உவர் நீரால் சூழ்ந்த தலம் எனினும்
கோவிலின் தீர்த்தச்சுவைஅமிர்தமன்றோ?
முத்தலச் சிறப்புடனே மூர்த்தியும் தீர்த்தமுமே
முச்சிறப்பாய் மிளிரும் ஆவரங்கால் (இராம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. திருவட் திறம்

ஆவரங்காற் பதியின் இராமநாத உடையார்
காசியில் எடுத்து வந்தார் சிவலிங்கத்தை
தேவர் தொழும் பதியாம் பல்வினையான் கொய்வளையில்
திருக்கோவில் அமைத்து வைத்தார் திருவருளால் (ஆவரங்)

காசியில் ஆச்சிமுத்து சந்நியாசி அம்மாவிற்கு
காட்சி கொடுத்தார் எங்கள் காசிநாதர்
வீசி நடனமிடும் தில்லை நடராஜருமே
பேரில் இணைந்துகொண்டார் எங்கள் பதியில் (ஆவரங்)

"ஆவரங்காற் தெருவில் காசி இருக்குதங்கே
அருள்தருவோம் நீபோய் பணிசெய்" என்றார்
தேவர் பதியில் அன்று ஆச்சிமுத் தம்மா கனவில்
திருவருட் திறமுரைத்த வார்த்தையிது (ஆவரங்)

பர்வத வர்த்தனியும் பாங்கில் அமர்ந்திருக்க
நடராஜ ராமலிங்கர் கோவில் கொண்டார்
நிர்மல பூஜை செய்ய கங்காபட்டர் குடும்பம்
காசியி லிருந்து வந்து அமர்ந்தனரே (ஆவரங்)

ஆனியுத் தரம் சிவனார் ஆனந்தமஹோற்சவமாம்
ஆடிப்பூரம் அம்மை மஹோற்சவமாம்
வானுயர் கோபுரமும் வளர்கலைச் சிற்பங்களும்
வடிவுடன் திகழுமெழில் ஆலயமாம் (ஆவரங்)

நாளும் அடிபணிவோம் நற்பணிகள் புரிவோம்
நம் பெருமான் புகழை நாம் புகல்வோம்
வாழும் வழி தருவார் வார்கழல் தாம் தருவார்
வாருலகில் அவர்பேர் நிதம் பொலிக!  (ஆவரங்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***(மேற்படி ஆலய பூங்காவனத் திருவிழாவில் இசைக்கலைஞர் சீர்காழி சிவசிதம்பரம் அவர்கள் மேடையில் பாடியவை)***

## 4. சுடலையில் ஆடியவர்

சுடலையில் ஆடியநம் நடராஜர் - இங்கு
இராமலிங்கப் பெயராய் அமர்ந்தனரே (சுடலையில்)

வடபுறம் குடிமனைகள் வளம் கொழிக்க - முன்னே
கீழ்ப்புறம் சுடலைதன்னைப் பார்த்தபடி (சுடலையில்)

திரிபுர புஷ்கரணித் தீர்த்தமிங்கே - தெற்கே
சிறப்புடன் அழகுபெறக் காண்கிறதே
அரியதோர் சிவசக்திப்பேர் மணிமண்டபம்
அழகுடன் மேற்கினிலே உயர்ந்திருக்க (சுடலையில்)

## 5. சிவப் பொலிவாய் வீற்றிருப்பார்

பர்வத வர்த்தனியைப் பாங்கினிலே உடையாய்
நடராஜ ராமலிங்கா அருள்தருவாய் (பர்வத)

தர்மசிந் தனையுடைய ஆவரங் காற்பதியில்
தழைத்திடும் சிவப் பொலிவாய் வீற்றிருப்பாய் (பர்வத)

யாழ்ப்பாணம் பருத்திநகர் நெடுஞ்சாலையின்
மருங்கினில் கம்பீரமாய் கோவில்கொண்டாய்
வாழ்க்கையில் வளம் யாவும் அடியருக்கே
வள்ளல் என வழங்கி மகிழ்ந்திருப்பாய் (பர்வத)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. ஆனி உத்தரம்

**ராகம்: பாகேஸ்ரீ**

ஆனிஉத்தரம் என்றால் அப்பனுக்குத் தீர்த்தம்
ஆடிப்பூரம் தொடரும் அம்மையின் திருநாட்கள்
(ஆனி உத்தரம்...)

வானில் உறைதேவர் வந்து நிறைந்ததுபோல்
வந்திடும் அடியர்குழு வீதியெங்கும் நிறையும்
(ஆனி உத்தரம்...)

மங்கல வாத்தியங்கள் நாள்முழுதும் முழங்கும்
மறையொடு திருமுறையும் சேர்ந்தொலிக்கும் தினமும்
சங்கொலியும் அடியார் சாற்றிடும் தோத்திரமும்
சரிகம பதநி என இசையொலியும் பரவும்
(ஆனி உத்தரம்...)

## 7. ஆவரங்காலின் அற்புதம்.

**ராகம்: சண்முகப்பிரியா**

ஆவரங் கால்பதியில் அருமந்த கோவில் கொண்ட
ஆனந்த சிவனாரின் அற்புதம் காண வாரீர்
(ஆவரங்கால்.......)

தேவரெலாம் தினமும் தேடிவந்தே பணியும்
தேமலர்ப் பொழில்சூழும் திருவருள் நிறை பதியாம்
(ஆவரங்கால்.......)

பர்வத வர்த்தனியின் பக்கலிலே உறையும்
பதி ராமலிங்கர் அருள் வீசிடும் புனிதத்துடன்
தர்மம் சிறந்திடவே தக்கோர் நலம் பெறவே
தனியர சாண்டு நமை நாளுமே காத்திடுவார்
(ஆவரங்கால்.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. பர்வத வர்த்தனியைப் பாங்கினிலே உடையாய்.

**ராகம்: பந்துவராளி**

பர்வத வர்த்தனியைப் பாங்கினிலே உடையாய்
ராமலிங்கேஸ்வரனே அருள்புரிவாய்
சர்வநலம் அருளும் பரம தயாநிதியே
சகல உலகினர்க்கும் சுகம் தருவாய்
(பர்வத....)

தர்மம் செழிக்கும் பதி ஆவரங்கால் தனிலே
தக்கோர் பராமரிப்பில் ஆலயம் கொண்டுறைந்தாய்
கர்வம் உடையவரைத் தூர விலக்கி வைப்பாய்
கருணை உளம் கொண்டே கனிவுடன் திருத்திடுவாய்
(பர்வத)

ஆனிஉத் தரமுடனே ஆடிப்பூரத் திருநாள்
ஆவரங்கால் முழுதும் ஆனந்தத் திருநாள்கள்
தேனில்வண் டாய் அடியார் தேடிவந்தே பணிவார்
தேவர்புகழும் பெருந் திருவிழா நாள் இவையே
(பர்வத)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரைநகர், வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகர் மீது இசைப்பாடல்கள்

### 1. அற்புதம் நடந்தேறலாம்

கற்பகக் களிறின் பொற்பதம் பிடித்தால்
சொற்பதம் கடந்தேறலாம் - ஞான
அற்புதம் நடந்தேறலாம் - வாழ்வு
முற்றிலும் நிலை மாறலாம்.

(கற்பகக்....)

சிற்பரன் அவன் என்னும் சிந்தனை உருவானால்
கற்பனை நிஜ மாகலாம் - எண்ணம்
முற்றுமே நிறைவேறலாம் - வாழ்வு
முற்றிலும் நிலை மாறலாம்.

(கற்பக.......)

வற்றிய மரம் கூடப் பற்றுடன் பணிந்தாலே
கற்பக மரம் ஆகலாம் - உந்தன்
சுற்றமும் உயர்வாகலாம் - வாழ்வு
முற்றிலும் நிலை மாறலாம்.

(கற்பக....)

கற்பக கணபதியின் வாரி வளவுத் தலம்
தெற்றெனத் தெரிகின்றதே - காரை
பொற்றிருப் பதி நாடுவாய் - வாழ்வு
முற்றிலும் நிலை மாறலாம். (கற்பக.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ட நடை

## 2. குலம் காக்கும் கணபதி

### பல்லவி

காரைநகர் கருணைமிகும் புண்ணிய பூமி - அங்கு
வாரிவளவு கற்பகனார் குடியிருக்கிறார்
(காரைநகர்...)

### அனுபல்லவி

ஊரையெல்லாம் காப்பதுடன் உலகம் சுற்றியே
ஓங்குபுகழ் பெற்ற எங்கள் கணபதி இவரே
(காரைநகர்...)

### சரணம்

கும்பரைப்புலம் பதியினிலே சுப்பு உடையார்
குடியமர்த்தி வைத்த பிள்ளை குலத்தைக் காக்குது
நம்பி அவர் பாதம் தொழ நாடி வருபவர்
நலம் பலவும் நிறைந்துமகிழ் வோடு செல்கிறார்
(காரைநகர்.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. ஞானம் வழங்கும் யானை முகவன்

### பல்லவி

வானுயர் கோபுரம் நாற்றிசை திகழ
வாரி வளவிலே கணபதி மகிழ்வார்
(வானுயர்....)

### அனுபல்லவி

வானவர் புகழும் ஓவியம் சிற்பம்
வண்ண மாடங்கள் மனத்தினைக் கவரும்
(வானுயர்....)

### சரணங்கள்

காரை நகர்க்கொரு கலங்கரை விளக்கம்
வாரி வழங்கிடும் கற்பகக் கொழுந்து
ஊரின் பெயர் சொல்லி உயர்ந்த பெருந்தலம்
உத்தமர் உடையார் கட்டிய கருந்தனம்
(வானுயர்....)

ஞானம் வழங்கிடும் யானை முகவனின்
நல்ல கதை பல சிற்பசித் திரமாய் - **சிவ**
**ஞானம்** வழங்கிட யாவரும் மகிழ்வாய்
நாளும் வலம் வந்து வளம் பெற லாமே
(வானுயர்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. அதிசயப் பொருள்

### பல்லவி

அதிசயப் பொருளான ஆதி விநாயகா
புதுமைகள் பல செய்யும் காரை விநாயகா
(அதிசய......)

### அனுபல்லவி

கதியென்று வருவோர்க்குக் கற்பகக் கொழுந்தானாய்
எது வேண்டும் எனக் கேட்டு எல்லாமே நீ கொடுப்பாய்
(அதிசய....)

### சரணங்கள்

கதிரவன் போல் ஒளிரும் ரூபமும், யானைமுகம்
மதிதவழ் சிரம், கையில் ஒடித்த ஓர் ஒளிர் தந்தம்
உதரபந் தனநாக ரத்தினம் ஒளிவீசும்
பதமிரண்டும் நமக்கே வாரியருள் வழங்கும்
(அதிசய....)

பாசம் நம் ஆசையெனில் அங்குசம் அதன் நெறியாம்
ஆசையுடன் இனிக்கும் ஆனந்த மோதகமாம்
நேசமுடன் வாரி வளவினில் குடியமர்ந்த
தேசுடைய எங்கள் கற்பக நாயகனாம்
(அதிசய....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவடிச்சிந்து

## 5. எங்கும் இசை கூடும்

கேட்டவரம் தானருளும் வேதன் - மன
வேட்கைதனைத் தீர்த்தருளும் போதன் - நமை
ஆட்கொண் டெங்கள் ஆவல் தீர்க்கும்
நீட்டியகைக் கற்பகநற் பாதன்

(கேட்டவரம்.....)

காரைநகர் மக்கள் பணி வேழம் - அருள்
வாரித்தரும் கற்பகமாய் வாழும் - இடம்
வாரிவள வென்பதனால் வந்து வரம் கேட்பவர்கள்
ஆரவாரத் தோடு கரம் நீளும்.

(கேட்ட வரம்....)

நான்மறைகள் நாலுபுறம் ஓதும் - நல்ல
தேனிசையில் திருமுறைகள் பாடும் - இங்கு
வானுயரும் நாதஸ்வர ஓசையுடன் நற்றவிலும்
தான் முழங்க எங்குமிசை கூடும்

(கேட்ட வரம்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. வாரிவளவின் புகழ் பாடும்

### பல்லவி

காரைநகர் வந்து பாரும் - எங்கள்
வாரி வளவின் புகழ் பாடும்
(காரைநகர்...)

### அனுபல்லவி

வாரிசூழ் பதி என்ற போதும் - இங்கு
வளமான மலர்ச்சோலை காணும்
(காரைநகர்...)

### சரணங்கள்

பெருவீதி தனைச் சூழ்ந்து எங்கும் - பல
பெருமரம் உயர்ந்தோங்கி நீளும்
அருகினில் சுகந்தங்கள் சீசி - மலர்ச்
செடி கொடி நிறைந் தெங்கும் ஆடும்
(காரை நகர்.....)

கோயிலின் வடபால் ஓர் சோலை - அது
குளிர்வனமாய்க் கண்ணை ஈர்க்கும்
கோயிலின் நூற்றாண்டைக் கூறும் - கமலத்
தொட்டியொன் றீசான திசையினில் பூக்கும்.
(காரை நகர்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோர்வே ஒஸ்லோ சிவசுப்பிரமணிய சுவாமி பேரில் பக்திப் பாடல்கள்

## 1. தாயகத்தை நீ காப்பாய்

*ராகம் : ஷண்முகப் பிரியா*

*நள்ளிரவில் சூரியனை நாம் காணும் நோர்வேயில்*
*நலம் சேர்க்க வீற்றிருக்கும் திருமுருகா*
*வள்ளிதெய்வ யானையுடன் வரம்நல்கும் பாவனையில்*
*வளமாகக் காட்சிதரும் மால்மருகா*
*நள்ளிரவில்..)*

*துள்ளிவரும் வேல்நமது துயர்போக்கும் எனத்துணிந்தோம்*
*தூயவனே சுடர்வேலா துணைவருவாய்*
*புள்ளிமயில் மீதமர்ந்து பூவையர்கள் பாங்கமர*
*பூதலத்தில் நாம்வாழ நலம்தருவாய்*
*நள்ளிரவில்..)*

*சூழ்ந்துவரும் போர்மேகச் சூழலிலே நாம்வருந்தி*
*தூரவந்து நின்றுகொண்டே உடல்மெலிந்தோம்*
*வாழ்ந்துவரும் சூழலிலே வல்லரணாய் நீ இருப்பாய்*
*வரம்தந்து தாயகத்தை நீ காப்பாய்*
*நள்ளிரவில்..)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.கொக்கறுகோ என்று சேவல் கூவுது

*ராகம் - தன்யாசி*

*கொக்கறுகோ என்று சேவல் கூவுது - குமரன்*
*குரைகழலைப் பாட மனம் தாவுது*
*(கொக்கறுகோ.)*
*அக்கணமே வண்ணமயில் ஆடுது - முருகன்*
*ஆறுமுகம் பேசுமொழி நாடுது*
*(கொக்கறுகோ.)*
*பார்புகழும் நோர்வேயாம் நாட்டிலே - நல்ல*
*பண்புடையோர் வாழ்பதிஒஸ் லோவிலே*
*சீர்மிகுநம் வேலவனின் கோவிலில் - சிவ*
*சுப்பிரமணி யன்அருளைப் பொழிகிறான்*
*(கொக்கறுகோ.)*
*ஈழமண்ணில் எங்கள்மனம் ஆடுது - நம்*
*இனத்தவரின் நலம்விரும்பிக் கூடுது*
*வாழவந்த எங்களையும் காத்திடு - நம்*
*மக்களுக்கு வேண்டியதைச் சேர்த்திடு*
*(கொக்கறுகோ.)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. குறிஞ்சி நிலக் குமரன்

ராகம் - சாரங்கா கண்ட நடை

குறிஞ்சிநிலம் எனநினைக்கும் படியாகச் சூழ்ந்த
குன்றுகளின் நடுவினிலே குமரன்தலம் தோன்றும்
அறிவுடையோர் வாழ்பதியாம் நோர்வேயில் ஒஸ்லோ
அதுதான் நம் வேலவனின் ஆறுபடை வீடோ?
குறிஞ்சி

மஞ்சுதவழ் மலைகளிடை மாடமெனக் கோயில்
மனங்கவரும் இயற்கைவளம் மகிழ்வுதரும் சூழல்
குஞ்சரியும் வள்ளியுடன் கூடவரும் குமரா
குளிர்பரவும் மரச் சோலை உளங்கவரும் பதியோ?
குறிஞ்சி

கோபுரம்போல் கூர்மையுடன் வான்நோக்கி உயர்ந்த
குளிர்மரங்கள் உயர்வான மனங்களது குறிப்போ?
பாபமெலாம் பனியாக வழிந்தோடி மறையப்
பளிங்காகும் தூய உளக் குறிப்போஇம் மலைகள்?
குறிஞ்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. காவலுக்கு நின்றாய்

மாம்பழத்தை வேண்டிமனம் மறுகியநம் குமரா
கைலைமலை நீங்கி ஒரு பழனிமலை சென்றாய்
நான் பழுத்த நமதுளத்தை நாடி மனம் வெந்தோ
நாடுவிட்டு நோர்வேயில் பதியமரந்து கொண்டாய்?
மாம்பழத்தை.

ஓஸ்லோவில் அம்ரூட்டின் அப்பலக்கா தீர்த்தம்
ஓங்கியநன் மலைகளிடை உன்னுடைய கோவில்
ஓஸ்லோசிவ சுப்பிரமணி யர்கோவில் என்றால்
உலகெல்லாம் புகழ்வளரும் உன்னதமாம் கோவில்
மாம்பழத்தை.

ஈழமதன் நினைவுடனே எல்லைகளைத் தாண்டி
இங்குவந்து வாழ்கின்றோம் இதயமெலாம் ஏங்கி
வாழும் ஒரு கனவுடனே வந்தவர்கள் நாங்கள்
வழித்துணையாய் வந்தெமது காவலுக்கு நின்றாய்
மாம்பழத்தை.

புதிரான புதுவாழ்வில் புகும்போது முன்னே
புகல்நீயென் றொருநினைவாய் உன்கோயில் வந்தோம்
கதிரமலைக் கந்தனது நினைவுடனே நாளும்
கரம் குவிப்போம் கருணைசெய்வாய் கார்த்திகையின் மைந்தா
மாம்பழத்தை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(நல்லூர்த் திருவிழாக் கச்சேரியில் சங்கீத பூஷணம் திரு எஸ். சிவஞானசேகரம் அவர்கள் பாடியவை)*

## நல்லைக் கந்தன் பாடல்கள்

### 1. மும்மையும் சாந்தி

*ராகம் : பாகேஸ்ரீ*

*பல்லவி*

*தீர்த்த வாரிதியில் திழைத்திடும் வேலா*
*திருவருள் மழைஎம்மேல் பொழிந்திடும் சீலா*
*(தீர்த்த...)*

*அனுபல்லவி*

*கீர்த்தி மிகுந்தஉன் வீரத்தை அறிவோம்*
*கிளையுடன் சூரனைத் தடிந்ததை மறவோம்*
*(தீர்த்த...)*

*சரணங்கள்*

*ஆர்த்தெழும் துயர்களை அழிப்பதுன் கடனே!*
*அடுசமர்க் களத்தென்றும் நிற்பதெம் கடனோ?*
*போர்த்தொழில் நமதெனில் வேல்எடு உடனே*
*புதியதோர் விடியலைத் தந்திடு உடன்நீ!*
*(தீர்த்த...)*

*வெற்றியென் றேசேவற் கொடியினை ஏற்றி*
*வீரமுடன் தேரில் அடுதொழில் ஆற்றி*
*முற்றிலும் பகைகளைந் தருள்மழை தூற்றி*
*மும்மையும் சாந்தியென் றிசைத்திட வா நீ*
*(தீர்த்த...)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. தொல்லைகள் போக்கிட நல்லைக்கு வந்தோம்.

ராகம்: அமிர்தவர்ஷிணி

பல்லவி

அமிர்த வர்ஷிணி அம்பிகை சுதனே
அருள்மழை பொழிந்திடும் ஆறு முகனே
(அமிர்த...)

அனுபல்லவி

அமிர்த வல்லிக்கும் சுந்தர வல்லிக்கும்
அருள்தந்து ஆட்கொண்ட திருமுரு கையனே
(அமிர்த...)

சரணம்

தொல்லைகள் போக்கிட நல்லைக்கு வந்தோம்
இல்லையென் னாதருள் வல்லியின் கணவா
கல்லையும் உருக்கிடும் மெல்லிசை பாடி
ஒல்லையில் வந்தோம் நல்லருள் தாராய்
(அமிர்த...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. பெருவாழ்வின் நிதியே

*ராகம் : சாரங்கா*

*பல்லவி*

*அருள்நல்லைப் பதிமீதில் அமர்கின்ற திருவே*
*அடியார்கள் துயர்தீர்க்கும் சாரங்கன் மருகா*
*(அருள்நல்லைப்.......)*

*அனுபல்லவி*

*பொருள்தேடிப் புகழ்தேடிப் பூவையரை நாடி*
*மருளான இருள்மூழ்கும் மயல்போக்க வந்தோம்*
*(அருள்நல்லைப்.......)*

*சரணம்*

*அருவாகி அருவுருவ நிலையாகி உருவத்*
*திருவாகி இருபுறமும் இருமாதர் மருவ*
*கருவாகி உயிராகி விதியாகிக் கதியாய்*
*வருநல்லை முருகாநம் திருமாலின் மருகா*
*(அருள்நல்லைப்.......)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலேஷியா, ஜோஹூர்பாரு ராஜமாரி கீர்த்தனம்

ராகமாலிகை

**ஆனந்தபைரவி**

**பல்லவி**

ராஜமாரீ உந்தன் பதம் பணிந்தோம் அம்மா
ரட்சித்து நீ எம்மைக் காத்தருள்வாய் தினம்
(ராஜமாரீ உந்தன்)

**அனுபல்லவி**

ராஜகம் பீரமாய் மலேஷியா ஜோஹூரில்
வீற்றிருந் தருள் செய்யும் ***ஆனந்த பைரவி***
(ராஜமாரீ உந்தன்)

**கல்யாணி**

சரணங்கள்

திருவருள் துணையுடன் கிருபழனித் தலைமைத்
திருச்சபைப் பணிகளை மனமுவந் தேற்றனை
விரும்பியுன் ஆலயம் தேடிவந் தே பணி
செய்திடும் பக்தர்கள் திருவுளம் சேர்ந்தனை
(ராஜமாரீ உந்தன்)

ரகுபதி துணையுடன் ராதா கிருஷ்ணனும்
இருபுறம் சாமரம் இரட்டியுன் பணி செய்ய
நாரா யணரொடு ஸ்ரீநி வாசரும்
நயந்துவந் துன்பதம் பணிசெய்யும் ***கல்யாணி***
(ராஜமாரீ உந்தன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரஞ்ஜனி

மலேஷியா சிங்கப்பூர் வாழ்ந்திடும் அடியவர்
வந்து தினம் உந்தன் பாதங்கள் போற்றிட
பாரதம் ஸ்ரீலங்கா வாழ்ந்திடும் அந்தணர்
பக்தியுடன் வந்தே பூஜைகள் சாற்றிட
(ராஜமாரீ உந்தன்)

பஞசவிம் சதிகுண்ட யாகமண் டபத்தினில்
கொஞ்சிடும் ஸ்ரீசக்ர வேதிகை வீற்றிருந்தே
தஞ்சம் புகும் அடியார் உளத்தினில் மேவிடும்
***ரஞ்ஜனி***யே சிவம் பாடிடும் மாரியே
(ராஜமாரீ உந்தன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொங்கல் பாடல்கள் ~ 2012

# 1. வழி பிறக்கக் காணலாம்

### பல்லவி

**தைபி றந்து விட்டது** வழிபி றக்கக் காணலாம்
மெய்வ ருந்தி நாம்உ ழைத்த நற்ப யன்கள் பேணலாம்
(தைபிறந்து.....)

### அனுபல்லவி

செய்தெ ழில்சி றப்பெ னும் சீர்மை யான கொள்கை யால்
தைம கள்பி றக்கும் நாளை மரபி னோடு போற்று வோம்
(தைபிறந்து.....)

### சரணம்

மழைமு டிந்து பனிம றைந்து பகல வனைக் காண்கி றோம்
இளைய வர்கள் புதிய வாழ்வை எண்ணி மனம் பூக்கிறார்
உழவர் தங்கள் உழைப்பி னாலே உலகம் மகிழக் காண்கிறார்
மழலை கள்மு கம்ம லர மங்கையர்ம கிழ்கிறார்
(தைபிறந்து.....)

துன்பம், துயர், நோய்பி ணிகள் தொல்லை ஏழ்மை என்பன
மின்னல் போல இல்லை யாகி இன்பம் என்றும் பொங்குமே
எண்ணி உள்ளம் உரம்அ டைந்து இழப்புகளை மறந்துமே
மண்ணில் நல்ல வாழ்வு நாடி வாழு வோம்எல் லாருமே
(தைபிறந்து.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. வழிநடத்தி வாழ்ந்து பார்!

**பல்லவி**

**பொங்கலோ பொங்கல் பொங்கலோ பொங்கல்**
புவியில் வாழும் மாந்தர் உள்ளம் புத்து ணர்ச்சி யோடு பொங்கப்
(பொங்கலோ....)

**அனுபல்லவி**

தங்கமே தங்கம் தங்கமே தங்கம்
தளர்ச்சி நீங்கி உயர்ச்சி நோக்கி முயற்சியோடு செயற்ப டென்றும்
(பொங்கலோ....)

**சரணம்**

அன்பும் பண்பும் இன்சொ லுடன் யாவரோடும் சேர்ந்து வாழ்
துன்புற் றோரின் துயர்து டைக்க ஊக்க மோடு செயல்புரி
துன்பம் வந்து மோதினாலும் சோர்ந்தி டாத துணிவுடன்
இன்பம் வந்து சேர்ந்த போதும் துள்ளி டாது அமைதி பேண்
(பொங்கலோ....)

இறைப தத்தை எண்ணி வாழ் பெற்றவர்சு கத்தை ஓர்
பெரிய வர்தம் வார்த்தை கேள் பழைமை மீதில் புதுமை காண்
உரிமை நாடிக் கடமை செய் உயர்வு தேடித் தளர்வு தீர்
பெருமை யோடு இளைஞர் தம்மை வழிநடத்தி வாழ்ந்து பார்!
(பொங்கலோ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் கந்தன்
# பள்ளியறைத் திருப்பள்ளி எழுச்சி

*(தினசரி திருவனந்தல் பூஜையில் பாடப்படுவது)*

ஆதவன் கீழ்த்திசை எழுந்தனன் வானில்
அரியபுள் ளின்ஙகளின் இசையொலி கேட்கும்
மாதவம் செய்தவர் வாழ்பதி இணுவில்
மனினிய கந்த, நின் மலர்விழி இதழ்கள்
போதென விரித்தெமை நோக்கிட எழுக
புண்ணியப் பயிர்வளம் செழித்திட வருக
நீதியும் தருமமும் நிலைத்திட உயிர்கள்
நிறைவுடன் வாழ்ந்திட எழுந்தருளாயே!

வள்ளிதெய் வானையின் அணைப்பினில் துயிலும்
வனப்புறு சண்முக நாயக, மாந்தர்
உள்ளமென் பள்ளியில் துயில்கொள்ளும் வேலா
உத்தமர் செயற்றிறம் ஊக்கிடும் பாலா
மெள்ளவுன் விழிமலர் பூத்தெமை நோக்கி
வேண்டிய வரங்களை நல்கிட வருக
கள்ளமில் அடியவர் வாழ்ந்திடும் இணுவில்
கருந்தனமே பள்ளி எழுந்தருளாயே!

ஆணவ இருளினில் துயில்கொளும் ஆன்ம
ஆவினைத் திருவருட் பரிதியின் ஒளியில்
பேணுதல் உனக்குறு பெரும்பணி யன்றோ
பின்னரும் பள்ளியில் துயில்கொளல் நன்றோ?
வாணுதல் வள்ளிதெய் வானையின் பாங்கில்
வளர்துயில் போதும்நம் துயில்கெட வருக!
காணுதல் உன்பதம் எனும்கருத் தோடு
காத்திருப்போம் பள்ளி எழுந்தருளாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் கந்தன் அர்த்தஜாமத் திருவூஞ்சல்

(தினசரி அர்த்தஜாமப் பூஜையில் பாடப்படுவது)

சீராரும் சிதாகாசப் பள்ளி மேவித்
திகழ்வேத நால்வயிரத் தூண்கள் நாட்டி
பேரான சிவாகமங்கள் விட்டமாக
பேரருளின் வடிவான ஊஞ்சல் தன்னில்
ஆராத பத்தியெனும் வடம்தொட் டாட்டி
அகிலமெலாம் ஆனந்த ராகம் பாட
காராளர் நிறை இணுவைக் கந்தா, பள்ளித்
தலம்மேவித் துயில் கொள்ள ஆடீர் ஊஞ்சல்

தமிழ்வளரும் யாழ்ப்பாணக் குடாவில் நல்ல
சைவநெறி தழைத்தோங்கும் இணுவி லூரில்
அமிழ்தான இசைமாந்தி மகிழ்வி னோடு
கலை, கல்வி, கேள்விகளில் வல்லோர் கூடி
“அமுதே செந் தமிழ்த் தேவே அரனே எங்கள்
ஆறுமுகத் தையா”வென் றழைத்துப் பாட
அமிர்தனைய வள்ளியுடன் தேவயானை
அருகமரப் பள்ளியறை ஆடீர் ஊஞ்சல்.

சூரனுடல் வேரறுத்த கோபம் மாறிச்
சுகம் சேரச் சாந்தியுடன் ஊஞ்சல் ஏறி
வாரணிந்த மென்முலையார் அணைப்பில் ஆடி
வளர்துயிலில் மனமகிழும் முருக வேலா
சீரமைந்த நிறைவாழ்வில் உயிர்கள் நீடித்
திருவடிகள் சேரவருள் புரிதல் வேண்டிப்
பேரிணுவில் பதியுறையும் பரம வேலா
பள்ளியறை மேவியினி தாடீர் ஊஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் கந்தன் லாலி

சுந்தர முகத்திளைய சுப்பிர மணிக்கடவுள்
தூயனுக்கு லாலி
சுடர்வேலன் சண்முகன் நம் தூயபதி இணுவையுறை
முருகனுக்கு லாலி
லாலி - சுப லாலி

விந்தைகள் புரிந்தெமது மாந்தர் மன மேடையமர்
வீரனுக்கு லாலி
வினைகள் கடிந்தே விரும்பும் தேவைகள் நிறைவுதரும்
வேந்தனுக்கு லாலி
லாலி - சுப லாலி

பந்தமுறு பாசமிகு வையமதில் வாழ்வு நிதம்
படர்விப்பாய் லாலி
படர்துன்ப வேளைகளில் பக்கத்துணை யாய்வந்து
பாலிப்பாய் லாலி
லாலி - சுப லாலி

முந்திவரு நற்கருணை மூத்துவரப் பந்தமற
முதிர்விப்பாய் லாலி
முருகவென உனதுபத நிழல்கண்டு முத்திநிலை
முகிழ்விப்பாய் லாலி
லாலி - சுப லாலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணுவில் கந்தன் கந்தசட்டி – பாடல்

### 1. கருணை பொங்கும் பெருநாள் ராகமாலிகை

**1. ராகம்: பாகேஸ்ரீ**

கந்தஷஷ்டித் திருநாள் - கந்தன்
கருணை பொங்கும் பெருநாள் (கந்த ஷஷ்டி.......)

இந்த உலகில் நாமே - தேவ
லோகம் காணும் அருநாள் (கந்த ஷஷ்டி.......)

**2. ராகம்: நாதநாமக்கிரியா**

எந்த உணவும் உண்ணா - விரதம்
ஏற்கும் அடியர் நித்தம்
கந்தக் கனியை உண்ண - ஏங்கி
கடுந்த வங்கள் புரிவார்
கந்தன் வீதி தன்னில் - அங்கம்
படிய உருளுவார்கள்
முந்தி அடியளந்தே - மாதர்
முருகன் பாதம் காண்பார். (கந்த ஷஷ்டி.......)

**3. ராகம்: சஹானா**

எந்த நினைவும் இல்லார் - கந்தன்
நினைவில் இதயம் நனைவார்
கந்தஷஷ்டி கவசம் - வாயில்
தவழ நடைகள் பயில்வார்
வந்து இணுவில் பதியில் - வசந்த
மண்டபத்தை நாடி
முந்தி அமர்ந்து கொண்டால் - அடியர்
சொர்க்க லோகம் காண்பார். (கந்த ஷஷ்டி.......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. ராகம்: தர்பார்

மந்த ஹாசம் பொலியக் - கந்தன்
மாதர் இருவருடனே
சிந்தும் ஒளியில் மூழ்கிச் - சிரித்தே
சிந்தை கவர நிற்பான்
இந்த உலகில் காணும் - மலர்கள்
யாவும் அங்கு காண
சிந்தும் வண்ண அழகில் - காட்சி
பொலிதல் கூறத் தகுமோ? (கந்த ஷஷ்டி.......)

## 4. ராகம்: காபி

நாளும் நாத வெள்ளம் - பொலியக்
கந்தன் வீற்றிருந்தே
சூழும் தூபம் கமழ - சுகமாய்
அபிஷேகங்கள் ஏற்பார்
நீளும் மந்திரத்தின் - இணைவில்
வில்வம் பாதம் சேர
சூழும் அந்தணர்கள் - அறுவர்
அர்ச்சனைகள் புரிவார் (கந்த ஷஷ்டி.......)

## 5. ராகம்: மத்யமாவதி

யாக மண்ட பத்தில் - வேத
மந்திரம் முழங்க
ஆகமங்கள் கூறும் - விதியில்
அரிய பூஜை நிகழும்
ஏகனைப் புகழ்ந்தே - பண்ணின்
திருமுறைகள் பொலியும்
போகம் என்ன வேண்டும்? - கந்தன்
பாதம் காணல் போதும் (கந்த ஷஷ்டி.......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. இன்னல்கள் நீக்கிடுவாய்

### பல்லவி

இன்னல்கள் நீக்கிடுவாய் இணுவில் கந்தா - எங்கள்
ஏற்றம்மிகு வாழ்வின் இலட்சியம் நீ அன்றோ (இன்னல்......)

### அனுபல்லவி

பொன்னான கந்தஷஷ்டிப் பொழுதெல்லாம் உன்னோடுதான்
எந்நேரமும் சண்முகர் சந்நிதியில் இருப்போம் (இன்னல்......)

### சரணங்கள்

எந்த உணவும் உண்ணா விரதம் இருக்கும் அன்பர்
கந்தக் கனியை உண்ணக் கடுந்தவங்கள் புரிவார்
கந்தன் உன் வீதி தன்னில் பிரதட்சணங்கள் செய்வார்
முந்தி அடி அளந்தே மங்கையர் உனைத் துதிப்பார் (இன்னல்......)

எந்த நினைவும் இல்லார் ஆறுமுகம் நினைவார்
கந்தஷஷ்டி கவசம் வாயில் பயின்றிடுவார்
வந்து இணுவில் பதி வசந்தமண் டபத்தருகே
முந்தி அமர்ந்துகொண்டே சொர்க்கலோகம்காண்பார் (இன்னல்......)

மந்த ஹாசம் பொலிய மாதர் இருவருடன்
சிந்தும் ஒளியில் மூழ்கிச் சிந்தை கவர நிற்பான்
இந்த உலகின் எழில் யாவும் எம் சண்முகனே
சிந்தும் அழகினிலே இணுவைக் கந்தன் பொலிவான் (இன்னல்......)

நாளுமே நாதவெள்ளம் வாத்தியங்கள் பொலியும்
சூழும்நற் தூபம் கமழ அபிஷேகங்கள் நிகழும்
நீளும் மந்திர ஒலியில் வில்வம் உன் பதம் சேர
சூழும்அந் தணர் அறுவர் அறுமுகனை அர்ச்சிப்பர் (இன்னல்......)

யாகமண் டபத்தில் வேத மந்திரங்கள் முழங்க
ஆகம விதிமுறையில் அற்புதப் பூஜை ஏற்றே
ஏகன் அநேகன் எங்கள் இணுவில் கந்தன் பதங்கள்
மோகமெலாம் போக்கி முத்தி நலம் அருளும் (இன்னல்......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. ஆனந்தம் நல்குவாய்.

இராகம் பாகேஶ்ரீ

பல்லவி

தினம் தினம் புதுப்புது பொலிவுடன் காண்கிறோம்
புனைந்திடும் உனதரும் அழகினில் வாழ்கிறோம்

அனுபல்லவி

வனம் தனில் வள்ளியைக் கவர்ந்தது போலெங்கள்
மனம் தனைக் கவர்ந்திட வருகின்ற போதிலே

சரணம்

இணுவைப் பதியுறை எழில்முரு காஉன்னை
அணுகிக் குறையிரப்போர் ஆயிரம் ஆயிரம்
பிணிதவிர்க்கும் விளா வைரவர் துணையுடன்
அணைந்தவர் குறைதவிர்த் தானந்தம் நல்குவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேண்டியன தான் கொடுக்கும் வேலன்

இணுவில் கந்தன் காவடிச் சிந்து

வேண்டியன தான்கொடுக்கும் வேலன் - அவன்
வேதனைகள் திர்க்குமொரு சீலன் - நல்ல
வேழமுகன் தம்பிகும ரேசனவன் பார்வதியின்
சிந்தையிலே தானினிக்கும் பாலன்.

காண்பவர்கள் சிந்தைகவர் மாலன் - தன்னுள்
கண்டுணர்ந்த கன்னி வள்ளி லோலன் - எங்கும்
காணுமிந்த வையகத்தின் காட்சிகளின் சாட்சி இந்த
கந்தன் எனும் முந்து சிவ மூலன்.
வேண்டியன .........

சூரனுடல் தான்கிழித்த வீரன் - அவன்
சுந்தரத்தெய் வானைவேலைக் காரன் - நம்மைச்
சூழும் துயர் சுற்றிவரும் வேளைவந்து வேலெடுக்கும்
சுப்ரமணி யப்பெயர்கொள் தீரன்.

ஆரணங்கள் போற்றுமருட் கீரன் - உயர்
சங்கரனார்க் கோதுநற்கு மாரன் - நம்மைச்
சூழ்பகையைக் கண்டுமனம் தானிரங்கி வேலெடுத்துச்
சுற்றிநின்று போர்தொடுக்கும் சூரன்
வேண்டியன ......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்வமுடன் தேடிவந்த தீரன் - இணுவில்
எனும் பதியில் தானமர்ந்த ஊரன் - இன்று
நாடு விட்டு நாடுசென்றும் தங்கள் உள்ளக் கோயிலிலே
என்றும் நினை வார்கள்சொந்தக் காரன்.

பேரெழலின் மிக்க அருள் மாரன் - வள்ளி
சிந்தையினைத் தான்கவர்ந்த சோரன் - இணுவில்
ஊரில் வந்து பாவில்மனம் தான்குளிரும் நல்ல சிவ
சுப்பிரம ணியர் எனும் பேரன்.

வேண்டியன ...........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய கல்யாணப் பாடல்கள் சில

### 1. மாலை சாற்றினாள்...

ராகம் : பெஹாக்

*மாலை சாற்றினாள் கோதை மாலை மாற்றினாள்*
*மங்கை சிவ காமிநட ராஜனுடன் மனமகிழ்வாய்*
*மாலை சாற்றினாள்*

*மாலை வானம் போல நாணம் வதனமெங்கும் வண்ணம் பூச*
*மங்கைகரம் பூங்கொடியாய் மலர்மாலை தாங்கிவர*
*நீலவண்ணக் கண்ணன்முன்பு ராதை வந்து நின்றதுபோல்*
*நித்யசுப மங்கலமாய் நீளும் இன்ப வாழ்வினுக்காய்*
*மாலை சாற்றினாள்*

*நாதமழை பொழிய அன்பர் நாவினிக்க வாழ்த்துரைக்க*
*நங்கையர்கள் பூச்சொரிய மழலையர்புன் னகைவிரிக்க*
*வேதமழை கோஷமிட வெண்புகையும் சூழ்ந்திருக்க*
*விநயமுடன் கால்கள் பின்னக் கண்கள் மின்னக் கன்னிகையாள்*
*மாலை சாற்றினாள*

### 2. மங்கலப் பாடல்

ராகம் : சிந்துபைரவி

*வேலன் விழிகள் என்னை வேலாய் வருத்துதடி*
*விம்மிதமாய் ஏதோ இதயம் நிரப்புதடி (வேலன்...)*

*கோல அழகுதனைக் காண மனம் நினைக்கும்*
*கூட வரும் நாணம் மாதென் உளம் நனைக்கும் (வேலன்....)*

*ஓமப் புகை கமழும் உதட்டில் நகை தவழும்*
*உடையவர் கரங்கள் பற்றி ஏழடி எடுத்து வைக்கும்*
*சேமக் கரங்கள் பற்றித் தீவலம் வரும் பொழுதில்*
*தேவதேவியர் மகிழ்ந்தே வாழ்கென வாழ்த்தி நிற்பர்*
*(வேலன்...*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. லாலி...

ராகம் : நீலாம்பரி

*சந்ததமும் நல்லவழி காட்டுமருள் கணபதியின்*
*பாதங்கட்கு லாலி*
*சதுர்மறையின் நாயகனாம் சங்கரரின் பொற்பாத*
*கமலங்கட்கு லாலி*

*செந்தமிழின் வேலனுக்குச் செல்வியரின் லோலனுக்குப்*
*பாலனுக்கு லாலி*
*செந்திருவின் செழுங்கமலத் திருப்பாத இணைகளுக்கும்*
*சீரான லாலி*

*முந்து தமிழ் மாலையினைச் சந்தமுடன் சாற்றிவர*
*மூவுலகும் லாலி*
*முழுநிலவின் குழுமையுடன் மணமக்கள் வாழ்க்கையிலே*
*தினமும் லாலி*

## 4. நலுங்கிட வாருங்கள்....

ராகம் : ஹிந்தோளம்

*நலுங்கிட வாருங்கள் நாயகரே - இங்கு*
*நலுங்கிட வாருங்கள் நாயகரே*

*நலுங்கிட*

*சலங்கை குலுங்கிட வளைகள் கிலுங்கிட*
*சரசரவென்றுபட் டாடைகள் ஒலித்திட*

*நலுங்கிட*

*சுகந்தசந் தனத்தினைச் சுந்தரமாய்ப் பூசிச்*
*சுவையான கதைபேசிப் பாட்டுக்கள் பாடிட*
*வசந்தங்கள் வாழ்த்திட வண்டினம் பாடிட*
*வாழிஎன்றே அங்கு வந்தவர் வாழ்த்திட*

*நலுங்கிட*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. பொன்னூஞ்சல் ஆடீர்......

ராகம் : ஆனந்தபைரவி

பொன்மகளே பூமணக்கப் பொன்னூஞ்சல் ஆடீர்
மன்மதனும் ரதி போல மகிழந்தூஞ்சல் ஆடீர்
அன்புடனே மைத்துனிகள் ஆதரவாய் வடம் தழுவ
இன்பமுறு பாடலிசை ஏழிசையில் இசைந்தொலிப்ப
பொன்மகளே....

தென்றல்வந்து தாலாட்டத் தேனீக்கள் ஸ்ருதி கூட்ட
இன்றுமுதல் இன்பமென ஏழுலகம் வாழ்த்துரைக்க
கன்னலுடன் தேன்சுவையும் கடிமணமும் மனம் நிரம்ப
அன்புமிகு இல்லறத்தில் அடியெடுத்து ஆடுகவே
பொன்மகளே....

மருமகனார் பாதங்களில் மாலவனைக் கண்டு மகள்
திருவாகும் நினைவுடனே நீராட்டும் செழுமை இது
பாலாலே கால்கழுவிப் பட்டாலே அதைத் துடைத்து
மேலான சந்தனமும் சாத்திடவே லாலி
பொன்மகளே....

மங்கலம்செய் தேங்காயும் மாமிகரம் கொடுத்திருப்ப
பங்கயப் பொன் முகமலரில் பைந்தமிழின் முறுவல்வர
செங்கரங்கள் சிலிர்த்திருப்ப செங்கயல்கள் துடிதுடிப்ப
மங்கைகரம் மாலவனார் பற்றிவர லாலி
பொன்மகளே....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

# இறையும் நானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊஞ்சற் பாடல்கள் – (பக் 164 முதல்

143. தென்மராட்சி - மறவன்புலோ சேதுகாவலப் பிள்ளையார்
- 2011

144. இளவாலை, கல்லூரி வீதி பேச்சியம்மன்
- 2010

145. நோர்வே ஒஸ்லோ பதி அருள்மிகு
ஸ்ரீ ஜெயதுர்க்கை அம்மன்

146 அனலைதீவு மேற்கு, சீத்தாசல்லி அருள்மிகு பூதேவி
ஸ்ரீதேவி சமேத ஸ்ரீ மஹாவிஷ்ணு - 2008

147. ஹங்வல்ல தோட்டம் ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன்
- 2008

148. இளவாலை, மாவடி ஞானவைரவர்
- 2013

149. தென்கோவை - மாந்தோப்பு ஸ்ரீ மஹாமாரி அம்மன்
- 2008

150. யாழ். வடமராட்சி, தென்புலோலி, அருள்மிகு
மூச்சன்புலோ சிவன்

151. நீர்வேலி வாய்க்காற்றரவை மூத்த விநாயகர்
தேவஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் விசாலாக்ஷி
அம்பாள் சமேத விஸ்வநாதப் பெருமான் - 2008

152. நீர்வேலி வாய்க்காற்றரவை மூத்த விநாயகர்
தேவஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும்
வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியப் பெருமான்
- 2014

153. நீர்வேலி தெற்கு ஸ்ரீ வீரபத்ர சுவாமி
- 2011

154. புன்னாலைக்கட்டுவன், கடவத்துறை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி
அம்பாள் - 2014

155. கண்டி, புசல்லாவ, புதிய மெல்போட் தோட்டம் ஸ்ரீ
முத்துமாரி அம்பிகை - 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

156. புத்தூர் கிழக்கு, மீசாலை வீதி, திருவருள்மிகு கருகப்பை
ஈஸ்வரன் (அண்ணமார்) என அழைக்கப்படும்
ஜெகதாம்பிகை சமேத வேதபுரீஸ்வரர் - 2012

157. புத்தூர், மணற்பகுதி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள்
- 2003

158. புத்தூர் கிழக்கு, குமாரசாமி வீதி, குருநாத சுவாமி
- 2004

159. புத்தூர், வாதரவத்தை வேலங்காட்டு இயமாவில்
துர்க்கையம்மன் - 2007

160. வேலம்பிராய் கண்ணகை அம்மன் என வழங்கும்
சிவகாமி அம்பிகை

161. சங்கானை, குடுபனை ஞானவைரவர் 2016

162. கோண்டாவில் வடக்கு அன்னுங்கை ஸ்ரீ சிவபூதவராயர்
- 2000

163. புத்தூர், மணற்பகுதி, ஆலடி முருகன்
- 2001

164. உடுப்பிட்டி வடக்கு, கம்பர்மலை பெரியதம்பிரான்
- 2002

165. புத்தூர், வாதரவத்தை கேதுவுப் பிள்ளையார்
- 2005

166. ஊவா மாகாணம், பண்டாரவளை, சேனநாயக்க
மாவத்தை அருள்மிகு பத்திரகாளியம்மன்
- 2005

167. கைதடி விநாயகர் தேவஸ்தானத்தில் கோவில்கொண்டு
எழுந்தருளியிருக்கும் பர்வதவர்த்தனி அம்பாள் சமேத
இராமலிங்கேஸ்வரர் - 2005

168. மாவைச் சித்தி விநாயகர் 2016

169. மாவை முத்துமாரி 2016

**(162 முதல் 169 வரையான பாடல்கள் இந்நூலில் இடம்பெறவில்லை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்மராட்சி – மறவன்புலோ
## சேதுகாவலப் பிள்ளையார் ஊஞ்சற் பதிகம்

### காப்பு

மருதநிலம் சூழ்மறவன் புலோவெனும்நற் பதியில்
மாறாத கருணையுடன் வீற்றிருக்கும் செல்வத்
திருவருளின் குணநிதியாம் சேதுவெனும் பெயரால்
காவலனாய் வீற்றிருக்கும் கணபதியின் பேரில்
அருமைமிகும் திருவூஞ்சல் பாடவரும் பொழுது
அத்திமுகா அருள்புரிவாய் அருகிருந்து காப்பாய்
குருவருளும் துணையிருக்கத் திருவூஞ்சல் சிறந்தே
கூடிவரும் பெருமையிலே மகிழ்ந்திடவே அருள்வாய்.

### ஊஞ்சல்

சீராரும் பசுஞ்சாணம் பன்னீரில் சேர்த்துச்
சிவநாமம் உச்சரித்துச் செப்பமுற மெழுகி
நேரான மணிவைரத் தூண்நிறுத்தி விட்டம்
நெறிமுறையில் அதில் பொருத்தி நீள்கயிறும் மாட்டி
ஆராத பக்தியுடன் அலங்கரித்துப் பலகை
அழகுபெற அமைத்ததன்மேல் நவரத்ன பீடம்
ஊரார்கள் அனைவருமே உவந்தினிது சேர்த்தோம்
உத்தமனே எழுந்தருளி ஊஞ்சலினிதாடீர். 1

பளபளக்கும் பட்டுகளை விரித்தழகு பார்த்து
பாசமுடன் பக்கலிலே திண்டும் அதில் சேர்த்து
தளதளக்கும் அறுகுதனில் சரம்தொடுத்து நீட்டித்
தனித்தனியே தொங்கவிட்டுப் பந்தலதில் மாட்டி
உளம்மகிழத் தூபமிட்டு வாசனைகள் ஊக்கி
ஓங்கார ஒலியெழுப்பி அசைக்கின்றோம் ஊஞ்சல்
வளம்சேரும் **மறவன்புலோ வாழ்சேது காவல்**
**வரசித்தி விநாயகரே ஊஞ்சலினிதாடீர் 2**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயிலைமலை நாதனொரு பாலிருந்து நோக்கக்
கமலமுகம் மலரமலை மகளதனைப் பார்க்க
மயிலுடனே மால்மருகன் மகிழ்ந்தினிது ஆட
வள்ளிதெய்வ யானையுமே அருகினிலே கூட
வயிரவரும் வீரபத்ரர் வந்தருகில் சேர
வந்தனைசெய்தே திருமால் இலக்குமியும் சேர
வயல்நிறையும் **மறவன்புலோ வாழ்சேது காவல்**
**வரசித்தி விநாயகரே ஊஞ்சலினிதாடீர் 3**

தென்றல் வந்து தாலாட்ட நிலவுமுகம் காட்டத்
தேன்வண்டு சுதிசேர்க்க அரம்பையர்கள் பாட
மன்றினிலே தேவரெலாம் மகிழ்வுடனே கூட
மணியொலிக்க மத்தளமும் வீணையிசை சேர
இன்னிசையை நாதஸ்வரம் தவில் இணைந்து சேர்க்க
எங்கணுமே பக்திநலம் சிறந்திடவே காக்கும்
மன்னவராம் **மறவன்புலோ வாழ்சேது காவல்**
**வரசித்தி விநாயகரே ஊஞ்சலினிதாடீர் 4**

வாணியுடன் இலக்குமியும் மகிழ்வுடனே வந்து
வடம்பிடிக்க நந்தியுமே மத்தளமும் கொட்ட
பேணிவரும் ஏழிசையை வீணையிலே மீட்டப்
பெருமையுடன் தும்புருவும் நாரதரும் சேர
வேணுதனில் கானமிடும் கண்ணனுமே வந்து
விரும்பி இசை கூட்டிடவே நம்பதியில் என்றும்
தாணுவென **மறவன்புலோ வாழ்சேது காவல்**
**வரசித்தி விநாயகரே ஊஞ்சலினிதாடீர் 5**

நெற்கதிர்கள் சலசலக்க நிரை நிரையாய் மந்தை
நிறைவுடனே கலகலக்க நேர்மையுடன் வாழும்
பற்றுடைய உழவர்நிறை பாங்குடைய ஊரில்
பழைமைமிகு திருத்தலத்தில் அமர்ந்தினிது மாந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றதுயர் போக்கி அவர் உளம் மகிழ என்றும்
உயர்நலங்கள் அருளுகின்ற உமைமகனே ஈசா
தற்பரனே **மறவன்புலோ வாழ்சேது காவல்**
**வரசித்தி விநாயகரே ஊஞ்சலினிதாடீர் 6**

கைதடியின் வீரகத்தி விநாயகரின் பேரில்
கனவிருப்புக் கொண்டவராம் **கந்தையா** என்னும்
செய்தவத்துப் பெருந்தகையார் மணியகாரர் இங்கு
சிறப்புடனே தாபித்தார் சீருடனே நாளும்
பொய்மையிலா வேளாண்மைத் தொழிலுடையோர் வாழ்வில்
புதுமைகளை நீ நடத்திப் புகழடைந்தாய் நாதா
ஐங்கரனே **மறவன்புலோ வாழ்சேது காவல்**
**வரசித்தி விநாயகரே ஊஞ்சலினிதாடீர் 7**

வாரணமு கத்தவனே வளரூஞ்சல் ஆடீர்
வந்தனைகள் செய்கின்றோம் மகிழ்ந்தினிதே ஆடீர்
ஆரணத்தின் உட்பொருளே ஊஞ்சலினிதாடீர்
அம்பிகையின் பாலகனே ஊஞ்சலினிதாடீர்
பாரதத்தை எழுதியநற் பரம்பொருளே ஆடீர்
பார்முழுதும் உனதடக்கம் பரிவுடனே ஆடீர்
சீருடனே **மறவன்புலோ வாழ்சேது காவல்**
**வரசித்தி விநாயகரே ஊஞ்சலினிதாடீர் 8**

மாங்கனியை வென்றவரே ஊஞ்லினிதாடீர்
மறைபொருளின் நாயகரே ஊஞ்சலினிதாடீர்
காங்கேயன் குமரனுக்கு மூத்தவரே ஆடீர்
கனிவுடனே ஒளவைக்கருள் செய்தவரே ஆடீர்
தீங்குகளை வேருடனே சாய்ப்பவரே ஆடீர்
சிவமைந்தா திருவூஞ்சல் மீதமர்ந்தே ஆடீர்
பாங்குடனே **மறவன்புலோ வாழ்சேது காவல்**
**வரசித்தி விநாயகரே ஊஞ்சலினிதாடீர் 9**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயமுகனை வென்றவரே ஆடீர் ஆடீர்
        கரிமுகனே கணபதியே ஆடீர் ஆடீர்
தயவுடைய தற்பரனே ஆடீர் ஆடீர்
        வல்லபையின் நாயகனே ஆடீர் ஆடீர்
உயர்வருளும் உத்தமனே ஆடீர் ஆடீர்
        உலகினுக்கு முதற்பொருளே ஆடீர் ஆடீர்
வயல்நிறையும் **மறவன்புலோ வாழ்சேது காவல்**
        **வரசித்தி விநாயகரே ஊஞ்சலினிதாடீர்** 10

கருணைமிகும் கணபதியே வாழி வாழி
        கருத்தினிலே நிறைந்தவனே வாழி வாழி
அருள்தருவாய் ஐங்கரனே வாழி வாழி
        அகிலமெலாம் காத்திடுவாய் வாழி வாழி
வருமடியார் வேண்டுவதை அருள்வாய் வாழி
        வளர்புகழோ டென்னாளும் வாழி வாழி
விருப்புடனே **மறவன்புலோ வாழ்சேது காவல்**
        **வரசித்தி விநாயகரே வாழி வாழி**

## எச்சரீக்கை

**மறவன்புலோப் பதிவாழ்** எங்கள் மணியே எச்சரீக்கை
        மதிசூடிய சிவனார் அருள் பாலா எச்சரீக்கை
அறமேபுரி அடியார்மனம் நிறைவாய் எச்சரீக்கை
        அரியோடயன் பணிவானவர் தலைவா எச்சரீக்கை
குறமாதினைக் குகன்பாதத்தில் சேர்த்தாய் எச்சரீக்கை
        குறையேதினி நமக்கே எனக் குளிர்வோம் எச்சரீக்கை
அறவா தில்லை நடராசனின் மகனே எச்சரீக்கை
        அடியார் புகழ்பாடிட மகிழ்வாய் எச்சரீக்கை

## *லாலி*

*பற்றுடனே வழிபடும்நல் மக்களுக்கு நலமருள்வாய்*
        *லாலி லாலி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றவரும் பாமரரும் கசிந்துருகி வேண்டிநிற்கக்
லாலி லாலி
உற்றதுணை நீயெனவே உலகமெலாம் அரவணைப்பாய்
லாலி லாலி
சுற்றிவரும் பகைவிலக்கித் தூயவரைக் காத்தருள்க
லாலி லாலி

## பராக்கு

**மறவன்புலோப் பதியமர்ந்தாய்** அருள்வாய் பராக்கு
அடியாரின் துயர்போக்க வருவாய் பராக்கு
அறுபகைகள் போக்கி உளம் நிறைவாய் பராக்கு
ஆனந்தக் கருணைவடி வானாய் பராக்கு
உறுதுயர்கள் போக்கவந்த எழிலே பராக்கு
உமை சிவனின் முதற்புதல்வா உயர்வாய் பராக்கு
நறுமலர்கள் தினமெடுத்துத் துதிப்போம் பராக்கு
நாயகனே நற்பரனே கணபதியே பராக்கு

## மங்களம்

தந்திமுக நாயகர்க்கு மங்களம் - அவர்
தனித்துணையாம் வல்லபைக்கு மங்களம்
வந்தருளும் பார்வதிக்கு மங்களம் - அவர்
பதியாம்பர மேஸ்வரர்க்கு மங்களம்
முந்திவரு முருகனுக்கு மங்களம் - அவர்
முத்தான துணைவியர்க்கும் மங்களம்
செந்திருவாம் இலக்குமிக்கு மங்களம் - அவர்
திருவுடைய மாயவர்க்கு மங்களம்
சந்தமுறு துர்க்கையுக்கும் மங்களம் - எங்கள்
சரஸ்வதிக்கும் சாஸ்தாவுக்கும் மங்களம்
வந்தமரும் வைரவர்க்கு மங்களம் - தினம்
வழிபடுவோர் யாவருக்கும் மங்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளவாலை, கல்லூரி வீதி பேச்சியம்மன் மீது

# திருவூஞ்சல் பாடல்கள்

### காப்பு

*சீராரும்* ***இளவாலைத்*** *திருவூரில் எழிலோடு*
*பாராள வீற்றிருக்கும்* ***பேச்சியம்மன்*** *- பேராலே*
*திருவூஞ்சல் பாடக் கணபதியே வந்தெனது*
*திருவுளத்தில் நீயருளைத் தா*

### நூல்

*நாற்பாதம் நான்குதிசைக் கால்க ளாக*
*நடுவினிலே ஆகமங்கள் விட்ட மாக*
*மேற்கட்டி பிரணவமாய் மிளிர்ந்து தோன்ற*
*மிகுசைவத் துறைகளெல்லாம் கயிற தாக*
*ஊற்றான வேதங்கள் பலகை யாக*
*உயர்தர்ம சாஸ்திரங்கள் வடமாய்த் தொட்டு*
*போற்றிவரும் எழுமாதர் இசைந்தே ஆட்ட*
***இளவாலைப் பேச்சியம்மா ஆடீர் ஊஞ்சல்*** *1*

*கீரிமலைக் கடல்காற்றுக் கிளர்ந்து வீச*
*கிரிவாசர் நகுலேசர் ஆசி கூற*
*பாரினிலே ஈழமெனும் அழகு நாட்டில்*
*பக்கமெலாம் சோலைகளும் வயலும் சூழ*
*ஊரவரும் உவப்போடு உருகிப் பாட*
*உவகையுடன் குழவியினை மடியில் சேர்த்துப்*
*பாராளும் அம்பிகையே ஊஞ்சல் வைகி*
***இளவாலைப் பேச்சியம்மா ஆடீர் ஊஞ்சல்*** *2*

*கமலையுடன் வாணியிரு மருங்கு சார்ந்து*
*கவரியினை அருமையுடன் பணிந்து வீச*
*தமதிருபூங் கரம்சேர்த்துக் கந்தன் தாளம்*
*தான்போடக் கணபதியும் நடனம் ஆட*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமதிருகண் போதாதிக் காட்சி காண
எனத்தேவர் குழாம்எண்ணிக் குளிர்ந்து நோக்க
அமரர்புகழ் அம்பிகையே தாயே எங்கள்
**இளவாலைப் பேச்சியம்மா ஆடீர் ஊஞ்சல்** *3*

அந்தணர்கள் அவிசொரிந்தே வேள்வி வேட்டு
அருமறைகள் ஓதிவர மகிழ்வி னோடு
புந்தியிலே புத்துணர்வும் புதிய வீரப்
பொலிவுதரும் புகழ்வாழ்வும் நல்கும் தேவீ
சிந்தையிலே உனை இருத்திச் சிரங்கள் தாழ்த்திச்
சிறுமதியால் புகழ்பாடித் துதிக்கின் றோம்நாம்
விந்தைமிகு தாயேநாம் ஊஞ்சல் பாட
**இளவாலைப் பேச்சியம்மா ஆடீர் ஊஞ்சல்** *4*

புதுமைமிகும் **இளவாலைப் பதி**யில் மிக்க
புகழ்சேரும் **கல்லூரி வீதி** நாடி
கதியெமக்கு நீயேயன் றமர்ந்த தாயே
கதிர்நீயே ஒளிவீசிக் காப்பாயம்மா
கதிர்பொலியும் வயல்சூழும் மருதம் சேர
கவினுறவே வீற்றிருந்தாய் குழந்தையோடு
எதுவரினும் உனதுபதம் துணையாய் நிற்கும்
**இளவாலைப் பேச்சியம்மா ஆடீர் ஊஞ்சல்** *5*

பேச்சியெனும் பெருந்தலைவீ ஆடீர் ஊஞ்சல்
பிள்ளையினைப் போலணைந்தோம் ஆடீர் ஊஞ்சல்
ஆச்சிளம தன்னையும் நீ ஆடீர் ஊஞ்சல்
அண்டியவர்க் கபயமும் நீ ஆடீர் ஊஞ்சல்
மாற்சரியப் பகைவிலக்கி ஆடீர் ஊஞ்சல்
மாயவிளை யாட்டருளி ஆடீர் ஊஞ்சல்
போற்றியுனைப் பாடுகிறோம் ஆடீர் ஊஞ்சல்
**இளவாலைப் பேச்சியம்மா ஆடீர் ஊஞ்சல்** *6*

தூயவளே **பேச்சியம்மா** ஆடீர்ஊஞ்சல்
சுடர்க்கொடியே துயர்களைவாய் ஆடீர்ஊஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயவளே பெருந்தலைவீ ஆடீர்ஊஞ்சல்
தாரணியின் தனித்துணைவீ ஆடீர்ஊஞ்சல்
மாயமிகு மடப்பிடியே ஆடீர்ஊஞ்சல்
மங்கையர்தம் குலவிளக்கே ஆடீர்ஊஞ்சல்
நேயமிகு நங்கையினி தாடீர் ஊஞ்சல்
**இளவாலைப் பேச்சியம்மா ஆடீர் ஊஞ்சல்** 7

எத்திசையும் விளங்குமொரு ஒளியாய்த் தோன்றி
இசைவுடனே எழில் வடிவம் தான்மறைத்துக்
குத்துவிளக் காய்நமது கோயில் வைகிக்
கருவறையில் காட்சிதந்தாய் முன்பு நீயும்
சித்தமெலாம் நீ நிறைந்த காரணத்தால்
திருவடிவம் உனக்கமைத்தோம் தாயாய் வந்தாய்
எத்திசையும் போற்றுமருள் அன்னை நீயே
**இளவாலைப் பேச்சியம்மா ஆடீர் ஊஞ்சல்** 8

பாசமொரு கரந்தனிலே ஆட ஆட
அங்குசமும் மறுகரத்தில் ஆட ஆட
நேசமுடன் ஏந்தியநற் குழந்தை ஆட
எழில்திகழும் கருங்கூந்தல் புரண்டே ஆட
வாசமுறும் மலர்மாலை கழுத்தில் ஆட
வட்டவிழிக் கெண்டைகளும் ஆட ஆட
தேசுறுநல் லமுதனைய எங்கள் அன்னாய்
**இளவாலைப் பேச்சியம்மா ஆடீர் ஊஞ்சல்** 9

## வாழி விருத்தம்

எம்பெருமான் கணபதியும் வாழி வாழி
**இளவாலைப் பேச்சியம்மை** வாழி வாழி
அம்மையுடன் அரன்அருளும் வாழி வாழி
அருள்பெருகும் கந்தனுமே வாழி வாழி
செம்மையுடன் காவல்செயும் க்ஷேத்ர பால
வைரவரும் மனம்கனிந்து வாழிவாழி
இம்மையுடன் மறுமையுமே இனிமை தங்க
**இளவாலைத் திருவடியார்** வாழி வாழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோர்வே ஒஸ்லோ பதி அருள்மிகு ஸ்ரீ ஜெயதுர்க்கை அம்மன் திருவூஞ்சல் பாடல்கள்

காப்பு

சீராரும் **நோர்வே**யில் சிறப்புக்கள் சேரும்
திருவுடைய கயிலைமலை நிகர்பனிசூழ் மலைகள்
ஏராளம் காண்கின்ற **ஒஸ்லோ** என்றோதும்
உயர்நகரில் உவப்போடு குடியேறி வாழும்
ஆராத பக்திமிகும் அடியார்கள் வேண்ட
அன்போடு வந்தமரும் **துர்க்கை அம்மன்**மீது
பேரான ஊஞ்சலிசை இனிதமைத்துப் பாட
பேரருளைத் தந்திடுக கணபதியே வருக!

நூல்

சுருதியெனும் நால்வேதம் கால்களாகத்
தூயதமிழ்த் திருமுறைகள் விட்டமாக
அருமைமிகும் ஆகமங்கள் கயிறதாக
அற்புதநற் புராணமெனும் பலகை மீது
பெருமைமிகும் பிரணவத்துப் பீடம் ஏறிப்
பிறவியெனும் நோய்தீர்க்கும் மருந்தாய் வந்த
திருவுடைய **நோர்வேயில் ஒஸ்லோ மேவும்**
**ஜெயதுர்க்கை அம்மை இனி தாடீர் ஊஞ்சல்.1**

கமலையுடன் வாணியிரு மருங்கு சார்ந்து
கவரியினை அருமையுடன் பணிந்து வீச
தமதிருபூங் கரம்சேர்த்துக் கந்தன் தாளம்
தான்போடக் கணபதியும் நடனம் ஆட
எமதிருகண் போதாதிக் காட்சி காண
எனத்தேவர் குழாம்எண்ணிக் குளிர்ந்து நோக்க
அமரர்புகழ் **நோர்வேயில் ஒஸ்லோ மேவும்**
**ஜெயதுர்க்கை அம்மை இனி தாடீர் ஊஞ்சல். 2**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிமயக்கம் கொண்ட**மகி ஷாசுரன்தன்**
**மயக்கறுத்த** மதியுடையாய் ஆடீர் ஊஞ்சல்
புதுமையுடன் சும்பநிசும் பர்கள்மாளப்
போர்நடத்தும் புகழுடையாய் ஆடீர் ஊஞ்சல்
மதுகைட பர்களினை மாய்த்த தேவி
மாயவினை போக்கியினி தாடீர் ஊஞ்சல்
புதுமைமிகு **நோர்வேயில் ஒஸ்லோ மேவும்**
**ஜெயதுர்க்கை அம்மை இனி தாடீர் ஊஞ்சல். 3**

மில்லேனியம் ஆண்டதனில் வருகை தந்தாய்
விஞ்ஞானிகள் உளம்தனிலும் இருக்கை கண்டாய்
எல்லோரது வாழ்வினையும் என்றும் காக்க
**விஷ்ணுதுர்க்கை** வடிவெடுத்து விரும்பி வந்தாய்
கல்லால் ஒரு **கணபதி**யும் கருணை யோடு
**ஹேரம்ப கணபதி**யும் காட்சி தந்தார்
நல்லார்மிகு **நோர்வேயில் ஒஸ்லோ மேவும்**
**ஜெயதுர்க்கை அம்மை இனி தாடீர் ஊஞ்சல். 4**

திருப்பதியின் வேங்கடேஸ் வரர்தம்மோடு
திகழ்**ரங்க நாத**ருமே வரங்கள் நல்க
பெருமை மிகும் **ஐயப்பன், ஆஞ்சனேயர்**
**பைரவரும் நாகதம்பி** ரானும் கூட
கருணைமிகு **முருகனும்தன்** துணைகள் சேர
**நவக்கிரகம் சண்டி**யுமே மிளிரும் கோயில்
பெருமைமிகு **நோர்வேயில் ஒஸ்லோ மேவும்**
**ஜெயதுர்க்கை அம்மை இனி தாடீர் ஊஞ்சல். 5**

அந்தணர்கள் அவிசொரிந்தே துர்க்கா சூக்த
அருமறைகள் ஓதிவர மகிழ்வி னோடு
புந்தியிலே புத்துணர்வும் புதிய வீரப்
பொலிவுதரும் புகழ்வாழ்வும் நல்கும் தேவீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தையிலே உனை இருத்திச் சிரங்கள் தாழ்த்திச்
சிறுமதியால் புகழ்பாடித் துதிக்கின் றோம்நாம்
விந்தைமிகு **நோர்வேயில் ஒஸ்லோ மேவும்**
**ஜெயதுர்க்கை அம்மை இனி தாடீர் ஊஞ்சல். 6**

ஆண்டுதொறும் தென்திசையில் இரவி சாயும்
அயனத்தில் கார்காலக் கன்னி மாதம்
நீண்டுவரும் நவதினத்தில் நிலவு நீளும்
நெடும்பொழுதில் துர்க்கையம்மா உன்னை எண்ணி
வேண்டுவதை நீஅறிவாய் விரைந்து வந்தே
விரும்புவரம் தந்திடுவாய் கதிவே றில்லோம்
நீண்டபுகழ் **நோர்வேயில் ஒஸ்லோ மேவும்**
**ஜெயதுர்க்கை அம்மை இனி தாடீர் ஊஞ்சல். 7**

கதிரவன் தன் கதிர்களினை இரவில்கூட
கரவாத நாடென்று பலரும் போற்றும்
பதியான **நோர்வே**யில் அமரும் செல்வீ
பத்தினியே துர்க்கையம்மா ஆடீர் ஊஞ்சல்
கதிநீயென் றுனைநாடி வந்தோம் எங்கள்
கதிர்நீயே ஒளிவீசிக் காப்பாயம்மா
கதிர்பொலியும் **நோர்வேயில் ஒஸ்லோ மேவும்**
**ஜெயதுர்க்கை அம்மை இனி தாடீர் ஊஞ்சல். 8**

துர்க்கையெனும் பெயர்படைத்த சுடரே ஆடீர்
துயரனைத்தும் போக்குமருட் தாயே ஆடீர்
துர்க்குணங்கள் துடைக்குமொரு தூயோய் ஆடீர்
சூழ்கொடுநோய் போக்குபரி காரி ஆடீர்
மர்த்தனங்கள் செய்பகைவர் மருண்டே ஓட
மாயவிளை யாட்டருளும் மாயே ஆடீர்
அர்த்தமிகு **நோர்வேயில் ஒஸ்லோ மேவும்**
**ஜெயதுர்க்கை அம்மை இனி தாடீர் ஊஞ்சல். 9**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூயவளே துர்க்கையம்மா ஆடீர்ஊஞ்சல்
சுடர்க்கொடியே துயர்களைவாய் ஆடீர்ஊஞ்சல்
தாயவளே சமர்த் தலைவீ ஆடீர்ஊஞ்சல்
தாரணியின் தனித்துணைவீ ஆடீர்ஊஞ்சல்
மாயமிகு மடப்பிடியே ஆடீர் ஊஞ்சல்
மங்கையர்தம் குலவிளக்கே ஆடீர் ஊஞ்சல்
நேயமிகு **நோர்வேயில் ஒஸ்லோ மேவும்**
**ஜெயதுர்க்கை அம்மை இனி தாடீர் ஊஞ்சல்.10**

## வாழி விருத்தம்

எம்பெருமான் கணபதியும் வாழி வாழி
**ஒஸ்லோ**வின் **துர்க்கை**யம்மை வாழி வாழி
அம்மையுடன் அரன்அருளும் வாழி வாழி
அருள்பெருகும் கந்தனுமே வாழி வாழி
செம்மையுடன் காவல்செயும் க்ஷேத்ர பால
வைரவரும் மனம்கனிந்து வாழிவாழி
இம்மையுடன் மறுமையுமே இனிமை தங்க
நோர்வேயின் திருவடியார் வாழி வாழி.

## எச்சரிக்கை

பெருமைமிகும் உனதின்னருள் பேசும்தொழி லுடையோம்
பிறிதொன்றினை அறியோம்இனித் தாயே எச்சரீக்கை
கருணைபுரி தேவீ **நோர்வே, ஒஸ்லோ** பதி அமர்ந்தாய்
கணநாதனை அருள்மாதெங்கள் **துர்க்கா** எச்சரீக்கை
உரிமையுடன் தொழுவோர் துயர் களையும் தொழிலுடையாய்
உமையேபர சிவநாயகி தேவீ எச்சரீக்கை
அரக்கர்குலம் வதம்செய்தன்று அமரர் குலம் காத்தாய்
அம்மாஎம தடியார்துயர் தவிர்ப்பாய் எச்சரீக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லாலி

புகழ்பூத்த **நோர்வே**யின் **ஒஸ்லோ**வில் அமர்ந்தருளும்
**துர்க்கை**யிற்கு லாலி
சகமேழும் காத்தருளும் சங்கரற்கும் வாய்த்த துணை
சங்கரிக்கும் லாலி
முகமாறு கொண்டமுரு கேசனுக்கும் மூத்தவற்கும்
பைரவர்க்கும் லாலி
தகவோடு தமிழ்பாடும் அடியார்கள் யாவர்க்கும்
சண்டிக்கும் லாலி
லாலி சுப லாலி.

## பராக்கு

வளர்**ஒஸ்லோ**ப் பதியினிலே வாழ்வாய் பராக்கு
வரம்நல்கும் நமதன்னை துர்க்கா பராக்கு
எழில்மேவும் பனிதோயும் மலைசூழும் நோர்வே
**ஒஸ்லோவில்** உறைதேவி **துர்க்கா** பராக்கு
மகிஷனைச்சங் காரம்செயும் மாதே பராக்கு
மகிழ்வான தேவர்களின் தலைவீ பராக்கு
அகிலமும்நின் அடியிணைகள் சரணடைதல் காண்பாய்
ஆதிசக்தி அனைவரையும் காப்பாய் பராக்கு

## மங்களம்

முத்தான **நோர்வே**யில் **ஒஸ்லோ**வைத்தேர்ந்து
அமர்தாயே **துர்க்கா**வே சுப மங்களம்
சித்தத்தில் தினம் வாழ்வாய் சுப மங்களம்
சிவனாரின் துணை நீயே சுப மங்களம்
பக்தர்கள் துயர்தீர்ப்பாய் சுப மங்களம்
பகைபோக்கி எமைக்காப்பாய் சுப மங்களம்
முத்திக்கு வழி நீயே சுப மங்களம்
உனைப்போற்றி மகிழ்வோமே சுப மங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனலைதீவு மேற்கு, சீத்தாசல்லி
## அருள்மிகு பூதேவி ஸ்ரீதேவி சமேத ஸ்ரீ மஹாவிஷ்ணு மீது
## திருவூஞ்சல் பாடல்கள்

### காப்பு

சீராரும் **அனலைதீ** வென்னும் ஊரில்
செறிவான பனங்கூடல் மன்னுகின்ற
பேரான இந்துசமுத் திரத்தின் பாங்கில்
பெருமைமிகும் **சீத்தாசல்** லிப்பேர் மேவும்
ஆராத அன்புமிகும் **வல்லி யப்பர்**
அடிபோற்றி ஊஞ்சலிசை பாட, நாளும்
காரானைக் குணக்குன்றே அருள்க நாதா
கணபதியே ஊஞ்சலிசை சிறக்க வாராய்

### நூல்

சரியைமுதல் நாற்பாதம் கால்களாகத்
தமிழ்மறையாம் திருமுறைகள் விட்டமாக
அருமறைகள் அவைதாங்கும் கயிறுமாக
ஆகமத்துப் பலகையினில் அகிலம் போற்றப்
பெருமைமிகும் பிரணவத்துப் பீடம் ஏறிப்
பிறவியெனும் நோய்தீர்க்கும் மருந்தாய் வந்த
திருவுடைய **அனலைநகர் மேற்கில் சீத்தா**
**சல்லி வளர் வல்லியப்பர் ஆடீர் ஊஞ்சல். 1**

கமலையுடன் பூமகளும் மருங்கு சார்ந்து
கவரியினை அருமையுடன் பணிந்து வீச
தமதிருபூங் கரம்சேர்த்துக் கந்தன் தாளம்
தான்போடக் கணபதியும் நடனம் ஆட
எமதிருகண் போதாதிக் காட்சி காண
எனத்தேவர் குழாம்எண்ணிக் குளிர்ந்து நோக்க
அமரர்புகழ் **அனலைநகர் மேற்கில் சீத்தா**
**சல்லி வளர் வல்லியப்பர் ஆடீர் ஊஞ்சல். 2**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருச்சுனன்தன் வேண்டுதலை ஏற்றே அந்நாள்
அடுபகைவர் துயர்போக்கிப் பாண்டவர்தம்
விருப்புதனை நிறைவேற்றி வெற்றி நல்கி
விளைபுகழால் மகிழ்ந்தனையே வல்லியப்பா
நெருப்பிடையே எறும்பாகித் துயரில் மாளும்
நின்னடியார் துயர்போக்கி நலங்கள் சேர்ப்பாய்
விருப்புடைய **அனலைநகர் மேற்கில் சீத்தா**
**சல்லி வளர் வல்லியப்பர் ஆடீர் ஊஞ்சல். 3**

அந்தணர்கள் அவிசொரிந்தே புருஷ சூக்த
அருமறைகள் ஓதிவர மகிழ்வி னோடு
புந்தியிலே புத்துணர்வும் புதிய ஞானப்
பொலிவுதரும் புகழ்வாழ்வும் நல்கும் தேவா
சிந்தையிலே உனை இருத்திச் சிரமே தாழ்த்திச்
சிறுமதியால் புகழ்பாடித் துதிக்கின் றோம்நாம்
விந்தைமிகு **அனலைநகர் மேற்கில் சீத்தா**
**சல்லி வளர் வல்லியப்பர் ஆடீர் ஊஞ்சல்.3**

புதுமைமிகும் **அனலைதீ வினிலே** மேற்கில்
புண்ணியவூர் புகழுடைய **சீத்தா சல்லிப்**
பதியினிலே அமர்நாரா யணனே பாங்கில்
பத்தினியர் இருவருடன் ஆடீர் ஊஞ்சல்
கதிநீயென் றுனைநாடி வந்தோம் எங்கள்
கதிர்நீயே ஒளிவீசிக் காப்பாயப்பா
கதிர்பொலியும் **அனலைநகர் மேற்கில் சீத்தா**
**சல்லி வளர் வல்லியப்பர் ஆடீர் ஊஞ்சல்.5**

சக்கரத்தைக் கரமேந்தும் ரமணா ஆடீர்
சங்குதனைத் தாங்குமெழில் முரளீ ஆடீர்
துர்க்குணங்கள் துடைக்குமொரு தூயோய் ஆடீர்
சூழ்துயரம் போக்குமருட் தலைவாஆடீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மர்த்தனங்கள் செய்பகைவர் மருண்டே ஓட
மாயவிளை யாட்டருளும் வேந்தே ஆடீர்
அர்த்மிகு **அனலைநகர் மேற்கில் சீத்தா**
**சல்லி வளர் வல்லியப்பர் ஆடீர் ஊஞ்சல்.6**

தூயவனே வல்லியப்பா ஆடீர்ஊஞ்சல்
சுந்தரனே துயர்களைவாய் ஆடீர்ஊஞ்சல்
தாயனைய தனித்துணையே ஆடீர்ஊஞ்சல்
தாரணியின் காவலனே ஆடீர்ஊஞ்சல்
மாயவனே மஹாவிஷ்ணு ஆடீர்ஊஞ்சல்
மங்கலம்சேர் குலவிளக்கே ஆடீர்ஊஞ்சல்
நேயமிகு **அனலைநகர் மேற்கில் சீத்தா**
**சல்லி வளர் வல்லியப்பர் ஆடீர் ஊஞ்சல்.7**

நாகவணை மீதமர்வாய் ஆடீர் ஊஞ்சல்
நல்லவரைக் காத்திடுவாய் ஆடீர் ஊஞ்சல்
வேகமுறு வித்தகனே ஆடீர் ஊஞ்சல்
வினைக்கொடுமை நீக்கிடுவாய் ஆடீர் ஊஞ்சல்
தாகவிடாய் தீர்த்தருளும் ஊற்றே போலச்
சீர்சீத்தா சல்லியிலே கோவில் கொண்டாய்
சோகமிலா **அனலைநகர் மேற்கில் சீத்தா**
**சல்லி வளர் வல்லியப்பர் ஆடீர் ஊஞ்சல்.8**

பாங்குடைய பனைமரங்கள் சூழும் ஓர்பால்
பனையோலை காற்றிலசைந் தொலிக்கும் ஓர்பால்
ஓங்குபுகழ் அடியார்கள் கூட்டம் ஓர்பால்
உருகுமவர் குரலொலிகள் மருவும் ஓர்பால்
தீஞ்சுவைப் பண் வேதவொலி திகழும் ஓர்பால்
திருமறையோர் பூசனைகள் சிறக்கும் ஓர்பால்
தாங்குமிசை **அனலைநகர் மேற்கில் சீத்தா**
**சல்லி வளர் வல்லியப்பர் ஆடீர் ஊஞ்சல்.9**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயன்தமக்கும் அரியவரே ஆடீரூஞ்சல்
ஆதிமூலம் ஆனவரே ஆடீரூஞ்சல்
உயர்வான வடதிசையை நோக்கிக்கோவில்
அமர்ந்தவரே நாரணனே ஆடீரூஞ்சல்
கயமுகற்குத் தாய்மாமா ஆடீரூஞ்சல்
கடற்கரையை உவந்தவரே ஆடீரூஞ்சல்
சயமிகுந்த **அனலைநகர் மேற்கில் சீத்தா**
**சல்லி வளர் வல்லியப்பர் ஆடீர் ஊஞ்சல்.10**

## வாழி விருத்தம்

எம்பெருமான் கணபதியும் வாழி வாழி
**சீத்தாசல்** லிப்பதியின் மாயன் வாழி
அம்மையுடன் அரன்அருளும் வாழி வாழி
அருள்பெருகும் கந்தனுமே வாழி வாழி
செம்மையுடன் காவல்செயும் க்ஷேத்ர பால
வைரவரும் மனம்கனிந்து வாழிவாழி
அம்புவியில் எந்நாளும் இனிமை தங்க
**அனலைதீ** வடியார்கள் வாழி வாழி.

## எச்சரீக்கை

பெருமைமிகும் உனதின்னருள் பேசும்தொழி லுடையோம்
பிறிதொன்றினை அறியோம்ஹரி நாதா எச்சரீக்கை
கருணையுடன் **அனலைதீவு சீத்தாசல்லி** அமர்ந்தாய்
கமலாபுவி நாதாஎங்கள் நாயாயணா எச்சரீக்கை
உரிமையுடன் **அனலைநகர் மேற்கில்** உறை தலைவா
உலகோர்தொழும் ஒருநாதனே நாராயணா எச்சரீக்கை
அரக்கர்குலம் வதம்செய்தன்று அமரர் குலம் காத்தாய்
ஐயாஎம தடியார்துயர் தவிர்ப்பாய் எச்சரீக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லாலி

பார்வதி சகோதரனே லாலி லாலி
பக்தர்களின் காதலனே லாலி லாலி
ஆர்வமுடன் பணிபவர்க் கன்பலாலி
அனலையுறை நாரணனே லாலி லாலி

## பராக்கு

வளர்**அனலைப்** பதியினிலே வாழ்வாய் பராக்கு
வரம்நல்கும் வல்லியப்பா வருவாய் பராக்கு
வளர்பனைசூழ் பதி**சீத்தா சல்லி**யுறை ஹரியே
வாழ்த்துகிறோம் வந்தெமைநீ காப்பாய் பராக்கு

## மங்களம்

முத்தான மாதவனே சுப மங்களம்
முதுபதியில் வாழ்பவனே சுப மங்களம்
சித்தத்தில் தினம் வாழ்வாய் சுப மங்களம்
சிவனாரின் மைத்துனரே சுப மங்களம்
பக்தர்களின் துயர்தீர்ப்பாய் சுப மங்களம்
பகைபோக்கி எமைக்காப்பாய் சுப மங்களம்
முத்திக்கு வழி நீயே சுப மங்களம்
உனைப்போற்றி மகிழ்வோமே சுப மங்களம்

## சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹங்வல்ல தோட்டம்
## ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன் பேரில்
## திருவூஞ்சல் பாடல்கள்

### காப்பு

**ஹங்வல்லத்** தோட்டமுறை நாயகிக்கு ஊஞ்சலிசை
தங்கத் தமிழெடுத்துப் பாடுதற்கு - துங்கமுறு
ஐந்துகர நால்வாய்முக் கண்ணொருகொம் பையனது
சந்தமுறு பாதவிணை காப்பு.

### ஊஞ்சல்

சீராரும் நால்வேதம் கால்க ளாகச்
சிறப்புறுநல் லாகமங்கள் விட்ட மாக
பேராரும் தமிழ்வேதம் பலகை யாகப்
பெருமையுறு கிரியைகளே கயிற தாக
ஆராத பக்தியெனும் பீட மேறி
அற்புதம்சேர் ஊஞ்சல்மிசை வீற்றி ருந்தே
ஊராளும் **அங்காள பரமேஸ் வரியே**
உவப்போடும் ஊர்வாழ ஆடீர் ஊஞ்சல் 01

பரமசிவன் பத்தினியாய் உலகம் காக்கும்
பார்வதித்தாய் உருமாறிப் பரிவி னோடு
கரதலம்சேர் கபாலமதை நீக்கு தற்காய்க்
கருணையுடன் மயானம்சேர்ந் தாடும் வேளை
நிரல்நிறைஆ யிரம்பணிப்பெண் உருவம் மாறி
நெடும்பூத கணங்களெனச் சூழ்ந்தே ஆட
வரம் தரவே வந்தெமது தோட்டம் சேர்ந்த
**அங்காள பரமேஸ்வரி** ஆடீர் ஊஞ்சல் 02

கலைவாணி தரும்சாபம் கனலை மூட்டக்
கடும்கோப நடனமுடன் மயானம் சேர்ந்தாய்
தலைமகனாம் பாவாடை ராஜன் வந்தே
தலைதாழ்த்தி வணங்கியபோ தமைதி கொண்டாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைகடல்சேர் மகளிர்மனம் மகிழுமாறு
அவர்பூசை உவந்தேற்றே அருளும் தந்தாய்
மலைநாடாம் **ஹங்வல்ல** வந்த மர்ந்தாய்
**அங்காள பரமேஸ்வரி** ஆடீர் ஊஞ்சல் 03

மாயவனாம் அண்ணனுடன் இலக்குமித் தாய்
மருங்குறவே வள்ளிதெய்வ யானை யோடு
தூயவனாம் மால்மருகன் துர்க்கை யோடு
தொடர்ந்துவரும் தேவர்குழாம் ஆடிப் பாடி
நேயமுடன் உனதடிகள் போற்றி வாழ்த்த
நெடுங்கோபம் நீங்கியருட் சாந்தம் மேவி
மாயவருட் செயல்புரிய **இலங்கை** சேர்ந்து
**ஹங்வல்ல** வளர்தாயே ஆடீர் ஊஞ்சல் 04

நாகவடி வானவளே ஆடீர் ஊஞ்சல்
நல்லவரைக் காத்திடுவாய் ஆடீர் ஊஞ்சல்
வேகமுறு வித்தகியே ஆடீர் ஊஞ்சல்
வினைக்கொடுமை நீக்கிடுவாய் ஆடீர் ஊஞ்சல்
தாகவிடாய் தீர்த்தருளும் ஊற்றே போலச்
சலசலக்கும் ஊற்றருகே கோவில் கொண்டாய்
சோகமெலாம் போக்கிமகிழ் வினிமை பூக்க
**அங்காள பரமேஸ்வரி** ஆடீர் ஊஞ்சல் 05

மீனவரின் குலதெய்வம் ஆனாய் ஆடீர்
விளங்குமலை நாடமர்ந்தாய் ஆடீர் ஊஞ்சல்
தேனெனவே இனிமையுடன் மச்ச கன்னி
செயும்படையல் ஏற்றருள்வாய் ஆடீர் ஊஞ்சல்
மானமுறு தமிழ்த்தெய்வம் ஆகி வந்து
றப்பர்மலைத் தோட்டத்தே வீற்றி ருந்தாய்
கானமிசைத் தாடுகிறோம் ஆடீர் ஊஞ்சல்
**அங்காள பரமேஸ்வரி** ஆடீர் ஊஞ்சல் 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேப்பமரத் தலவிருட்ச நிழலில் நாக
தம்பிரான் தனித்திருந்தே காவல் காக்க
மூப்புடைய அத்தியுடன் ஆலும் சேர்ந்த
முதிர் நிழலில் விநாயகரும் வீற்றிருக்க
காப்பமையக் கிரியைநெறி மந்தி ரங்கள்
கருதரிய ஆகமத்தின் விதியில் ஆற்றும்
பார்ப்பனரின் பரிவினிலே மகிழும் தாயே
**அங்காள பரமேஸ்வரி** ஆடீர் ஊஞ்சல் 07

பெண்வடிவம் தனைமறைக்கும் தாயே ஆடீர்
பெரும்புற்றில் மறைந்தருளும் தாயே ஆடீர்
கண்களிப்பப் புற்றினைவிட் டெழுந்து வந்து
காட்சிதரும் நாகமென வருவாய் ஆடீர்
மண்ணுலகில் மக்கள்மனம் மகிழ்ந்து வாழ
மனம்கொண்டே **ஹங்வல்லத் தோட்டம்** மேவி
வண்ணமுறும் ஆலயத்தில் அமர்ந்தாய் ஆடீர்
**அங்காள பரமேஸ்வரி** ஆடீர் ஊஞ்சல் 08

வாணியுடன் கமலை துர்க்கை வடம்தொட் டாட்ட
வள்ளிதெய்வ யானையுடன் முருகன் ஆட
பேணிவரும் லயம்சேர்மத் தளம்தான் கொட்டும்
நந்தியுடன் தும்புருவும் யாழ்தாம் மீட்ட
காணுமொரு **பாவாடை ராய** னோடு
கணக்கில்லாப் பூதகணம் மகிழ்ந்தே ஆட
பூணுமருட் பொலிவுறு**ஹங் வல்ல** சாரும்
**அங்காள பரமேஸ்வரி** ஆடீர் ஊஞ்சல் 09

**அங்காள பரமேஸ்வரி** நீடு வாழ்க
அவளருளும் ஆலயமும் நீடு வாழ்க
தங்கும்அருட் பொலிவுறுநற் பூசை வாழ்க
தமிழ்ப்பாடல் பாடுமடி யவர்கள் வாழ்க
பொங்குமெழில் **ஹங்வல்லத்** தோட்டம் வாழ்க
புகழ்சேரும் முழு**இலங்கைத்** தீவும் வாழ்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்குமருட் சாந்தமுடன் அமைதி பேணி
**அங்காள பரமேஸ்வரி** ஆடீர் ஊஞ்சல் 10

## லாலி

புற்றில்வளர் பாம்பெனவே
பூவுலகில் மக்களுக்குக் காட்சிதரும் தேவீ
பற்றுடனே வழிபடும்நல் மக்களுக்கு நலமருள்வாய்
லாலி லாலி
கற்றவரும் பாமரரும்
கசிந்துருகி வேண்டிநிற்கக் கருணை செய்வாய்
சுற்றிவரும் பகைவிலக்கித் தூயவரைக் காத்தருள்க
லாலி லாலி.

## பராக்கு

**அங்காள பரமேஸ்வரி** அருள்வாய் பராக்கு
அடியாரின் துயர்போக்க வருவாய் பராக்கு
**ஹங்வல்ல தோட்ட**முறை தாயே பராக்கு
கருணைமிகு நாகவடி வானாள் பராக்கு
எங்கள்துயர் போக்கவந்த எழிலே பராக்கு
ஏகன் சிவன் துணையான பார்வதி பராக்கு
மங்கலங்கள் தரும்தாயே மாதே பராக்கு
மலைவாழும் **அங்காள ஈஸ்வரியே** பராக்கு

## எச்சரீக்கை

**ஹங்வல்ல** அமர்ந்தாய் எங்கள் தாயே எச்சரீக்கை
கருணைபொழி அமுதே எங்கள் தாயே எச்சரீக்கை
**அங்காள பரமேஸ்வரி** அன்னாய் எச்சரீக்கை
அடியார்மனம் நிறைவாய் என்றும் அன்னாய் எச்சரீக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளவாலை, மாவடி
## ஞானவைரவர் பேரில் ஊஞ்சல் பாடல்கள்

### காப்பு

பொலிவுறுநல் லிளவாலை மாவடியில் வீற்றிருந்து
கலிநீக்கி என்றும் களிப்பருளும் - வலிதான
அருள்வைர வர்மீது திருவூஞ்சல் பாடுதற்கு
மருள் நீக்கும் நாயகனே வா

### பாடல்

இருக்காதி மறைநான்கும் கால்க ளாக
இயல்புறுநல் லாகமங்கள் விட்ட மாக
விருப்போடு நாற்பாதக் கயிறு மாட்டி
மேன்மைமிகும் உபநிடதப் பலகை நீட்டி
பருக்கோடிப் பத்திமையாற் பாடு கின்ற
பண்ணிசையாம் வடம்தொட்டே அடியர் சூழ
தருக்கோடு **இளவாலைப்** பதியில் மேவும்
**மாவடி**யின் வைரவரே ஆடீர் ஊஞ்சல் 01

சீரிலங்கைத் திருநாட்டின் சிரசு போன்றே
செழுமைபெறும் யாழ்ப்பாணம் மேற்குத் திக்கில்
பேருடைய **இளவாலைப்** பதியில் வந்து
பெருமைபெறு **மாவடியில்** அமர்ந்தே எங்கள்
ஊரினிலே வாழ்வோரின் குறைகள் யாவும்
ஒருநொடியில் தீர்த்தருளும் க்ஷேத்ரபாலா
சீருடையாய் தாள்பணிந்தோம் மகிழ்வினோடு
**மாவடி**யின் வைரவரே ஆடீர் ஊஞ்சல் 02

ஆனைவிழுந் தான்பதியின் பிள்ளை யாரும்
புன்னையடிக் கணபதியும் மகிழ்ந்தே ஆட
வான்புகழும் நாவலடி வைரவர் தாம்
வரம் கொடுத்த மகிழ்வுடனே பாடி ஆட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மைமிகு ஒல்லுடையார் தாமும் ஆட
மிளிர்சித்ர மேழிப்பதித் தலைவர் ஆட
ஆன்மநலம் சேர்பதியாம் இளவாலை சேர்
**மாவடி**யின் வைரவரே ஆடீர் ஊஞ்சல் 03

சிரமீதில் அக்னிஜடை ஆட ஆட
சிறப்போடும் சேர்வதனம் ஆட ஆட
இரத்தநிறத் தேகமொடு சூலம் ஆட
கரபாசம் டமருகமும் ஆட ஆட
கரமதனில் கபாலமுமே ஆட ஆட
கனிவுடைய கண்களுமே ஆட ஆட
வரமருளும் **இளவாலைப்** பதியில் மேவும்
**மாவடி**யின் வைரவரே ஆடீர் ஊஞ்சல் 04

நூற்றாண்டு காலமெமைக் காக்கும் தேவா
ஊழிவரை நமைக்காக்க ஆடீர் ஊஞ்சல்
வேற்றுமைகள் இல்லாமல் விருப்பி னோடு
தேசமெலாம் வாழவைக்க ஆடீர் ஊஞ்சல்
ஊற்றாய்நம் உள்ளொளியாய் உணர்வாய் நாளும்
உள்ளவரே வைரரே ஊரார் நாளும்
போற்றுமொரு **இளவாலைப்** பதியில் மேவும்
**மாவடி**யின் வைரவரே ஆடீர் ஊஞ்சல் 05

சிவன்வடிவம் அறுபத்து நான்கில் ஒன்றாய்
சீருடனே அருள்கொடுக்கும் உன்னை நாங்கள்
சிவன்மைந்தன் எனப்போற்றி மகிழ்வோம் நாளும்
செம்மையுடன் தலம்யாவும் காக்கின்றாய் நீ
சிவாலயத்தின் ஈசான திக்கில் உன்னை
சிறப்புடனே சிவாகமங்கள் அமைக்கும் நாங்கள்
சிவப்பொலிவாய் மூலவராய் அமைத்து நின்றோம்
**மாவடி**யின் வைரவரே ஆடீர் ஊஞ்சல் 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமனவன் தனக்கும் ஐந்து தலைகள் என்றே
பெருமையுடன் சிவன்போலத் தானும் எண்ணித்
தருக்குடனே நின்றதனைக் கண்ட தாலே
தக்கதொரு பாடமொன்று புகட்ட வேண்டி
சிரமொன்றைக் கிள்ளியவன் செருக்க டக்கி
நான்முகன்என் றவன்பெயரை மாற்றி வைத்தாய்
அருள்நிறைந்த இளவாலைப் பதியில் மேவும்
**மாவடி**யின் வைரவரே ஆடீர் ஊஞ்சல் 07

நீர்நிலைகட் கதிபதியே ஆடீர் ஊஞ்சல்
நிலபுலன்கள் காப்பவனே ஆடீர் ஊஞ்சல்
வார்கடல்சூழ் கீரிமலைக் கருகே வந்து
வளம்சேரும் **இளவாலைப்** பதியமர்ந்தாய்
ஊர்நிறைந்த பக்தரெல்லாம் உன்பால் வந்து
உனதுபதம் பணிந்தேத்த ஆடீர் ஊஞ்சல்
பேர்மிகுந்தாய் பெருங்கருணைத் திருவே எங்கள்
**மாவடி**யின் வைரவரே ஆடீர் ஊஞ்சல் 08

சிவப்பேறு நிதம்நாடி வணங்கும் அன்பர்
சிந்தனையில் விருப்போடு ஆடீர் ஊஞ்சல்
தவமேவும் அடியவர்கள் தாம்கேட் கின்ற
வரமீயும் சிவன்மகனார் ஆடீர் ஊஞ்சல்
சிவனாரை மதிக்காத பிரமன் கர்வம்
சிதைத்தவரே வைரவரே ஆடீர் ஊஞ்சல்
உவப்போடு இளவாலைப் பதியில் மேவும்
**மாவடி**யின் வைரவரே ஆடீர் ஊஞ்சல் 09

பக்தரெலாம் பாருலகில் சிறந்து வாழி
பரன் வாழி பார்வதியும் மகிழ்ந்து வாழி
தக்கோர்கள் நலம் வாழி துதிக்கையோனும்
தம்பிமுரு கேசனுமே வாழி வாழி
மிக்கபுகழ் வைரவரும் வாழி வாழி
விளங்கு துணை சாமுண்டி வாழி வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கமெலாம் போற்றும்**இள வாலை** மேவும்
**மாவடி**யின் வைரவரே ஆடீர் ஊஞ்சல் 10

### எச்சரீக்கை

அத்தாஇள வாலைப்பதி அரனே எச்சரீக்கை
அடியார் மனம் அருளால் நிறை நாதா எச்சரீக்கை
வைத்தார்மனம் உன்பாதம் தனில் கனிவாய் எச்சரீக்கை
மாந்தர்மன இருள்போக்கிடும் ஒளியே எச்சரீக்கை

### பராக்கு

இளவாலைப் பதியமர்ந்த ஈசா பராக்கு
சிவமைந்தா மாவடியில் அமர்ந்தாய் பராக்கு
தெளிவோடுன் பதம்பணிவார் துயரமெலாம் போக்கி
தேசமெலாம் காத்தருள்வாய் தேவா பராக்கு

### லாலி

லாலி சுப லாலி எங்கள் வைரவர்க்கு லாலி
இளவாலைப் பதிவாழும் ஈசருக்கு லாலி
மாலறநம் வினைபோக்கும் வைரவர்க்கு லாலி
மண்ணுலகில் மங்கலங்கள் தினம்பெருக லாலி.

### மங்களம்

தந்திமுக நாயகர்க்கு மங்களம் - அவர்
தனித்துணையாம் வல்லபைக்கு மங்களம்
வந்தருளும் பார்வதிக்கு மங்களம் - அவர்
பதியாம்பர மேஸ்வரர்க்கு மங்களம்
முந்திவரு முருகனுக்கு மங்களம் - அவர்
முத்தான துணைவியர்க்கும் மங்களம்
செந்திருவாம் இலக்குமிக்கு மங்களம் - அவர்
திருவுடைய மாயவர்க்கு மங்களம்
வந்தமரும் வைரவர்க்கு மங்களம் - தினம்
வழிபடுவோர் யாவருக்கும் மங்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்கோவை – மாந்தோப்பு
## ஸ்ரீ மஹாமாரி அம்மன் திருவூஞ்சல் பாடல்கள்

காப்பு

தெய்வத் திருமகளாய்த் தென்கோவை மாந்தோப்பில்
வையம் புகழ்ந்தேத்த வீற்றிருக்கும் - செய்யதிரு
மாரியம்மன்மீது மகிழ்ந்தூஞ்சல் பாடுதற்கு
பேரருள்செய் கணபதியே காப்பு.

நூல்

மன்னுபுகழ் ஈழவள நாட்டில் நல்லோர்
மகிழ்ந்துறையும் வடபாலில் யாழ்ப்பாணத்தில்
பொன்னொளிசேர் கோப்பாயில் தென்பால் மேவும்
புகழ்பதியாம் மாந்தோப்பில் உறையும் தாயே
அன்னையென இவ்வுலகம் அனைத்தும் போற்ற
அருளாட்சி செய்கின்ற மாரித் தாயே
உன்னருளைத் தந்திடுவாய் உலகோர் வாழ
உவப்போடு மகமாரி ஆடீரூஞ்சல்! 1

எண்டிசையும் உயர்ந்தோங்கும் மலைகள் தூணாய்
இருவிசும்பே மேலமையும் விதானமாக
மண்தலத்தில் தென்கோவை பீட மாக
மகிழ்ந்தன்பர் போற்றுமுறை விட்டமாக
விண்திகழும் முனிகணமும் தேவர் தாமும்
வியந்துசொரி மலர்யாவும் கயிறதாக
புண்ணியம்சேர் புனிதமுறும் ஊஞ்சல்மீது
புன்னகைசெய் மகமாரி ஆடீரூஞ்சல்! 2

பாவலர்கள் பக்கலிலே பாக்கள் பாட
பரதமுறை அரம்பையர்கள் நடனமாட
நாவலர்கள் நல்வார்த்தை நலமாய்க் கூற
நல்லடியார் நாற்றிசையும் தொழுது போற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏவலர்கள் எமதன்னை பணிகள் செய்ய
இலங்குபுகழ் தென்கோவை மாந்தோப் பென்னும்
பூவரங்கில் புதுமைகளைச் செய்யும் தாயே
புகழுடைய மகமாரி ஆடீரூஞ்சல்! 3

முன்னொருகால் புற்றினிலே நாகமாகி
முகம் காட்டி அருள்செய்தாய் முன்னோர் செய்த
நன்னயத்தால் சிறுகுடிலில் மாரி ஆனாய்
நாட்செல்ல நற்கோயில் அமைத்துக் கொண்டாய்
இன்னும்எதிர் காலமதில் உந்தன் கோவில்
எழில்மாட கோபுரமாய் விண்ணை முட்டும்
அன்னதொரு நற்காட்சி கோப்பாய் தெற்கில்
அமைந்திடவே மகமாரி ஆடீரூஞ்சல்! 4

ஆச்சியென அடியார்கள் அழைக்கும் தாயே
அருள்மாரி பொழிகின்ற மாரித் தாயே
பேச்சியெனப் பெருவிருப்பாய் அழைப்போர் நெஞ்சில்
பேருவகை தருகின்றாய் பின்னும் உந்தன்
ஆச்சரியம் தரும்செயலால் அடியர் தேடி
ஆவலுடன் உனைநாடி வரச்செய் கின்றாய்
மூச்சினிலே முழுதாக உறைவாய் நீயே
முழுமுதலே மகமாரி ஆடீரூஞ்சல்! 5

அந்தணர்கள் அருமறையை முறையின் ஓதி
ஆகமத்தின் நெறிமுறையில் கிரியை மேவ
முந்திவரும் நாதஸ்வரம் மேளம் சங்கு
முழவதிர மணியொலிக்க மலர்கள் தூவி
இந்திரலோ கம்எனவே எழிலாய்க் காணும்
தென்கோவை மாந்தோப்பில் இனிமை யாக
வந்துதொழும் அடியார்க்கு வரங்கள் ஈயும்
வடிவுடையாய் மகமாரி ஆடீரூஞ்சல்! 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிபரா சக்தியினி தாடீர் ஊஞ்சல்
அருள்முத்து மாரியினி தாடீர் ஊஞ்சல்
மேதினியில் மேன்மையுடன் ஆடீர் ஊஞ்சல்
மிகமகிழ்வாய் நாகம்மை ஆடீர் ஊஞ்சல்
நாதன்சிவ னார்மகிழ ஆடீர் ஊஞ்சல்
நானிலத்தில் நலந்திகழ ஆடீர் ஊஞ்சல்
பூதலத்தில் புகழோங்கும் கோப்பாய் தெற்கில்
மாந்தோப்பு மகமாரி ஆடீரூஞ்சல்! 7

வாணியுடன் இலக்குமியும் வடம்தொட் டாட்ட
வளர்புகழை நாரதர்தும் புருவும் பாட
மாணிதிரு ஞானசம்பந் தரும்மற் றோரும்
வளர்தமிழில் திருமுறைகள் பாடப்பாட
ஆனதொரு மத்தளத்தை நந்தி கொட்ட
அரம்பையர்கள் அணியணியாய் நடனமாட
வானவரும் புகழ்ந்தேத்தக் கோப்பாய் தெற்கில்
மாந்தோப்பு மகமாரி ஆடீர் ஊஞ்சல் 8

கத்தியுடன் உடுக்கைஇரு கரத்தில் ஆட
கரண்டகமும் பாசம்மறு கரத்தில் ஆட
வித்தகியாம் மகமாரி சிரசின் மீது
விளங்கும் அக்னி சிகையாட விழிகள் ஆட
முத்தழகி முலையாட மாலை ஆட
மூவுலகும் தானாட முகில்கள் ஆட
மெத்தமழை மாரியைப்போல் வரங்கள் நல்கும்
தென்கோவை மகமாரி ஆடீரூஞ்சல்! 9

வேதநெறி தழைத்தோங்கச் சைவம் வாழ
விளங்குதிரு முறைபுவியில் பரவி ஓங்க
நாதமும்நற் கீதமும்நாற் றிசையும் ஓங்க
நாட்டியமும் ஓவியமும் நலம்பெற் றோங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனைகள் இனி மாய்ந்து வினைகள் ஓய்ந்து
மேதினியில் தமிழ் சைவம் விளங்கித் தோன்ற
மாதரசி மாரியம்மா அருளைத் தந்தே
மாந்தோப்பில் மகிழ்ந்தினிதே ஆடீர் ஊஞ்சல் 10

வாழி விருத்தம்

சிவநெறியும் நான்மறையும் வாழி வாழி
சிவாகமமும் தமிழ்மறையும் வாழி வாழி
தவமுடைய தமிழ் மாந்தர் வாழி வாழி
தனிப்பெருமை யுடன் ஈழம் வாழி வாழி
சிவப்பெருமை பெறுமடியார் வாழி வாழி
சீர்மிகுநற் கோப்பாயும் வாழி வாழி
தவம் பெருகு தருமநெறி வாழி வாழி
தவறாத வளம்யாவும் வாழி வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். வடமராட்சி, தென்புலோலி, அருள்மிகு மூச்சன்புலோ சிவன் ஆலய திருவூஞ்சல் பாடல்கள்

### காப்பு

அழகொளிரும் ஈழமதன் வடபால் சிங்கை
ஆரியர்கள் ஆள்பதியில் **தென்புலோலி**
வளம்கொழிக்கும் **மூச்சன்புலோ** சிவனா ருக்கு
மகிழூஞ்சல் பாடுமொரு நினைவினோடு
உளநெகிழ வணங்குகிறோம் **சின்னத்தாயி**ன்
உத்தமரே விநாயகரே போற்றி போற்றி
வளமார்ந்த தமிழ்வார்த்தை வரமாய் நல்கி
வந்தெமக்குக் காப்பருள்க பிள்ளையாரே

### நூல்

வேதங்கள் நான்குமெழிற் கால்க ளாக
விளங்குசிவா கமங்களுறு விட்டமாக
பாதங்கள் நான்குமருட் கயிற தாக
பலகையெனப் புராணங்கள் தொடுத்து நீட்டி
ஓதுமருட் திருமுறையாம் பீட மேறி
உயர்சாத்தி ரங்களவை வடமாய் மாட்டி
**ஆதிமூலேஸ் வரர் மூச்சன் புலோ**வில் மேவி
அம்மையுடன் அருள்பொலிய ஆடீர் ஊஞ்சல் 01

நேயமுடன் கணபதிதான் வடம்தொட் டாட்ட
நிறைகருணை ஆறுமுகன் மலர்கள் சூட்ட
மாயனவன் தாளமிட மலரான் நோக்க
மங்கைஇலக் குமி வாணி சவரி வீச
தோயுமருட் கருணைவிழி மலர்ந்து நோக்கி
உமையவளும் மருங்கமர்ந்தே முறுவல் பூக்க
நாயகர்நம் **மூச்சன்புலோப்** பதியில் மேவும்
**ஆதிமூல ஈஸ்வரரே** ஆடீர் ஊஞ்சல் 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடிஎழில் **ஞாயிறு**போல் ஒளிரும் தேவே
குளிர்சடையில் **திங்கள**ணி சிவனே ஆடீர்
தேடி அருட் **செவ்வா**யால் குமரன் கூறும்
பிரணவத்துப் பொருள் கேட்ட செல்வா ஆடீர்
நாடிஇரு செம்**புதனை**க் கொங்கை யாக்கும்
நறும்செல்**வி யாழன்**ன மொழிகள் பேச
கோடுயரும் **வெள்ளி**மலை ஆச னிக்கும்
**மூச்சன்புலோ** ஈஸ்வரரே ஆடீ ரூஞ்சல் 03

அருளாளர் சித்தர்களும் அமர்ந்த பூமி
அரியவட மராட்சியிலே **தென்பு லோலி**
கருதுமொரு ஆலமர நிழலை நாடி
கனிவுடனே வந்தமர்ந்து பசுக்கள் தம்மேல்
உரசுமொரு கல்லாகக் காட்சி தந்து
உத்தமனார் **பெரியசாமி**க் கருள்செய் தின்று
கருணைமிகு சிவனானீர் **மூச்சன் புலோ**
**ஆதிமூல ஈஸ்வரரே** ஆடீர் ஊஞ்சல் 04

ஆல்,அரசு, மா,மருது, கொன்றை, வேம்பு
அணியணியாய் நிறைமரங்கள் நடுவே தோன்றிச்
சூழ்வயல்கள் குளங்களினைக் கருணை யோடு
நோக்கி அவை பொலிவுறவே அருளை நல்கி
நாள்பொழுதாய்ப் பணிசெய்தே தீர்த்தக் கேணி
நல்கு**பொன்னை யாச்சாமி** நினைவினோடு
வாழ்பதியாம் **தென்புலோலி மூச்சன் புலோ**
**ஆதிமூல ஈஸ்வரரே** ஆடீர் ஊஞ்சல் 05

**துவர்**வாய்நல் உமையவளை மருங்கில் ஏற்று
துதிப்போர்தம் உளத்**தினிப்பாய்** ஆடீரூஞ்சல்
எவர்வரினும் பணியாத தெவ்வர் நெஞ்சம்
திகைக்க **உறைப்** புடன்விழிப்பாய் ஆடீர் ஊஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகளால் **புளி**த்திருப்போர் தமைக் **கசந்தே**
தள்ளிடுவாய் மூச்சன்புலோ என்று போற்றும்
**உவர்**க்கடல்சூழ் பதிமேவி அருளை நல்கும்
உத்தமரே சிவனாரே ஆடீர் ஊஞ்சல் 06

திருத்தலத்தின் கிழக்கினிலே **சிலும்பில்** வீர
பத்திரனார் தலமிருக்கும் தென்கிழக் கில்
அருள்பெருகும் **வல்லிபுர** மாயன் கோவில்
அழகொளிரக் காட்சிதரும் மேற்குத் திக்கில்
பெருமைமிகு **வெள்ளுளுவை சின்னத் தாயி**ன்
விநாயகர்தாம் அருள்நல்க வடமேற் திக்கில்
கருணையுடன் **உபயகதிர் காம**க் கந்தன்
காட்சிதர ஈஸ்வரரே ஆடீர் ஊஞ்சல் 07

வழிபாடு நிறைவுபெற, வந்தோர் தங்கள்
மனம்குளிரப் பிரசாதம் நல்கும் வேளை
களிப்புடனே கேணியிலே குதிக்கும் மீன்கள்
தமக்குணவு முதல் நல்கும் வழக்கம் காண்மின்
அழிபசியால் துயர்கொண்ட பன்றி கட்கு
அன்புடனே பால் கொடுத்தீர் அன்னை யாகி
வழிவழியாய் இதைக் காண்போம் **புலோலி** மேவும்
**ஆதிமூல ஈஸ்வரரே** ஆடீர் ஊஞ்சல் 08

வடமராட்சிப் பெருநிலத்தீர் ஆடீர் ஊஞ்சல்
வருவார்க்கு நிழல் தருவீர் ஆடீர் ஊஞ்சல்
படமெடுக்கும் பாம்பணிவீர் ஆடீர் ஊஞ்சல்
பதியாம் நம் **புலோலி**யிலே ஆடீர் ஊஞ்சல்
நெடுநாளாய்ச் சிதம்பரத்தில் ஆடும் கூத்தின்
இடைநடுவே ஓய்வெடுக்க இங்கு வந்து
அடியார்கள் மனம்களிக்க ஊஞ்சல் மேவி
**ஆதிமூல ஈஸ்வரரே** ஆடீர் ஊஞ்சல் 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆதிமூல ஈஸ்வரரே** வாழி! வாழி!!
அகிலமெலாம் காப்பவரே வாழி! வாழி!!
பூதியணி அடியவர்கள் வாழி! வாழி!!
புதுமைநிறை **புலோலிப்பதி** வாழி! வாழி!!
மாதுமையும் மருங்கினிலே வாழி! வாழி!!
மருங்கமையும் திருத்தலங்கள் வாழி! வாழி!!
கோதில்நெறி வைதிகமாம் சைவம் வாழி!
குவலயமும் வாழ்வதற்காய் ஆடீர் ஊஞ்சல் 10

## எச்சரீக்கை

**புலோலிப்பதி** தனிலே உறை சிவனே எச்சரீக்கை
பூவால் உனைத் தினம்பூசிப்போம் போதா எச்சரீக்கை
நிலாவைச் சடை தனில் தாங்கிய நிமலா எச்சரீக்கை
நினைவோர் மனத் துயர்போக்கிடும் ஒளியே எச்சரீக்கை

## பராக்கு

வடமராட்சிப் பெருநிலத்தில் அமர்வாய் பராக்கு
வளர்புலோலித் தலமமர்ந்த சிவனே பராக்கு
இடபமதில் நீயமர்வாய் எழிலே பராக்கு
எங்கள் இத யம்தனிலே நிறைவாய் பராக்கு

## லாலி

லாலி சுப லாலிஆதி மூலருக்கு லாலி
அருகமர்ந்து அருள்சுரக்கும் அன்னையுக்கும் லாலி
மாலறநம் வினைபோக்கும் மன்னருக்கு லாலி
மண்ணுலகில் மங்கலங்கள் தினம்பெருக லாலி.

மங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்வேலி வாய்க்காற்றரவை
## மூத்த விநாயகர் தேவஸ்தானத்தில் கோவில்கொண்டு
## எழுந்தருளியிருக்கும்
## விசாலாக்ஷி அம்பாள் சமேத விஸ்வநாதப் பெருமான்மீது
## திருவூஞ்சல் பாடல்கள்.

### காப்பு

*சீரிலங்கைத் திருநாட்டின் யாழ்ப்பாணத்துச்*
*சிறப்புடைய நீர்வேலிப் பதியில்நல்ல*
*வாருலகு புகழ்வாய்க்காற் றரவை மேவும்*
*வரம்பெருகு மூத்தவிநா யகர்தம்கோவில்*
*சேருமருள் விசாலாட்சி சமேதராக*
*விளங்குவிஸ்வ நாதருக்கோர் ஊஞ்சல் பாட*
*காரமரும் திருமேனிக் கணாதிபன்தாள்*
*காப்பெனவே கருத்துடனே மனத்தில்வைப்பாம்*

### நூல்

*அகரமுடன் உகரமும்சேர் மகரம்கூடி*
*அதன்மேலோர் பிந்துவும்சேர் நான்குபீஜம்*
*தகவுடைய கால்களெனத் தரையில்நாட்டித்*
*தனித்துவம்சேர் பிரணவத்துப் பலகைசேர*
*உகப்புடனே நால்வேதக் கயிறுமாட்டி*
*உபநிடத விட்டமதில் உவந்துகூட்டி*
*மகவெனும்நற் பாவனையில் அமைத்தஊஞ்சல்*
*மகிழ்விஸ்வ நாதஇனி தாடீர் ஊஞ்சல்.* 1

*காசினியில் பிறப்பெடுத்த ஆன்மகோடிக்*
*கன்மவினை போக்கிஇறை பாதம்சேரக்*
*காசிவிஸ்வ நாதருறை கோவில் தன்னைக்*
*கருதரிய திருத்தலமாய் நூல்கள் கூறும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசியிலே சென்றவரைக் காணவொட்டா
மாந்தருக்காய்க் கருணைமிகு விஸ்வநாதர்
வீசுபுகழ் நீர்வையிலே கோவில் கொண்டார்
விசாலாட்சி யோடினிதே ஆடீர் ஊஞ்சல். 2

நீரிலங்கும் பதியான நீர்வேலிக்கு
நிறைவுதர நினைந்துவரு விஸ்வநாதா
ஏரிலங்கும் கழனிகளின் நடுவில்காணும்
எழில்நிறைமோ திரக்கேணி தனிலேசேர்ந்து
நீரியல்வா சம்நிகழ்த்தி வெளியேதோன்றி
நிறையருள்சேர் விசாலாட்சி துணையும்சேரக்
காரிலங்கும் திருமேனிக் கணாதிபன்தன்
பக்கலிலே வந்தமர்ந்தாய் ஆடீர் ஊஞ்சல். 3

கங்கையினைத் தலைசேர்த்தாய் ஆடீர்ஊஞ்சல்
கருணைமிகு பரம்பொருளே ஆடீர்ஊஞ்சல்
மங்கையொரு பங்கெடுத்தாய் ஆடீர்ஊஞ்சல்
மயல்போக்கிச் செயல்கொடுத்தாய் ஆடீர்ஊஞ்சல்
பொங்குமெழிற் பிறைசேர்த்தாய் ஆடீர்ஊஞ்சல்
பொதுமறையின் அறம்விளைத்தாய் ஆடீர்ஊஞ்சல்
இங்கெமது நீர்வேலிப் பதியில்மேவும்
எழில்விஸ்வ நாத,இனி தாடீர்ஊஞ்சல். 4

பரசிவமாய் சக்தியுமாய் விந்துவாகிப்
பயில்நாதமெனும் நான்கு அருவம் கொண்டாய்
விரவுமருட் கருணையினால் லிங்கமாகி
விளங்குசதா சிவமென்னும் வடிவில் நின்றாய்
பரவுமுயிர்ப் பான்மைதனை நினைந்துமேலும்
பலபலவாய் மகேஸ்வரனாய் உருவம் கொண்டாய்
திருவுடைய விசாலாட்சி துணைசேர்நீர்வைப்
பதிவிஸ்வ நாதரினி தாடீர் ஊஞ்சல். 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழைமரம் கனிசொரியும் வயல்கள் சூழும்
வளர்தெங்கு குலைசாய்க்கும் வாய்க்கால் நீளும்
ஏழைகளின் துயர்ஓயும் வறுமை மாளும்
எங்குமருட் பொலிவுடைய பெருமை வாழும்
நாளுமினி தானபுகழ் மேவும் நீர்வை
நற்பதிவாய்க் காற்றரவைப் பிள்ளையாரைச்
சூழுமருள் விசாலாட்சி விஸ்வநாதா
சுகமருளித் துயர்போக்க ஆடீர்ஊஞ்சல். 6

சிவபூஜைச் செயல்தனிலே மனம்பதித்த
செல்வன்தன் தடையான தாதைதாளை
தவநினைவில் தறித்ததனால் சண்டியென்னும்
தனிப்பதவி கொடுத்தருளி வரங்கள் தந்தாய்
அவனியிலே நமக்குமருட் பதங்கள் நல்க
அருள்வாய்காற் றரவையிலே அமர்ந்துகொண்டாய்
சிவமறையோர் பாலனம்செய் பதியில்மூத்த
கணபதியின் அருகமர்ந்து ஆடீர் ஊஞ்சல். 7

சங்கம்வளர் தமிழ்வாழக் கவிதை தந்தாய்
தமிழ்க்குமரன் அவனையும்அங் கனுப்பிவைத்தாய்
பொங்குமருட் திருமுறைகள் பொலியவைத்தாய்
புதுமைபல செய்தவரை மகிழவைத்தாய்
இங்கெமது நீர்வேலிப் பதியில் வந்தே
எழில்வாய்க்காற் றரவைவிநா யகரின்கோவில்
தங்கியிருந் தரசாளும் விஸ்வநாதா
தமியேமுக் கருள்புரிந்தே ஆடீர்ஊஞ்சல். 8

**பிருதுவி**யாம் நிலத்தடியில் கருங்கல்மேனி
பெரும்புகழ்நீர் வேலியினில் **அப்பில்** சேர்ந்து
கருதுமொரு மோதிரக்கே ணியிலேஆடிக்
களித்தரச கேசரியின் பிள்ளையார்தம்
அருட்பதியில் சிலகாலம் சயனம்செய்தே
அதன்பிறகு அருள்வாய்க்காற் றரவை மேவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரு**நெருப்பும்** **வாயு**வுடன் **ஆகாசம்**சேர்
பிரதிஷ்டை தனில்நின்றீர் ஆடீர் ஊஞ்சல். 9

சொந்தமென உமையவளைச் சேர்ந்தீர் மாந்தர்
சுகபோகம் நிறைந்திடவே ஆடீர்ஊஞ்சல்
கந்தனுடன் கணபதியைத் தந்தீர் ஞாலம்
களிப்போடு வாழ்ந்திடவே ஆடீர்ஊஞ்சல்
சந்ததம்நின் தவஉருவும் காட்டிஞானச்
சார்புறவும் வழிசமைத்தீர் அதில்நாம்செல்ல
முந்திவரு குருவாகி வரும்நாள் நாடி
முயன்றிருப்போம் பரம்பொருளே ஆடீர் ஊஞ்சல். 10

## வாழி விருத்தம்

நீர்வேலிப் பதிவாழி நிதமும் மாந்தர்
நினைவினிலே சிவமணமும் நிறைந்து வாழி
பார்புகழும் பதிவாய்க்காற் றரவை வாழி
பரன்விஸ்வ நாதர்விசா லாட்சி வாழி
கார்மேனிக் கணபதியும் கந்தனோடு
கதிர்மதியம் போல்நீடு வாழி வாழி
ஊர்போற்ற ஊஞ்சலிசை பாடிப் பாடி
உத்தமர்கள் எந்நாளும் வாழி வாழி!

## எச்சரீக்கை

வாய்க்காற்றர வையிலே உறை பரனே எச்சரீக்கை
வருவோர் மனம் அருளால் நிறை நாதா எச்சரீக்கை
மாய்த்தாய் புரம் மூன்றும் மயல் களைவாய் எச்சரீக்கை
மாந்தர்மன இருள்போக்கிடும் ஒளியே எச்சரீக்கை

## பராக்கு

காசிவிசா லாட்சியுடன் அமர்வாய் பராக்கு
கணபதியின் உடனுறைவாய் சிவனே பராக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசகலும் மனமருள்வாய் ஆதி பராக்கு
காசிவிஸ்வ நாதரெனும் கதியே பராக்கு

## லாலி

லாலி சுப லாலிவிஸ்வ நாதருக்கு லாலி
அருகமர்வி சாலாட்சி அன்னைக்கும் லாலி
மாலறநம் வினைபோக்கும் சிவனார்க்கு லாலி
மண்ணுலகில் மங்கலங்கள் தினம்பெருக லாலி.

## மங்களம்

தந்திமுக நாயகர்க்கு மங்களம் - அவர்
தனித்துணையாம் வல்லபைக்கு மங்களம்
வந்தருளும் பார்வதிக்கு மங்களம் - அவர்
பதியாம்பர மேஸ்வரர்க்கு மங்களம்
முந்திவரு முருகனுக்கு மங்களம் - அவர்
முத்தான துணைவியர்க்கும் மங்களம்
செந்திருவாம் இலக்குமிக்கு மங்களம் - அவர்
திருவுடைய மாயவர்க்கு மங்களம்
சந்தமுறு சிவனார்நம் தட்சணா
மூர்த்திக்கும் எந்நாளும் மங்களம்
வந்தமரும் வைரவர்க்கு மங்களம் - தினம்
வழிபடுவோர் யாவருக்கும் மங்களம்.

சுபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்வேலி, வாய்க்காற்றரவை, மூத்தவிநாயகர் ஆலயத்தில் கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் வள்ளீ தேவசேனா சமேத சிவசுப்பிரமணியர் மீது திருவூஞ்சல் பாடல்கள்.

### காப்பு

*சீர்மிகுநல் ஈழமதன் வடபால் காணும்*
*சிறந்தவொரு யாழ்ப்பாணம் எனும்குடாவில்*
*நீர்வளமும் நிலவளமும் நிறைந்து தோன்றும்*
***நீர்வேலிப் பதிவாய்க்காற் றரை**யில் மேவும்*
*கார்நிகர்த்த **மூத்தவிநா யகரே** உன்றன்*
*கனிவுடைய இளவல்**முரு கேசன்** பேரில்*
*ஆர்வமுடன் ஊஞ்சலிசை பாடு தற்கு*
*அருள்தருக பாதமலர் சிரமேற் கொண்டோம்.*

### நூல்

*இருக்குமுதல் அதர்வமெனும் நான்கு வேதம்*
*இயல்பாக நெடிதுயர்ந்த தூண்க ளாக*
*திருப்பெருகு சிவாகமங்கள் விட்ட மாக*
*திருமுறைகள் திடமுடனே கயிற தாக*
*கருத்துடைய சாத்திரங்கள் பலகை யாக*
*கண்ணான இதிகாசம் பீட மாக*
*விருப்புடனே வள்ளிதெய்வ யானை யோடும்*
*விளங்குதிரு **வேலவரே** ஆடீர் ஊஞ்சல் 01*

***விசாலாட்சி யோடமர்ந்து விசுவ நாதர்***
*விளங்குமுன தருட்பெருமை விரும்பி நோக்க*
*அசையுமிரு செவிகளுடன் துதிக்கை தூக்கி*
***மூத்தவிநா யகர்**ஆசி நல்கிநிற்க*
*அசாதார ணக்கருணை அதனைக் கண்டு*
*அடியவர்கள் "அரோஹரா" என்று போற்ற*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைவான பாடலுக்கு இசைந்தே நீயும்
எங்களருட் **திருமுருகா** ஆடீர் ஊஞ்சல் 02

வாழைகளும், தென்னைகளும் மாவின் சோலை
வளர்பனையும் பெருமரங்கள் சூழ்ந்து தோன்ற
நீளுமுன தருட்பார்வை படியும் திக்கில்
கிழக்கினிலே தரவையும்உப் பாறும் தோன்றும்
சூழும் குடி மக்களுடன் ஆடு, மாடும்
துயர்போக்கும் செல்வமென நிறைந்து தோன்றும்
நீளும்**யாழ் பருத்திநகர் வீதி யோரம்**
**மூத்தவிநா யகர்**அருகே ஆடீர் ஊஞ்சல் 03

மேற்கினிலே அரசகே சரியின் பேரால்
மிளிர்கின்ற விநாயகரின் கோயில் காண்போம்
போற்றுமொரு செல்வவிநா யகரின்கோயில்
புகழ்வடக்கில் சிறுப்பிட்டி ஊரில் காண்போம்
சாற்றுமருள் முருகனது கோயில் தெற்கில்
தனித்துவமாய் நெடிதுயர்ந்து நிற்கக் காண்போம்
ஆற்றல்மிகு **மூத்தவிநா யகரின்** பாங்கில்
அருள்வாய்க்காற் றரவையிலே ஆடீர் ஊஞ்சல் 04

சங்கம்வளர் தமிழ்க்குமரா ஆடீர் ஊஞ்சல்
சதுர்மறையின் நாயகனே ஆடீர் ஊஞ்சல்
பொங்குமருட் கருணையுடன் தேவர் மாந்தர்
புதுமைகளைக் காணவைத்தாய் ஆடீர் ஊஞ்சல்
இங்கெமது **நீர்வேலி**ப் பதியில் வந்தே
எழில்**வாய்க்காற் றரவைவிநா யகரின்**கோவில்
தங்கியிருந் தரசாளும் **கந்தவேளே**
தமியேமுக் கருள்புரிந்தே ஆடீர்ஊஞ்சல். 05

தூயவரைக் காத்திடுவாய் முருகா உன்றன்
தூநாமம் செப்பாது **புளித்துப்** போன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீயவரைக் **கசந்திடு**வாய் தவறுபோக்கத்
தினம் அவர்க்கே **உறைப்பாய்**நின்(று) இறுதிவேளை
மாயவலை நீக்கி அவர் உளத்**தினிப்பாய்**
வள்ளியின்செந் **துவர்**வாயில் மகிழ்வாய் நீர்வை
மேய**உவர்**க் கடல்நோக்கி அமர்ந்த மூத்த
விநாயன்தம் ஆலயத்தில் ஆடீர் ஊஞ்சல் 06

அண்ணனுக்கு மாங்கனியைக் கொடுத்த தாலே
அருள்ஞானப் பழமாக மாறிநின் றாய்
நண்ணிவந்த ஔவைக்குப் பழம் கொடுத்தாய்
நன்றாகச் சுடுகிறதா என்று கேட்டாய்
எண்ணிறந்த அசுரபடை அழித்தே ஈற்றில்
இரண்டாக மாமரத்தைப் பிளந்தாய் உன்னை
எண்ணியவர்க்கருள் வேலா **நீர்வை வாய்க்காற்**
**றரவை**யிலே **மூத்தவர்**முன் ஆடீர் ஊஞ்சல் 07

**ஞாயிறு**போல் ஒளிர்வேலா **திங்கள்** தன்னை
நற்சாபம் தந்துதினம் தேயச் செய்தாய்
நேயமுடன் தெய்வானை **செவ்வாய்**ச் சொல்லில்
நீமகிழ்வாய் அன்**புதனை** அள்ளி வீசி
மாயவினை போக்கிஅடி யவர்க்கே இன்ப
மங்கலங்கள் தந்திடுவாய் **வியாழன்** தன்னைக்
காயுமயில் ஆ**சனி**ப்பாய் **வாய்க்காற் றரவை**
**மூத்தவிநா யகர்**முன்னே ஆடீர் ஊஞ்சல் 08

ஆறுபடை வீடுடையாய் ஆடீர் ஊஞ்சல்
அடியவர்தம் துயரறுப்பாய் ஆடீர் ஊஞ்சல்
ஆறுமுகம் கொண்டவனே ஆடீர் ஊஞ்சல்
அஞ்சலென வேலெடுப்பாய் ஆடீர் ஊஞ்சல்
ஆறுகுணம் படைத்தவனே ஆடீர் ஊஞ்சல்
ஆறுதலைத் தருபவனே ஆடீர் ஊஞ்சல்
மாறுமுக **மூத்தவிநா யகர்**தம் பாங்கில்
மகிழ்வுடனே **நீர்வை**யிலே ஆடீர் ஊஞ்சல் 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மூத்தவிநா யகர்**கருணை வாழி வாழி
முருகனருட் பெருமைகளும் வாழி வாழி
ஏத்துமடி யவர் நீடு வாழி வாழி
விஸ்வநா தர்விசா லாட்சி வாழி
ஓத்துமற வாமறையோர் வாழி வாழி
உலகினிலே ஆவினமும் வாழி வாழி
சீர்த்தசிவ நெறி வாழி **நீர்வை** வாழி
சிவசுப்ர மணியரினி தாடீர் ஊஞ்சல்

## எச்சரீக்கை

**வாய்க்காற்றர வை**யிலே உறை முருகா எச்சரீக்கை
வருவோர் மனம் அருளால் நிறை நாதா எச்சரீக்கை
தேய்ப்பாயெங்கள் வினை யாவையும் வேலா எச்சரீக்கை
திருவேகண பதியின்அரு கிருப்பாய் எச்சரீக்கை
காய்ப்பாய்அருட் கனியாய் நம துளத்தே எச்சரீக்கை
கதிர்வேலுடன் கனிவாய் என்றும் வருவாய் எச்சரீக்கை
மாய்ப்பாய்மன இருள் மாலவன் மருகா எச்சரீக்கை
மனமாம் குகை தனில்வாழ்ந்திடும் குகனே எச்சரீக்கை

## பராக்கு

காசிவிசா லாட்சியுடன் அமர்வாய் பராக்கு
கணபதியின் உடனுறைவாய் முருகா பராக்கு
ஆசகலும் மனமருள்வாய் கந்தா பராக்கு
அடியார்துயர் களைவாய் எங்கள் வேலா பராக்கு
பூசனையில் மனமகிழ்வாய் குமரா பராக்கு
பொங்குமருட் கருணையினால் பொலிவாய் பராக்கு
வாசமலர் மங்கையிரு பாங்கினில் விளங்க
**வாய்க்காற் றரவை**யிலே வாழ்வாய் பராக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லாலி

லாலி சுப லாலிசுப்ர மணியருக்கு லாலி
அருகமரும் வள்ளிதெய்வ யானைக்கும் லாலி
மாலறநம் வினைபோக்கும் சிவனார்க்கும் லாலி
மண்ணுலகில் மங்கலங்கள் தினம்பெருக லாலி
காலமெலாம் வைதிகசை வம்பொலிய வாழும்
கருதரிய மறையவர்க்கு மடியவர்க்கும் லாலி
சீலமுறு **நீர்வை**யினில் நிறை**வாய்க்காற் றரவை**
**மூத்தவிநா யகர்**கருணை பொலிவுறவே லாலி

## மங்களம்

தந்திமுக நாயகர்க்கு மங்களம் - அவர்
தனித்துணையாம் வல்லபைக்கு மங்களம்
வந்தருளும் பார்வதிக்கு மங்களம் - அவர்
பதியாம்பர மேஸ்வரர்க்கு மங்களம்
முந்திவரு முருகனுக்கு மங்களம் - அவர்
முத்தான துணைவியர்க்கும் மங்களம்
செந்திருவாம் இலக்குமிக்கு மங்களம் - அவர்
திருவுடைய மாயவர்க்கு மங்களம்
சந்தமுறு சிவனார்நம் தட்சணா
மூர்த்திக்கும் எந்நாளும் மங்களம்
வந்தமரும் வைரவர்க்கு மங்களம் - தினம்
வழிபடுவோர் யாவருக்கும் மங்களம்.

சுபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்வேலி தெற்கு ஸ்ரீ வீரபத்ர சுவாமி பேரில் திருவூஞ்சல் பாடல்கள்

### காப்பு

*சீரிலங்கைத் திருநாட்டில் யாழ்ப்பாணம் சேர்*
*திருவோங்கும்* ***நீர்வேலிப்*** *பதியின் தென்பால்*
*ஏரிலங்கும் எழில்துலங்கும் இனிமை தங்கும்*
*இசைவிளங்கும் வகையினிலே நல்லோர் தம்மைப்*
*பாரிலங்கும் விதமாகப் பாதுகாக்கும்*
*பரனாரர்நம்* ***வீரபத்ரர்*** *பாதம்போற்றி*
*பேரிலங்கும் சிறப்போடு ஊஞ்சல் பாட*
*பெரியவராம் கணபதியின் கழல்கள் காப்பு.*

### நூல்

*அருமறைகள் கால்களென அதன்மேல் விட்டம்*
*ஆகமங்கள் தாமமைக்க அருளி னோடும்*
*திருமுறைகள் சங்கிலியாய்த் திகழ மேவும்*
*சித்தாந்த சாத்திரங்கள் பலகை யாக*
*பொருந்திவரு புராணங்கள் வடங்க ளாகப்*
*புகல்நான்கு நெறிகளுமே பீட மாக*
*வருமொருநல் லூஞ்சலிலே அமர்ந்து* ***நீர்வைப்***
***பதியுறையும் வீரபத்ர!*** *ஆடீர் ஊஞ்சல்* 01

*சிவப்பேறு நிதம்நாடி வணங்கும் அன்பர்*
*சிந்தனையில் விருப்போடு ஆடீர் ஊஞ்சல்*
*தவமேவும் அடியவர்கள் தாம்கேட் கின்ற*
*வரமீயும் சிவமகனார் ஆடீர்ஊஞ்சல்*
*சிவனாரை நிந்தனைசெய் தக்கன் யாகம்*
*சிதைத்தவரே* ***வீரபத்ர*** *ஆடீர் ஊஞ்சல்*
*உவப்போடு* ***நீர்வேலி தெற்கில்*** *மேவும்*
*ஓங்குபுகழ்* ***வீரபத்ர*** *ஆடீர் ஊஞ்சல்* 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரோடும் வாய்க்கால்கள் வளம்சேர்க் கின்ற
நிறைபதியாம் **நீர்வேலி தெற்கில்** மேவிக்
காராளர் கருத்தினிலே நிறைந்து நாளும்
கருதுவரம் தருமினியர் கடிதில் தோன்றும்
ஆராத கொடும் துயர்கள் பகைகள் போக்கும்
அருந்துணைவர் அருள்**வீர பத்ரசாமி**
சீரான ஊஞ்சலிசை அடியர் பாட
சிந்தையிலே களிகொண்டே ஆடீர் ஊஞ்சல். 03

சந்திரனார் மருமகன்தான் சிவனார் மாமன்
தருக்கோடு தாம் செய்தார் தக்கன் யாகம்
இந்திரனா தியரோடு மலரோன் மாயன்
எண்டிசையின் காவலரும் இவர்கள் எல்லாம்
வந்தனராம் எனின் சிவனார்க் கழைப்பே இல்லை
வளர்செருக்கால் தக்கனவன் பிழைசெய் தானால்
முந்திவரு யாகமதை அழித்தே மாமன்
முதிர்மமதை அடக்கிவைத்தீர் ஆடீர் ஊஞ்சல் 04

அருள்**வீர பத்திரரே** ஆடீர் ஊஞ்சல்
அன்னை பத்ர காளியுடன் ஆடீர் ஊஞ்சல்
மருள்களையும் மகேஸ்வரரே ஆடீர் ஊஞ்சல்
மக்கள்துயர் போக்கிடுவாய் ஆடீர் ஊஞ்சல்
அருள்ஞான நெறிகாட்டி ஆடீர் ஊஞ்சல்
அணைந்தோர்க்குன் பதந்தருவாய் ஆடீர் ஊஞ்சல்
பொருள்சேரும் **பதிநீர்வை தெற்கில்** மேவிப்
புகழ்சேர வீற்றிருந்தீர் ஆடீர் ஊஞ்சல் 05

செந்திருவே செழும்புதையல் போல்வாய் ஆடீர்
செய்கருமம் செயம்தரும்நம் செல்வா ஆடீர்
விந்தைமிகு வீரபத்ர தேவா ஆடீர்
விளைநிலங்கள் காத்திடுவாய் வீரா ஆடீர்
முந்திவரு வினைபோக்கும் முடிவே ஆடீர்
முன்னோர்கள் தாபனம்செய் முதலே ஆடீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்திமுகன் தம்பியென வந்த **நீர்வைத்**
**தலம்போற்றும் வீரபத்ர** ஆடீர் ஊஞ்சல் 06

வாழைமரம் வளர்தோட்டம் மருங்கில் நீள
வளர்தெங்கும் மாமரமும் நிறைந்து காண
சூழவரு பனைமரமும் பலாவும் சேர்ந்தே
குறும்பயிர்கள் குறையாது கொழித்தே ஓங்க
மேழிவளம் மிகு**நீர்வைப் பதியின் தென்பால்**
விரும்பியுறை குலதெய்வம் ஆகிநின்றீர்
ஆழியனும் அயன் தேவர் மறையோர் போற்றும்
அரன்மகனே **வீரபத்ர** ஆடீர் ஊஞ்சல் 07

அலைமகளும் கலைமகளும் வடம்தொட் டாட்ட
ஆதிசிவன் அருகமர்ந்தே மகிழ்ந்து நோக்க
மலைமகளும் மனம்கனிந்தே கருணை பூக்க
கந்தனுடன் கணபதியும் களித்தே ஆட
அலைகடலில் துயில்மாயன் அயனும் காண
அரம்பையர்கள் அணிநடனம் அரங்கில் ஆட
நிலவுலகில் நித்தியமும் இனிமை பூக்க
நிறைவுடனே **வீரபத்ர** ஆடீர் ஊஞ்சல் 08

**ஞாயிறெ**னப் புகழோங்கும் வீர பத்ரர்
**திங்கள்**முகம் தனைநோக்கும் அடியர்சேமம்
தாயெனவே காத்திடத்தம் **செவ்வாய்** சிந்தும்
திகழ்நகையில் அருகிருக்கும் பத்ரகாளி
சேயெனவே குழைந்தன்**பு தனை**யே தேக்கிச்
செழும்கல்**வி யாழன்**ன மொழியும் செல்வம்
ஆயுமிவை யாவுமளித் துலகில் **வெள்ளி**
பூத்ததுபோல் புகழ் **சனி**க்க ஆடீர் ஊஞ்சல் 09

**கார்ப்பெ**னவே கடுந்துன்பம் வருஅவ்வேளை
**கசந்திடும்** நம் மனத்தினிலே தென்பை நல்கி
சீர்மிகுந்த வாழ்க்கையிலே சுவைகள் ஆறும்
**இனிப்**போடும் **துவர்ப்**போடும் இணைந்து மெல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்ந்துவரின் உளமொடுங்கும் **உவர்ப்**பின் றேல்நம்
உணவினிலே சுவையுண்டோ **புளிப்பு**ம் அஃதே
தேர்ந்திவற்றை உணரும்வகை செய்யும் வீர
பத்திரரே நீர்வையிலே ஆடீர் ஊஞ்சல். 10

## வாழி விருத்தம்

பக்தரெலாம் பாருலகில் சிறந்து வாழி
பரன் வாழி பார்வதியும் மகிழ்ந்து வாழி
தக்கோர்கள் நலம்வாழி துதிக்கை யோனும்
தம்பிமுரு கேசனுமே நாளும் வாழி
மிக்கபுகழ் வீரபத்ரர், பத்ர காளி
விருப்போடு வைரவரும் விளங்கி வாழி
பக்கமெலாம் மகிழ்ந்துரைசெய் நீர்வையென்னும்
பதிவாழி சிவநெறியே சிறந்து வாழி 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புன்னாலைக்கட்டுவன், கடவத்துறை
## ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் பேரில்
## திருவூஞ்சற் பாடல்கள்

### காப்பு

சீராரும் **புன்னாலைக் கட்டுவன்** சேர்
செழுமைமிகும் **கடவத்துறைப்** பதியில் மேவி
ஊரார்கள் போற்றிமகிழ்ந் தினிது வாழ
உயர்நலங்கள் அருளுகின்ற எங்கள் அம்மை
பாராளும் இராஜரா ஜேஸ்வ ரிக்குப்
பாங்கான ஊஞ்சலிசை பாடு தற்கு
காரானைக் கணபதியே காப்பென் றுன்னிக்
கழல் தொழுதேன் கற்பகமே அருள்செய்வாயே

### நூல்

ஓதுமா மறைநான்கும் தூண்க ளாக
உயர்வுடைய ஆகமங்கள் விட்ட மாக
நீதிசாஸ் திரநெறிகள் கயிற தாக
நீள்புரா ணங்களவை பலகை யாக
போதமிகு சித்தாந்த சாஸ்தி ரத்துப்
பொற்புறுநற் பீடமதில் திருமுறை யாம்
வேதவிரிப் பினில் அமரும் எங்கள் அம்மை
இராஜரா ஜேஸ்வரியே ஆடீரூஞ்சல் *01*

பக்தியெனும் பயிர்வளர்த்து ஞானம் என்னும்
பழம் கனியக் காத்திருக்கும் அடியர் சூழ
முக்தியெனும் சாரமதை முடிவாய்த் தந்து
முழுமைபெற வைக்குமெங்கள் முதன்மை யான
சக்தியுனைச் சரண்புகுந்தோம் தாயே ஊஞ்சல்
தட்டினிலே வந்தமர்ந்து கருணை யோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கணமே **புன்னாலைக் கட்டுவன்** சேர்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 02

செம்பொருளாம் சிவன்அருகே வீற்றி ருக்கச்
சிறுமுருகன் துணைசேரத் திகழ்க ணேசர்
தம்கரங்கள் தாளமிடத் தலைய சைக்க
நான்முகனும் பிரமனுமே வணங்கி நிற்க
தும்புருவும் நாரதரும் கானம் பாட
உயர்நந்தி மத்தளமும் கொட்டிநிற்க
அம்மை**கட வத்துறை**யில் வீற்றிருக்கும்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 03

தனுக்கரும்பும் மலர்க்கணையும் ஆட ஆடத்
தமிழிசைகேட் டினிமையுடன் தலையும் ஆட
மனுக்குலத்தின் விடிவினுக்காய்ப் பதங்கள் ஆட
மாதரசி கருவிழிகள் மலர்ந்தே ஆட
அனுபவத்தை அனைவருக்கும் ஊட்டு கின்ற
அங்குசமும் பாசமிரு கரத்தில் ஆட
இனிமையுடன் **புன்னாலைக் கட்டுவன்** சேர்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 04

மாமரங்கள் பக்கமெலாம் மனத்தை ஈர்க்கும்
மருதநிலம் பாங்கினிலே வளங்கள் சேர்க்கும்
சேமமுறு மலர்ப்பொழில்கள் மலர்ந்து பூக்கும்
நீர்நிலைகள் ஆங்காங்கே நீரை வார்க்கும்
ஆவினமும் ஆடுகளும் சேர்ந்தே ஆர்க்கும்
அணியணியாய் உழவர்களின் முயற்சி வேர்க்கும்
தேவர்புகழ் புன்னாலைக் கட்டுவன் சேர்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னியர்கள் கரம்குவித்து வரங்கள் கேட்கக்
காளையர்கள் சரியைமுறைக் கடமை ஈட்ட
இன்னிசையை நாதசுரம் இசைத்து நீட்ட
இசைவாகத் தவில்தனிலே கரங்கள் மீட்ட
அன்னையர்கள் பாவிசைக்க மறைநூல் கேட்ட
அந்தணர்கள் ஆகமத்தின் முறைமை காட்ட
பொன்னனைய **புன்னாலைக் கட்டுவன்** சேர்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 06

சித்தாந்த பண்டிதர்கள் வாழும் மேன்மை
செந்தமிழின் நாவலர்கள் சூழும் மேன்மை
முத்தான ஆலயங்கள் பொலியும் மேன்மை
முயற்சியுறு தொழிலாளர் நிறையும் மேன்மை
வித்தான நெல்விளையும் வயலின் மேன்மை
வியாபார வர்த்தகங்கள் வளரும் மேன்மை
இத்தான **புன்னாலைக் கட்டுவன்** சேர்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 07

முந்திவரு மந்திரநீர் மஞ்சள் மாவும்
முகிழ்கனிகள் சேர்பஞ்சா மிர்தம் தேனும்
கந்தமுறு சந்தனமும் தயிரும் பாலும்
கனிவுறுநல் லிளநீரும் இனிய ஆட்டி
அந்தணர்கள் மந்திரமும் முறையின் ஓதி
ஆகமநூல் விதிமுறையில் முழுக்கும் ஆடி
பந்தமுறு **புன்னாலைக் கட்டுவன்** சேர்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 08

பூத்தவளே புவனமெலாம் படைத்துக் காக்கும்
பொலிவுடைய நாயகியே உலகின் தாயே
மாத்தவளே பசுபதிக்கோர் பாகம் ஆகி
மாதங்கன் முருகனையும் தந்தாய் நீயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்தவளே மாதவற்கு முயன்று தேடும்
முனிவர்க்கு எந்நாளும் எளிமை யோடு
வாய்த்தவளே **புன்னாலைக் கட்டுவன்** சேர்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 09

**ஞாயிறு**போல் பேரொளியை ஞாலம் தாங்க
நனி**திங்கள்** போல்குளிர்ந்த தாயே நற்**செவ்**
**வாயி**னிலே முறுவலுடன் அன்**பு** **தன்**னை
அகம்கொண்ட மாத**வியா** **மூன்**ன இன்சொல்
நேயமுடன் **வெள்ளி**மலை யாற்கே சொல்லும்
நெறியுடையாய் நிலவுசிம்மா **சனி**யெம் அன்னை
தாயெனநம் **புன்னாலைக் கட்டுவன்** சேர்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 10

புகழ்பூத்த **புன்னாலைக் கட்டுவன்**சேர்
பொலி**கடவத் துறை**வாழும் அம்மை வாழி
திகழ்சைவத் தொண்டர்கள் வாழி வாழி
திருமுறையும் திருமறையும் வாழி வாழி
தகவுடைய அந்தணர்கள் வாழி வாழி
தமிழறிஞர் சால்புடனே வாழி வாழி
சகம்நிலவும் நாள்வரையும் சைவம் வாழி
சான்றோர்கள் எந்நாளும் வாழி வாழி!!

## லாலி

கற்றவரும் மற்றவரும்
கருத்துடனே வழிபடநற் காட்சிதரும் தேவீ
பற்றுடனே வழிபடும்நல் மக்களுக்கு நலமருள்வாய்
லாலி லாலி
பொற்பலகை மீதமர்ந்து
பொங்குதமிழ்ப் பாடலுக்கு ஆடல் செய்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றிவரும் பகைவிலக்கித் தூயவரைக் காத்தருள்க
லாலி லாலி.

## பராக்கு

எங்கள்துயர் போக்கவந்த எழிலே பராக்கு
ஏகன் சிவன் துணையான பார்வதி பராக்கு
மங்கலங்கள் தரும்தாயே மாதே பராக்கு
இராஜராஜேஸ்வரி அம்மை தாயே பராக்கு

## எச்சரீக்கை

**கடவத்துறை** அமர்ந்தவளே தாயே எச்சரீக்கை
இராஜராஜேஸ்வரியே அம்மா எச்சரீக்கை
திடமாக பக்தி செய்வோம் அன்னாய் எச்சரீக்கை
நிறைவான வாழ்வருள்வாய் மாதே எச்சரீக்கை

## மங்களம்

தந்திமுக நாயகர்க்கு மங்களம் - அவர்
தனித்துணையாம் வல்லபைக்கு மங்களம்
வந்தருளும் பார்வதிக்கு மங்களம் - அவர்
பதியாம்பர மேஸ்வரர்க்கு மங்களம்
முந்திவரு முருகனுக்கு மங்களம் - அவர்
முத்தான துணைவியர்க்கும் மங்களம்
செந்திருவாம் இலக்குமிக்கு மங்களம் - அவர்
திருவுடைய மாயவர்க்கு மங்களம்
சந்தமுறு துர்க்கையுக்கும் மங்களம் - எங்கள்
**இராஜராஜேஸ் வரிஅன்னைக்கு** மங்களம்
வந்தமரும் வைரவர்க்கு மங்களம் - தினம்
வழிபடுவோர் யாவருக்கும் மங்களம்.

சுபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டி, புசல்லாவ, புதிய மெல்போட் தோட்டம்
## ஸ்ரீ முத்துமாரி அம்பிகை பேரில் ஊஞ்சல் பாடல்கள்

### காப்பு

பொலிவுறுநற் புசல்லாவ புதியமெல்போட் தோட்டத்தில்
கலிநீக்கி என்றும் களிப்பருளும் - வலிதான
ஸ்ரீமுத்து மாரி திருவூஞ்சல் பாடுதற்கு
ஸ்ரீசெல்வ விநாயகனே வா

### பாடல்

இருக்காதி மறைநான்கும் கால்க ளாக
இயல்புறுநல் லாகமங்கள் விட்ட மாக
விருப்போடு நாற்பாதக் கயிறு மாட்டி
மேன்மைமிகும் உபநிடதப் பலகை நீட்டி
பருக்கோடிப் பத்திமையாற் பாடு கின்ற
பண்ணிசையாம் வடம்தொட்டே அடியர் சூழ
பொருப்போடு தேயிலைசூழ் **முத்து மாரித்**
தாயேநீ இனிமையுடன் ஆடீர் ஊஞ்சல் 01

சீரிலங்கைத் திருநாட்டின் இதயம் போன்றே
செழுமைபெறும் மலைநாட்டின் நடுவ ணாக
பேருடைய கண்டிநகர் அருகில் மேவும்
பெருமைபெறு **புசல்லாவ** நகரம் சார்ந்தே
ஆரமென நீரோடை அழகு சேர்க்கும்
அணிமலைகள் சூழ்**புதிய மெல்போட் தோட்ட**
**மாரியம்மா** மலைபோல அடியார் நம்பும்
தாயேநீ இனிமையுடன் ஆடீர் ஊஞ்சல் 02

பிரணவத்துப் பெருந்தகையும் வேலனோடு
பெருமையுடன் நினதுபுகழ் பாடியாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகினிலே காத்வரா யனும்நின் றாட
அயன்மாலும் அன்பொழுக இவற்றைப் பார்க்க
அரன்விழிகள் அருள்சொரிய அடியார் சேர்ந்து
ஆராத பக்தியுடன் ஊஞ்சல் பாட
அரவுடனே **புசல்லாவ முத்துமாரித்**
தாயேநீ இனிமையுடன் ஆடீர் ஊஞ்சல் 03

இசைவோடு செல்வவிநா யகர்தாம் வாழ்த்த
இறம்பொடையின் அனுமார்நின் அடிகள் போற்ற
புசல்லாவைக் கதிர்வேலன் புகழ்ந்து பாட
சுற்றிலும்தாய்த் தெய்வங்கள் மகிழ்ந்து ஆட
அசையாத பக்தியுடன் அடியார் போற்ற
அன்போடு அருள்சொரியும் அம்மை நீயே
**புசல்லாவை புதியமெல்போட் முத்துமாரித்**
தாயேநீ இனிமையுடன் ஆடீர் ஊஞ்சல் 04

கீழ்த்திசையை வாள்ராஜா காத்து நிற்கத்
தெற்கினிலே ரோதைமுனி காத்து நிற்க
சூழ்வடக்கில் காளியம்மன் தடைகள் போக்க
துணையாக வடமேற்கில் மாடசாமி
ஏழ்தலமும் காத்துவர இன்னும் ஆங்கே
ஈசானம் முனியாண்டி காவல் செய்ய
சூழ்மேக மலைச்சாரல் **புதிய மெல்போட்**
தாயேநீ இனிமையுடன் ஆடீர் ஊஞ்சல் 05

உரகபடம் சிரமீதில் ஆட ஆட
அக்னிஜடை அதனோடும் ஆட ஆட
கரண்டமொடு சூலமுடன் ஆட ஆட
கரபாசம் டமருகமும் ஆட ஆட
மரகதப்பட் டாடையெனப் பசுமை சூழும்
மலைநாட்டின் நடுவினிலே அமரும் தேவீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரமருளும் **புதியமெல்போட் முத்து மாரித்**
தாயேநீ இனிமையுடன் ஆடீர் ஊஞ்சல் 06

நூற்றாண்டு காலமெமைக் காக்கும் தாயே
ஊழிவரை நமைக்காக்க ஆடீர் ஊஞ்சல்
வேற்றுமைகள் இல்லாமல் விருப்பி னோடு
தேசமெலாம் வாழவைக்க ஆடீர் ஊஞ்சல்
ஊற்றாய்நம் உள்ளொளியாய் உணர்வாய் நாளும்
உள்ளவளே உமையவளே ஊரார் நாளும்
போற்றுமொரு **புதியமெல்போட் முத்துமாரித்**
தாயேநீ இனிமையுடன் ஆடீர் ஊஞ்சல் 07

கணபதியின் வேள்வியுடன் காப்புக் கட்டி
கணித்தவொரு முகூர்த்தத்தில் காலும் நாட்டி
பணிவுடனே மதுரைவீரன் கோவில் மேவிப்
பாங்குடனே முத்துமாரிக் கரகம் வைத்தே
அணிகலன்கள் அழகுதர அருளே பொங்க
ஐந்துதினம் ஊர்வலமாய் வரும்நின் பாதம்
பணிகின்றோம் பக்தியுடன் **முத்து மாரித்**
தாயேநீ இனிமையுடன் ஆடீர் ஊஞ்சல் 08

மாசிமகம் பௌர்ணமியும் மகிமை தங்க
மலையகத்தின் மக்கள்மனம் மகிழ்வு பொங்க
தேசுடைய தேரினிலே அமர்ந்து நீயும்
தெருவினிலே வலம்வரும்நாள் இனிமை பொங்கும்
மாசுடைய மனங்களிலுன் சூலம் பாய்ச்சி
மயல்போக்கி மணியாக்கி மதிப்பை ஊட்டும்
பாசமிகு பத்தினிநீ **முத்து மாரித்**
தாயேநீ இனிமையுடன் ஆடீர் ஊஞ்சல் 09

புற்றினிலே பாம்பாகித் தெரிகின்றாய் நீ
பௌர்ணமியில் திருவிளக்கில் ஒளிர்கின்றாய் நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றுடையார் காவடியில் பயில்கின்றாய் நீ
பணிவோர்கள் கரகத்தில் நிறைகின்றாய் நீ
சுற்றிவரும் தீமிதிப்பில் சுடர்கின்றாய் நீ
சூழ்ந்துவரும் அடியவராய்ப் பொலிகின்றாய் நீ
முற்றிலுமுன் பதம்பணிந்தோம் **புதிய மெல்போட்**
தாயேநீ இனிமையுடன் ஆடீர் ஊஞ்சல்

## பராக்கு

மாமலைகள் சூழுபுசல் லாவைநகர் சேர்ந்தாய்
மாதரசி புதியமெல்போட் தேவி பராக்கு
சாமரைகள் தாமசைக்கத் தாமரையின் தேவி
சரஸ்வதியும் வருகின்றார் தாயே பராக்கு
பூமகளின் புனிதபதி புதியமெல்போட் தேடி
புன்னகைத்து வீற்றிருப்பாய் புனிதா பராக்கு
சேமமுடன் சீரிலங்கை வாழ்ந்திடச்செய் தென்றும்
செம்மையுடன் நல்லருளைத் தருவாய் பராக்கு

## எச்சரீக்கை

சீரார்**புசல் லாவை**நகர் சேர்ந்தாய் எச்சரீக்கை
திருவே அருள் உருவே எங்கள் தேவீ எச்சரீக்கை
பாரோர்புகழ்ந் தேத்தும்பதி **புதிய மெல்போட் தோட்டம்**
பங்காய் அமர்ந்தருள்வாய் எங்கள் தாயே எச்சரீக்கை
ஊரார் துயர் போக்கும் எங்கள் துணையே எச்சரீக்கை
உள்ளம்தனில் ஒளிவீசிடும் ஒளியே எச்சரீக்கை
தாராய்தினம் நிறைவாய்மகிழ் நிலைநம் மலை நாட்டில்
தமியேம் உனதடியார் இதை நினைவாய் எச்சரீக்கை

## லாலி

லாலி சுப லாலி எங்கள் அம்மை சுப லாலி
அருள்மேவிடும் புசல்லாவையில் அமர்ந்தாய் சுப லாலி
லாலி சுப லாலி எங்கள் மாரி சுப லாலி
கருணை வடி வடினாய் எங்கள் தாயே சுப லாலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம்

கண்டிநகர் செல்வவிநா யகர்பாதம் மங்களம்
காவல்புரி தெய்வங்கள் யாவருக்கும் மங்களம்
அண்டிவரும் அடியவர்கள் யாவருக்கும் மங்களம்
அழகுபொலி புதியமெல்போட் தோட்டத்திற்கும் மங்களம்
தண்டமிழின் தனித்தெய்வம் வேலனிற்கு மங்களம்
தாய்த்தெய்வ சக்திகள் யாவருக்கும் மங்களம்
எண்டிசையும் புகழோங்கும் எங்கள்முத்து மாரியின்
இணையடியில் எந்நாளும் இனிதான மங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தூர் கிழக்கு, மீசாலை வீதி, திருவருள்மிகு கருகப்பை ஈஸ்வரன் (அண்ணமார்) என அழைக்கப்படும் ஜெகதாம்பிகை சமேத வேதபுரீஸ்வரர் திருவூஞ்சல் பாடல்கள்.

### காப்பு

*சீராரும்* ***புத்தூரின் கிழக்கில்*** *நல்ல*
***மீசாலை வீதி****யிலே மேவும் எங்கள்*
*ஆராத பக்தியினால் நாளும் போற்றும்*
***அண்ணமார்*** *எனஅழைக்கும்* ***ஈசன்*** *பேரில்*
*மாறாத அன்புடனே ஊஞ்சல் பாட*
*மங்களமாய் வந்தருளும் முதல்வா இங்கு*
*நேராக வந்தெமது பாடல் ஓங்க*
*நெறியருள்க கணபதியே போற்றி போற்றி*

### நூல்

*நலம்திகழும் நால்வேதத் தூண்கள் நாட்டி*
*ஞானம்சேர் உபநிடத விட்டம் பூட்டி*
*நிலம் புகழும் திருமுறையாம் கயிறு மாட்டி*
*நிறைவான ஆகமத்துப் பலகை நீட்டிப்*
*அலங்கார பீடமென பக்தி சேர்த்து*
*அருள்நெறிசேர் சாத்திரங்கள் அலங்கரிக்க*
*குலம் வளரும்* ***புத்தூரின் கிழக்கில்*** *மேவும்*
***கருகப்பை ஈஸ்வரனே*** *ஆடீர் ஊஞ்சல்* *01*

*மாமரமும் வாழையொடு பலாவும் சேரப்*
*பெருமரங்கள் சிறுபயிர்கள் யாவும் நன்கு*
*சேமமுற வளர்ந்தினிதே பயன்கள் நல்கு*
*நன்செய்யும் புன்செய்யும் நிறைந்த* ***புத்தூர்***
*நாமமுடை ஊரினிலே கால்பதித்து*
*நலம் சேர்க்கும்* ***வேதபுரீஸ் வரரே****என்றும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேமதுரப் பாட்டிசைக்க மகிழ்வினோடு
**ஜெகதாம்பி கை**யுடன்இனிதே ஆடீர் ஊஞ்சல் 02

ஆலமர நிழல்தேடி அமர்ந்து நாளும்
**அண்ணமார்** எனும் பெயரில் நம்மைக் காத்து
சீலமுடன் **கருகப்பை ஈசன்** என்னும்
சிறப்புடைய பெயர்தாங்கி அருளை நல்கி
மூலவனாய் முழுவுலகும் தாங்கும் பேராய்
**ஜெகதாம்பிகை** சேரக் கோவில் கொண்டு
காலமெலாம் **வேதபுரீஸ் வரராய்** நின்றே
கனிவுடனே நமக்கருள்செய் தாடீர் ஊஞ்சல் 03

அணிஞ்சிலொடு பனை சூழும் ஆலம் காட்டில்
ஆங்கொருநாள் கல்லாக வீற்றிருந்தீர்
பணிவினொடு விளக்கேற்றும் பக்தர்க்கெல்லாம்
பாங்குடனே அருள்செய்யும் **ஈசன்** ஆனீர்
அணி அணியாய் வரும் ஆட்டுக் கடாக்கள் எல்லாம்
அடுபலியாய் ஏற்றிருந்தீர் அதன்பின் மாறி
கனிவுடனே கொலைதவிர்த்தீர் பூசை ஏற்றீர்
கவின்**புத்தூர் கிழக்கீசா** ஆடீர் ஊஞ்சல் 04

**உருண்டையுடன் மூத்தானும் வல்லி, வேலன்**
உவப்புடனே பூசைசெய ஏற்றிருந்தீர்
வரும் அவர்கள் பரம்பரையை வளர்த்தீர் நாளும்
வணங்கவரும் அடியார்கள் பொங்கல் நேர்த்தி
விருப்பமுடன் ஏற்றினிது மகிழ்ந்தே அன்னார்
வீறுடனே ஆடுகின்ற கூத்தும் ஏற்றீர்
**கருகப்பை ஈசனெனப்** பெயரால் போற்றக்
கனிவுடனே **புத்தூரில்** ஆடீர் ஊஞ்சல் 05

கன்னியர்கள் எழுவருமே அருகில் வந்தார்
கனிவுடனே அவர்களும்நல் அருளைத் தந்தார்
உன்னி அடி யவர்சேர்ந்தே **சப்தகன்னி**
உடன்**அண்ணமார்** பாதம் தொழுது நின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமுறும் வைகாசிப் பொங்கலோடு
தைப்பூசக் காவடியும் சேர்த்துக்கொண்டார்
இன்னமும் இவ் வழிபாடு தொடர என்றும்
இனிதே நல் **ஈஸ்வரனார்** ஆடீர் ஊஞ்சல் 06

கண்ணகியும் **புத்தூரின் அண்ணமார்க்கு**
கருத்துடனே தொடர்புடைய தெய்வமானாள்
எண்ணமுடன் வற்றாப்பளைப் பொங்கலோடு
இசைவுடனே அண்ணமார்க்கும் பொங்கல் சேர
நண்ணிஅடி யவர்பொங்கல் முடித்தே அங்கு
நாடிஅவள் பதம் போற்றிக் கதிர்காமத்தை
எண்ணுகிறார் இதற்கெல்லாம் வழிசமைத்தாய்
**கருகப்பை ஈஸ்வரனே** ஆடீர் ஊஞ்சல் 07

சங்கொலியும் பறையொலியும் முழங்கி ஓங்க
தமிழ்வேதத் திருமுறையும் இணைந்தே தேங்க
எங்கணுமே பானைகளில் பொங்கல் வைத்தே
எழில் நாயக வழுந்தினையே தொடர்ந்து பேண
மங்கையர்கள் பட்சணங்கள் பலவும் ஆக்க
மகிழ்வுடனே **புத்தூரின் கிழக்கில்** மேவி
இங்கிவற்றை உவந்தேற்கும் **அண்ணமாராம்**
**வேதபுரி ஈஸ்வரரே** ஆடீர் ஊஞ்சல் 09

வழிவழியாய் வந்தமர பேற்று மேலும்
வளர்நோக்கில் ஆகமத்துப் பிரமாணத்தில்
எழில்மிகுந்த கோபுரம் சேர் கோவில் கொண்டு
இசைவுடனே குடமுழுக்கு நன்னீராட்டும்
வழிவழியாய் வரும் குருவால் நடத்தப்பெற்று
வாஞ்சைமிகு **ஜெகதாம்பிகை** அருகில் சேர
களிப்புடனே **வேதபுரீஸ் வரராய்** நின்றீர்
கருகப்பை ஈஸ்வரரே ஆடீர் ஊஞ்சல் 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழி விருத்தம்

புத்தூர் எனும பதியும் வாழி வாழி
புகழ் அடியார் பொலிவினொடு வாழி வாழி
மத்தமிகும் கணபதியும் வாழி வாழி
வைரவரும் பாங்குடனே வாழி வாழி
எத்திசையும் இனிமையுற வாழி வாழி
எழில் பொங்க எந்நாளும் வாழி வாழி!
புத்தூரின் கருகப்பை ஈசர் வாழி
புகல்அண்ணமார் பெயரும் வாழி வாழி!

## எச்சரிக்கை

புத்தூர்ப்பதி தனிலே உறை ஈசா எச்சரிக்கை
புனிதா எங்கள் உளம் மேவிடும் அண்ணமார்எச்சரிக்கை
அத்தா ஜெக தாம்பிகை பாகா எச்சரிக்கை
அருளே புரி வேத புரீஸ்வர நாதா எச்சரிக்கை

## பராக்கு

ஜெகதாம்பிகை நாதா எங்கள் தேவா பராக்கு
வேதபுரி ஈஸ்வரனே நாதா பராக்கு
அகமே நிறை அமுதா எங்கள் அண்ணமார் பராக்கு
புத்தூரின் கருகப்பை ஈசா பராக்கு

## லாலி

லாலி சுப லாலி அண்ண மார்க்கு அரும் லாலி
அருகமர்ந்து அருள்சுரக்கும் அன்னையர்க்கும் லாலி
லாலி வேத புரீஸ்வர வித்தகர்க்கு லாலி
ஜெகதாம்பிகை அன்னையிற்கும் என்றும் சுப லாலி.

மங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தூர், மணற்பகுதி
## ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் பேரில் திருவூஞ்சற் பாடல்கள்

### காப்பு

புகழ்பூத்த **புத்தூரின்** வடபால் சாரும்
பொலிவுதரு **மணற்பகுதி** மேவும் எங்கள்
அகம்பூத்த அன்னைபுவ னேஸ்வ ரிக்கு
அருள்பூத்த ஊஞ்சலிசை பாடு தற்கு
முகம்பூத்த முறுவலுடன் துதிக்கை காட்டி
முதல்வணக்கம் ஏற்றருளும் பிள்ளை யாரே
சகம்பூக்கும் தடக்கையால் அபயம் காட்டித்
தமிழ்தந்து தமியேனைக் காக்க காக்க!

### நூல்

சீராரும் திருவடியார் உளத்தில் பொங்கும்
செழுமைமிகு பக்தியெனும் கால்கள் நாட்டி
ஆராத அன்புருகி அவர்தாம் பாடும்
அரும்பாடல் அவைதாமே விட்ட மாக்கி
மாறாத மரபுடனே மனங் கசிந்து
மகிழ்வோடு புரிபணிகள் கயிறதாக்கி
வீறாரும் விழைவுமிகும் இதயம் என்னும்
விரிபலகை அமர்ந்தினிதே ஆடீர்ஊஞ்சல் 01

மூத்தவனாம் கணபதிதன் கரங்கள் கொட்ட
முருகனவன் முன்னின்று கூத்தும் ஆட
ஆத்தாள்நம் வாணிகரம் வீணை மீட்ட
அருகமர்ந்தே இலக்குமியும் கவரி வீச
ஏத்துபுகழ் சிவனார்தாம் மறைகள் ஓத
திருமாலும் குழலூத நால்வர் பாட
கீர்த்திமிகும் **புதுவைமணற் பகுதி மேவும்**
**புவனேஸ்வரி** அம்மையினி தாடீர் ஊஞ்சல். 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதியர்கள் ஓதிவரும் வேதம் ஓர்பால்
மேன்மைதரும் ஆகமத்தின் கிரியை ஓர்பால்
நாதவொலி நடம்பயிலும் நலங்கள் ஓர்பால்
நர்த்தனங்கள் செய்துவரும் நளினம் ஓர்பால்
போதமுறு தமிழ்வேதப் பண்கள் ஓர்பால்
பொலிவுதரும் அடியவரின் குரல்கள் ஓர்பால்
சீதவயல் **மணற்பகுதிப் புதுவை மேவும்**
**புவனேஸ்வரி** அம்மையினி தாடீர் ஊஞ்சல். 03

பாசவினைக் கட்டுகளில் தவிக்கும் ஆன்ம
பந்தவினை அகற்றிவழிப் படுத்தும் நோக்கில்
பாசமுடன் அங்குசமும் கரத்திலேந்திப்
'பழவினைகள் பாற்றுகிறேன் வருக' என்றே
நேசமுடன் அபயகரம் காட்டி மாந்தர்
நினைவரங்கள் அருள்வரத கரமும் காட்டி
ஊசல்மிசை அமர்ந்தினிதே முறுவல் பூக்கும்
**புவனேஸ்வரி** அம்மையினி தாடீர் ஊஞ்சல். 04

சிவனாரின் அருந்துணையே ஆடீர் ஊஞ்சல்
சிவனடியார் அன்னையும்நீ ஆடீர் ஊஞ்சல்
கவலைகளைத் தீர்த்துவைப்பாய் ஆடீர் ஊஞ்சல்
கண்கண்ட தெய்வம்நீ ஆடீர் ஊஞ்சல்
பவவினைகள் பழுக்கவைப்பாய் ஆடீர் ஊஞ்சல்
பசுபதியின் பதம்சேர்ப்பாய் ஆடீர் ஊஞ்சல்
தவம்பொலியும் **புதுவைமணற் பகுதி மேவும்**
**புவனேஸ்வரி** அம்மையினி தாடீர் ஊஞ்சல். 05

அங்குசம்ஓர் கரத்தினிலே ஆட ஆட
அழகுறுநற் பாசம்மறு கரத்தில் ஆட
தங்குமெழில் வரதகரம் ஆட ஆட
தாங்கபய நற்கரமும் ஆட ஆட
பங்கயநற் திருமுடியும் ஆட ஆட
பயில்முறுவல் வதனமுமே ஆட ஆட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்குமெழிற் **புதுவைமணற் பகுதி மேவும்**
**புவனேஸ்வரி** அம்மையினி தாடீர் ஊஞ்சல். 06

எழிலான இடதுபதம் மடித்தே தோன்ற
ஏற்றமுடன் தொங்கும்வலப் பாதம் தோன்றக்
களிப்போடு கனிமுகமும் மலர்ந்து தோன்றக்
கம்பீரமாய் மகுடம் தலையில் தோன்ற
இளமதியும் மகுடமதில் இலங்கித் தோன்ற
இருதனமும் தாய்மையுடன் குழைந்து தோன்ற
வளம்சேரும் **புதுவைமணற் பகுதி மேவும்**
**புவனேஸ்வரி** அம்மையினி தாடீர் ஊஞ்சல். 07

கிழக்கினிலே உப்பாற்றுக் கடலின் காற்று
கிளர்தெற்கில் தெங்கிளனீர் தழுவும் தென்றல்
வளம்சேரும் வடக்கினிலே வயலின் வாடை
வருமடியார் அசைந்துவரும் காற்று மேற்கே
உளமாரத் துதிசெய்ய உகந்த சூழல்
உவந்தேற்று உறுதியுடன் அமர்ந்த தாயே
வளம்சேரும் **புதுவைமணற் பகுதி மேவும்**
**புவனேஸ்வரி** அம்மையினி தாடீர் ஊஞ்சல். 08

பட்டருக்காய் மனமுருகித் தாடங் கத்தைப்
படர்வானில் நிலவெறிப்ப எறிந்தாய் ஆடீர்
இட்டமுடன் குமரகுரு பரர்க்கே அன்று
எழில்முத்து மாலைதனை அணிந்தாய் ஆடீர்
சிட்டர்மகன் தோணிபுரத் தோன்றல் வாயில்
திருமுறைக்காய் ஞானப்பால் சுரந்தாய் ஆடீர்
கட்டெழில்நற் **புதுவைமணற் பகுதி மேவும்**
**புவனேஸ்வரி** அம்மையினி தாடீர் ஊஞ்சல். 09

**புவனேஸ்வரி** அம்மைதினம் வாழி வாழி
**புதுவைமணற் பகுதி**யுறை அடியர் வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமதமும் தமிழ்மொழியும் வாழி வாழி
செம்மையுறும் வடமொழியும் சிறந்து வாழி
தவநெறிசேர் தருமமுறை வாழி வாழி
தத்துவமும் கலைவளமும் தனித்து வாழி
சிவமகனார் கணபதியும் கந்தன் வாழி
சேத்திரபா லகனாரும் வாழி வாழி!!

## லாலி

கற்றவரும் மற்றவரும்
கருத்துடனே வழிபடநற் காட்சிதரும் தேவீ
பற்றுடனே வழிபடும்நல் மக்களுக்கு நலமருள்வாய்
லாலி லாலி
பொற்பலகை மீதமர்ந்து
பொங்குதமிழ்ப் பாடலுக்கு ஆடல் செய்வாய்
சுற்றிவரும் பகைவிலக்கித் தூயவரைக் காத்தருள்க
லாலி லாலி.

## பராக்கு

சிங்காரப் **புவனேஸ்வரி** அருள்வாய் பராக்கு
சீறிவரும் துயர்போக்க வருவாய் பராக்கு
மங்கலம்செய் **மணற்பகுதித்** தாயே பராக்கு
மகிமைமிகு **புத்தூரில்** உறைவாய் பராக்கு
எங்கள்துயர் போக்கவந்த எழிலே பராக்கு
ஏகன் சிவன் துணையான பார்வதி பராக்கு
மங்கலங்கள் தரும்தாயே மாதே பராக்கு
வயல்சூழும் பதிவாழும் தாயே பராக்கு

## எச்சரீக்கை

**மணற்பகுதி** அமர்ந்தாய் எங்கள் தாயே எச்சரீக்கை
மலர்முகத்தாய் **புவனேஸ்வரித்** தேவீ எச்சரீக்கை
மணமலர்கள் சொரிகின்றோம் அன்னாய் எச்சரீக்கை
மனம் நிறைவாய் வாழ்வருள்வாய் மாதே எச்சரீக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தூர் கிழக்கு, குமாரசாமி வீதி,
## குருநாத சுவாமி பேரில் திருவூஞ்சல் பாடல்கள்.

### காப்பு

புகழ்பூத்த புத்தூரின் குமாரசாமிப்
பெயருடைய வீதியிலே பொலியும் வேலர்
அகம்பூத்த அன்புநிறை அடியார் போற்ற
அமர்ந்தினிதே அருள்செய்யும் ஞானசீலர்
முகம்பூத்த முறுவலுடன் முருகனாகி
முகிழ்த்துவரும் குருநாத சுவாமி பேரில்
சகம்போற்றும் திருவூஞ்சல் பாட நாளும்
தமிழ்தருக கணபதியே போற்றி போற்றி

### நூல்

சீராரும் நால்வேதத் தூண்கள் நாட்டிச்
சிறப்புடனே உபநிடத விட்டம் பூட்டி
ஆராத பக்தியெனும் கயிறு மாட்டி
ஆகமத்துப் பலகையதில் உவந்து நீட்டிப்
பேரான திருமுறையாம் பீடம் சேர்த்துப்
பெருமைதரும் சாத்திரங்கள் அலங்கரிக்க
நீராரும் புத்தூரின் கிழக்கில் மேவும்
குருநாத சுவாமிஇனி தாடீர் ஊஞ்சல் 01

வயல்சூழும் மருதநிலம் இனிதுமேவி
வருகிழக்கில் உப்பாற்றுக் கடலை நோக்கி
இயல்பாக எளிமைமிகும் அடியர் வாழும்
குடிமனைகள் நிறைந்தருகே நெருங்கித் தோன்ற
குயில்கூவும் உயர்மரங்கள் நிறைந்து நாளும்
குளிர்தென்றற் காற்றினிலே தலையசைக்க
மயில்மீது வரும் முருகா புத்தூர்மேவும்
குருநாத சுவாமியினி தாடீர் ஊஞ்சல் 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன்கோவில் மணிகேட்கும் மேற்கில் நாளும்
சிறுவர்களின் படிப்பொலியும் சேர்ந்து கேட்கும்
தவமுடையார் போற்றுமொரு தேரம்பிள்ளை
தனித்திருக்கும் தலம் அருகே வடபால் காணும்
உவந்தருகே வைரவரின் காவல் தோன்றும்
ஊர்நிறையக் கோவில்களின் ஒலிகள் கேட்கும்
சிவம்பொலியும் புதுவையிலே சிறக்கும் எங்கள்
குருநாத சுவாமிஇனி தாடீர் ஊஞ்சல் 03

புனிதமிகு பதிகளிலே விரும்பி வாழும்
புகழ்முத்துக் குமரனெனும் முருகவேலா
புனிதநிலை குறைவதனைக் கண்டதாலே
வடக்கிருந்து தென்திசையில் சிறிதுநீங்கி
இனியதொரு புதியநிலை இடத்தைக் காட்டி
இருந்தென்றும் அருள்கின்ற சுப்ரமண்யா
கனிவுடனே பாடுகிறோம் களித்துநோக்கிக்
குருநாத சுவாமிஇனி தாடீர் ஊஞ்சல் 04

கதிர்காமர் கனவினிலே கதைகள்சொன்ன
கதிர்வேலா கருணையுடன் ஆடீர் ஊஞ்சல்
புதுமைபல செய்தெங்கள் மனம் கவர்ந்த
சுடர்வேலா சுந்தரமாய் ஆடீர் ஊஞ்சல்
புதுவையிலே குமாரசாமி வீதி நாடிப்
பொலிவுடனே வீற்றிருப்பாய் ஆடீர் ஊஞ்சல்
எதுநமது தேவையெனத் தெரிந்து நல்கும்
குருநாத சுவாமிஇனி தாடீர் ஊஞ்சல் 05

சிவனாரின் நுதல்விழியில் சுடராய்த் தோன்றித்
தீ, வளி, வான் மூன்றினையும் கடந்து நீரில்
தவமியற்றும் சரவணப்பொய் கையிலே ஊன்றித்
தாமரையில் குழவியென உருவம் தாங்கி
பவமடையாக் கார்த்திகைப்பெண் அறுவர் மார்பில்
பாலுண்டு பார்வதியின் கரத்திலொன்றாய்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமகனாய் வேலவனாய்ப் புதுவை மேவும்
குருநாத சுவாமிஇனி தாடீர் ஊஞ்சல் 06

அருட்சுடரே அருவுருவே ஆடீர் ஊஞ்சல்
அடியவர்தம் அருங்குருவே ஆடீர் ஊஞ்சல்
பொருட்களிலே பெரும்பொருளே ஆடீர் ஊஞ்சல்
புகழ்பூத்த பொன்மணியே ஆடீர் ஊஞ்சல்
மருப்பொடித்த மகற்கிளையாய் ஆடீர் ஊஞ்சல்
மயிலேறும் மால்மருகா ஆடீர் ஊஞ்சல்
திருப்பொலியும் புத்தூரின் கிழக்கில் தோன்றும்
குருநாத சுவாமிஇனி தாடீர் ஊஞ்சல் 07

தந்திமுகன் மாங்கனியைத் தான்பெற்றேகத்
தாய்தந்தை தமைநீக்கிப் பழனியேறி
இந்தவிதம் விளையாட்டாய்த் துறவின் மேன்மை
எமக்குரைத்த எழிலுருவே தண்டபாணி
முந்திவரும் வினைகளையும் வழிகள் காட்டி
முத்திநெறிக் கெமையழைத்துச் செல்லும் ஞான
பண்டிதனே பரகுருவே பரமன்மைந்தா
குருநாத சுவாமிஇனி தாடீர் ஊஞ்சல் 08

பிரணவத்தின் பொருளறியாப் பிரமதேவர்
பீடழித்துப் புகழடைந்த ஞானவேலா
அரனமர்ந்து பொருள்கேட்கக் குருவாய் மாறி
அவர்செவியில் உரைவிளக்கம் செய்தசீலா
குருவெனும் ஓர் உயர்பதவிச் சித்தாந்தத்தைக்
குவலயத்திற் குணர்த்தியநற் குமரபாலா
வரமெமக்குத் தரவிரும்பிப் புதுவை மேவும்
குருநாத சுவாமிஇனி தாடீர் ஊஞ்சல் 09

சிவனுமையின் நடுவினிலே குழந்தையாகிச்
சீர்பெறுநல் லறப்பயனைக் காட்டும் செல்வா
தவப்பயனை ஈட்டுமொரு தண்டபாணி
தனித்திருக்கும் பாலசுப்ர மணிய தேவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவப்புடனே வள்ளிதெய்வ யானை சேரும்
உன்னதமுத் துக்குமரப் பேரின் நாதா
குவலயத்தில் அறுமுகனாய் விளங்கும் போதா
குருநாத சுவாமிஇனி தாலேர் ஊஞ்சல்

## வாழி விருத்தம்

திருப்பொலியும் புதுவைநகர் வாழி வாழி
சிவனடியார் சிவப்பொலிவாய் வாழி வாழி
விருப்புடனே வேலவனும் வாழி வாழி
இருமருங்கும் வள்ளிதெய்வ யானை வாழி
மருங்கமரும் கணபதியும் வாழி வாழி
வைரவரும் பாங்குடனே வாழி வாழி
கருத்துடனே சுமித்திரரும் வாழி வாழி
காசினியும் களிப்புடனே வாழி வாழி!

## எச்சரீக்கை

புத்தூர்ப்பதி தனிலே உறை குகனே எச்சரீக்கை
பணிவோர் மனம் அருளால் நிறை நாதா எச்சரீக்கை
வைத்தார்மனம் உன்பாதம் தனில் கனிவாய் எச்சரீக்கை
மாந்தர்மன இருள்போக்கிடும் ஒளியே எச்சரீக்கை

## பராக்கு

வள்ளிதெய்வ யானையுடன் அமர்வாய் பராக்கு
வடிவேலாய்க் காட்சிதரும் கந்தா பராக்கு
புள்ளிமயில் மீதமர்வாய் வேலா பராக்கு
புத்தூரின் குருநாத சாமீ பராக்கு

## லாலி

லாலி சுப லாலிகுரு நாதருக்கு லாலி
அருகமர்ந்து அருள்சுரக்கும் அன்னையர்க்கும் லாலி
மாலறநம் வினைபோக்கும் முருகருக்கு லாலி
மண்ணுலகில் மங்கலங்கள் தினம்பெருக லாலி.

மங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தூர், வாதரவத்தை வேலங்காட்டு இயமாவில் துர்க்கையம்மன் மீது திருவூஞ்சல் பாடல்கள்

### காப்பு

சீராரும் புத்தூரில் சிறப்புச் சேரும்
திருவுடைய வயல்சூழும் மருத மண்ணில்
பேரான வாதரவத் தைவே லங்காட்(டு)
ஊர்நாடி இயமாவில் குறிச்சி மேவும்
ஆராத அன்புமிகும் துர்க்கை அம்மன்
அடிபோற்றி ஊஞ்சலிசை பாட, நாளும்
காரானைக் கணபதியே அருள்க நாதா
கேதுவுப்பேர்ப் பதியமர்ந்தாய் அருள்க மாதோ!

### நூல்

சரியைமுதல் நாற்பாதம் கால்களாகத்
தமிழ்மறையாம் திருமுறைகள் விட்டமாக
அருமறைகள் அவைதாங்கும் கயிறுமாக
ஆகமத்துப் பலகையினில் அகிலம் போற்றப்
பெருமைமிகும் பிரணவத்துப் பீடம் ஏறிப்
பிறவியெனும் நோய்தீர்க்கும் மருந்தாய் வந்த
திருவுடைய **வாதரவத் தைவே லங்காட்**
**டியமாவில் துர்க்கையினி தாடீர் ஊஞ்சல்.1**

ஈசன்திசை மேவுதிருக் கேதுவுப் பேர்த்
திருப்பதியின் நாயகனும் கிழக்கே மன்னும்
தேசுடைய கன்னிகையர் எழுவர்தாமும்
தேயுவிலே விரவாணித் தாயும் தெற்கில்
ஆசகலும் அண்ணமார் புதுவை மேவும்
அருள்சிவனார் மேற்கினிலே தேரம் பிள்ளை
நேசமுடன் வரவேற்க வந்தமர்ந்தாய்
**இயமாவில் துர்க்கையினி தாடீர் ஊஞ்சல்.2**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலையுடன் வாணியிரு மருங்கு சார்ந்து
கவரியினை அருமையுடன் பணிந்து வீச
தமதிருபூங் கரம்சேர்த்துக் கந்தன் தாளம்
தான்போடக் கணபதியும் நடனம் ஆட
எமதிருகண் போதாதிக் காட்சி காண
எனத்தேவர் குழாம்எண்ணிக் குளிர்ந்து நோக்க
அமரர்புகழ் **வாதரவத் தைவே லங்காட்**
**டியமாவில் துர்க்கையினி தாடீர் ஊஞ்சல்.3**

மதிமயக்கம் கொண்டமகி ஷாசுரன்தன்
மயக்கறுத்த மதியுடையாய் ஆடீர் ஊஞ்சல்
புதுமையுடன் சும்பநிசும் பர்கள்மாளப்
போர்நடத்தும் புகழுடையாய் ஆடீர் ஊஞ்சல்
மதுகைட பர்களினை மாய்த்த தேவி
மாயவினை போக்கியினி தாடீர் ஊஞ்சல்
புதுமைமிகு **வாதரவத் தைவே லங்காட்**
**டியமாவில் துர்க்கையினி தாடீர் ஊஞ்சல்.4**

அருச்சுனன்தன் வேண்டுதலை ஏற்றே அந்நாள்
அடுபகைவர் துயர்போக்கிப் பாண்டவர்தம்
விருப்புதனை நிறைவேற்றி வெற்றி நல்கி
விளைபுகழால் மகிழ்ந்தனையே துர்க்கையம்மா
நெருப்பிடையே எறும்பாகித் துயரில் மாளும்
நின்னடியார் துயர்போக்கி நலங்கள் சேர்ப்பாய்
விருப்புடைய **வாதரவத் தைவே லங்காட்**
**டியமாவில் துர்க்கையினி தாடீர் ஊஞ்சல்.5**

அந்தணர்கள் அவிசொரிந்தே துர்க்கா சூக்த
அருமறைகள் ஓதிவர மகிழ்வி னோடு
புந்தியிலே புத்துணர்வும் புதிய வீரப்
பொலிவுதரும் புகழ்வாழ்வும் நல்கும் தேவீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தையிலே உனை இருத்திச் சிரங்கள் தாழ்த்திச்
சிறுமதியால் புகழ்பாடித் துதிக்கின் றோம்நாம்
விந்தைமிகு **வாதரவத் தைவே லங்காட்**
**டியமாவில் துர்க்கையினி தாடீர் ஊஞ்சல்.6**

ஆண்டுதொறும் தென்திசையில் இரவி சாயும்
அயனத்தில் கார்காலக் கன்னி மாதம்
நீண்டுவரும் நவதினத்தில் நிலவு நீளும்
நெடும்பொழுதில் துர்க்கையம்மா உன்னை எண்ணி
வேண்டுவதை நீஅறிவாய் விரைந்து வந்தே
விரும்புவரம் தந்திடுவாய் கதிவே றில்லோம்
நீண்டபுகழ் **வாதரவத் தைவே லங்காட்**
**டியமாவில் துர்க்கையினி தாடீர் ஊஞ்சல்.7**

புதுவையிலே புகழ்வாதர வத்தை சேரும்
புண்ணியவூர் இயமாவில் வேலங் காட்டுப்
பதியினிலே அமர்செல்வீ ஆடீர் ஊஞ்சல்
பத்தினியே துர்க்கையம்மா ஆடீர் ஊஞ்சல்
கதிநீயென் றுனைநாடி வந்தோம் எங்கள்
கதிர்நீயே ஒளிவீசிக் காப்பாயம்மா
கதிர்பொலியும் **வாதரவத் தைவே லங்காட்**
**டியமாவில் துர்க்கையினி தாடீர் ஊஞ்சல்.8**

துர்க்கையெனும் பெயர்படைத்த சுடரே ஆடீர்
துயரனைத்தும் போக்குமருட் தாயே ஆடீர்
துர்க்குணங்கள் துடைக்குமொரு தூயோய் ஆடீர்
சூழ்கொடுநோய் போக்குபரி காரி ஆடீர்
மர்த்தனங்கள் செய்பகைவர் மருண்டே ஓட
மாயவிளை யாட்டருளும் மாயே ஆடீர்
அர்த்மிகு **வாதரவத் தைவே லங்காட்**
**டியமாவில் துர்க்கையினி தாடீர் ஊஞ்சல்.9**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூயவளே துர்க்கையம்மா ஆடீர்ஊஞ்சல்
சுடர்க்கொடியே துயர்களைவாய் ஆடீர்ஊஞ்சல்
தாயவளே சமர்த் தலைவீ ஆடீர்ஊஞ்சல்
தாரணியின் தனித்துணைவீ ஆடீர்ஊஞ்சல்
மாயமிகு மடப்பிடியே ஆடீர்ஊஞ்சல்
மங்கையர்தம் குலவிளக்கே ஆடீர்ஊஞ்சல்
நேயமிகு **வாதரவத் தைவே லங்காட்**
**டியமாவில் துர்க்கையினி தாடீர் ஊஞ்சல்.10**

## வாழி விருத்தம்

எம்பெருமான் கணபதியும் வாழி வாழி
இயமாவில் துர்க்கையம்மை வாழி வாழி
அம்மையுடன் அரன்அருளும் வாழி வாழி
அருள்பெருகும் கந்தனுமே வாழி வாழி
செம்மையுடன் காவல்செயும் க்ஷேத்ர பால
வைரவரும் மனம்கனிந்து வாழிவாழி
இம்மையுடன் மறுமையுமே இனிமை தங்க
இயமாவில் திருவடியார் வாழி வாழி.

## எச்சரிக்கை

பெருமைமிகும் உனதின்னருள் பேசும்தொழி லுடையோம்
பிறிதொன்றினை அறியோம்இனித் தாயே எச்சரிக்கை
கருணைபுரி தேவீ **இய மாவில்** பதி அமர்ந்தாய்
கணநாதனை அருள்மாதெங்கள் துர்க்கா எச்சரிக்கை
உரிமையுடன் பதி**வாதர வத்தை**தனில் வாழும்
உமையேபர சிவநாயகி தேவீ எச்சரிக்கை
அரக்கர்குலம் வதம்செய்தன்று அமரர் குலம் காத்தாய்
அம்மாஎம தடியார்துயர் தவிர்ப்பாய் எச்சரிக்கை

## லாலி

புகழ்பூத்த புதுவைதனில் வாதரவத் தையிலேவாழ்
துர்க்கையிற்கு லாலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகமேழும் காத்தருளும் சங்கரற்கும் வாய்த்த துணை
சங்கரிக்கும் லாலி
முகமாறு கொண்டமுரு கேசனுக்கும் மூத்தவற்கும்
பைரவர்க்கும் லாலி
தகவோடு தமிழ்பாடும் அடியார்கள் யாவர்க்கும்
சண்டிக்கும் லாலி
லாலி சுப லாலி.

## பராக்கு

வளர்**புதுவைப்** பதியினிலே வாழ்வாய் பராக்கு
வரம்நல்கும் நமதன்னை துர்க்கா பராக்கு
கழனிகள்சூழ் **வாதரவத் தையின்வேலங்காட்டு**
**இயமாவில்** உறைதேவி துர்க்கா பராக்கு
மகிஷனைச்சங் காரம்செயும் மாதே பராக்கு
மகிழ்வான தேவர்களின் தலைவீ பராக்கு
அகிலமும்நின் அடியிணைகள் சரணடைதல் காண்பாய்
ஆதிசக்தி அனைவரையும் காப்பாய் பராக்கு

## மங்களம்

புத்தூரின் துர்க்கைக்கு சுப மங்களம்
புதுக்கோயில் அமர்தாயே சுப மங்களம்
சித்தத்தில் தினம் வாழ்வாய் சுப மங்களம்
சிவனாரின் துணை நீயே சுப மங்களம்
பக்தர்கள் துயர்தீர்ப்பாய் சுப மங்களம்
பகைபோக்கி எமைக்காப்பாய் சுப மங்களம்
முத்திக்கு வழி நீயே சுப மங்களம்
உனைப்போற்றி மகிழ்வோமே சுப மங்களம்

**சுபம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலம்பிராய் கண்ணகை அம்மன் என வழங்கும் சிவகாமி அம்பிகை பேரில் திருவூஞ்சல் பாடல்கள்

### காப்பு

ஈழமதன் சிரசான யாழ்ப்பா ணத்தில்
இலங்குமொரு திருவூராம் **வேலம்பி ராய்**
சூழுமடி யார்க்கருளும் **கண்ணகி**த் தாய்
குடிகொண்ட அப்பதியில் குறைகளின்றி
வாழுமடி யார்போற்றி ஊஞ்சல் பாட
மனங்கொண்ட எனதுள்ளம் மகிழ்ந்து மேவி
நீளுமருள் தந்தருள்க பிள்ளை யாரே
நிதமுன்றன் பாதமலர் போற்றுவேனே

### நூல்

கால்களென நால்வேதம் நிமிர்ந்து தோன்றும்
கருதரிய உபநிடதம் விட்ட மாகும்
மேலான ஆகமங்கள் கயிற தாகும்
திருமுறைகள் பலகையெனப் பரந்து தாங்கும்
ஆல்போலத் தழைத்தோங்கும் சாத்தி ரங்கள்
அரும்பீடம் எனஅமையும் ஊஞ்சல் மேவி
**வேலம்பி ராய்ப்பதி**யில் விரும்பி வாழும்
கண்ணகியே சிவகாமி ஆடீரூஞ்சல் 01

இலங்கைமணித் திருநாட்டின் வடபால் காணும்
எழில்மேவும் யாழ்ப்பாணம் **தென்ம ராட்சி**
நலம்சேரும் **கோவிலாக் கண்டி** என்னும்
தமிழ்மன்னர் புகழ்சேர்த்த பதிம ருங்கே
புலம்சூழும் புண்ணியம்சேர் **வேலம்பி ராய்**
பொலிவுபெற வந்தமர்ந்த கண்ணகித் தாய்
இலங்குமருட் கோவில்கொண்ட அம்மா எங்கள்
கண்ணகியே சிவகாமி ஆடீரூஞ்சல் 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேல்வடிவில் மைந்தன் உனைக் காவல்செய்ய
விரும்பிஒரு கடல்வழியே பிரப்பங் கூடை
சூழ்கலத்தில் மிதந்தீழ யாழ்ப்பா ணத்தின்
சுடர்தென்ம ராட்சியதன் களப்பை நாடிக்
கால்பதித்தாய் பிராட்டி உனைப் பிராய்என் போம்நாம்
கதிர்வேலன் அருகினிலே கோவில் கொண்டான்
**வேல் அம் பிராய்** என்று பேரும் தந்நதாய்
கண்ணகியே சிவகாமி ஆடீரூஞ்சல் 03

வயல்சூழும் குறிஞ்சிநிலம் ஒருபால் மேவும்
வரைசூழும் நெய்தல்நிலம் மறுபால் மேவும்
இயல்போடு கமம்செய்வார் குடியிருப்பும்
இசைவோடு மருங்கினிலே நெருங்கித் தோன்றும்
செயல்வீரர் மரத்தொழிலர் சேர்ந்து வாழும்
செம்மைமிகு **தச்சந்தோப்** பருகில் மேவும்
கயல்விழியாள் கருணையினால் யாவும் வாழக்
கண்ணகியே சிவகாமி ஆடீரூஞ்சல் 04

**தேவராசேந் திரமுதலி** தமிழ்வேந் தர்பால்
திடமாக வைத்திருந்த விசுவா சத்தால்
மாவரமாய்க் கிடைத்தநிலம் தன்னில் வந்து
மனமகிழ்வாய் உறைதேவீ முதலியின்பின்
யாவரவர் வழிவந்தார் அவர்கள் உந்தன்
அரும்பணிகள் ஆற்றவென வகையும் செய்தாய்
தேவரெலாம் தொழும்வகையில் வீற்றிருக்கும்
கண்ணகியே சிவகாமி ஆடீரூஞ்சல் 05

நகர்**சாவ கச்சேரி** அருகில் தோன்றும்
**கைதடி**யூர் கவினோடு மருங்கில் தோன்றும்
பகர்**நாவற் குழி**யூரும் பாங்கில் காணும்
**மறவன்புல** வென்னுமொரு ஊரும் தோன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகரில்லா நெடுங்கடலின் அலைகள் பாயும்
நீளொலியும் நின்னருகே நெருங்கிக் கேட்கும்
புகழ்மிக்கார் நின்பணிகள் நாளும் செய்ய
கண்ணகியே சிவகாமி ஆடீரூஞ்சல் 06

மந்திரநூல் மறையொலிகள் ஒலிக்கும் ஓர்பால்
மாமணியின் நாதஒலி ஓங்கும் ஓர்பால்
முந்திவரு நாதஸ்வர கானம் ஓர்பால்
முகிழ் லயம்சேர் தவிலின்ஒலி முழங்கும் ஓர்பால்
சந்தம்நிறை திருமுறையும் ஒலிக்கும் ஓர்பால்
சந்ததமும் சங்கொலிக்கும் இன்னும் ஓர்பால்
விந்தைநிறை **வேலம்பிராய்ப்** பதியில் வாழும்
கண்ணகியே சிவகாமி ஆடீரூஞ்சல் 07

அந்தணர்தம் ஆகுதியில் மகிழ்ந்தே ஆடீர்
அருந்தமிழ்ப்பண் ணிசைகேட்டே விரும்பி ஆடீர்
சுந்தரத் தேன் குழல் ஒலியில் மயங்கி ஆடீர்
தூயவர்தம் பக்திநலம் மெச்சி ஆடீர்
தந்தனத்தோம் நாட்டியத்தில் களித்தே ஆடீர்
தவம்மிகுந்தார் செய்நெறியில் திழைத்து ஆடீர்
சிந்தைமகிழ் **வேலம்பிராய்ப்** பதியில் வாழும்
கண்ணகியே சிவகாமி ஆடீர் ஊஞ்சல் 08

இருகரத்தோ டெழில்வடிவம் தருவாய் ஆடீர்
திரிபங்கத் திருக்கோலம் கொண்டாய் ஆடீர்
ஒருகரத்தில் மலர்கொண்டாய் ஆடீர் ஊஞ்சல்
தொங்குகரம் மறுகரமாய்க் கொண்டே ஆடீர்
அருநடனச் சிவன்பாகம் கொண்ட தேவீ
அம்மைசிவ காமிஇனி தாடீர் ஊஞ்சல்
கருணையினால் **வேலம்பிராய்ப்** பதியில் மேவும்
கண்ணகியே சிவகாமி ஆடீர் ஊஞ்சல் 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஞாயிறு**போல் ஒளிவிளங்கத் **திங்கள்**போல
நற்குளிர்மை நலம் சேரச் **செவ்வாய்** ஓரம்
தோயுமொரு புன்னகையால் துயர்கள் போக்கி
தூயமன அன்**புதனை**க் கொண்டோர் வாழ
வாயுநுகர் **வியாழன்**அணி கலனாய்க் கொண்டே
மணி **வெள்ளிப்** பீடமதில் ஆ**சனி**த்தே
நேயமுடன் வேலம்பிராய்ப் பதியில் மேவும்
கண்ணகியே சிவகாமி ஆடீர் ஊஞ்சல் 10

## வாழி விருத்தம்

ஓதுமறை அந்தணர்கள் வாழி வாழி
உணர்வரிய சாத்திரங்கள் வாழி வாழி
சேதுகா வலப்பிள்ளை யாரும் வாழி
சேர்ந்து வரும் வேலவனும் வாழி வாழி
மாதுசிவ காமிஎனும் கண்ணகித்தாய்
மகிழ்ந்து தினம் அருள்பொலிய வாழி வாழி
பாதிஉடல் தந்தசிவன் வாழி வாழி
பதிகாக்கும் வைரவரும் வாழி வாழி

## பராக்கு

வளர்**வேலம் பிராய்**தனிலே வாழ்வாய் பராக்கு
வரம்நல்கும் கண்ணகியே வருவாய் பராக்கு
வளர்தென்னை பனைசூழும் பதிவாழும் தேவீ
வாழ்த்துகிறோம் வந்தெமைநீ காப்பாய் பராக்கு
குளிர்வயல்கள் நிறைசோலை அமர்ந்தாய் பராக்கு
குரைகடலின் களப்பமர்ந்த சுடரே பராக்கு
களிப்போடு கடல்மீதில் வந்தாய் பராக்கு
கண்ணகியே கழல்பணிவோம் காப்பாய் பராக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எச்சரீக்கை

சீரார்**சிவ காமிஎனும்** தேவீ எச்சரீக்கை
திருவே அருள்உருவே எங்கள் தாயே எச்சரீக்கை
பாரோர்புகழ்ந் தேத்தும்எழில் **வேலம்பிராய்ப்** பதியில்
பாங்காய் அமர்ந்தருள்வாய் எங்கள் திருவே எச்சரீக்கை
ஊரார் துயர் போக்கும் எங்கள் துணையே எச்சரீக்கை
உள்ளம்தனில் ஒளிவீசிடும் அருளே எச்சரீக்கை
தாராய்தினம் நிறைவாய்மகிழ் நிலைநம் திருநாட்டில்
தமியேம் உனதடியார் இதை நினைவாய் எச்சரீக்கை

## லாலி

லாலி சுப லாலி எங்கள் அம்மை சுப லாலி
அருள்மேவிடும் வேம்பிராயில் அமர்ந்தாய் சுப லாலி
லாலி சுப லாலி சிவ காமீ சுப லாலி
கருணை வடி வடினாய் எங்கள் தாயே சுப லாலி

## மங்களம்

தந்திமுக நாயகர்க்கு மங்களம் - அவர்
தனித்துணையாம் வல்லபைக்கு மங்களம்
வந்தருளும் பார்வதிக்கு மங்களம் - அவர்
பதியாம்பர மேஸ்வரர்க்கு மங்களம்
முந்திவரு முருகனுக்கு மங்களம் - அவர்
முத்தான துணைவியர்க்கும் மங்களம்
செந்திருவாம் இலக்குமிக்கு மங்களம் - அவர்
திருவுடைய மாயவர்க்கு மங்களம்
வந்தமரும் வைரவர்க்கு மங்களம் - தினம்
வழிபடுவோர் யாவருக்கும் மங்களம்.

*சுபம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கானை, குடுபனை
## ஞானவைரவர் பேரில் ஊஞ்சல் பாடல்கள்

### காப்பு

ஈழமதன் சிரசான **யாழ்ப்பா ண**த்தில்
எழில்வயல்சூழ் **சங்கானைப்** பதியில் மேவி
நாளுமடி பரவுமடி யார்கள் வாழ்வில்
நலம் சேர்க்கும் **குடுபனை** சேர் **வைரவர்**க்கு
சூழுமொரு பக்தியினால் ஊஞ்சல் பாடத்
துணைவருவாய் தும்பிமுகா பதம் பணிந்தோம்
ஏழிசையும் இசைப்பயனும் பாட்டில் சேர
இன்னருளை நல்கிடுவாய் பிள்ளை யாரே

### பாடல்

நல்லசிவா கமம் உயர்ந்த விட்ட மாக
நான்மறையாம் நற்கயிறும் ஆங்கே மாட்டி
சொல்லு தமிழ்த் திருமுறைகள் பலகை யாக
சித்தாந்த சாத்திரங்கள் பீட மாக
தொல்பழம்சீர்ப் புராணமெனும் தூண்கள் மீதே
ஓங்கியநன் மண்டபத்தே அடியார் கூடி
எல்லையிலா பக்தியுடன் ஊஞ்சல் பாட
**குடுபனை**சேர் வைரவரே ஆடீர் ஊஞ்சல் 01

ஆனைமுகம் அசைந்தாடச் செவிகள் ஆட
அருகினிலே கணபதியும் மகிழ்ந்தே ஆட
வான்புகழும் சிவனார்தாம் உமையினோடு
மகிழ்வுடனே அருகமர்ந்து தாளம் போட
மேன்மைமிகு முருகனவர் தாமும் ஆட
மூஷிகமும் நந்தியுடன் நாயும் ஆட
ஆன்மநலம் சேர்பதியாம் **சங்கானை** சேர்
**குடுபனை**யின் வைரவரே ஆடீர் ஊஞ்சல் 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிரமீதில் அக்னிஜடை ஆட ஆட*
*சிறப்போடும் சேர்வதனம் ஆட ஆட*
*இரத்தநிறத் தேகமொடு சூலம் ஆட*
*கரபாசம் டமருகமும் ஆட ஆட*
*கரமதனில் கபாலமுமே ஆட ஆட*
*கனிவுடைய கண்களுமே ஆட ஆட*
*வரமருளும் **சங்கானைப்** பதியில் மேவும்*
***குடுபனை**யின் வைரவரே ஆடீர் ஊஞ்சல் 03*

*நூற்றாண்டு காலமெமைக் காக்கும் தேவா*
*ஊழிவரை நமைக்காக்க ஆடீர் ஊஞ்சல்*
*வேற்றுமைகள் இல்லாமல் விருப்பி னோடு*
*தேசமெலாம் வாழவைக்க ஆடீர் ஊஞ்சல்*
*ஊற்றாய்நம் உள்ளொளியாய் உணர்வாய் நாளும்*
*உள்ளவரே வைரவரே ஊரார் நாளும்*
*போற்றுமொரு **சங்கானைப்** பதியில் மேவும்*
***குடுபனை**யின் வைரவரே ஆடீர் ஊஞ்சல் 04*

*சூலமுடன் கல்வடிவில் இருந்தாய் ஓர்நாள்*
*சூழும்அடி யவர்குடிகள் காப்பாய் நாளும்*
*சீலமுடன் வாழும்கலை வாணர் சூழும்*
*செழுமையுறு **சங்கானைப்** பதியில் மேவும்*
*நாலுவகை மாந்தருமுன் பாதம் காணில்*
*நலமோடும் ஒருமனமாய் நாடு வார்கள்*
*காலமெலாம் பக்தர்க்கருள் வடுக நாதா*
***குடுபனை**யின் வைரவரே ஆடீர் ஊஞ்சல் 05*

*சங்கைநகர் சங்கமித்த சங்கைச் சூலா*
*சதிபுரியும் தீவினைகள் மாய்க்கும் காலா*
*கங்கையணி சங்கரனார் மகிழும் பாலா*
*கார்த்திகையின் பாலனுடன் களிகொள் சீலா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்குமிசை பொங்கிவர வீதி சூழ்ந்தே
ஏழிசையைத் தான் சுவைத்து வருநம் வேந்தே
இங்கெமது இன்னல் களை இனிய காந்தா
குடுபனையின் வைரவரே ஆடீர் ஊஞ்சல் 06

நீர்நிலைகட் கதிபதியே ஆடீர் ஊஞ்சல்
நிலபுலன்கள் காப்பவனே ஆடீர் ஊஞ்சல்
ஊர்நிறைந்த பக்தரெல்லாம் உன்பால் வந்து
உனதுபதம் பணிந்தேத்த ஆடீர் ஊஞ்சல்
சீர்மிகும்உன் சிரம்மீதில் மாலை சூடி
செழிப்பான வாழ்வுபெறும் புதுமைகாண் போம்
பேர்மிகுந்தாய் பெருங்கருணைத் திருவே எங்கள்
**குடுபனை**யின் வைரவரே ஆடீர் ஊஞ்சல் 07

பிரமனவன் தனக்கும் ஐந்து தலைகள் என்றே
பெருமையுடன் சிவன்போலத் தானும் எண்ணித்
தருக்குடனே நின்றதனைக் கண்ட தாலே
தக்கதொரு பாடமொன்று புகட்ட வேண்டி
சிரமொன்றைக் கிள்ளியவன் செருக்க டக்கி
நான்முகன்என் றவன்பெயரை மாற்றி வைத்தாய்
அருள்நிறைந்த **சங்கானைப்** பதியில் மேவும்
**குடுபனை**யின் வைரவரே ஆடீர் ஊஞ்சல் 08

வயல்சூழும் மருதநிலம் தோன்றும் ஓர்பால்
மக்கள்நிறை குடிமனைகள் தோன்றும் ஓர் பால்
மயல்விழியார் பக்தியுடன் கீதம் பாடும்
மாண்புநிறை காட்சியுமே காணும் ஓர்பால்
உயர்வான சிவாகமத்துப் பூஜை ஓர்பால்
ஊக்கமுடன் சரியைபுரி அடியர் ஓர்பால்
இயல்பாக அனைவரையும் காக்கும் சங்கை
குடுபனையின் வைரவரே ஆடீர் ஊஞ்சல் 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தரெலாம் பாருலகில் சிறந்து வாழி
பரன் வாழி பார்வதியும் மகிழ்ந்து வாழி
தக்கோர்கள் நலம் வாழி துதிக்கையோனும்
தம்பிமுரு கேசனுமே வாழி வாழி
மிக்கபுகழ் வைரவரும் வாழி வாழி
விளங்கு துணை சாமுண்டி வாழி வாழி
பக்கமெலாம் போற்றும்**சங் கானை** மேவும்
**குடுபனை**யின் வைரவரே ஆடீர் ஊஞ்சல் 10

## எச்சரீக்கை

அத்தா**சங் கானை**ப்பதி அரனே எச்சரீக்கை
அடியார் மனம் அருளால் நிறை நாதா எச்சரீக்கை
வைத்தார்மனம் உன்பாதம் தனில் கனிவாய் எச்சரீக்கை
மாந்தர்மன இருள்போக்கிடும் ஒளியே எச்சரீக்கை

## பராக்கு

**சங்கானைப்** பதியமர்ந்த ஈசா பராக்கு
சால்போடு **குடுபனை**யில் அமர்ந்தாய் பராக்கு
மங்காத வரமருளும் மன்னா பராக்கு
மக்களெமைக் காத்தருள்வாய் தேவா பராக்கு

## லாலி

லாலி சுப லாலி எங்கள் வைரவர்க்கு லாலி
**சங்கானைப்** பதிவாழும் ஈசருக்கு லாலி
மாலறநம் வினைபோக்கும் வைரவர்க்கு லாலி
மண்ணுலகில் மங்கலங்கள் தினம்பெருக லாலி.

## மங்களம்

தந்திமுக நாயகர்க்கு மங்களம் - அவர்
தனித்துணையாம் வல்லபைக்கு மங்களம்
வந்தருளும் பார்வதிக்கு மங்களம் - அவர்
பதியாம்பர மேஸ்வரர்க்கு மங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்திவரு முருகனுக்கு மங்களம் - அவர்
முத்தான துணைவியர்க்கும் மங்களம்
செந்திருவாம் இலக்குமிக்கு மங்களம் - அவர்
திருவுடைய மாயவர்க்கு மங்களம்
வந்தமரும் வைரவர்க்கு மங்களம் - தினம்
வழிபடுவோர் யாவருக்கும் மங்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

# நிறுவனங்களும் நானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவனங்களின் பாடல்கள்

## பூபாள ராகங்கள் – இசைப் பாடல்கள்.

*(வடமராட்சி, கம்பர்மலை வித்தியாலய பழையமாணவர் சங்க லண்டன் கிளையினரின் வருடாந்தப் பெருவிழா பூபாளராகங்கள்.)*


*170. இந்து சமுத்திரத்தின்................ 253*
*171. கம்பனது பேர் சொல்லும் கம்பர்மலை... 255*
*172. புத்தம்புது நாளின்........... 256*

*173. வலிகாமம் தெற்கு பிரதேச செயலக கீதம் 257*
*174. யாழ் சமூக அபிவிருத்தி மன்ற கீதம் 258*
*175. நீர்வேலி ஸ்ரீ முருகன் மாதர் சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்க கீதம் 259*
*176. யாழ். மத்தியகல்லூரி - பரிசளிப்பு விழா - வரவேற்புப் பாடல் 2008 - 260*
*177. யாழ். சென்ற். ஜோன்ஸ் கல்லூரி - பரிசளிப்பு விழா - வரவேற்புப் பாடல் 2007 - 261*
*178. யாழ். சென்ற். ஜோன்ஸ் கல்லூரி - பரிசளிப்பு விழா - வரவேற்புப் பாடல் 2007 - 263*
*179. யாழ். சென்ற். ஜோன்ஸ் கல்லூரி - பரிசளிப்பு விழா - வரவேற்புப் பாடல் 2009 - 265*
*180. கோப்பாய் அரிமாக் கழகம் - வெள்ளி விழா - நீத்தார் பெருமை 267*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூபாள ராகங்கள் ~ இசைப் பாடல்கள்.

(வடமராட்சி, கம்பர்மலை வித்தியாலய பழையமாணவர் சங்க லண்டன் கிளையினரின் வருடாந்தப் பெருவிழா பூபாளராகங்கள்.)

### 1. இந்து சமுத்திரத்தின்................

தந்தன தான தனத்தன தான
தந்தன தான தனத்தன தான
தன தான தந்தானனா

இந்துசமுத்திர நித்திலமொன்று
இத்தரை மீதினில் பேரொளி வீசும்
எந்நாளும் நாம் பாடுவோம்.
மந்திரமில்லை தந்திரமில்லை
மனத்தினில் உறுதி கொண்டவர் நாங்கள்
மகிழ்வோடு நாம் ஆடுவோம்
இந்துசமுத்திர............

வந்தன பேரிடர் எத்தனைகோடி
வாழ்வைத் தொலைத்தவர் எத்தனை கோடி
வளம்காண நாம் ஓடினோம்
சிந்தனைதன்னில் துயர்களை மூடிச்
செயல்தனில் ஊக்கமும் வேகமும் நாடி
செழுமைக்குள் நாம் நீடுவோம்
இந்துசமுத்திர............

வடதிசை ஈழம் கொம்மந்தறையில்
கம்பர்மலையின் வித்யாலயமே
வயலாகி எமைத் தந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடமுடன் நாமும் திசைபல கண்டு
தேசத்தின் பெயரும் தாயவள் புகழும்
தினந்தோறும் வளர்த்தோங்குவோம்
இந்துசமுத்திர.....................

தமிழ்மொழி ஓங்கத் தருபல பண்பும்
தமிழிலக் கியமும் கலைவள மாண்பும்
தரணிக்குத் தர வாழ்கிறோம்
அமிழ்தெனும் அன்னை துயர்பல நீங்கி
அரியணை மீதில் அரசுகள் காணும்
அதற்காக நாம் வாழுவோம்.
இந்துசமுத்திர.........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. கம்பனது பேர்சொல்லும் கம்பர்மலை.............

கம்பனது பேர்சொல்லும் கம்பர்மலை - அது
காணுமிடம் ஈழமதில் கொம்மந்தறை
கம்பர்மலை பெற்றபயன் வித்யாலயம் - அது
கடல்கடந்து லண்டனிலும் காணும்புகழ்
( கம்பனது.............)

கல்விதந்த அன்னைபுகழ் தினம்பாடுவோம் - அதன்
கதியுயரப் புலம்பெயர்ந்தும் நாம் கூடுவோம்
சொல்லமுடி யாததுயர் பலகண்டனம் - எனின்
சோர்வின்றித் தினம்நாமும் உழைக்கின்றனம்
( கம்பனது.............)

இருளோடு இருளாக நாம்ஓடினோம் - இங்கு
இரவுபகல் பாராது பொருள்தேடினோம்
அருளோடு அறிவென்றும் ஊட்டும்அன்னை -எழில்
ஆலயமாம் வித்யாலயப் புகழ்நாடுவோம்
( கம்பனது.............)

ஈழத்தின் நற்பெயரை நிலைநாட்டுவோம் - நம்
இன்தமிழின் புகழ்க்கொடியை வானேற்றுவோம்
வாழவைத்த வித்யாலயப் பெயர்போற்றுவோம் - நல்
வளமோங்கப் பூபாள இசைபாடுவோம்
( கம்பனது.............)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. புத்தம்புது நாளின்.....................

புத்தம்புதுநாளின் புதுவரவை நோக்கி
பூபாளம் நாம் பாடுவோம்
இத்தரையின்மீது இன்தமிழின் பேரை
எங்கணுமே நாம் காணுவோம்
(புத்தம்புது................)

சித்தமதில் கேண்மை சிந்தனையில் மேன்மை
செயல்களிலே நாம் பேணுவோம்
உத்தமர்கள் ஆக உன்னதங்கள் தேடி
உலகெங்கும் நாம் போகலாம்
(புத்தம்புது................)

ஈழம் எங்கள் நாடு இன்தமிழ் எம் அன்னை
எங்கள் சிந்தை இதுவே என்றும்
வாழும்வகை தேடி வந்தவர்கள் நாங்கள்
வாழவைக்கப் போராடுவோம்.
(புத்தம்புது................)

கொம்மந்தறைப் பேரும் கம்பர்மலை யூரும்
கூடும் எங்கள் வித்யாலயம்
செம்மையுடன் மேலும் சீர்மை பல கண்டு
செழித்துவரப் பண்பாடுவோம்.
(புத்தம்புது................)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் தெற்கு பிரதேச செயலகம் – உடுவில்

### பிரதேச செயலக கீதம்

#### பல்லவி

வளம்சேரும் வலிகாமம் தென்பகுதி வாழ்கவே
வளர்பயிரும் கால்நடையும் மானிடரும் வாழ்கவே
வளம்சேரும்......

#### அனுபல்லவி

உளம்மகிழ ஊக்கமுடன் ஒருகுடையில் வாழுவோம்
உத்தமர்கள் காட்டியபண் பாட்டினிலே நாளுமே
வளம்சேரும்....

#### சரணங்கள்

மரபுதரும் மக்கள்கலைப் பாரம்பரி யத்துடன்
மாண்புமிகும் புத்துணர்வுப் பொலிவுதரும் இலக்கியம்
உரம்சேர்க்கும் கைத்தொழில் வாணிப வளங்களும்
உயர்ஆன்ம நலம்சேர்க்கும் தெய்வீக நிலைகளும்
வளம்சேரும்....

உழவர்களும் தொழிலாளர் உத்தியோ கத்தரும்
உயர்வுதரு கல்விகலை பண்பாட்டுச் செல்வரும்
வளம்சேர்க்கும் வணிகரும் சைவமொடு கிறீஸ்தவ
மதநெறியில் நலம்சேர்க்கும் குரவர்களும் வாழ்கவே
வளம்சேரும்....

ஆணிவே ரெனநிற்கும் பாரம்பரி யத்துடன்
அழகுபொலி மலர்போலும் அறிவார்ந்த செல்வமும்
பேணிவளர் விஞ்ஞானம் தொழில்நுட்பம் தொடர்பாடல்
பெருமையுடன் இவையாவும் ஒருமையுடன் உயர்ந்தோங்க
வளம்சேரும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். சமூக அபிவிருத்தி மன்ற கீதம்

யாழ் சமூக அபிவிருத்தி மன்றம் வாழ்க வாழ்கவே
வாழ்வில் மக்கள் அனைவருக்கும் விழுமியங்கள் ஓங்கவே
வாழ்வில் மக்கள் அனைவருக்கும் விழுமியங்கள் ஓங்கவே
(யாழ் சமூக....)

ஞானப்பிர காசர்இட்ட வித்தில்வளர் மரமிது
மானத்தோடு மக்கள் வாழ வழிகள்சொல்லும் வரமிது
ஊனம் ஒன்றும் இல்லையென்று உள்ளம் துள்ளும் உரமிது
வானம் தொட்டு மீளஎண்ணும் வலிமைமிக்க தரமிது
(யாழ் சமூக....)

மாதர்தமமை ஏற்றத்தோடு வாழவைக்க எண்ணுவோம்
நீதியோடு சுயமுயற்சி நெறிநடந்து உண்ணுவோம்
வேதம் எங்கள் மழலைகட்குப் பிஞ்சினிலே ஊட்டுவோம்
வேதனைகள் கொண்டவர்க்கு வெற்றிப்பாதை காட்டுவோம்
(யாழ் சமூக....)

தக்கவாறு சமநலத்தில் நாளும் சிந்தை கொள்ளுவோம்
பக்தியோடு பாரின்மீது பாடுபட்டு வெல்லுவோம்
சிக்கனத்தில் சிந்தைவைத்து சேமநிதி பேணுவோம்
இக்கணத்தில் இன்பவாழ்வின் ஆரம்பத்தைக் காணுவோம்
(யாழ் சமூக....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்வேலி ஸ்ரீ முருகன் மாதர் சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச்சங்க கீதம்

*(கும்மிப்பாடல் மெட்டு)*

*பெண்களை எங்கள் சமூகத்தின் மத்தியில்*
*மேன்மை பெறச்செய்ய நாம் உழைப்போம்*
*கண்கள் அவர்எனும் நற்கருத் தோடவர்*
*தேவைகள் யாவும் நிறைவு செய்வோம்*
*(பெண்களை....)*

*நீர்வேலி ஸ்ரீமுருகன் மாதர் சிக்கன*
*கடன்வழங்கு கூட்டு றவுச்சங்கம்*
*ஆர்வமு டன்உ ழைத் தேஎன்றும் மாதரின்*
*வாழ்க்கை நிலைதனை மேம்படுத்தும்*
*(பெண்களை....)*

*நம்மை வளர்ப்பவர் கூட்டுற வாளர்கள்*
*நாமும் அவர்வழி யேநடப்போம்*
*எம்மை உயர்த்திட வித்திட்ட கந்தையா*
*வேதவல்லி பெயர் நாம் நினைப்போம்*
*(பெண்களை....)*

*போட்டிகள் வைத்துப் பரிசு கொடுப்பதும்*
*பயிற்சி வகுப்புகள் வைப்பதுவும்*
*கூடிப் பலகருத் தாடல்கள் செய்வதும்*
*எங்கள் சபை செயும் நற்பணிகள்*
*(பெண்களை....)*

*சேமிப்பும் வங்கிச் செயல்களும் நாம் செய்து*
*தேவைக்கு நற்கடன் சேவைகளும்*
*நாமிங்கு செய்வதால் மாதர்தம் வாழ்க்கையில்*
*நாளும் வளர்ச்சிபெற் றோங்குகிறார்.*
*(பெண்களை....)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
# பரிசளிப்பு விழா -2008
# வரவேற்புப் பாடல்

பல்லவி

யாழ்ப்பாணம் மத்தியகல் லூரியெனும் எங்கள்அன்னை
வாழ்வாங்கு வாழ்வதற்கு வாழ்த்திடவே வாருங்களே
(யாழ்ப்பாணம்)

அனுபல்லவி

ஏழ்கடலும் புகழ்வீசி எழிலோடு வளம்சேர்க்கும்
எங்கள் அன்னை பரிசளிப்பு விழாக்காண வாருங்களே
(யாழ்ப்பாணம்)

சரணங்கள்

யாழ்ப்பாணம் சர்வகலா சாலையிலே வணிகத்துறைத்
தலைவரென விளங்குகிற **கந்தசாமி அருள்வேல்**நம்
யாழ்.மத்திய கல்லூரிப் பழையமாண வர்இன்றெம்
முதன்மைபெறு விருந்தினராம் வருகவென வரவேற்போம்
(யாழ்ப்பாணம்)

விருந்தினரின் அருந்துணைவி இந்துமகளிர் ஆசிரியை
வணிகத்துறைப் பட்டதாரி **ஸ்ரீரமணி அருள்வேல்**நம்
பெருமைபெறு மாணவர்க்குப் பரிசில்களை வழங்கிடவே
விருப்புடனே வருகைதந்தார் அன்புடனே வரவேற்போம்
(யாழ்ப்பாணம்)

கல்வித்திணைக் களம்சாரும் கற்றோரே பெரியோரே
கருணைமிகு பெற்றோரே அதிபர்களே குருமாரே
பல்துறையில் நமக்குதவும் பழையமாண வர்மற்றும்
நலன்விரும்பும் யாவருமே வருக கரம் கூப்புகிறோம்
(யாழ்ப்பாணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயின்ற். ஜோண்ஸ் கல்லூரி பரிசளிப்பு விழா 2007
## வரவேற்புப் பாடல்

**இராகமாலிகை**

தாளம்: ஆதி, திஸ்ரநடை.

புனித யோவான் கல்லூரியில் பரிசில் நாள்இன்று - ஊர்
புகழும் நாள் இன்று - பெருமை
திகழும் நாள் இன்று - எங்கள்
தனித்திறமை யாவும் பெற்றோர் காணும் நாள் இன்று - உளம்
மகிழும் நாள் இன்று - ஊக்கம்
வளரும் நாள் இன்று (புனித)

என்றும் இளமை யான எங்கள் சுந்தரம்பிள்ளை - பால
சுந்தரம்பிள்ளை - முன்னாள்
உபவேந்தராம் - வாழ்நாள்
என்றும் பேரா சிரியர் என்று பெருமை பெற்றவர் - புவியியல்
கல்வி வல்லுநர் - புதுமைகள்
செய்து வெல்பவர் (புனித)

இன்று அவர் அதிதியாக வருகை தந்தனர் - துணைவியும்
கூட வந்தனர் - எம்மைப்
பெருமை செய்தனர் - நாமும்
அன்பு பொங்க வருக என்று வரவு கூறுவோம் - வாழ்த்தி
வணங்கி நிற்கிறோம் - ஆசி
வேண்டி நிற்கிறோம் (புனித)

அதிதி யவர் அருந்து ணைவி ராஜ லட்சுமி - கலைப்
பட்ட தாரியாம் - ஓய்வுறும்
ஆசிரியை யாம் - இங்கு
புதிய பல பரிசில்களை வழங்க வந்தனர் - எங்கள்முகம்
பூக்க வந்தனர் - கல்விதனை
ஊக்க வந்தனர் (புனித)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழகத்தின் குருமுதல்வர் தலைமை தாங்குவார் - வழி
காட்டி நிற்பவர் - எம்மை
நெறிப்படுத்துவார் - நாம்
நீளவணங் கும்பெரியார் நேசகுமாராம் - சேனா
நேசகுமாராம் - அவர்
வருக வருகவே (புனித)

கல்விஅதி காரிகளே பெற்றோர்களே - பழைய
மாணவர்களே - அபி
மானம் கொண்டோரே - உமை
நல்வரவு சொல்லும் சென்ஜோண்ஸ் மாணவர் நாமே - இங்கு
வாருங்கள் நீரே - அன்பு
கூருவம் நாமே. (புனித)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென்ற். ஜோன்ஸ் கல்லூரி பரிசளிப்பு விழா 2007
## வரவேற்புப் பாடல்
(அதே பாடல், வேறொரு வகை)

**இராகமாலிகை**

### பல்லவி

சென் ஜோண்ஸ் கல்லூரியிலே பரிசில் நாளாம் - இன்று
சிறப்போடு நாம் எல்லாம் மகிழும் நாளாம்
(சென் ஜோண்ஸ்)

### அனுபல்லவி

அன்போடு வருகைதந்தார் அதிதியாக - கலாநிதி
பாலசுந்த ரம்பிள்ளை துணைவியோடு
(சென் ஜோண்ஸ்)

### சரணங்கள்

வாழ்நாட்பே ராசிரியர் பாலசுந்தரம் - பிள்ளை
உபவேந்தர் பதவியிலே பணிகள் செய்தனர்
ஏழிசையில் பாவிசைத்து வரவேற்கிறோம் - இங்கு
வருக எங்கள் கல்லூரி மகிழ்வு பொங்கவே
(சென் ஜோண்ஸ்)

ஓய்வுபெற்ற ஆசிரியை ராஜ லட்சுமி - கலைப்
பட்ட தாரி, துணைவேந்தர் துணைவியானவர்
ஓய்விலாது மாணவரை ஊக்கும் உத்தமி - இங்கு
ஒப்பரிய பரிசில்பல நல்க வருகவே!
(சென் ஜோண்ஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழகத்தின் குருமுதல்வர் நேசகுமாராம் - அவர்
யாவருக்கும் வழிகாட்டும் தலைவரானவர்
நீளவணங் கும்பெரியார் உம்மை நாங்களே - மிக
நேசமுடன் வரவேற்போம் வருக வருகவே!
*(சென் ஜோண்ஸ்)*

கல்விஅதி காரிகளே பெற்றோர்களே - பழைய
மாணவர்களே அபிமானம் கொண்டோர்களே
நல்வரவு சொல்லிஉங்கள் யாவரையுமே - நாம்
வரவேற்போம் வருக எங்கும் மகிழ்வு தங்கவே!
*(சென் ஜோண்ஸ்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென்ற். ஜோண்ஸ் கல்லூரி பரிசளிப்பு விழா 2009
## வரவேற்புப் பாடல்

**இராகமாலிகை**

*பரிசில் பெறும் நாள் இந்த நாளே - சென் ஜோன்ஸ்*
*மாணவர்கள் நாமின்று மகிழ்வோடு பெருமையுடன்*
*(பரிசில் பெறும் ..........)*

*கருணையுடன் அதிதியென வந்தார் - யாழ்*
*பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் துணைவியுடன்*
*(பரிசில் பெறும் ..........)*

ஆக்க இசை விற்பன்னர், சமூகவியல் ஆய்வாளர்,
கவிஞர், கலை வல்லாளராம்
ஊக்கமுடன் பலநாடு சென்றுபல விருதுபெறும்
**சண்முக லிங்கம்** என்பார்
போற்றரிய தெல்லிநகர் மஹாஜனவின் மாணவர்
கொழும்பில்உயர் கல்விபெற்றார்
ஆற்றல்மிகு கலாநிதி அரியபே ராசிரியர்
வருக என வரவேற்கிறோம்.
*(பரிசில் பெறும் ..........)*

பரிசுதர வருகின்ற **கௌரிசண் முகலிங்கம்**
அம்மையார் அறிவில் மிக்கார்
பெருமைதரு முதுதத்வ மாணியாய் வேம்படி
மகளிர்கல் லூரிதனிலே
பரிவோடு கற்பிக்கும் பண்பாளர் இசையாளர்
பதிவாழ்வில் பாதியானார்
உரிமையுடன் அன்போடு உளமாரப் பரிசில்தர
உவப்போடு வருக! வருக!
*(பரிசில் பெறும் ..........)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணக்கத்திற் குரியவர் வாழ்வினில் பெரியவர்
நமதுநற் குருமுதல்வர்
இணக்கமுடன் எம்கல்வி செழித்தோங்க வகைசெய்து
தலைமையுற வருகைதந்தார்
துணிவோடு தூயபணி செய்பிதா நேசகுமார்
அடிகளார் அவரை இங்கே
பணிவோடு கரம் கூப்பி வரவேற்பு நாம்சொல்வோம்
பெருமகிழ் வோடுவருக
(பரிசில் பெறும் ..........)

கல்வியதி காரிகள் கற்றறிந்த பெரியோர்கள்
நலனோம்பும் நல்ல அன்பர்
பல்லிடம் தனில் வாழும் பழையமா ணவர்கூட்டம்
பாங்குடைய பெற்றோர்களும்
வல்லவர்நம் ஆசிரிய வாண்மைமிகு குருமாரும்
மற்றுமுள யாவரையுமே
பல்முறை பணிவோடு வணக்கங்கள் நாம் சொல்லி
வருகவென வரவேற்கிறோம்.
(பரிசில் பெறும் ..........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோப்பாய் அரிமாக் கழகம் – வெள்ளி விழா

### நீத்தார் பெருமை

வாய்ப்பாய் வளமாய் மனிதர்க் குதவும்
மனமே கொண்டோர் இணைந்துள்ள
**கோப்பாய் அரிமாக் கழகம்** நடத்தும்
கோலா கலமாம் கொண்டாட்டம்

(வாய்ப்பாய்...........)

பாரோர் ஏத்தும் பணியில் இன்று
வருடம் இருபத் தைந்தாகி
சீரார் **வெள்ளி விழா**வில் கூடிச்
சிறந்த சேவை நினைக்கின்றோம்

(வாய்ப்பாய்...........)

**நீத்தார் பெருமை** நினைவில் கொள்ளல்
நீள்புவி ஆன்றோர் வழக்காகும்
ஏத்தி மகிழ்வோம் எங்கள் கழகம்
எழுந்திடச் சேவை புரிந்தோரை

(வாய்ப்பாய்...........)

ஆளுமை மிக்க **ஆனந்தன்** அவர்
அனுதினம் கழகப் பணி செய்தார்
தோளொடு தோளாய்த் தினம் தினம்சேர்ந்தே
**கனக லிங்கமும்** பணி செய்தார்

(வாய்ப்பாய்...........)

**சொக்கலிங்க**மென் றுரைத்திடு நல்லோர்
சோர்வே இல்லாப் பெரும் தொண்டர்
தக்கார் **செல்வ ரத்தினம்** என்பார்
தாழ்வே இன்றித் தாமுழைத்தார்

(வாய்ப்பாய்...........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராசதுரை**யெனும் ஏந்தல்நம் கழகம்
ஏற்றம் பெறவே தினமுழைத்தார்
**குமார சிங்க**மும் குணநலமுடையார்
குன்றென வுயர்ந்த பணி செய்தார்

(வாய்ப்பாய்...........)

குணமுடை அன்பர் **குணசிங்க**த்தார்
குறைவே இல்லாப் பணியாளர்
மணமுடை மலராய்க் கழகப் புகழை
மண்ணில் பரவச் செய்தனராம்

(வாய்ப்பாய்...........)

வளம்சேர் வெள்ளி விழாவில் நாமும்
மனமாய் நமது கழகத்தின்
வளர்ச்சிப் படிகள் தாமாய் அமைந்த
நீத்தார் பெருமை நினைக்கின்றோம்.

(வாய்ப்பாய்...........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

# சுற்றமும் நானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துப் பாடல்கள்

*181. கோப்பாய் வடக்கு, சித்தாந்தபானு*
*சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்கள் 1971*

*182. கோப்பாய் வடக்கு, சித்தாந்தபானு*
*சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்கள் 2004*

*183. கோப்பாய் வடக்கு,*
*சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக் குருக்கள் 2004*

*சில மணமங்கல வாழ்த்துப் பாடல்கள்.*

*(நூற்றுக்கணக்கான மணமங்கல வாழ்த்துப் பாடல்களில் மாதிரிக்குச் சில சேர்க்கப்படுகின்றன.)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினந்தினம் வாழ்த்துவோம்

*(கோப்பாய் வடக்கு, சித்தாந்தபானு சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்கள் பாராட்டுவிழா மலர் 1971)*

கோவையம் பதியில் தோன்றித் தமிழகம் போற்றும் கோலம்
மேவிய புகழைப் பெற்ற மேலறி வாளரான
தாவில்சீர்ச் சுப்ர மண்ய குருவெனும் அறிஞர் தம்பாற்
சார்தரும் பெருமை தன்னைத் தமியனேன் சாற்றலுற்றேன்.

வயல்களும் குளமும் சூழ்ந்து வளங்கொழித் திலங்கு கோவை
பயன்தரு தோட்டம், கோவில், பற்பல பலகும் கோவை
முயன்றுதம் வாழ்வை முற்றும் உயர்த்திடு தொழில்செய் மாந்தர்
அயர்விலா அறிஞர் வாழும் அழகுடைப் பதி எம் கோவை

இவ்வகைச் சிறப்புமிக்க கோவையின் வடபால் என்றும்
திவ்விய கோவில் கொண்டு தேவியர் துணைவராகச்
சித்திர வேலர் இந்தப் பதியுறை மாந்தர்க்கெல்லாம்
நித்தமும் மகிழ்ச்சி நல்கி நிலவிடும் தெய்வமாவார்

சித்திர வேலர் கோவிற் பூசனை புரிந்தே ஊரில்
முத்தென இலங்குகின்ற முன்னவர் சுப்ரமண்யக்
குரு பெறும் பெருமை இந்தக் கோவையின் பெருமையாகும்
அருமையின் அருமை அந்த அறிஞரின் பெருமை பேசல்

விழிகளில் இலங்குகின்ற அறிவின தொளியும், விஞ்சை
மொழிகளில் விளங்குகின்ற கருணையும், முகத்தில் தோன்றும்
கனிநகை காட்டும் உள்ளத் தூய்மையும், பேச்சின் பாவத்
தொனிதரு சுவையும் எங்கள் குருவுடை முதுசொமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவின தாற்றலாலே அலர்ந்தெழும் ஆய்வும், அந்த
ஆய்வின தூக்கத்தாலே அடைந்திடும் முடிவும், அந்த
முடிவின துண்மையாலே மகிழ்ந்திடும் நெஞ்சும், அந்த
மகிழ்வினைப் பிறர்க்கும் ஊட்டும் மதிப்பரும் அன்பும், இந்த

அறிஞரின் இயல்ப தாகும் அத்தகை இயல்பு தன்னால்
அறிவுநூல் ஆகமங்கள் அருமறை மந்திரங்கள்
கருதியே ஆய்ந்து பெற்ற காத்திர முடிவும் எல்லாம்
புரிந்திடப் பிறர்க்கு ரைத்தே பூரிதம் கொள்வார் அன்னார்

திறமைகள் மிக்க எங்கள் தேசிகர் பெருமை தன்னைக்
குறைவற அறிந்தன்னார்க்குக் குலவுமெய் கண்ட தேவர்
பெயரினைத் தோற்றி நிற்கும் பெரிய ஆ தீனம் பேணும்
நயனுடைக் குரவர் தம்மை நாடறிந்திடவே செய்ய
சிறந்த "சித் தாந்த பானு" எனுமொரு விருதை இங்கு
நிறைந்திடத் தந்து சென்றார் நிச்சயம் பொருத்தமாகும்

சைவரின் சிறந்த நூலாம் ஆகமம், வேதம், மற்றும்
சைவசித் தாந்த நூல்கள் திருமுறை அனைத்தும் ஆய்ந்தே
நற்றிரு மந்திரத்தின் நயத்துடன் பொருளும் கண்டு
பற்பல புதுமை காட்டும் பானுவாம் குருக்கள் பெற்ற
விருதிதொன்றன்று மேலாம் விருதுகள் பலவும் பெற்று
திருவுடன் வாழ்க வென்று தினம் தினம் வாழ்த்துவோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பாய் வடக்கு
சித்திரவேலாயுதசுவாமி கோவில் பிரதமகுரு
பிரம்மஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்கள் அவர்களுக்கு
கோப்பாய் ஞானபண்டித சைவ விருத்திச் சங்கம்
நடத்திய பாராட்டு விழாவில் வழங்கப்பெற்ற
பாராட்டுப் பத்திரம் 30-04-2004

சீர்மிகுநல் **வடகோவைப்** பதியில் மேவும்
சித்திரவே லவனாரின் ஆலயத்தில்
ஆர்வமுடன் அர்ச்சனைகள் புரிநற்பண்பர்
அருங்குருவாய் விளங்குமொரு அந்தணாளர்
பேர்மிகுநல் **சுப்பிரமணி யக்குருக்கள்**
பெரும்புகழ்**ஜப் பான்**நாட்டின்பெருமை மிக்க
நீர்மைமிகு **கலாநிதி**யாம் விருதுபெற்றார்
நித்தியமாய் நீள்புவியில் நெடிதுவாழ்க

மேன்மைமிகு மெய்கண்டார் ஆதீ னத்தின்
மிகவுயர்ந்த **"சித்தாந்த பானு"**ப் பட்டம்
பான்மையுடன் தாம்பெற்றுப் பெருமை கண்டார்
பலகாறும் பலர்போற்றும் தகுதி கொண்டார்
சீர்மையுடன் **"வேதசிவா கமஞானி"**ப் பேர்
சிறப்புடனே அதன்மேலும் பெற்றுயர்ந்தார்
ஊர்மகிழக் **"கலாநிதி"**யாய் உயர்ந்தார் இன்று
உத்தமனார் பதம் போற்றி வாழ்த்துகின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதசிவா கமங்களிலே ஆழ்ந்த ஞானம்
விளங்கும்இதி காசபுரா ணங்கள் மற்றும்
ஓதரிய திருமுறைகள் இவற்றை யெல்லாம்
ஓதியுணர்ந் தாராய்ந்து உறுதியாக
போதமுறும் தத்துவநூல் விளக்கம் பெற்றே
புதுமைமிகும் கருத்துகளை நமக்கு நல்கும்
வேதியராம் **சுப்பிரமணி யக்குருக்கள்**
விளங்கு புகழ் எந்நாளும் வாழ்க வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தரகோவை வாசரும்
நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய விசேஷகுருவுமாகிய
**பிரம்மஸ்ரீ வை.மு.பரமசாமிக் குருக்கள்**
அவர்களுக்கு
கோப்பாய் ஞானபண்டித சைவ விருத்திச் சங்கம்
நடத்திய பாராட்டு விழாவில் வழங்கப்பெற்ற
பாராட்டுப் பத்திரம் 30-04-2004

உத்தர கோவை பெற்ற
உயர்தனிப் பொருளாய் என்றும்
முத்தென விளங்கும் எங்கள்
முதுபெரும் குருவே வாழ்க.
உத்தமர் **பரம சாமிக்**
**குருக்க**ளையாவே எங்கள்
சித்தமும் கலந்து நின்று
சீர்பெற வணங்கு கின்றோம்

பாரினில் **பாரத்வாஜ**
கோத்திரம் அதனில் தோன்றிச்
சீருடன் நால் வேதங்கள்
செழுங்கலை ஆகமங்கள்
பேரமர் பெரும் புராணம்
பிறவுள சாஸ்திரங்கள்
தீரவும் கற்றுயர்ந்தீர்
சிறப்புடன் வாழ்க வாழ்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடெங்கும் ஆலயங்கள்
நலம்பெறப் பணிகள் ஆற்றி
ஏடமர் சாஸ்திரங்கள்
எழில்பெற நூல்கள் ஆக்கி
தேடரும் விருது யாவும்
சிறப்புடன் பெற்றே இன்று
நாடரும் **ஜப்பான் நாட்டின்**
**கலாநிதி**ப் பட்டம் பெற்றீர்

பல்கலைக் கழகம் தந்த
கலாநிதி விருது எங்கள்
நல்பெரும் குருக்களாலே
நன்மதிப் படைதல் காண்க.
தொல்புவி அதனில் இன்னும்
தொடர் பணி பலவும் ஆற்றி
வல்லமை யோடும் வாழ
வாழ்த்துவோம் வாழ்க வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனலை தீவு தெற்கு,
## சங்கரநாதர் முருகமூர்த்தி திருக்கோவில்
## பரம்பரைப் பூசகர், பிரதமகுரு, முகாமையாளர்,

## பிரம்மஸ்ரீ பொ. வெங்கடேஸ்வர சர்மா
## ஸ்ரீமதி சாந்தி அம்மா தம்பதிகளின்

## ஷஷ்டியப்த பூர்த்தி வைபவம்

16.01.2016

நற்பதியாம் அனலைதீ வென்னு மூரில்
நல்லறத்தை நலமுடனே நடத்தி எம்மை
உற்பவித்தே உளமகிழ்வாய் அன்பினோடும்
ஊர் போற்றும் பண்பினொடும் வளர்த்து மேலும்
பற்பலநற் புகழ்சேரத் துணையும் தந்து
பரம்பரையின் முத்துக்களைப் பரிசாய்க் கண்டு
கற்றறிந்தார் துணைசேர்த்து மேன்மை தந்த
கனிவுடைய பெற்றோரே, வணங்குகின்றோம்.

பல்துறையாம் திறமையுடன் குருவும்ஆகி
பலகோவில் வழிபாடு கிரியை ஆற்றி
நல்லசெயல் பண்புகளும் நயந்துசெய்து
நல்லோர்கள் கூட்டுறவும் நாடிப் பெற்று
வல்லவராய் வாருலகம் போற்ற வாழும்
மகிழ்வினொடு மணிவிழாக் காணுகின்ற
நல்லவராம் வெங்கடேஸ் வரசர் மாவும்
சாந்தி அம்மா நம் பெற்றோர் வாழ்க! வாழ்க!

வாழ்த்தி வணங்குவோர்,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவரங்கால்

## பிரம்மஸ்ரீ சு. ஸ்ரீதரசர்மா – ஸ்ரீமதி சியாமளா தம்பதிகளின் புத்ரன் செல்வன் ஸ்ரீ. ஹரிமேன சர்மாவுக்கு

*ஜய வருடம் பங்குனி மாதம் 27ம் நாள் (10.04.2015) வெள்ளிக்கிழமை*
*ஆவரங்கால் சிவன் தேவஸ்தான மண்டபத்தில் நடைபெறும் உபநயன வைபவத்தின்போது வாழ்த்தி வழங்கப்பெறுவது.*

நல்லபதி ஆவரங்கால் வாழும் தெய்வ
நலம்திகழும் ஸ்ரீதரசர் மாவினோடு
இல்லறத்தில் இணைந்தசியா மளாவும் சேர்ந்து
இன்புறவே பெற்றெடுத்த இனிய செல்வன்
வல்லவனாம் ஹரிமேன சர்மா இன்று
மந்திரநல் லுபதேசம் பூணூல் தாங்கி
தொல்லுலகம் போற்றும் வகை உயரும் வேளை
சுற்றமெலாம் வாழ்த்துகிறோம் வாழ்க! வாழ்க!!

மந்திர மறைகளும் மாண்புறு பண்பும்
மாநிலம் போற்றும் அறிவுகள் அனைத்தும்
எந்திர வியலும் இலத்திர னியலும்
எழில்மிகு தமிழும் ஆங்கிலம் வடமொழி
முந்துறு நோய்கள் போக்கிடும் வலுவும்
முற்றுறக் கற்றுப் புகழ்மிகப் பெற்று
சந்திர சூரியர் போல் பொலிவுற்றுச்
சகத்தினில் இன்ப நிறைவுடன் வாழ்க!!

பிரம்மஸ்ரீ ந. யோகானந்தேஸ்வரக் குருக்கள் குடும்பத்தினர்
நடராஜஇராமலிங்க சிவன் தேவஸ்தானம், ஆவரங்கால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அராலி, சிவஸ்ரீ தி. சர்வேஸ்வரக்குருக்கள் – ஸ்ரீமதி ஜெயகௌரி தம்பதிகளின் புத்ரன் செல்வன் ச. சசிவர்ண சர்மாவுக்கு

நிகழும் மங்களகரமான ஜய வருஷம் பங்குனி மாதம் 8ம் நாள் (22.03.2015) ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெறும் உபநயனவிழா

*அரும்பதியாம் அராலியிலே வாழுகின்ற*
*அருளுடையார் சர்வேஸ்வரக் குருக்களோடு*
*பெருமைமிகும் ஜெயகௌரி நடத்தும்நல்ல*
*இல்லறத்தின் பரிசாக வந்துதித்த*
*திருவுடைய ஒருமைந்தன் சசிவர்ணன்தான்*
*திகழ்வேத வழியின்று நூலணிந்து*
*அருள்மிகுநல் காயத்ரி உபதேசம் பெற்(று*
*உபநயனம் பெறுகின்றான் வாழ்க! வாழ்க!*

*கல்வி, கலை, தொழில்நுட்பம், கணினியோடு*
*காசினியில் பலமொழியும் கற்றுணர்ந்து*
*பல்துறையாம் விளையாட்டும் பரமன்பூஜை*
*பண்ணுதற்காம் வேதநெறி ஆகமங்கள்*
*நல்லசெயல் பண்புகளும் நயந்துகற்று*
*நல்லோர்கள் கூட்டுறவும் நாடிப் பெற்று*
*வல்லவனாய் வாருலகம் போற்ற வாழ்க!*
*பல்லாண்டு காசினியில் வாழ்க! வாழ்க!!*

***பிரம்மஸ்ரீ தி. பாலசுப்பிரமணியக் குருக்கள்***
***ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மா குடும்பத்தினர்***
***(தாத்தா, அம்மம்மா)***
***ஏழாலை***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம், சுழிபுரம் ~ சுருவில்
சஹஸ்ர சந்த்ர தர்சனர்

பிரம்மஸ்ரீ நடராஜ இராமகிருஷ்ண சர்மா ஸ்ரீமதி ஜெகதீஸ்வரி
தம்பதிகளின்

## சதாபிஷேக வைபவம்

### ஐய வருடம் புரட்டாதி மாதம் 26ம் நாள்
### (12.10.2014) ஞாயிற்றுக்கிழமை
### சுவிஸ் ஸ்ரீ துர்க்கையம்மன் கோவில் சந்நிதானம்

அருமைமிகும் சுழிபுரத்தில் சுருவிலூரின்
அரும்பயனாய் இராமகிருஷ்ண சர்மா தோன்றி
பெருமையுடன் ஜெகதீஸ்வரி தமை மணந்து
பெருவாழ்வு வாழ்கின்ற வேளை நல்ல
தருணமிது ஆயிரமாம் பிறைகண்டின்பத்
திருவாழ்வில் உற்ற சுற்றம் மக்கள் மற்றும்
மருமக்கள் பேரர்கள் பேர்த்தி மார்கள்
மகிழ்வுடனே சூழ்ந்துவர வாழ்க! வாழ்க!!

மணியனைய மனையாளோ டில்ல றத்தின்
மாண்புடைய நல்லறத்தை நடத்தி நல்ல
அணிநாடாம் சுவிஸ் நாட்டில் மகிழ்வினோடு
அதிசிறப்பாய் வாழும்நாள் அன்பாய்ப் பெற்ற
பணிவுடைய பிள்ளைகளும் உறவும் கூடி
பக்குவமாய் சதாபிஷேகம் செய்கின்றார்கள்
பெருமைமிகும் நல்வாழ்வில் பொலிந்து வாழ்க!
பொன் பொருளும் புகழ்மொழியும் நிறைந்து வாழ்க!!

**சிவஸ்ரீ இ. சபாரத்தினக் குருக்கள்**
**ஸ்ரீமதி ச. யோகேஸ்வரி குடும்பத்தினர்**
**கொழும்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுதுமலை, திரு, திருமதி அருமைராசா தம்பதியரின் புதல்வன்**
**திருநிறை செல்வன் ஜெகசீலன் அவர்களுக்கும்**
**மானிப்பாய், திரு, திருமதி சிறிஸ்கந்தராசா தம்பதியரின் புதல்வி**
**திருநிறை செல்வி எழிலினி அவர்களுக்கும்**

*ஜய வருடம் ஆவணி மாதம் 13ம் நாள்*
*(29.08.2014) வெள்ளிக்கிழமை*
*ஆனைக்கோட்டை, கரைப்பிரான் ஆதிவிநாயகர்*
*திருமண மண்டபத்தில் நடைபெறும்*
*திருமண வைபவம்*

அருமைராசா செல்வராணி இல்லறத்தின்
அரும்பயனாய் ஜெகசீலன் மைந்தனாக
பெருமையுடன் சுதுமலைசேர் மானிப்பாயில்
பெருவாழ்வு வாழ்கின்ற வேளை நல்ல
தருணமிது இல்லறத்தை நடத்தவென்று
நல்லோர்சொற் கேட்டின்ப வாழ்வை நாடி
வரும் அழகி எழிலினியை வதுவை செய்ய
மனம்கொண்டார் மகிழ்வுடனே வாழ்த்து கின்றோம்

மணியனைய மல்லிகா தேவி சேரும்
மாண்புடைய சிறிஸ்கந்த ராசா தாமும்
அணிநகராம் மானிப்பாய் தன்னில் வாழ்ந்தே
அன்புடைய இல்லறத்தில் நீடும் காலை
பணிவுடைய எழிலினியை ஜெகசீ லற்குப்
பரிசாக்கி இல்லறத்தின் வழிச மைத்தார்
பெருமைமிகும் நல்வாழ்வில் பொலிந்து வாழ்க!
பொன் பொருளும் புகழ்மொழியும் நிறைந்து வாழ்க!!

நலன்புரி சங்கம், பிரதேச செயலகம், வலிகாமம் தெற்கு, உடுவில்.

பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணுவில் கிழக்கு**

**திரு, திருமதி செல்வரத்தினம் தம்பதிகளின் ஏக புதல்வன்**

**சங்குவேலி வடக்கு**

**திரு, திருமதி மகேந்திரதாசன் தம்பதிகளின் செல்வப் புதல்வி சங்கீதா அவர்களுக்கும்**

*மன்மத வருடம் தை மாதம் 27 ம் நாள் (10.02.2016) புதன்கிழமை இணுவில் சிவகாமி அம்பாள் திருமண மண்டபத்தில் நடைபெறும் திருமண வைபவத்தின்போது வாழ்த்தி வழங்கப்பெறுவது.*

திருவுடைய ஊராகும் இணுவில் வாழும்
திகழ்பெரியார் செல்வரத் தினத்தின் நல்ல
பெருமைமிகும் சம்பந்தி யாக இன்று
பெயர்விளங்கும் மகேந்திரதா சன்வந் துற்றார்
அருமைமிகும் ஒருமகனார் விசாகனுக்கு
அன்புடனே தமதினிய புதல்வியான
திருமகள்சங் கீதாவை நன்னாள் பார்த்து
வழங்குகிறார் மணமகளாய் மகிழ்வினோடு

அன்புடனும் பண்புடனும் வாழ்க! வாழ்க!!
அறம்வாழத் தொண்டாற்றி வாழ்க! வாழ்க!!
இன்பமுறும் இல்லறத்தில் வாழ்க! வாழ்க!!
இனிமையெலாம் பெற்றுவந்து வாழ்க! வாழ்க!!
பொன்பொருளும் புகழ்ச்சிறப்பும் மக்கட்பேறும்
பொருந்திவர எந்நாளும் வாழ்க! வாழ்க!!
என்றென்றும் எல்லாரும் போற்றிவாழ
இறைபணியும் இனிதியற்றி வாழ்க! வாழ்க!!

நலன்புரி சங்கம், பிரதேச செயலகம், வலிகாமம் தெற்கு, உடுவில். பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிளிநொச்சி, பூநகரி, முழங்காவில்,**

**அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்**

**மேற்படி ஆலயத்தில் ஜய வருஷம் தைத்திங்கள் 26ஆம் நாள்**

**09– 02 – 2015 திங்கட்கிழமை நடைபெற்ற**

**மஹாகும்பாபிஷேக வைபவத்தினைச் சிறப்புற வழிநடத்திய**

**ஸ்ரீவிஷ்ணுஸ்ரீ ச. சோமாஸ்கந்தக் குருக்கள்**

**(பிரதமகுரு, பொன்னாலை, வரதராஜப் பெருமாள் கோவில்)**

**அவர்களைப் பாராட்டி கிரியா சதுரர்**

**என்ற விருது வழங்கிக் கௌரவிக்கின்றோம்.**

திடமான மனவுறுதி தெளிந்த ஞானம்
தீவிரநல் லாய்வு நெறி கனிந்த பக்தி
சடமர்ஷண கோத்திரத்தின் தளரா வீரம்
தனக்கென்றோர் தனித்துவமாம் கிரியா மார்க்கம்
உடனேயே முடிவெடுக்கும் உள்ளத் தாற்றல்
குருபக்தி குன்றாத உயர்ந்த பண்பு
படமாக இவையெல்லாம் சோமாஸ்கந்த
குருவாக அமையுமவர் வாழ்க! வாழ்க!!
பொன், பொருளும், புகழ்மொழியும் புவியில் சேர
புன்முறுவல் முகம்சேர அகத்தில் என்றும்
அன்புநலம், ஆதரவு, அறம்சேர் வாழ்க்கை
ஆண்டவனின் திருப்பணியும் அதனால் சேரும்
இன்பம்நிறை திருவருளும் இணையில்லாத
கிரியைகளில் சமர்த்தான நிலைத்த சேவை
என்றென்றும் இவையெல்லாம் நிறையப் பெற்று
இப்புவியில் நெடுங்காலம் வாழ்க! வாழ்க!!

**அம்பிகை அருட்பணியில், தர்மகர்த்தா**

**சிவாகம கிரியாஜோதி, கிரியா சிரோமணி, வாரிவனேஸ்வரதாசன்,**

**சிவஸ்ரீ செ. தெட்சணாமூர்த்திக்குருக்கள்,**

**ஸ்ரீமதி இராசலட்சுமி அம்மா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ

சிவமயம்

நீர்வேலி வடக்கு

**பிரம்மஸ்ரீ இரங்கஸ்வாமி ஐயர் தம்பதிகளின் ஏகபுத்திரன்**

## சிரஞ்ஜீவி சுப்பிரமணிய சர்மா அவர்கள்

நல்லூர் கைலாசபிள்ளையார் தேவஸ்தானம்

**பிரம்மஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் தம்பதிகளின் புத்திரி**

## சௌபாக்கியவதி யோகாம்பிகை அவர்களை

**சித்ரபாநு வருஷம் ஆவணி மாதம் 23ம் திகதி (08-09-2002) ஞாயிற்றுக்கிழமை**

**திருமணம் செய்தபோது**

**நீர்வேலி வாய்க்காற்றரவை விநாயகர் தேவஸ்தான பிரதமகுரு**

## பிரம்மஸ்ரீ ஆ. சந்திரசேகரக் குருக்கள் குடும்பத்தினர்

மனமுவந்து வாழ்த்தி வழங்கிய

## மண மங்கல வாழ்த்து மடல்.

*சீராரும் வாதூல கோத்திரத்தில்*
*திகழ்ஆபஸ் தம்பரது சூத்திரத்தில்*
*பேரான தமிழ்நாட்டின் கும்பகோணப்*
*பெரும்பதிசேர் அந்தணராம் சுப்ரமண்யர்*
*பேராளும் பௌத்திரனாய் ரங்கஸ்வாமி*
*பெற்றெடுத்த புத்திரனாம் சுப்ரமண்யன்*
*ஊராளும் புகழுடையோன் இல்லறத்தில்*
*புகும்நாளில் உவப்புடனே வாழ்த்துகின்றோம்.*

*நல்லைநகர்க் கைலாச பிள்ளையார்க்கு*
*நாள்தோறும் பூசனைசெய் குருசாமிப்பேர்*
*நல்லவரின் பௌத்திரியாம் குமாரசாமிக்*
*குருபயந்த புத்திரியாம் யோகாம்பிகை*
*இல்லறத்தை நாடுகின்ற சுப்ரமண்ய*
*சர்மனுடன் திருமணத்தில் இணையும் நாளில்*
*வல்லபையோர் பாகமுடை ஈசனான*
*வாய்க்காற்றர வைக்கணேசன் அருள்கமாதோ*

*நீர்வேலிக் கிராமத்தின் புகழைஇந்த*
*நீணிலத்தில் நிறையவைத்த அந்தணாளர்*
*ஊர்புகழும் பிக்ஷாடனக் குருக்கள்செல்வி*
*உத்தமியாம் சாரதாவின் உயர்ந்த செல்வன்*
*நீர்மையுடை மோகன்எனும் சுப்ரமண்யன்*
*நிறைவோடு சாந்திஎனும் பெண்ணைச்சேர்ந்து*
*பார்புகழும் இல்லறத்தில் அன்பினோடும்*
*பண்போடும் பல்லாண்டு வாழ்க வாழ்க.*

*கவியாக்கம்: கோப்பாய் சிவம்.*

**வாழ்த்தி வழங்குவோர்:**

**வாய்க்காற்றரவை விநாயகர் தேவஸ்தானம்,**
**நீர்வேலி.**

**பிரம்மஸ்ரீ ஆ. சந்திரசேகரக் குருக்கள்**
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ

**நீர்வேலி செல்லக் கதிர்காமசுவாமி கோவில்**

பிரதம சிவாசாரியார்

**பிரம்மஸ்ரீ கு.தியாகராஜக் குருக்கள் - கஜாவல்லி அம்மா**

**தம்பதிகளின்**

**ஷஷ்டியப்த பூர்த்தி விழாவின்போது**

**23-02-2003 இல் வாழ்த்தி வழங்கிய**

# மங்கல வாழ்த்து மடல்

**காரைநகர்க் களபூமி**த் தலத்தைச்சேர்ந்த
கௌண்டின்ய கோத்திரத்துக் **குமாரசாமிப்**
பேருடைய அந்தணர்தம் மனையறத்தின்
பெரும்பேறாய் **சிவரக்ஷா மணி**யென்றோதும்
சீருடைய மனையாள்தாம் பெற்றெடுத்த
சிறப்புடைய உத்தமனார் **தியாகராஜப்**
பேரறிஞர் **ஷஷ்டியப்த பூர்த்தி** காணும்
பெருநாளில் வாழ்த்துகின்றோம் வாழ்க! வாழ்க!!

சுன்னாகம் **மயிலணி**யில் **சிவகடாட்சக்**
**குருக்கள்**தம் **கஜாவல்லி**ப் புதல்விதன்னை
அன்பான இல்லறத்தின் துணையாய்ப்பெற்றுப்
பண்புடனே பயனாக **மயூரன்**தன்னை
எந்நாளும் பெயர்விளங்கும் மகனாய்ப்பெற்று
இன்புமுறும் நல்வாழ்க்கை வாழும்காலை
இந்நாளும் இனிவரும்நாள் என்றும் எங்கும்
எல்லாமே நலம்பெற்று வாழ்க! வாழ்க!!

வேதசிவாகமம் விளங்க விருப்பினோடு
இறைபணியாம் குருத்துவத்தை இனிதேஏற்று
நாதனருள் நலம்பெற்றுச் சமூகசேவை
நாடி,இன்னும் கலைஇலக்கி யங்கள்ஆய்ந்து
போதமுறும் புகழ்ஓங்கப் புதியநூல்கள்
புதியபல ஆக்கங்கள் ஆக்கும்செல்வர்
ஆதரவுற் றயலோர்கள் நண்டர்சுற்றம்
வாழ்த்துரைக்க **வைரவிழா**க் கண்டார்வாழ்க!

அன்புவளர் மனம்வாழ்க அறமும்வாழ்க
அருள்விளங்கும் குருத்துவமும் வாழ்க! வாழ்க!!
பண்புவளர் பணிகள்நிதம் வாழ்க! வாழ்க!!
மரபுவழிப் பெருமைகளும் வாழ்க! வாழ்க!!
இன்பமுறும் மனைவாழ்க இளையமைந்தன்
எந்நாளும் எழில்நலமாய் இனிதுவாழ்க
தென்தமிழும் வடமொழியும் சேர்ந்துவாழத்
தேசமெலாம் புகழ்விளங்க வாழ்க! வாழ்க!!

**கவியாக்கம்: கோப்பாய் சிவம்**

**வாழ்த்தி வழங்குவோர்**

**அரசகேசரிப் பிள்ளையார் தேவஸ்தானம்**

**நீர்வேலி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கேசன்துறை

சைவமாமணி, அருளமுதச் சொல்லாரி, இசைஞானதிலகம்,

அருள்ஞானவித்தகர், தத்துவமுத்து, சிவானந்தவாரிதி,

## சிவத்திரு வ. குமாரசாமி ஐயா அவர்களின்

அகவை அறுபது பூர்த்தி மணிவிழா நாளில

வாழ்த்தி வணங்கி வழங்கிய

## வாழ்த்துமாலை

சிவத்திருவால் சிவனடியே சிந்திக்கின்ற
செழுமைமிகும் வாழ்வுடைய செம்மல்எங்கள்
பவத்திருவும் வாய்த்ததிருக் குமாரசாமிப்
பண்பாளர் பாரினிலே தோன்றிஇந்நாள்
உவப்புடனே அறுபதெனும் அகவைகண்டு
ஊருலகம் போற்றிமகிழ்ந் திடவாழ் கின்றார்
தவப்பெருமை செழித்திடவே பெருமையோடு
தமிழுலகம் போற்றிடவே வாழ்க வாழ்க!!

காங்கேசன் துறையென்னும் பதியில்தோன்றிக்
கல்விகலை கேள்விகளில் வல்லோராகிப்
பாங்கான நூலகராய்ப் பணிமேற்கொண்டு
பயன்மற்றோர் பெறவேண்டும்
எனும்நோக்கோடு
தீங்கவியும் தமிழிசையும் குழைத்துச்சேர்த்துத்
திருவுடைய சைவத்தின் பெருமையாவும்
யாங்கணுமே சென்றெடுத்துக் கூறிக்கூறி
யாவரையும் மகிழ்வித்து மகிழ்கின்றாரால்.

ஆன்மார்த்த பூசைகளை முறைமையோடு
அகம்நிறைய நிறைவேற்றி அதற்குப்பின்னர்
தான்சார்ந்த தொழிற்கடமை அதனைநன்கு
தகுதியுடன் செயலாற்றி அதற்கும்பின்னர்
ஏன்என்ற கேள்வியுடன் இருப்போர்சேர்ந்த
இறையடியார் கூட்டங்கள் தோறும்சென்று
வானார்ந்த சிவனாரின் பெருமையாவும்
வண்டமிழில் தேன்வார்த்து வழங்குகின்றார்.

இதிகாசம் புராணங்கள் இறைவன்நூலாம்
திருமுறைகள் சாத்திரங்கள் இவைகள்யாவும்
பொதிந்துள்ள தத்துவங்கள் புரியக்கூறிப்
பூரித்து மகிழ்வுற்றுப் பெருமையோடு
பதின்மூன்று பட்டங்கள் பல்லோர்நல்கப்
பாங்கினொடு பெற்றின்னும் பகட்டேயின்றி
உதிரும்இள நகையினொடும் வாழுகின்றார்
உந்நதங்கள் பலகண்டு வாழ்க வாழ்க!!

வாழ்த்தி வணங்கும் ஆசிரிய ... ... ...

அன்பு மகள்

கனகசுந்தரம்பிள்ளை சசிரேகா

அச்சுவேலி.

ஸ்ரீவிசயா கணினி அச்சகம், கந்தசாமிகோவிலடி, இணுவில், சுன்னாகம். ☎ 021-222-4004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோப்பாய் சிவம்
## நூல் வெளியீடுகள்

1. இலங்கையில் தமிழ்ப்பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் - ஆய்வும் தொகுப்பும்
2. வெள்ளோட்டம் (பாராட்டுப் பரிசு பெற்றது) - இரு குறுநாவல்கள்
3. சைவநற்சிந்தனை
4. சைவாலயக்கிரியைகள்
5. சைவ விரதங்களும் விழாக்களும்
6. பஞ்சாக்ஷரம் - ச.ப.சர்மாவின் வாழ்வும் பணியும்
7. நொடியும் விடையும்(பாகம்1 முதல் பாகம் 4 வரை) -விடுகதைத் தொகுப்பு
8. என்னாலும் பேசமுடியும் - சிறுவர்க்கான மேடைப் பேச்சுக்கள்
9. மறுமலர்ச்சி கண்ட மாணிக்கம் - ச. ப. சர்மாவின்பணிகள்பற்றிய பல்கலைக்கழக ஆய்வு. பதிப்பாசிரியர் கோப்பாய் சிவம் (ஆய்வாளர் செல்வி செல்வராணி வேலுப்பிள்ளை)
10. ஆற்றல் பல நல்கும் ஆஞ்சனேயர்
11. நலம் பல நல்கும் நாராயணன்
12. அருள் வழங்கும் மாரியம்மன்
13. இதுதான் இந்துமதம்
14. பஞ்சாக்ஷர தீபம்- மறுமலர்ச்சி எழுத்தாளர் பண்டிதர் ச. பஞ்சாட்சரசர்மாவின் வாழ்வும் பணியும்
15. அக்ஷரானந்தம் - மொழிசார் கட்டுரைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. வளரும் சிறுவர்க்கு வாழும் இந்து சமயம் பாகம் 1
17. வளரும் சிறுவர்க்கு வாழும் இந்து சமயம் பாகம் 2
18. நவக்கிரக மஞ்ஜரி - நவக்கிரகங்கள் பற்றிய தொகுப்பு
19. விவாஹ சோபனப் பாடல்கள்
20. துக்கம் துடைக்கும் துர்க்காதேவி
21. வீரகாவலர் வீரபத்திரரும் பத்திரம் நல்கும் பத்திரகாளியும்.
22. மந்திரங்கள் கூறும் மறைபொருள் விளக்கங்கள்
23. சைவக் கோயில்களும் மனித உடலும்
24. காப்பதில் வல்ல கருட பகவான்
25. ஆன்மீக மங்கலம் அறுபது
26. மறுமலர்ச்சி தந்த பஞ்சாக்ஷரம் - வாழ்வும் வளமும்.
27. சிவானந்த விஜயம் - இந்துவாக வாழ்வோம்
   - இந்து சமயக் களஞ்சியம்.
28. அம்பிகையின் அருள்வடிவங்கள்
29. எங்கள் பெயரால் இறைவன்முன்
   என்ன சொல்கிறார் சிவாசாரியர்?
30. வாழ்க்கையில் ஜோதிஷம் -
31. சண்முக கதம்பம்
32. ஆத்மபலம் அருளும் ஐயப்ப சுவாமி
33. இல்லற மங்கலம்
34. வைதிக அபரக்கிரியா சங்கிரகம்
35. மாந்தர் மாண்பு
36. 'மறுமலர்ச்சி' இதழ்த் தொகுப்பு
37. கோப்பாய்சிவம் சிறுகதைகள்
38. என்பாட்டில் நான் - கோப்பாய் சிவம் கவிதைகள்
39. பலதும் பத்தும் - கோப்பாய் சிவம் கட்டுரைகள்.
40. கோப்பாய் சிவம் - சம்ஸ்கிருத ஆக்க முயற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூபாளம் ஒலிக்கின்ற நாள் வந்து சேரும்
புலர்காலை இசையோடு நலம் வந்து சேரும்
நாவாரப் பலர் உன்னை நயந்தேத்தும் காலம்
நாடிஉன் இடம்தேடி நயமாகச் சேரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org